# வழித்துணை




ஆசுகவி
செ. சிவசுப்பிரமணியம்

# வழித்துணை

## ஆசிரியரின் ஆதங்கத்திலிருந்து

என்னிடம் உள்ளது கம்பனிடம் உள்ளதைப் போல் வள்ளுவனிடம் உள்ளதைப்போல் இளங்கோவிடம் உள்ளதைப்போல் கலங்கரை விளக்காக இல்லா விட்டாலும் என்னிடம் உள்ளதை நானோர் குப்பி விளக்காகவே கருதுகின்றேன். பல கோணங்களிலேயும் இருண்டுபோயிருக்கின்ற இந்த உலகத்திலே அந்தக் குப்பிவிளக்கின் துணையோடு மனிதத்தை தேட முயற்சிக் கின்றேன். தங்களையும் அந்த வெளிச்சத்திலே மனிதத்தைத் தேடுவோம் வாருங்கள் என்று அன்போடு அழைக்கின்றேன். மனிதத்தைத் தேடுகின்ற அந்த முயற்சியிலே நான் மறைந்து போனாலும் கூட அதை நீங்கள் ஒரு பொருட்டாக எண்ணிக்கொள்ளாமல் நீங்கள் செல்கின்ற பாதையின் ஓர் படிக்கட்டாக என்னுடலை எண்ணிக்கொண்டு அதன்மீது ஏறிச்சென்றாவது மனிதத்தைக் கண்டுபிடித்து அதைக் காப்பாற்றுங்கள் என்று தங்கள் அனைவரையும் அன்போடும் பணிவோடும் கேட்டுக் கொள்கின்றேன். அதற்கு வழித்துணையாக இந்நூல் அமையுமென நம்புகின்றேன்.

வணக்கம்

அன்புடன்
"ஆசுகவி"
செ.சிவசுப்பிரமணியம்

# முதல் வணக்கம்

வதிரன் புலோவானை வானோர் தலைவனை
உதிரம் சொரிந்தெங்கள் உழுநிலத் தெழுந்தோனை
முதிர் ஞானப் பக்திகொண்டு முன்வந்து தொழுவோர்க்கு
எதிலுமே வெற்றிவரும் எடுத்ததெலாம் சித்திதரும்



# வழித்துணைக்கோர் அறிமுகம்

## வாழ்த்துச் செய்தி

அபூர்வ சக்தி கொண்ட மனிதர்கள் சிலருள் ஆசுகவி செல்லத்துரை சிவசுப்பிரமணியம் அவர்களும் ஒருவரென்றே நான் கருதுகின்றேன். செல்லர் வாத்தியார் என்று எல்லோராலும் அன்போடு அழைக்கப்பட்ட ஆசிரியர் செல்லத்துரை அவர்களின் மகனாக ஆசுகவி சிவசுப்பிரமணியம் அவர்கள் 26.09.1951இல் மூளாயில் பிறந்தார். சின்ன வயதிலிருந்தே எடுத்த எடுப்பிலேயே கவிவடிக்கும் தன்மையும் அடுக்குமொழியிலே மற்றவர்களைக் கவர்கின்ற வகையிலே பேசுகின்ற ஆற்றலும் இவருக்குக் கைவந்த கலையாகும். பாடல்களை இயற்றுவதிலேயும் நாடகங்களை எழுதி நடிப்பதிலேயேயும் கவியரங்கங்கள், பட்டிமன்றங்கள் போன்றவற்றை நடத்துவதிலேயும் இவர் சிறந்து விளங்கினார். இவருடன் சில நிமிடங்கள் பேசிக் கொண்டிருந்தாலே பல சிறந்த விடயங்கள் அடங்கியதோர் கவியரங்கத்தைக் கேட்டுக் கொண்டிருந்தது போன்ற மகிழ்ச்சியும் திருத்தியும் ஏற்படும் . ஓர் சிறந்த தமிழ் அறிவிப்பாளரான இவர் க.பொ.த உயர்தரம் வரையிலே கலைப்பிரிவிலே கல்விகற்று விட்டு சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியிலே சிறிதுகாலம் ஓர் வசதிக்கட்டண ஆசிரியராகக் கடமையாற்றினார். அச்சமயம் நானும் ஆசிரியர் அவர்களிடம் 6ம் ஆண்டிலே சுகாதாரக் கல்வி பயின்றேன். அந்த நினைவுகள் இன்றும் என் மனத்திலே பசுமரத்தாணி போல ஆழமாகப் பதிந்துள்ளது. அவர் ஆசிரியராகக் கடமையாற்றுகின்ற காலத்திலே கல்லூரி அதிபரதும், ஆசிரியர்களதும், மாணவர்களினதும், பெற்றோர்களினதும் நன்மதிப்பைப் பெற்றதோடு "சுப்பறு மாஸ்ரர் " என்று எல்லோராலும் அன்போடு அழைக்கப்பட்டார். அதன் பின்னர் பொலீஸ் திணைக்களத்திலே சிறிது காலம் பணியாற்றிய ஆசிரியர் அவர்கள், ஸ்ரீலங்கா ரெலிக்கொம் ஸ்பாதனத்திலே இணைந்து நீண்டகாலம் யாழ்ப்பாணத்திலேயே நன்மதிப்போடு பணியாற்றினார். ஆசுகவி அவர்களது பேச்சும் கவிதைகளும், பாடல்களும், நாடகங்களும் பார்ப்பவர்களையும், கேட்பவர்களையும் ஏதோ ஒரு இடத்தைக் குறியாக வைத்து அழைத்துக் கொண்டே செல்லும் என்று சொன்னால் மிகையாகாது.

கேட்ட உடனேயே பாடல்களை கவிதைகளை கட்டுரைகளை எழுதிக் கொடுக்கக்கூடியவர் என்ற வகையிலே "ஆசுகவி" என்றும் உணர்ந்து கொள்ளும் கருத்துக்களை உணரக்கூடிய வகையிலே எடுத்துக் கூறும் வல்லமை படைத்தவர்

என்பதால் "கூர்மதியாளன்" என்றும் சமூகத்தோடு இணைந்து அப்பழுக்கற்ற சேவைசெய்பவர் என்பதால் "சமூகக் காவலன்" என்றும் சிறந்த பல இலக்கியப் படைப்புக்களை தமிழ்கூறும் நல் உலகிற்கு ஆக்கி அளித்தவர் என்ற வகையிலே "கலாவாரிதி" என்றும் போற்றிப் புகழப்படும் ஆசுகவி அவர்கள் எப்பொழுதும் தான்கூறும் கருத்துக்களிற்கு பாத்திரவானாகவே நடந்து கொள்ளும் தன்மை கொண்டவர். பெரிதாகப் பட்டம் பதவிகளை விரும்பாமல் எப்பொழுதும் எளிமையாகவே நடந்து கொள்ளும் தன்மை கொண்ட இவர் முற்கூட்டியே திட்டமிட்டுத் தீர்மானிக்காமல் கோயில் கரும்பலகையின் முன்வந்து நின்ற பின்னரே தீர்மானித்து எழுதிய அற்புதக் கருத்துக்களே இங்கு "வழித்துணை" என்ற நூலாக வெளியிடப்படுகின்றது. அவருடைய அந்த அளவிடற்கரிய அற்புத ஆற்றலினைப் புரிந்து கொண்டவன் என்ற வகையிலும் எனது ஊரவரும் எனது குருவும் என்னுடைய தந்தையார் ஆசிரியர் கதிரவேலு ஆறுமுகம் அவர்களின் நன்மதிப்பிற்குப் பாத்திரமானவருமான ஆசுகவி அவர்களின் வழித்துணையானது எல்லோரது வாழ்விற்கும் வழித்துணையாக அமையவேண்டுமென எல்லாம் வல்ல மூளாய் வதிரன்புலோ சித்தி விநாயகப் பெருமானை வணங்கி வேண்டிக் கொள்வதோடு அவரின் இவ்வாக்கமானது அவர் எதிர்பார்க்கின்ற நல்லதோர் சமூகத்தைக் கட்டியெழுப்புதல் என்கின்ற இலக்கினை எட்டும், எட்ட வேண்டும் என்ற நம்பிக்கையையும் தேவையையும் வெளிப்படுத்தி வாழ்த்துவதோடு அவரின் இப்பெரும் பயணத்திற்கு வழித்துணையாக வருவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

"அப்பழுக்கற்ற முறையிலே ஒருவர் மற்றவர்களோடு நடந்து
கொள்ளும் முறையானது
மற்றவர்களின் மனதிலே ஒப்பரிய ஓர் இடத்தைப் பெற்று
விடுகின்றது"

Dr. ஆறுமுகம் காந்தநேசன்
Family Physician
M.B.B.S (SL) D.F.M (col)

# வரவேற்கின்றேன்

வாருங்கள் வாருங்கள் வாருங்களேன் - நல்ல
வழித்துணை பெறுவோம் நாம் வாருங்களேன்
சேருங்கள் சேருங்கள் சேருங்களேன் - மனித
மாண்பினை வெல்வோம் சேருங்களேன்

வாருங்கள் வாருங்கள் வாருங்களேன் - நல்ல
வழித்துணை பெறுவோம் நாம் வாருங்களேன்.

ஐந்தாம் அறிவிற்குப் பின்னால் - நல்ல
ஆறாம் அறிவினை துணையாகக் கொண்டு
இறைவனை உண்டென்று நம்பி - நன்று
இன்புற்று வாழவே வழித்துணை வேண்டும்.

வாருங்கள் வாருங்கள் வாருங்களேன் - நல்ல
வழித்துணை பெறுவோம் நாம் வாருங்களேன்.

எங்களின் சக்திக்கு அப்பால் - நல்ல
அறிஞரின் கூற்றினை துணையாகக் கொண்டு
வழிகாட்டல் ஒன்றினைப் பெற்று - நன்று
வாழும் வழிசெல்ல வழித்துணை வேண்டும்.

வாருங்கள் வாருங்கள் வாருங்களேன் - நல்ல
வழித்துணை பெறுவோம் நாம் வாருங்களேன்.

பகட்டுப் பலியாதல் விட்டு - நல்ல
பண்பினை அன்பினை துணையாகக் கொண்டு
எழிமையாய் வாழ்தலைக் கற்று - நன்று
ஏற்றம் பெறஇங்கு வழித்துணை வேண்டும்.

வாருங்கள் வாருங்கள் வாருங்களேன் - நல்ல
வழித்துணை பெறுவோம் நாம் வாருங்களேன்.

போட்டி பொறாமையை விட்டு - நல்ல
பொதுவான நோக்கினை துணையாக்கொண்டு
அறிவொளிப் பாதையில் சென்று - நன்று
வாழ்ந்திட வாழ்க்கைக்கோர் வழித்துணை வேண்டும்.

வாருங்கள் வாருங்கள் வாருங்களேன் - நல்ல
வழித்துணை பெறுவோம் நாம் வாருங்களேன்.

மானிட வாழ்விற்குப் பின்னால் - நல்ல
மகத்துவம் அடைதலைத் துணையாகக்கொண்டு
ஆத்மீகப் பாதையில் சென்று - நன்று
வாழ்ந்தி வாழ்க்கைக்கோர் வழித்துணை வேண்டும்.

வாருங்கள் வாருங்கள் வாருங்களேன் - நல்ல
வழித்துணை பெறுவோம் நாம் வாருங்களேன்.

ஆக்கம் : - ஆசுகவி செ.சிவசுப்பிரமணியம்

## வழித்துணை - 01

01. வாழ்க்கையின் பயணத்தைப் பாரிலே தொடங்கிட
அன்னையின் வயிற்றிலே திங்கள் பத்துக் காத்திருந்து
ஜனனிப்போம் ஜனனமது தனிமுயற்சி அன்று
அன்னையின் துடிப்பே அதன் வழித்துணை என்றறிவீர்

02. பாரிலே பிறந்தநாம் படித்துயர்ந்து வருதற்காய்
சீரிய பள்ளியில் சிலஆண்டு காத்திருந்து
நேரிய அறிவினைப் பெறுவதும் தனித்தன்று
கூரியதோர் குருவே அதன் வழித்துணை என்றறிவீர்

03. கல்வியைக் கலைகளை இளமையில் பெற்றுநாம்
வளமான இளமைப் பருவத்தில் பயணிக்க
துணையாக நிற்பது இளந்துடிப்பு தனித்தன்று
மூத்தோரின் அறிவுரையே அதன் வழித்துணை என்றறிவீர்

04. ஊதியம் பெறுதற்காய் தொழிலொன்று தேடியே
உரியபடி நடந்ததில் உயர்வுகள் அடைந்திட
போதிய துணைதரும் தகமைகள் தனித்தன்று
பணியதில் பணிவே அதன் வழித்துணை என்றறிவீர்

05. இல்லறம் ஆற்றற்காய் இணைதுணை தேடியே
நல்லறம் ஆற்றியதில் நயம்பல பெற்றிட
வல்லமை சேர்ப்பது வாய்த்தவளம் தனித்தன்று
கருத்தொருமித்தலே அதன் வழித்துணை என்றறிவீர்

*06.* குடும்பம் என்றதோர் கூடுநாம் கட்டியே
கடும்பக்தி கொண்டதைக் கட்டியே காத்திட
நெடுந்துணை தருவது படும்பாடு தனித்தன்று
நம்பிக்கை ஒன்றே அதன் வழித்துணை என்றறிவீர்

*07.* புழுேவோடு தோன்றிநாம் புகழோடு வாழ்ந்துமே
மிகஉயர் நிலையினை மேதினியில் அடைந்திட
உகந்தாய் இருப்பது உயர்வுகள் தனித்தன்று
தாழ்ந்துநாம் நடத்தலே அதன் வழித்துணை என்றறிவீர்

*08.* மானிடப் பிறப்பின் மகிமையில் பிறந்துபின்
நானிலம் போற்றும் நடத்தையில் வளந்துபின்
யோகத்து நிலைதரும் நம் ஊனுடல் தனித்தன்று
ஞானத்தின் ஈர்ப்பதே அதன் வழித்துணை என்றறிவீர்

*09.* எத்தனை பிறப்புக்கள் எத்தனை வதைப்புக்கள்
அத்தனையையும் உணர்ந்தினிப் பிறவாது இருந்திட
உத்தம வழிதரும் மானிடம் தனித்தன்று
ஆத்மீகபலமே அதன்வழித்துணை என்றறிவீர்

*10.* இறைவனார் தந்ததோர் இணையில்லா ஆத்மீகம்
மீண்டுமிறை உறையினுள் புகுந்திறை யாகிடும்
சிறப்பினைத் தருவது பிறப்புக்கள் தனித்தன்று
இறையினை உணர்வதே அதன் வழித்துணை என்றறிவீர்

## வழித்துணை - 02

01. செம்பின்கைப் பாலோடு செம்பருத்திப் பூமட்டும்
எம்பிரானை அடைதற்கு வழியென்று எண்ணாதீர்
நம்பிக்கை உடையோற்கே தும்பிக்கை துணையாகும்
தம்பிக்கை வேல்வந்து வினைகள் போக்கும்

02. சதம்தூக்கக் சங்கரனார் பதம்தூக்கி எழுந்துவந்து
நிதம்நம்மைக் காத்தருள்வார் என்றுநீர் எண்ணாதீர்
மதம்கூறா நெறிகளைநாம் வதம்செய்ய மனத்தினுள்ளே
இதம்கண்டு மிதம்காப்பார் இனிதே

03. ஆண்டுக்கு ஒருமுறை ஆண்டவனை வேண்டிவிட்டு
வேண்டுவன எல்லாம் கிடைக்குமென்று எண்ணாதீர்
பூண்டதோர் உடலினோடு புதைந்திருக்கும் உணர்வுகளும்
என்றென்றும் அவனையெண்ண எல்லாம் கிடைக்குமன்றோ!

04. வாசத்து மலரோடு வாழைப்பழமெடுத்து
தேசத்தைப் படைத்தோனைத் தேடிநாங்கள் கொடுத்திட்டால்
பாசத்தைப் பொழிந்தெமக்கு பரமசிவன் அருள்வானோ
நேசத்தோடு அவன்மேல் நெடும்பக்தி வேண்டாமோ.

05. படைத்தவன் படைத்தவற்றை படைத்தவனுக்கே படைத்து
கிடைத்திடும் கொடையென்று எடைபோடும் நடையோற்கு
தடைபோட்டுச் சடைபிறையான் விடையொன்று மடைதிறப்பான்
இடையறாத் தன்படைப்பிற்கு குடையாகித் தனை அடையென்றே

06. பாலோடு இளநீரும் பஞ்சா அமிர்தமதும்
தேனோடு கலந்திறைவன் திருமேனி தடவுதல்தான்
நீடூழி வாழவழி என்றெண்ணி நின்றிடாதீர்
ஊனோடு உயிரினையும் அவனதாக்கும் அதுவழியாகும்.

07. பூசிப் புணர்த்தி நல்ல பூசைகளும் பார்த்தபின்பு
பேசிப் பெருங்கதையின் அரும்பொருளும் கேட்டுவிட்டு
நேசித்தே இறைபடைப்பை நெஞ்சார அணைத்திடாமல்
தூசித்துத் தூரவைத்தால் இறைநமக்குத் துணைவருமோ

08. உடல்கழுவி உண்டதோர் உணவகலக் குடல்கழுவி
தடல்புடல்கள் செய்திட்டால் இறையடைவீர் என்றிராதீர்
கடலுப்பாய் மனத்துள்ளே உறைந்திருக்கும் மலங்களினை
குடமெனவே கழுவிடுவீர் திடமாக இறையடைவீர்.

09. கருங்காலிக் கதவிட்டு இரும்பாலோர் பூட்டிட்டு
பெருமானை உள்விட்டு இருள்சூழ வைத்திட்டு
விரும்பிய போதெமக்கு அருள்சுரக்க வாவென்றால்
இதயத்துள் இருத்தாமல் அவன் அருள்சுரக்க வருவானோ

10. நிலம்தோண்டி ஜலமெடுத்து நீராடி நிறம்தீட்டி
பலன்வேண்டிச் சிலகடையில் படைத்திடவே பொருள்வாங்கி
தலமேறி வலம்வந்து தட்டமிட்டுத்தான் கொடுத்தால்
மலம்கலந்த மனத்துள்ளும் மகிழ்ந்திருக்க இறைவருமோ

****

## வழித்துணை - 03

01. வெள்ளியும் செவ்வாயும் வெறுவயிறு தானிருந்து
அள்ளியே திருநீறும் சந்தணமும் புறம்பூசி
வள்ளியொடு தெய்வானை வடிவேலா வாவென்றால்
துள்ளியவன் வருதற்கு உள்ளொளிதான் வேண்டாமோ

02. முனிவரும் தேவரும் மனிதருள் உண்டென்று
இனிவரும் நாட்களில் பணிந்திட யாருளர்
பிணிதரும் அசுரப் பணிகளைக் களைந்திடில்
கனிவுடன் கடவுளும் மனிதருள் தோன்றுவான்

03. ஐம்பொறியும் ஆறறிவும் நம்மிடமே உள்ளதனால்
இம்மையில் நாம்மேலென்று இறுமாப்பு அடையலாமோ
எம்பெருமான் படைப்பினிற்கு ஏற்றபடி நடையின்றேல்
அம்மையொடு அப்பரெமை மனிதரென்று அருள்வாரோ

04. ஐம்பூதம் ஐந்துமே ஆண்டவனின் அங்கமென்று
நம்பித் தொழுவோர்க்கே வெவ்வினைகள் வேரறும்
எம்மிலும் மேலிங்கு ஏதுண்டு என்பவற்கோ
தம்வினையே வினையாகித் தம்மைச் சுட்டுவிடும்

05. நிலம்நடுங்க நீரகலும் நெடுங்காற்று புனல்வீசும்
விண்ணதிர வாழ்வழியும் வனமெரியும் ஏனென்றால்
இனங்கண்டு இவையனைத்தும் இறைவனது அங்கமென்று
தினந்தினம் போற்றிநாம் துதிக்காவிடில்

06. சொல்லிலும் செயலிலும் ஒன்றாக இருந்திட்டால்
கல்லிலும் முள்ளிலும் கடவுளை நினைந்திட்டால்
அல்லும் பகலும்நாம் அன்பிற்காய் உழைத்திட்டால்
கொல்லும் பகைகூட மெல்லெனவே அகலாதோ

07. சொத்தோடு சுகங்களும் மெத்தவே இருந்தாலும்
வைத்திருக்க ஏதுண்டு செத்தபின்பு என்றறிந்து
இத்தரையில் நாமும் நமதுமிறை எண்ணுணரில்
இறையென்ற பெருஞ்சொத்து இனிநமதென்று ஆகாதோ

08. ஆதனமாய் நாங்களிந்த அவனியிலே வாழ்ந்தென்ன
ஏதனமாய் வாழ்வில் எவற்குமே உதவிடாமல்
வேதனத்தோடு வாங்கும் சீதணம் தானும் சேர்க்கும்
சாதனமானால் சரியோ சாமிக்கு மோதகம் மட்டும்தானோ

09. ஆலயத்து மண்ணும் அங்கிருக்கும் நீரதுவும்
ஞாலத்து முதல்வனின் திருநீறும் தீர்த்தமுமாம்
காலத்தால் அதைமறந்து கால்மிதித்து நீர்பழித்தால்
ஓலத்தைக் கேட்டெமக்கு உதவத்தான் இறைவருமோ

10. தன்னுள்ளோர் ஆலயத்தை தானமைத்துத் தொழுவோரே
முன்னுள்ள ஆலயத்தின் மூர்த்திகரம் தாமுணர்வர்
பின்னின்றோர் பேரெண்ணம் தள்ளிடவே பக்தியென்போர்
இன்புறுவர் இப்பிறப்பில் பின்பிறந்து உழன்றிடவே

## வழித்துணை- 04

01. பசிப்போற்கு உணவும் ரசிப்போற்கு கலையும்
வசிப்போற்குக் கொடுத்திடலே பொசிப்புடையதாகும்
நசிப்போற்குக் கரமாகி ருசிப்போற்கு விருந்துமிடல்
மசித்து மானிடத்தைப் புசிப்பதற்குச் சமமாகும்

02.விருந்தென்று சொல்லிநாம் அருந்திடக் கொடுப்பதும்
பெருந்திரள் மத்தியில் பேருரை நிகழ்த்தலும்
இருந்திட்டால் போதுமோ வருந்துவோற்கு அதுமருந்தோ
பொருந்திடும் வகையிலே தருந்துணை தான் வேண்டாமோ.

03. ஜனனிப்போம் என்றுநாம் எண்ணியே இருந்ததில்லை
மரணிப்போம் என்பதையே ஜனனத்தில் அறிந்துள்ளோம்
சயனிக்கும் வேளையிலும் பிறர்நலனை எண்ணிடில்நாம்
பயணத்தின் முடிவினிலே பரமனையே அடைந்திடலாம்

04. நன்றி மறக்கின்ற மானிலத்து மாந்தரும்
மன்றினில் மட்டுமே மனிதநேயம் உரைப்போரும்
வென்றிட்டோம் வாழ்வினை என்றெண்ணி மகிழ்ந்திடலாம்
செல்லுமிடம் அறிவாரோ சொர்க்கம்தான் இவர்க்குண்டோ

05. பட்டமும் பதவியும் கிட்டுவது பெருமைதான்
எட்டவே முடியாத செல்வமும் செழுமைதான்
வட்ட முகத்தோடு வர்ணமும் அழகுதான் ஆனாலும்
இவற்றைச் சுட்ட இடத்தில்தான் சிவனார் ஆடுகின்றார்அறிவாரோ

06. வெண்கட்டி கூறுவது வெள்ளைநிறம் மட்டுமன்று
எண்ணத்தில் தோன்றுகின்ற எண்ணற்ற விடயமும்போல்
கண்ணெதிரில் தோன்றுவது கற்சிலை மட்டுமன்று
விண்ணின்று எமைக்காக்கும் வடிவமென்றே வணங்கிடுவீர்

07. அறியாமை உடையோராய் அவனியிலே சிலபேரைக்
குறிப்பிட்டுக் கூறிநாம் இழித்துரைப்ப துண்டு
அறியாமை அவ்வளவு இழிவன்று அவனியதில்
எதையும் அறியமுயற்சிக்காமையே மிகமிக இழிவாம்

08. கோடிகள் குவித்திடவும் கோமகன் ஆகிடவும்
நாடியே வந்திறையைப் பாடிப் பணிதல்விட்டு
தேடிய பிறப்பிலுயர் மானிடப் பிறப்பையீந்தான்
ஆடிய பாதநன்றி கூறியே பணிதல் நன்றாம்

09. சுகபோகம் கலந்தோரைச் சுமங்கலராய் ஏற்பதுவும்
யுகமிதனில் ஏதுமிலார் அமங்கலராய் ஆவதுவும்
மிகநல்ல முறையென்று எண்ணிடாதீர் ஏனென்றால்
ஜெகமிதனில் ஆத்மபலம் அதிகமுளோர் அமங்கலரே!

10. உதவிகோரி உம்மிடத்தே ஓரிருவர் ஓடிவந்தால்
பதவியினைப் பாராமல் பரிந்துடனே செய்திடுவீர்
இதனைநீர் நிராகரித்தால் இன்னொருவர் செய்திடுவார்
அதனால் நீர் அரியதொரு வாய்ப்பினையே இழக்கின்றீர்

## வழித்துணை-05

01. மாமிசமும் தாவரமும் போசனமே யன்றி
நாமிறையை அடைகின்ற மார்க்கமது வல்ல
பூமிதனில் புரிந்துணர்வு பிறந்திட்டால் போதும்
சாமியின்முன் மாமிசமும் தாவரமும் ஒன்றேயாம்

02. விட்டுக் கொடுத்தலென்றோர் சிறுவிடயம் பிறர்க்காய்நாம்
தொட்டுக் கொடுத்திட்டுத் துயரின்றி வாழ்ந்திட்டால்
எட்டிப் பிடிக்கவே முடியாத பெருவிடயம்
கிட்டுதற்கு அதுவே வழித்துணையாம் என்றறிவீர்

03. மரமது பூப்பது மானிடரால் எனில்
சிரமது மாலைகள் ஏற்பது நியாயமே
மனமது கூடப் பூத்திடா மானிடர்
மார்பினில் மாலைகள் அனலிடை இட்டதே

04. ஆண்டவனை வேண்டினாலும் விட்டாலும் அவனியிதில்
உண்டென்பது உங்களுக்கு உண்டு அதுமாறாது
மீண்டுமோர் பிறப்பதனில் சிறந்துநீர் பிறந்திடிலோ
என்றென்றும் ஆண்டவனை வேண்டுதலே வழியாகும்

05. பிறப்பதனில் எழுதியதே தினம்தினம் நடப்பதனால்
நிறச்சேலை முழுவியளம் நடப்பதினை மாற்றாது
பிறர்மனதை நோகடிக்கும் பொறுப்பற்ற செயலொன்றே
உறக்கத்தைக் கெடுத்துங்கள் நிம்மதியைக் குலைத்துவிடும்

*06.* சகிக்கவே முடியாத விடயமொன்றைச் சகிக்கையில்
வகிக்கின்ற வாழ்விற்கு அர்த்தமில்லைப் போலிருக்கும்
மகிழ்ச்சியோடு எதையுமே சகித்துக்கொண் டிருப்போற்கு
வெகிழ்ச்சியது நீங்கிப் பின்பெருமகிழ்ச்சி நிலைத்திருக்கும்

*07.* நீதிநெறி மேதினியில் சீர்குலைந்து போனதென்று
வீதியிலே வீழ்ந்துநாம் விம்மிவிம்மி அழுவதிலும்
பாதியதில் எமக்கும்தான் பங்குண்டு என்கின்ற
சேதியெண்ணிச் செயல்பட்டால் நீதிஎன்றும் நிலைத்திருக்கும்

*08.* குறையொன்றைப் பிறர்மீது கூறுகின்ற போதினிலே
நம்முறையுள் நிறைந்திருக்கும் குறையினையும் எண்ணவேண்டும்
கறைபடிந்த நம்மிதயக் கதவுகளைப் பூட்டிவிட்டு
சிறையுடைத்துப் பிறர்குறையை வெளிக்கொணர்தல் நன்றன்று

*09.* முடிந்ததோர் விடயம்தன்னை முடிந்ததாய் எண்ணிடாமல்
கடிந்ததைத் தினமும் பேசிக் காலத்தைக் கழித்திடுதல்
விடிந்ததும் விடியாவாழ்வில் விபரீத இருளும் சூழ்ந்து
மடிந்தழிந்து போதற்கே அது மறைமுக வழியும்காட்டும்

*10.* உடற்பலத்தை பலமென்று நம்பியே இருப்பவர்கள்
உடல்கெட்டுப் போனதுமே பலமிழந்து போய்விடுவர்
திடமனதைப் பலமென்று தினம்நம்பி இருப்பவரோ
தடம்பதிப்பர் தரணியில்தாம் பலம்பெற்றோரென்றே.

## வழித்துணை- 06

01. செய்வதுவும் சொல்வதுவும் உணர்ச்சிவழி வருவதனால்
எய்துவது அதனால் எவற்குமே ஆகாதாம்
தெய்வத்தை நினைந்தொருகால் ஏற்றவழி மாற்றிடிலோ
உய்வதற்கு அதுவே உகந்தவழி என்றறிவீர்

02. கூரிய கத்தியதின் கொடூரத்திற்கு அஞ்சாதீர்
நேரிய இறைபக்தி நெஞ்சினிற்கே அஞ்சிடுவீர்
பாரினில் கத்திகள் வேரினையே வெட்டிவிடும்
சீரிய பக்தியோ சிவனடியைக் காட்டிவிடும்

03. உடல் கெட்டுப்போனதென்று மருத்துவரை நம்பியே
கடல் போலும் மருந்துண்டு நலம் பெறுதல்போல
உளம் கெட்டுப் போனதென்று இறையடியை நம்பியே
வளம்பெற அஞ்சுவதேன் அருமருந்தை அறியீரோ

04. வெள்ளைச் சேலையொடு வெண்ணீறும் சந்தணமும்
தள்ளிவைக்க வேண்டியோரின் இலட்சினையாய்க் கொள்ளாதீர்
உள்ளத் தெளிவினையும் உறுதியையும் வெளிக்காட்ட
அள்ளிக் கொடுத்திட்ட தெட்சணையாய் எண்ணிடுவீர்

05. தவறுகளைப் பிறர்தலையில் சூடவே முயற்சிப்போர்
திறமைகளைத் தமதென்று தனித்துவமாய் ஏற்றிடுவர்
அறமதுவும் அதுவன்று அறிவொளியும் அதுவன்று
திறமைகட்டும் தவறுகட்கும் அனைவருமே பொறுப்பாகும்

06. ஆடையொடு அணிகலத்தைப் பெருமையென்று கருதுபவர்
அன்பினெடு பண்பினையும் பலவீனம் என்றுரைப்பர்
பெருமையென்று கருதுபவை அரைவழியில் போய்விடவே
பலவீனம் என்பதுவே பின்பெருமையதாய் மாறிவிடும்.

07. அளந்தளந்து கொடுப்போர்கை அளவுகோல் இருந்தென்ன
விழுந்தெழுந்து நடப்போர்க்கை ஊன்றுகோல் இருந்தென்ன
வளந்தரவே எழுதுவோர்க்கை எழுதுகோல்தான் இருந்தென்ன
உளந்திறந்து காட்டுதற்கோர் திறவுகோல்தான் இல்லையெனில

08. தேரேறி வந்தார்நீர் திருமகனார் கண்டீரோ
யார்வாழ வேண்டுமென்று நீர்கேட்டீர் சொல்வீரோ
ஊர்வாழ வரம்கேட்டால் வாழ்வுண்டு உமக்கும்தான்
நீர்வாழக் கேட்டிருந்தால் ஊரின்றி நீருண்டோ

09. ஆணோடு பெண்ணும் அவனியிலே பிறந்ததனால்
மானிடம் இங்கே மலர்ந்ததென்று அர்த்தமல்ல
ஊனோடு உயிரினுள்ளோர் ஆத்மீகம் மலர்ந்தாலே
அன்றிங்கே மானிடம் பிறந்ததென்று அர்த்தமாகும்

10. விலைமதிக்க முடியாத மானிடத்தை இழந்தபின்பு
சிலைவடித்து என்ன சித்திரங்கள் வரைந்ததென்ன
நிலையில்லா வாழ்வென்ற நிலையதனை உணர்ந்துகொண்டு
நிலையான சிலசெய்தால் மானிடமும் நிலைக்காதோ

## வழித்துணை-07

*01.* நேற்றைய நல்லவர் இன்று தீயவராவதும்
இற்றைய தீயவர் நாளை நல்லவராவதும்
மானிட இனத்தின் மாறுகுணம் மட்டுமன்று
அடுத்தவரின் அபிலாசைப் பெறுபேறும் கலந்ததாகும்

*02.* ஊரிலே இருந்துகொண்டே உதவத்த ஊரென்பார்
யாரிங்கு மனிதருண்டு காட்டுங்கள் பார்க்கவென்பார்
கோரிடுவோற் கிங்கொண்று கூறிவைக்க விரும்பிடுவோம்
ஊரினொடு மனிதரும் நீரென்றே உணர்ந்துயர்வீர்

*03.* இறையருள் என்பது மறைபொருள் அன்று
உறைபனி போலஅது உறைந்துள்ள ஒன்றாகும்
நிறையன்பினோடு நாம் குறையாத பக்திகொள
அலைகடல் போல அது அருள்பொங்கி ஓடுமாம்

*04.* உறவென்று பாராமல் உண்மைகளை ஏற்போரும்
துறவறங்கள் பூணாதே அறநெறியில் நிற்போரும்
பிறர்நலனைப் பேணுகின்ற பெரும்பணியைச் செய்வதனால்
இறவாத புகழோடு இவ்வுலகில் நிலைத்திருப்பர்

*05.* தர்மமெனப் படுவது மர்மமான ஒன்றன்று
கார்முகில் போலஅது காத்திருக்கும் ஒன்றாகும்
கர்வங்கள் அகன்றிட கருணைகள் பிறந்திட
சர்வமும் செழிக்கஅது சங்கமம் ஆகுமாம்.

*06.* ஏற்போற்கு நியாயத்தை எடுத்தியம்பல் தன்னைவிட
ஏற்காதோற் கதையியம்பல் ஏற்புடைய தொன்றாகும்
ஏற்பாரே மீண்டுமதை ஏற்பதிலே என்னகண்டீர்
ஏற்காதோர் ஏற்றிடலே நியாயத்தின் அர்த்தமாகும்

*07.* நோய்மாறி நலம்பெறநாம் வைத்தியசாலை செல்வோம்
ஆய்ந்தறிந்து கற்றிடவோ கல்லூரி செல்வோம்
காய்கறிகள் வாங்குதற்குக் கடைத்தெருக்கள் செல்வோம்நாம்
ஆலயங்கள் சென்றிடாமல் பேரருளைப் பெறலாமோ

*08.* ஆழக் கல்வியொடு அதற்கேற்ற பதவியதும்
வாழும் மனிதற்கு வரப்பிரசாதமன்று
தாழப் பழகுதலும் தோழமைக் கொள்கையுமே
நாளும் மானிடற்கு நற்பெயரைச் சேர்ந்திடுமாம்

*09.* ஆலயத்துத் திருநீற்றை அளவாக எடுத்துமீதி
சாலையிலே கொட்டியதில் சந்தணமும் சிந்துதல்போல்
செல்வத்தில் தேவைக்கு ஏற்றதை எடுத்துமீதி
இல்லாற்குக் கொடுப்பதில்லை எல்லாமும் மாயையதோ

*10.* ஆதாரம் நிலமாக நிற்பதனால் அதில்நின்று
பூகோளம் சுற்றுவதைப் புரியாமல் நடக்கின்றோம்
கீழேயும் மேலையும் ஏகாந்தம் என்றுணர்ந்தால்
அதுவீழாமல் நிற்பதற்குக் காரணம்யார் என்றறிவோம்

## வழித்துணை- 08

01. பிறந்தோம் வளர்ந்தோம் வாழ்ந்தோம் இறந்தோம்
என்றுநாம் இருந்திட்டால் பிறந்ததால் என்னபலன்
நன்றே செய்தால் அதுவும் இன்றே செய்தால்
அன்றே நாம்பிறந்தோம் என்பது அர்த்தமாகும்.

02. ஆலயமே செல்லாதோர் அமோகமாக வாழ்வதுவும்
ஆலயமே தஞ்சமென்போர் ஏழ்மையிற் துஞ்சுவதும்
இறையுண்டோ இல்லையோ என்பதற்கு விடையன்று
நடந்ததெல்லாம் முடிந்தகதை நடப்பதற்கே இறைதுதியாம்

03. எப்போது நம்வாழ்வு முடியுமென்று நாமறியோம்
அப்போது அதைத்தடுக்கும் வழியினையும் நாமறியோம்
இப்போதே அன்பிற்காய் நம்வாழ்வை அர்ப்பணித்தால்
ஒப்பரிய ஓர்பிறப்பில் மீண்டும் நாம் பிறந்திடலாம்

04. நெருக்கடியால் உமையாரும் நெருங்கியே வந்திட்டால்
வரும்படியைப் பார்த்தவரை வாவென்று அழைத்திடாதீர்
உருப்படியாய் அவர்க்கேதும் உதவவென்று நீர்நினைத்தால்
இருப்பதிலே கொடுத்துவிடும் இரட்டிப்பாய் நீர் பெறுவீர்

05. எம்பெருமான் எமக்கேதும் செய்யவில்லை என்றெண்ணி
விம்மிவிம்மி விரக்தியுற்று வாழாமல் வீழ்வதிலும்
நம்பிக்கை யோடிந்த நானிலத்தே நடந்துவந்தால்
இம்மையிலே இல்லையென்ப தில்லாமல் பெற்றிடலாம்

06. தாங்கிடவே முடியாத வேதனையால் தமையழிப்போர்
பின் ஓங்குமொரு வாழ்விற்காய்ப் பிறந்திடவே முடியாது
நீங்குமிந்த நிலையென்ற பாங்குடனே நடந்துவந்தால்
பொங்குமொரு புதுவாழ்வில் பின் திளைத்திடுவர் இனிதே

07. பரம்பொருளார் பட்டஅடி பார்முழுதும் பட்டதெனில்
பாரிலொன்று பட்டஅடி பரம்பொருளார் மீதுமன்றோ
ஆதலினால் பிறர்நோகா நெறியினைநீர் கடைப்பிடிப்பீர்
போரோயும் உம்மோடு பாரோங்கும் என்றறிவீர்

08. எத்தனைதான் தராதரங்கள் எம்மிடத்தே இருந்தாலும்
அத்தனையும் ஓர்சிறிய இழிசெயலைச் செய்திடில்நாம்
மொத்தத்தில் அவைமறைந்து மோதலையும் உருவாக்கி
பித்தனென்ற பெயரையுமே சூடவைக்கும் அறிந்திடுவீர்

09. மேலாடை தலைப்பாகை மட்டுமின்றிச் சென்றிட்டால்
ஆலயத்துள் ஆண்டவனை அடைந்திடலாம் என்றிராதீர்
கீழான எண்ணங்கள் செயல்களைநாம் விட்டாலே
தானாக வந்திறைவன் குடியிருக்க எமையடைவான்

10. இயற்கையோடு இறையருளும் சேர்ந்தெம்மை இயக்குவதால்
வியத்தகு சாதனைகள் செய்துநாம் மகிழ்கின்றோம்
பயக்கின்ற அனைத்துமே நம்புய பலத்தால் என நினைத்தால்
புயலோடு பூகம்பம் வருமென்போம் தடுப்போமா.

## வழித்துணை - 09

01. யார்சொன்னார் என்று ஒன்றை ஆராய்ந்து விட்டிடாமல்
ஏதுசொன்னார் என்றறிந்து ஏற்றிடலே ஏற்றதுவாம்
மானிடராய் ஓர்முறைதான் பூமியிலே நாம்பிறப்போம்
நேர்வழியில் நடையின்றேன் கால்நடையில் ஒன்றாவோம்

02. நம்மவரின் சிறப்புகளைப் பிறர்கண்கள் பார்த்தனால்
கண்ஊறு பட்டதென்று கண்கெடவே எரிக்கின்றோம்
பிறர்கண்கள் கெட்டபின்பு நம்மவரும் நாமுமிங்கு
கண்ணோடு வாழ்தல்பெரும் சிறப்பென்று எண்ணலாமோ

03. கவலைகள் [illegible]
நிலுவையில் வரும்போதே நின்மதியை அதுகுலைக்கும்
கொலுவிருக்கும் காலமதில் கொள்கையோடு வாழ்ந்திட்டால்
வலுவிழக்கும் போதிலதே வழித்துணையாய் வந்து விடும்.

04. கடவுளை நம்புங்கள் கடமையைச் செய்யுங்கள்
இடர்வந்த போதன்றி இடையறாது வணங்குங்கள்
சுடரதில் தோன்றியே பரவிடும் ஒளியதாய்
படர்வினை போக்கிடப் பரம்பொருள் தோன்றுவார்

05. கொடும்பாவி கட்டியழக் கோடைமழை பெய்யும்
கடும்விரதம் தானிருக்கக் கர்மவினை யகலும்
நெடுந்தூரம் தேவையில்லை நெஞ்சத்து அழுக்ககற்ற
படுந்துயரம் போகும் பரமனருள் சேரும்.

06.கேடுநினைக்கின்றோம் பிறர்க்கு என்று எண்ணாதீர்
நாடியது பின்னர் நம்மையே வந்தடையும்
ஓடிஓடி ஒளித்தாலும் ஓவென்று அழுதாலும்
தேடிவைத்த தெதுவோ கூடிவரும் அதுவே.

07. நீரும் நெருப்பும் காற்றும் அவனென்றும்
ஊரும் உலகும் உளதும் அவனென்றும்
பேரும் புகழும் அவனுக்கே உரித்தென்றும்
பாரும் அன்றோ பார்செழிக்க மழைபொழியும்

08.தகுதியும் அந்தஸ்தும் தருவதன்று மரியாதை
பகுத்தறிவு மாந்தர்கள் பகிர்வதுவே மரியாதை
வகுப்பாளி யானாலும் பகுத்தறிவின் பாதைநடந்தால்
தகுதி உடையவரே மரியாதைக் கவரும்

09. சூரனை அழிக்கமட்டும் வேலவன் வருவதில்லை
ஆணவக் காரரெனில் எம்மையும் கூடத்தான்
மானிடராய் வாழ்ந்திட்டால் வானிடையே சென்றுநாம்
வேலோடும் மயிலோடும் உறவாடி மகிழ்ந்திடலாம்

10.நீதிக்கு அப்பால்நாம் சேர்க்கின்ற அனைத்துமே
மேதினியில் நாம்பட்ட வட்டிக் கடனேயாம்
வீதிக்கு வந்தோர்நாள் வட்டியையும் சேர்த்தே
ஆதியோடு செலுத்தவேண்டும் நீதியும் அதுவே

## வழித்துணை - 10

01. ஒன்றே உயிர்களென்று எண்ணுவோர்க்கு இறையுண்டு
அன்றே படைத்ததனால் பரமனுக்கும் பெருமையுண்டு
நான்வேறு நீவேறு என்றுநாம் வாழுமட்டும்
தான்வேறு என்றிறைவன் தள்ளியே நின்றிடுவான்

02. சொத்தோடு சுகமேதும் கிடைக்கவில்லை என்பதற்காய்
செத்தேனும் போய்விடலாம் என்றெண்ணிச் சலிக்காதீர்
முத்தோடு மணியாகக் கிடைத்ததிந்த மானிடத்தை
பத்திரமாய்க் காத்திடுவீர் இதைவிடவோர் சொத்துண்டோ

03. தன்நிலையைத் தராதரத்தைத் தரணியிலே ஏற்காதோர்
மண்ணகத்தே தம்நிலையைத் தவறாகப் புரிந்துகொண்டு
எண்ணரிய பலவற்றை இங்கிழந்து போவதுடன்
முன்னேறும் வழியினையும் மூடுகின்றார் அறிவாரோ

04. பழம்கெட்டுப் போனதென்று பாரிலதை வீசுபவர்
உடல்கெட்டுப் போனதென்று ஊரைவிட்டே போவாரோ
பழம்கெட்டுப் போனததன் விதைமுளைக்க என்பதைப்போல்
உடல்கெட்டுப் போவதும் நம்ஊழ்கடக்க என்றறிவீர்

05. வயிற்றுப்பசி போக்கிடவே நாம் அலைந்துலைந்து திரிகின்றோம்
கயிற்றிலே நடந்தேனும் கால்அரையை வாங்குகின்றோம்
உயிற்குயிராம் இன்னொன்று அறிவுப்பசி போக்குதற்கு
பயிற்றுமிடம் செல்வதுண்டோ பகலிரவாய் அலைவதுண்டோ

**06.** நீதியது பொய்க்காது இங்கு நிலைபெறுமானால்
வாய்மையது வழுவாது இங்கு வளம்பெறுமானால்
நேர்மையோடு நியாயமும் எங்கும் மலர்ந்திடுமானால்
கார்முகிலும் பொய்க்காது கடும்மழை பெய்யும்

**07.** குறைபாடு பார்ப்போற்கு குறைபாடாய்த் தான்தெரியும்
இறைவனது படைப்பிலே எதற்கும்சில அர்த்தமுண்டு
நிறைவான மாந்தரினால் முடியாத பலவற்றை
குறையுடையோர் முடித்திடுவர் குறைபாடும் தகுதியாமே

**08.** நீறு பூத்திருக்க நெருப்பென்று எண்ணாமல்
ஏறி மிதித்தந்த எரிதணல்மேல் வீழ்ந்திடப்போல்
சிலர் கூறும் வார்த்தையிலும் குழியிருக்கும் வீழாமல்
ஆறி அமர்ந்தெதையும் அணுகுதலே மேலாகும்.

**09.** ஆலயத்தில் அன்புவழி அனுசரிக்க முடியாதோர்
ஞாலத்து முதல்வனையும் கடவுளென்று ஏற்பாரோ
காலத்தால் அவர்தம்மைக் கடவுளென்று எண்ணுகின்ற
கோலத்தைக் கண்டிறைவன் கால்விரலை ஊன்றானோ

**10.** நாமும் ஓர்நாள் நலந்திங்கு வீழ்வோம்
பேனும் இறங்கிப் பிறதலை ஏறிடும்
கூனும்வந்து குமட்டவே நிற்கும்
பின் ஏனெம் உடலுக்குள் பேதங்கள் சொல்வீர்

# வழித்துணை - 11

01. தன்னவரைத் தக்கவராய், பிறர்தம்மைத் தகாதவராய்
எண்ணுகின்ற எண்ணத்தில் மாற்றம் இன்றேல்
புன்னகைகள் செய்வதும்பொய் புகழ்ந்துரைகள் பேசலும் பொய்
இன்னும்நாம் மனிதர்களாய் இல்லையென்பதே மெய்யாகும்.

02. கடல் நீரைச் சூடாக்கி கார்முகில் ஆக்கி
உடல் குளிர வைத்துப்பின் உம்மகத்தே மழைபொழிய
திடம் கொண்டு யாரும் வருவரென்று எண்ணாதீர்
மடல் எழுதும் கணபதிக்கு மழைதருவார் அவரே

03. விலங்குகளும் பறவைகளும் இறைவனுக்கு வாகனமாய்
துலங்குதல்போல் மானிடரேன் மானிலத்தில் இல்லையெனில்
உலகினையே படைத்தோனை படைத்தவர்தாம் என்போரை
தலமேறத் தகுதியற்றோர் என்பதினைக் காட்டுதற்காம்

04. அறுகம் புல்லரைத்து ஆவின்பால் அதில்கலந்து
இறுகப் பிடித்துஅதை இலையொன்றின் மேல்வைத்து
சிறுமலர் எடுத்துநாங்கள் சிவசிவ எனச் சூடிவிட்டு
பெறுவதைக் கேட்டால் பெருமான் பேரருளை மறுப்பாரோ

05. அறிவுடையோர் என்றுமட்டும் இருப்பதில்நாம் பலனில்லை
குறிக்கோளும் உடையோராய் இருத்தல் வேண்டும்
வறியவரும் சிறியவரும் நெறியோடு வாழ்வதற்கு
உறுதியோடு உழைப்போரே அறிவுடையோராவர்

06. தலையெழுத்து என்பதொரு தூரநோக்குக் கருத்தாகும்
கைகளில்தான் எழுத்துண்டு கண்களுக்கே அதுதெரியும்
ஆதலினால் கைகளை நாம் கவனமாகக் கையாள்வோம்
விண்ணவரும் இருப்பதெங்கள் கைகளில்தான் என்றே

07. பிறந்தோம் என்றுநாங்கள் சொல்வதிலே அர்த்தமில்லை
பெற்றோம் என்றுபெற்றோர் சொல்வதில்தான் அர்த்தமுண்டு
ஆதலினால் பிறந்தநாள் விழாக்களைநாம் விட்டுவிட்டு
பெற்றநாள் விழாவெடுத்து பெரும்பேறு அடைந்திடுவோம்.

08. இறப்பு எல்லோர்க்கும் உண்டென்று நாமறிவோம்
இறப்பின்பின் ஏதுண்டு என்பதையே அறியோம்நாம்
சொர்க்கமென்பார் நரகமென்பார் யார்யார்க்கு அவைகளெனில்
பிறப்புண்டேல் நரகமும் மீண்டும்பிறவாமை சொர்க்கமுமாம்

09. இயலாதார் என்றொருவர் இல்லறத்துட் புகுந்துயாரும்
இயலாமை தன்னையே பயன்படுத்தல் நன்றன்று
இயலாமை ஒருவர்க்கே சொந்தமான ஒன்றன்று
இயலாமை எல்லோர்க்கும் வரும்தடுக்க இயலாது

10. ஏதிலியாம் என்றொருவர் வாழ்க்கைக்கு எதுகைசொல்லி
மேதினியில் மேலவர்போல் மமதைகொள்ளல் நன்றன்று
ஊதியங்கள் ஒருவர்க்கே சொந்தமான ஒன்றன்று
வீதியோரம் வாழ்பவரும் விதிவந்தால் அதிபராவார்.

## வழித்துணை - 12

01. மாற்றுவழி ஒன்றினைநாம் மற்றவற்குக் காட்டாமல்
சாற்றுபணி பிழையென்று சாடிடுதல் நன்றன்று
ஏற்றவழி எல்லோற்கும் நல்வழியாய் இருப்பதனால்
போற்றியே அவ்வழியில் புகுந்துநாம் உயர்வுறுவோம்

02. தேவையின்றி உம்மிடத்தில் இருக்கின்ற ஒன்று
மற்றவற்கு மிகமிகத் தேவையாயும் இருந்திடலாம்
தேவை அறிந்துநீர் சேவைதனைச் செய்திடுவீர்
உம்மை அறிந்திறைவன் மேன்மேலும் உதவிடுவான்

03. பண்பாடு என்பது தன்பாட்டில் வருவதன்று
ஒன்றினை ஒன்று புரிந்திட எழுதுவதாம்
அன்போடு அதைநாங்கள் அனைவருமே புரிந்திட்டால்
தென்படும் அன்றோதான் மனிதஇனம் இங்கேயாம்

04. மண்ணுக்குள் வைரமுண்டு விண்ணுக்குள் மீன்களுண்டு
நீருக்குள் முத்துண்டு நாகத்துள் இரத்தினமுண்டு
உன்னுக்குள் எதுண்டு எனறுநீ ஏங்கிடாதே
மனிதத்துள் நீயிருந்தால் உன்னுள்ளும் மாணிக்கமுண்டு

05. நீருற்று வருமென்றெண்ணி நிலத்தைநாம் தோண்டும்போது
ஊற்றுநீர் வருதல்கண்டே உளம்மகிழ்ந்து பொங்குதல்போல்
மாற்றமே இல்லைமனத்துள் ஆழமாய்ப் பக்திகொள்ள
தோற்றியே வருவான்இறைவன் தொழுதுநாம் பொங்கிடவே

06. கொள்ளிக்கும் குடத்திற்கும் காத்திருத்தல் கடமையன்று
அள்ளியே பொன்வெள்ளி சேர்த்துவைத்தல் கடமையன்று
கடமையெனப் படுவது மாந்தர்க்கு யாதெனில்
இறைபடைப்பு அனைத்திற்கும் பணிசெய்து கிடப்பதேயாம்

07. எல்லோர்க்கும் கல்வியது இணையில்லா ஒன்றுதான்
ஆனாலும் கல்லாதோர் கல்லாக இல்லை
நல்லோராய் வாழ்வதற்கு கல்விமட்டும் போதாது
எல்லோரும் மாந்தரென்ற எண்ணமும் வேண்டும்

08. தயிருள்ள வரையில்தான் வெண்ணையும் மோரும்போல்
பயிருள்ள வரையில்தான் கதிர்களும் புதிர்களும்
உயிருள்ள வரையில்தான் உறவுகளும் உடமையும்போல்
இறையுள்ள வரையில்தான் உலகென்றும் உணர்ந்திடுவீர்

09. அணிகளில் போலிகள் அணிவதில் உண்டுதான்
மணிகளில் போலியும் மாலையில் உண்டுதான்
துணிகளில் போலிகள் வணிகத்தில் உண்டுதான்
மனிதத்தில் போலிகள் மானிடத்தில் வேண்டுமோ

10. வறுமையெனப் படுவது வெறுமைநிலை மட்டுமன்று
சிறுமைக்கு உதவாத சிந்தனையுமாகும்
நிறுவை நிறுவையாக செல்வங்கள் இருந்தாலும்
கருமியென வாழ்ந்திட்டால் வறுமைநிலை அதுவேயாம்.

## வழித்துணை - 13

01. மரியாதை என்பது புரியாத புதிரன்று
கொடுக்கலும் வாங்கலும் சமமாக இருப்பதாகும்
பெரியோற்கு சிறியோரும் சிறியோற்கு பெரியோரும்
உரித்தாக்க உரித்தாகும் உயரிய பண்பாகும்

02. கற்பூரம் உருகலாம் ஊதுபத்தி கருகலாம்
அற்புதத் தீபமதும் அணையாமல் எரியலாம்
பொற்பதம் காண்பதற்கு இவைமட்டும் போதாது
சொற்பமேனும் உடல்உள்ளம் உருகுதலும் வேண்டும்

03. அவனென்றால் இறைவன் இவனென்றால் மனிதன்
அவனையும் இவனையும் பிரிப்பவன் நானே
நான்மெல்ல அகன்றிட்டால் அவனும் இவனும்
இரண்டறக் கலந்தே ஒன்றாகி மகிழ்வர்

04. சிறுவரை ஆதரித்தல் சிறப்புத்தான் தவறன்று
ஆனாலும் முதியோரைப் புறக்கணித்தல் நன்றன்று
ஏனென்றால் சிறுவரொடு இளையோரைப் பெரியோரை
வாழவைக்கும் ஆத்மீகம் நிறைந்தவர்கள் முதியோரே

05. மனிதநேயமிங்கு மரித்துப் போனதென்று
புனிதர்போல் நாமிங்கு புரிந்துணர்ந்து பேசுகின்றோம்
இனியுமதை எம்முள்ளே பிறக்கவைக்க முயலாமல்
முனிவரும் தேவரும் வருவரென்றோ காத்திருப்போம்

06. தன்தேவை மட்டுமே தேவையென்று எண்ணுபவர்
பிறர்தேவை எதையுமே பொருட்டாக எண்ணார்கள்
பிறர்தேவை நிறைவேற்றி தன்தேவை தனையிழப்போர்
இறையருளால் இழந்தவற்றைப் பன்மடங்காய்ப் பின்பெறுவர்

07. தாயாரின் சேவையொன்றும் பெரிதாக இல்லையென்று
சேயினர் சொத்தோடு சுகம்பெரிது என்பதுண்டு
ஆயினும் தாய்தந்த இதயத்தின் துடிப்பைவிட
தேயினும் வளரினும் மற்றவைதான் பெரிதாமோ

08. தந்தையை வந்தனை செய்கின் பிள்ளைகட்கு
சிந்தையில் சிறந்தன வந்தே அமர்ந்திடும்
நிந்தைகள் புரியாமல் தாய்தந்தை போற்றிடில்
குருவோடு தெய்வமும் கூடவந்தே அருளுவர்.

09. எத்தனைதான் சொன்னாலும் எண்ணியதைச் செய்பவர்கள்
புத்திமதி கேளார்கள் பக்திவழி நடவார்கள்
இத்தரையில் தமக்குநிகர் தாமேதான் எனநடந்து
செத்திடுவர் செத்தபின்பு இவரையாரும் எண்ணார்கள்

10. மெத்தப் படித்தாலும் மேன்மைகளைச் சுமந்தாலும்
பத்துப் பேரிடத்தில் பலதினையும் கேட்டறிந்து
ஒத்துப்போகின்ற உத்தம குணம் படைத்தோர்
செத்தாலும் சாகாமல் பிறர்நினைவில் தினம்வாழ்வர்

## வழித்துணை - 14

01. வேதனையால் இங்கொருவர் வெதும்புகின்ற வேளைதனில்
சாதனைகள் பற்றியாரும் பேசிடுதல் நன்றன்று
போதனைபோல் அவர்துயரைப் பொறுமையுடன் கேட்டிட்டால்
சோதனைகள் முடிந்தவர்போல் சோகம்விட்டே அவரெழுவர்

02. துன்பியலில் பங்குகொள்ளும் பண்பியல் இல்லையெனில்
அன்பியலும் பொய்யாகும் நண்பியலும் பொய்யாகும்
இன்பியலே நிலையென்று தன்னியல்பை வகுப்பவர்கள்
தெளபியல் ஏதுமின்றிப்பின் துய்பியலில் தான்வீழ்வர்

03. கோபத்தைக் குரோதத்தைக் குழிதோண்டிப் புதைப்பவர்கள்
ஆபததே இல்லாத அரும்பேற்றைப் பெற்றிடுவர்
சாபத்தைப் பாவத்தைச் சுமந்திடவே விரும்புபவர்
தூபத்தைப் போட்டென்றும் துவேசத்தை வளர்த்திடுவர்

04. ஆவேசம் கொள்ளாமல் அடக்கமாய் வாழ்பவர்கள்
சாவேதும் நெருங்காத சகவாழ்வைப் பெற்றிடுவர்
பூவேந்தர் ஆனாலும் பாவேந்தர் ஆனாலும்
நாவேந்தராய் நடந்தால் அவர் மூவேந்தராகிடுவர்

05. பகுத்தறிவு என்ட து பதுக்கிவைக்கும் ஒன்றன்று
புகுத்திடப் புகுத்திடப் புத்தொளி தருவது
வகுத்துத் தொகுத்ததை வையத்தோர் வளர்த்திட்டால்
வெகுத்திடும் துயரோடும் இன்பமே சூழும்

06. அறிவொளியும் இறையன்பும் எளிமையான வாழ்வும்
குறிதவறா வாழ்விற்கு வழித்துணைகள் ஆகும்
பிறிதிங்கு இருப்பவைகள் வழிதவறிப் போய்ப்பின்னர்
வறியோராய் சிறியோராய் ஆக்கிவிடும் அறிவீர்

07. மனிதனும் இறைவனும் வடிவத்தால் ஒன்றுதான்
புனிதராய் வாழ்ந்திட்டால் குணத்தாலும் ஒன்றுதான்
கனிவோடு பேசினாலும் இனிதோடு பழகினாலும்
தனிநலம் ஓங்கிடில் மனிதமே கேள்விதான்

08. நிம்மதி என்பதோர் ஆத்மீக உறக்கமாம்
என்பதை அறிந்துநீர் நடந்திடல் நன்றாகும்
தன்செயல் தன்னதால் நின்மதி பிறர்கெடில்
பின்னவர் ஆத்மீக சாபத்தால் அழுந்துவர்

09. பிறர்க்கிடஞ்சல் இல்லாமல் இங்குநாம் வாழ்ந்திடில்
இறக்கின்ற போதுசிலர் இரங்கிடவும் வந்திருப்பர்
உறக்கத்தில் கூடநாம் பிறர்க்கிடஞ்சலாயிருப்பின்
மறக்காமல் எமதுறவைத் துறந்திடவே அவர்துடிப்பர்

10. அணுகுமுறை நன்றாக இருந்திட்டால் போதும்
மனுவுலகில் மற்றவைகள் சிறிதளவேயாகும்
அனுங்குதலும் சிணுங்குதலும் கூடாது என்பதிலும்
அணுகியவர் குறைகேட்டு நிவர்த்தித்தல் மேலாம்.

## வழித்துணை - 15

*01.* பொறுப்புணர்ச்சி இல்லையெனில் வெறுப்புணர்ச்சி தோன்றும்
மறுப்பின்றிக் கிடைப்பவைகள் ஒறுப்பாகிப்போகும்
சிறுப்பினைகள் மேலோங்க உறுப்புகளும் சோர்ந்து
அறுத்துவிடும் மானிடப் பிறப்பினையே அறிந்திடுவீர்

*02.*எண்ணத்தில் அசுரகுணம் வண்ணத்தில் தேவகணம்
உன்னுக்குள் இருக்கின்ற காலம் மட்டும்
விண்ணுக்குள் இருக்கின்ற இறைவனார் இறங்கிவந்து
மண்ணுக்குள் உன்செயலால் மகிழ்வாரோ சொல்வாய்

*03.* கால்கழுவி ஆலயத்துள் செல்வதிலோர் அர்த்தமுண்டு
மலங்கழுவி வந்துள்ளேன் ஏற்றிடெனை என்பதாகும்
கால்கழுவிச் சிலமாந்தர் மலஞ்சுமந்து வந்திங்கு
பால்பழம்தான் கொடுத்திட்டால் பரம்பொருளார் ஏற்பாரோ

*04.*கோடி கொடுக்கின்ற கொடையினொடு ஊருலகில்
நாடிக்கொடுக்கின்ற நன்மையிலும் மேலிங்கு
கூடித் திரிகின்ற குவலயத்துள் ஒருவனது
தேடிக் கிடைத்திட்ட நின்மதியைக் காத்தலாகும்

*05.* கோயிலும் எனதென்பார் கோபுரமும் எனதென்பார்
வீதியும் எனதென்பார் விக்கிரகம் எனதென்பார்
இத்தனையும் உடையோற்கு இன்னொன்றும் இங்குண்டு
நாமே நமக்கில்லை என்பதுவும் அவர்க்கேயாம்

06.பெருந்தன்மை காட்டுதலைப் பலவீனம் என்றுசிலர்
கருதுவதால் பலகருமம் பலனின்றிப் போவதுண்டு
வருந்திப்பின் இருந்துநாம் பெருந்துயரம் கொள்வதிலும்
அருந்தன்மை அதுவென்று மதிப்பளித்தல் பலனாம்

07. தாழ்வு மனப்பான்மையது வாழ்வுக்கு உகந்ததன்று
வீழ்வுக்கு அதுவே காரணம் என்பர் ஆனாலும்
ஆழ்வுக்கும் மீள்வுக்கும் ஆதாரம் எதுவென்றால்
தாழ்வு மனப்பான்மையே பின் உயர்வுக்கு வழித்துணையாம்

08.பேசிப் பேசிச்சிலர் பெருந்தகைகள் போலிருப்பர்
பேசாமல் சிலபேர்கள் பெரும்பணிகள் பலமுடிப்பர்
தேசத்தில் பெருந்தகையாய் இருப்பவர்கள் யாரென்றால்
பேச்சிலும் செயலிலும் ஒன்றாக இருப்பவரே

09. சொத்தும் தமதென்பார் சுகமும் தமதென்பார்
பேரும் தமதென்பார் புகழும் தமதென்பார்
இத்தனையும் தமதென்றுஅறிந்தவற்கு அறியவொன்று
வாழ்வே நமக்கில்லை என்பதையும் அறிதலாகும்

10.கருமம் ஒன்றுமக்குக் கைகூடும் வேளையிலே
உருவத்தைப் பார்த்தனை உமதாக்கல் நன்றன்று
தர்மத்தின் வழியதற்கு நீர்தகுதியுண்டோ என்றறிந்து
இருகரம் நீட்டுதலே பெருமனிதம் ஆக்கிடுமாம்

# வழித்துணை - 18

01. நோக்கமின்றி ஒன்றைநாம் தேக்கிவைக்கும் செயலது
தூக்கத்தைக் கெடுக்கின்ற தாக்கத்தைக் கொடுக்கும்
ஆக்கத்திற் கதைநாங்கள் அர்ப்பணிப்புச் செய்திட்டால்
ஏக்கமும் நீங்கிநல்ல ஊக்கமும் பெருகிவிடும்

02. தாழ்ந்தவர்தான் என்றொருவர் தன்னிலையை எண்ணுதற்கு
வாழ்பவர்கள் வழிவகைகள் வகுத்திடுதல் நன்றன்று
ஊழ்வினை ஒருவர்க்கே சொந்தமான ஒன்றன்று
நாட்பட அதுவேயெமைக் கீழ்நிலைக்குத் தள்ளிவிடும்

03. வழிபாடு என்பது வியாபாரம் ஆகாது
தெளிவோடு இறைவனைத் தேடிடும் முறையாம்
பழிபாவம் இல்லாத வழிபாட்டில் திளைத்திட்டால்
அழிவில்லாப் பேரின்ப வெள்ளத்தில் நீந்திடலாம்

04. எங்கே போகின்றீர் என்றொருவர் வினவிவிட்டால்
பங்கம் அப்பயணமென்று பதட்டம்நீர் அடையாதீர்
உங்களுக்கு அதுவேதான் வழித்துணையாய் மாறிடலாம்
மங்கலம் என்றதற்கும் மகிழ்வோடு பதிலளிப்பீர்

05. பின்னால் நின்றொருவர் உமையழைத்தார் என்பதனால்
இடையிலே இடையூறு வருமென்று எண்ணாதீர்
இடையூற்றைத் தடுப்பதற்கே பின்னின்று அவரழைத்தார்
எண்றெண்ணி நடந்துவிடும் இடையூறு விலகிவிடும்

06.பல்லிசொன்னால் பலித்துவிடும் என்றுமட்டும் நீங்கள்
சொல்லித் திரிவதிலே அர்த்தமில்லை அறிந்திடுவீர்
வல்லோனார் ஆத்மாவை வழிநடத்தும் பாசையதே
பல்லியார் சொல்லியதன் பரினாமம் என்றறிவீர்

07. காகங்கள் கரைந்துவிட்டால் உறவுவரும் என்றுமட்டும்
யூகங்கள் சொல்வதிலே அர்த்தமில்லை அறிந்திடுவீர்
தமக்குணவு இங்குவரும் நாளையென அவைகரைய
எமக்குறவு வருமென்று நாமுணர்வோம் நன்றே

08.பின்னால் நின்றொருவர் பெருந்தும்மல் தும்மிவிட்டால்
முன்னெடுத்த கருமமது முடங்கிடுமோ என்றிராதீர்
முடங்குகின்ற கருமமதை தொடங்குகின்றீர் கவனமென்றே
ஆத்மீகம் தும்மலாயும் அங்குவரும் அறிந்துயர்வீர்

09. சிலவற்றைப் பிறர்க்குநாம் ஒளிவின்றிச் சொல்லிவிட்டால்
பலனற்றுப் போய்விடுமோ அக்கருமமென்று எண்ணாதீர்
உலகிலேயே இல்லையென்று நாம்நினைத்த ஒன்றுகூட
நலன்விரும்பிக் குரைந்துவிட்டால் வலக்கரத்தே வந்து சேரும்

10.குறைபாட்டை ஒருவர்க்குக் கொடுத்தது இறைவனே
இறைவன் கொடுத்திட்ட அக்குறைபாட்டை பழித்திட்டால்
இறைவனையே பழித்திட்ட பாவத்திற் காளாகி
நிறைவான மாந்தரும் பின்குறைசுமக்க சேர்ந்துவிடும்.

## வழித்துணை - 17

01. ஆண்டவனார் அளித்திட்ட இதயத்தைக் கொண்டவர்கள்
இதயமே நெஞ்சத்துள் போதுமென்று இருக்கலாமோ
இதயத்தை இயக்குவோனை இடையறாது எண்ணுதற்கு
நெஞ்சுக்குள் ஓர்கோயில் உருவாக்க வேண்டாமோ

02. முன்னவர்கள் நிறுவிவைத்த பள்ளிகளில் படிப்பவர்கள்
பள்ளிப் படிப்புமட்டும் போதுமென்று இருக்கலாமோ
பள்ளியினைத் தந்தோரும் படித்தெம்மை மகிழ்வதற்கு
நெஞ்சுக்குள் ஓர்பள்ளி உருவாக்க வேண்டாமோ

03. நீதிமன்றை நாடியே நீதிகேட்டுப் போவபவர்கள்
மன்றுதரும் நீதியதே போதுமென்று இருக்கலாமோ
மன்றமதன் வேலையையும் நீளாமல் குறைத்திடவே
நெஞ்சுக்குள் ஓர்நீதிமன்றம் உருவாக்க வேண்டாமோ

04. நூல்நிலையம் பலநாடி நூல்களைப் படிப்பவர்கள்
நிலையத்துப் படிப்பதுவே போதுமென்று இருக்கலாமோ
நுண்ணறிவை மற்றையோற்கும் நுணுக்கமாகப் படித்தளிக்க
நெஞ்சுக்குள் ஓர்நூல்நிலையம் உருவாக்க வேண்டாமோ

05. பேரறிஞர் கல்லறையை பெருங்காட்டில் தான்தேடி
மலர்வளையம் சாத்திவிட்டு மனமாறி இருக்கலாமோ
கல்வியாளர் கல்லறையும் கதைகள்பல சொல்லுமென்று
நெஞ்சுக்குள் ஓர்கல்லறையை உருவாக்க வேண்டாமோ

06.செத்தபின்னால் சுடுவதற்கு சுடலையதே போதுமென்று
மொத்தத்தில் நாம்போகும் வரைகாத்து இருக்கலாமோ
உத்தமனார் என்றபேரை கெடுப்பவற்றை சுட்டெரிக்க
நெஞ்சுக்குள் ஓர்சுடலை உருவாக்க வேண்டாமோ

07. கருமங்கள் பலவாற்றக் கச்சேரி போதுமென்று
கருமங்கள் பார்த்துவிட்டுக் கவலையின்றி இருக்கலாமோ
நாளாந்தம் நற்கரும நெறிகளைநாம் செயற்படுத்த
நெஞ்சுக்குள் ஓர்கச்சேரி உருவாக்க வேண்டாமோ

08.வைத்திய சாலைசென்றோர் நோயைக் குணமாக்கிவிட்டு
அடுத்தநோய் வரும்வரைக்கும் காத்துத்தான் இருக்கலாமோ
நோயற்ற வாழ்வுவாழ தடையானவற்றை தடைநீக்க
நெஞ்சுக்குள் ஓர்வைத்தியசாலை உருவாக்க வேண்டாமோ

09. வங்கிக் கணக்குவைத்து வாடிக்கையாளராகி
தங்கியதில் வாழ்ந்திட்டால் போதுமென்று இருக்கலாமோ
நன்றிக் கணக்குவைத்து நாடியவற்கு உதவிசெய்ய
நெஞ்சுக்குள் ஓர்நன்றி வங்கி உருவாக்க வேண்டாமோ

10.காவல்துறைநாடி கனபிணக்கைத் தீர்த்துவிட்டு
பிணக்குவந்தால் காவல்துறை உண்டென்று இருக்கலாமோ
பிணக்கதுதான் ஏற்படாமல் உணர்ச்சிகளை அடக்கிவிட
நெஞ்சுக்குள் ஓர்காவல்துறை உருவாக்க வேண்டாமோ

## வழித்துணை - 18

01. கேட்டபோம் என்றெண்ணிக் கேட்காமல் இருந்துவிட்டு
பின்னொருவர் கேட்டதனைப் பெற்றிடக் கண்டு
கேட்டிருக்கலாம் எனறெண்ணி ஏக்கமது கொள்வதிலும்
கிடைத்தாலும் விட்டாலும் கேட்டிடலே நன்றாம்

02. நியாயத்திற்கு அப்பால்நாம் ஓரடிதான் நகர்ந்தாலும்
தியானங்கள் பொய்யாகும் தயாளங்கள் புரட்டாகும்
வியாபித்து இருக்குமிறை கோபத்திற்கு ஆளாகி
மயானத்தில் உறைவதற்கே அதுமறைமுகவழிவகுக்கும்.

03. நீங்கள்தான் மட்டுமிங்கே மனிதரென்று எண்ணாதீர்
மற்றையோரும் மானிடர்தான் என்பதனை மனத்திருத்தும்
பிறர்தம்மை நோகடித்து நாம்வாழும் வாழ்க்கை
திறமில்லை மானிடர்தம் குறையென்றே கொள்வீர்

04. பெரும்பொருளின் அதிபதிகள் பிரமுகர்கள் அன்று
அரும்பதவி வகிப்போகும் பிரமுகர்கள் அன்று
கரும்பெனவே இனித்திருக்கும் பிரமுகர்கள் யாரென்றால்
இரும்பாகி பிறற்குழைக்கும் பெரியவரே காண்பீர்.

05. பலன்பெறலாம் என்றெண்ணிப் பாலகரைப் பேணுபவர்
புலன்கெட்ட முதியோரைப் பொருட்டாக எடுப்பதுண்டோ
நலன்விரும்பும் மாந்தர்க்கு முதியவரும் பாலகர்போல்
பெலன்கெட்ட மனத்தோற்கு பாலகரும் முதியவரே

06. இருப்பதோடு திருப்தியுற்றால் நின்மதியும் நிலைத்திருக்கும்
திருப்தியே இல்லையெனில் பேராசை தலைவிரித்து
அரும்பாடு பட்டுப்பின் தேடியதும் இல்லாமல்
பெருந்துன்பம் சூழ்ந்திடவே இருந்துளல நேர்ந்துவிடும்

07. கண்ணாடி வைத்துப்பின் கடவுளரை வைத்திடுவர்
பொன்னாகக் கட்டிவைத்த வீட்டினுள்ளே பொருளதுதான்
என்னவாய் இருக்குமென்று ஏக்கமது கொள்ளாதீர்
அதுஉன்னைநீ அறிந்தபின்னால் இறைவனை அறியென்றே.

08. பதின்நான்கு பிறப்பதனில் மானிடமும் ஒன்றாகும்
விதியென்று சொல்வது தோன்றிப்பின் மறைவதாகும்
மதியோடு கலந்திருந்தால் மறுமையிலும் உயருமது
சதியோடு கலந்துவிட்டால் கதியற்றுத் தாழுமது

09. வளமாக வாழ்ந்தாலும் உளம்மகிழ்ந்து வளர்ந்தாலும்
வையத்தில் வாழ்வோற்கு அதுவாழ்க்கையென்று ஆகாது
உயர்ந்தாலும் தாழ்ந்தாலும் வாழ்க்கையென்ப தெதுவென்றால்
பிறர்வாழ்வுக் கிடஞ்சலின்றி நாம்வாழும் வாழ்வேயாம்

10. மூத்தோரை மதிப்பதனால் பூத்திடுவ தெதுவேன்றால்
ஆத்மீக ஆசியென்ற அரும்பெரும் சக்தியாகும்
காத்திருந்து அதைநாங்கள் பெற்றெடுக்கத் தவறிவிட்டால்
பாத்திருக்கப் படுகுழியில் வீழ்ந்துழல நேர்ந்துவிடும்

## வழித்துணை - 19

01. நாள்முழுதும் நடந்தவற்றை நாள்முடிய சீர்தூக்கார்
தான்பிறந்து வளர்ந்ததையும் நயம்படவே சிந்திக்கார்
நடந்துவந்த பாதையினை சீர்தூக்கிச் சீர்செய்வோர்
தொடர்ந்தும் தம்பாதையிலே வெற்றிமேல் வெற்றிகொள்வர்

02. ஆழக் கடல்தன்னுள் அமிழ்ந்துகின்ற வேளையிலே
தாழப் போகின்றேன் காப்பாற்றும் என்பார்க்கு
ஆக்கப் பொறுத்தவன் நீ ஆறப்பொறு என்றுரைத்தால்
தாக்குப் பிடிக்கவெறும் தத்துவம்தான் உதவிடுமோ

03. முகம்பிடிக்க வில்லையென்று ஒருவரைநீர் வெறுத்துவிட்டு
அகம்பிடிக்கா ஒருவரைநீர் அழகென்று அணைத்திடாதீர்
நகம்கடித்து நிற்போர்பின் சுகம்கடிக்க முற்படுவர்
சுகம்கடிக்க வாழ்க்கையதே சூன்யமாய் மாறிவிடும்.

04. பாதையிலே வீழ்ந்தொருவர் பதைபதைத்துப் துடிக்கையிலே
போதையிலே வீழ்ந்திட்டார் பொருட்படுத்தாதீர் என்றுவிட்டு
உபாதையினால் அவர்துடித்து மாண்டார்என்று அறிந்தபின்னால்
பேதையர்போல் கண்ணீரால் அஞ்சலித்து என்னபலன்

05. ஆழ்கடலில் வீழ்ந்தவர்கள் அகப்பட்ட உதவியோடு
கரையேற எண்ணுவதே நன்றாம் அதுவன்றி
கப்பல் வருமென்று கையுதவி தனைவிடுதல்
உப்புக் கடல்நீருள் கலந்திடவே என்றறிவீர்

06.வட்டிக்குப் பணமெடுத்து தொட்டிலொன்று வாங்கியதில்
பச்சைக் குழந்தையினைப் படுத்துறங்கப் போட்டுவிட்டு
பச்சை இலுப்பைவெட்டி பால்வடியத் தொட்டிலென்றால்
பொய்யோடு போலியுந்தான் பிள்ளையதும் கற்றிடாதோ

07. சாவதற்கு முன்னொருவர் தேகநலனுக் குதவிடாமல்
செத்தஉடல் பார்ப்பதற்கு சென்றுநீர் என்னகண்டீர்
தேகமதே செத்துவிடும் தேங்கியவை நிலைத்திருக்கும்
போகப் போகஅது உம்செயலைப் பின்தொடரும்

08. உள்வீட்டுக் கல்லுமுள்ளை ஊர்த்தெருவில் கொட்டிவிட்டு
தெருமரத்து மயிர்க்கொட்டி காட்டியென்ன சாதித்தீர்
தேடிவந்து பிரச்சனையைப் பிறருக்குக் கொடுத்துவிட்டு
எட்டநிற்கும் பிரச்சினையை எட்டியேதான் பிடிக்கலாமோ

09. சோப்புகளும் சீப்புகளும் புறத்தழுகைப் பேணுதற்கு
காப்புகளும் தோப்புகளும் கைப்பொருளைக் காட்டுதற்கு
அறிவொளியும் நெறிவழியும் வாழ்வாங்கு வாழ்வதற்கு
அகிதிலார் கைப்பொருளும் கண்ணழகும் ஏதுசெய்யும்

10. சூரியனைத் தொட்டுவிட்டால் சுட்டெரிப்பான் என்றஞ்சி
சந்திரனைத் தொட்டுவிட்டு வந்திட்ட சுந்தரர்நாம்
நல்லதினைத் தொட்டாலே நல்லதென்று அறிந்திருந்தும்
கெட்டதையே தொட்டுவிட்டு கெட்டழிந்து போகலாமோ

## வழித்துணை - 20

01. சம்பிரதாயம் ஒன்றையேநாம் பேணுடுதல் தன்னைவிட
சம்பவத்தைப் பேணுடுதல் சாலவும் சிறந்ததுவாம்
மேடையின்மேல் விருந்தினர்க்கு சம்பிரதாயம் ஆனவைகள்
முன்வரிசைச் சிறார்களுக்கோ அது சம்பவம் ஆகிடுமாம்

02. இளமையில் வறுமையது கொடுமையென்று ஆகாது
இருந்ததை இழப்பதும் கொடுமையென்று ஆகது
கொடுமையிலும் கொடுமையிந்தக் குவலயத்தில் ஏதென்றால்
குழந்தைகட்கு கொடியவற்றை ஊட்டிவிடல் ஆகும்

03. உன்னைநீ உணர்ந்தாலே ஆத்மாவை உணர்ந்திடலாம்
ஆத்மாவை உணர்ந்தாலே இறைவனைநீ உணர்ந்திடலாம்
அல்லாமல் இறைவனையே உணர்ந்திடநீ எண்ணுவது
பூக்காமல் காய்க்காமல் கனிபறிக்க எண்ணுவதாம்

04. தந்தையார் உடல்தந்தார் தாயாரோ உயிர்தந்தார்
விந்தைமிகு ஆத்மாவை இறையோடு இறைவிதந்தார்
அந்தம்ஆதி இல்லாதார் தந்தது உள்ளிருப்பதனால்
எந்தஉடல் ஆனாலும் அந்தஉடல் கோயிலன்றோ

05. சாதி சமயமென்று சங்கெடுத்து ஊதிவிட்டால்
சோதியுட் கலந்திடலாம் என்றுமட்டும் எண்ணாதீர்
நாதியற்றுப் போனாலும் நீதிநெறி வழிநடந்தால்
ஆதிசிவன் சக்தியொடு அருகருகாய் இருந்திடலாம்

06. புகைகாட்டி நெருப்புணர்த்தும் பூவுலகின் தன்மையைப்போல்
பகைகாட்டி பழியுணர்த்தும் பண்பதனை விட்டுவிட்டு
தகைகாட்டித் தனைஉணர்த்தும் தத்துவத்தைக் கடைப்பிடித்து
வகைகாட்டி வழியுணர்த்தும் வாழ்வுதனை வென்றிடுவீர்

07. கந்தனுக்கு ஆறுமுகம் கணபதிக்கு ஐந்துமுகம்
வந்துஎமைப் படைத்தாழும் பிரமனுக்கு நான்குமுகம்
எத்தனைதான் முகமதுவும் அதுஇறைவனுக்கு இருந்திடலாம்
அதுபோலப் பலமுகங்கள் அடியாற்கும் இருக்கலாமோ

08. தேவையென்றால் தெய்வமென்பார் தேடிவந்து தாழ்பணிவார்
ஔவையைக் கயிலைவைத்த ஆனைமுகத் தையனென்பார்
சேவையென்பார் செடில்பிடிப்பார் தேவையெல்லாம் முடிந்து விட்டால்
பாவையென வீசிடுவார் பஞ்சமுகம் இவர்க்குமுண்டோ.

09. புரியாத இடத்திலேதான் புரிந்துணர்வு உள்ளதென்று
தெரியாத சிலபேற்கு தெரிந்தவர்கள் சொல்வதுண்டு
பரிதாபம் புரிந்துணர்வு புரியாமல் இருப்பதற்கு
தெரிந்தோர் தெரியாமலதை மறைப்பதுவே காரணமாம்

10. பாலும் குருதியிலும் ஓரிடத்தில் தானுண்டு
கறக்கின்ற முறையினால்தான் குருதி பாலாய் மாறிடல்போல்
இரக்கமும் அரக்கமும் ஓரிடத்தில் தானுண்டு
நடக்கின்ற முறைநடந்தால் அரக்கமதும் இரக்கமாகும்

# வழித்துணை - 21

1. குடிகெடுக்கும் தொழிலொன்றை கூடவே செய்துகொண்டு
அடிவயிற்றைப் பலபேற்கும் எரித்துநாம் உயர்வதிலும்
படியேறிப் பலவீட்டில் பிடியரிசி தான்வாங்கிக்
குடித்தாலும் கஞ்சியது குவலயத்தில் உயர்ந்ததுவாம்.

02. சாதியென்பார் சமயமென்பார் கோடியென்பார் குபேரனென்பார்
கூறிவிட்டால் அவர்க்கேதும் கொம்புதான் முளைப்பதுண்டோ
வீதி பெருக்கினாலும் வீட்டமுக்கை எடுத்தாலும்
நீதி நெறிநடந்தால் அவர் வாழ்க்கைக்கோர் வழித்துணைதான்

03. அக்கறை இல்லையென்றால் ஓர்கருமம் பெரிதாகும்
அக்கறைதான் உண்டென்றால் அதேகருமம் சிறிதாகும்
பக்கத்து அறைகூடப் பாசமின்றேல் தூரம்தான்
எத்திக்கில் இருந்தாலும் தித்திப்பின் பக்கம்தான்

04. ஒருதவிகேட்டு அவர் செய்யாமல் விட்டதனால்
பாருக்குள் அவரைநீர் பகைவராக்கிக் கொள்ளாதீர்
பேருதவி ஒன்றினையும் பின்அவரே செய்திடுவார்
யாருதவி உமக்கென்று பரிந்துவந்து நன்றே.

05. காரணம் ஒன்றுசொல்லி வேறுகாரியம் செய்பவர்கள்
பாரதனில் உயர்ந்தோராய் பார்வைக்குத் தெரிவதுண்டு
மார்பதனைத் திறந்துஅவர் மனத்தினைநாம் அறிந்தால்தான்
கூர்மையதாய்த் தன்னலமே அவர்குறிகோளாய்த் துலங்கும்

06.பாலோடு இளநீரும் பச்சா அமிர்தங்களும்
வேலோனும் இறையோரும் படைத்தவைகள் ஆகும்
மாலோனின் மருகோற்கு அவைகொடுத்து மகிழ்வதிலும்
சாலோடு சமயத்து நெறிநடத்தல் மேலாம்

07. உருவத்தால் இறைவனைநீர் உண்மையென்று நம்பிவிட்டால்
அருவத்தால் வந்தவனே அருகினிலே இருந்திடுவான்
அருவத்தால் வந்திறைவன் அருகுள்ளான் என்றுணர்ந்தால்
திருவருளால் உம்முள்ளோர் கருவாக அவனெழுவான்

08.இறைக்க இறைக்க நீருறும் தன்மையைப்போல்
நினைக்க நினைக்க நீண்டுவரும் பக்தியினால்
மறைக்கின்ற மாயைத் திரைநீக்கி நீரெழுந்தால்
நினைக்கவே முடியாத நீடின்பம் அவனருள்வான்

09. பிறர்துயரை நம்துயராய் எண்ணிடும் பண்பும்
நம்மகிழ்வை பிறர்மகிழ்வாய் ஆக்கிடும் தன்மையும்
உறவுகளாய் உலகோரை ஒன்றாய் இணைத்தே
இறவாமல் மானிடத்தை மலரவைக்கும் நன்றே

10.திறமைகட்கு பாராட்டை உடன்பெற விரும்புவர்
தவறினிற்கும் உடனேயே வருத்தம் சொல்லவேண்டும்
தவறொன்றை ஏற்பதற்கு தாமதம்நீர் காட்டும்வரை
திறமைகட்கும் காரணம் தவறென்றுதான் பிறர்நினைப்பர்

# வழித்துணை - 22

01. பிரச்சினைக்கு உரியஇடம் கோயிலென்று எண்ணாதீர்
பிரச்சினையைத் தீர்ப்பதுவே கோயிலதன் அர்த்தமாகும்
அர்ச்சனையால் மட்டுமவன் அருளைப்பெற முடியாது
கரிசினையும் காட்டினால்தான் கருணைபெற முடியும்.

02. மரத்துக்கு மலருண்டு மலருக்கு வாசமுண்டு
பாலுக்கு சுவையுண்டு பழத்திற்கு ரசமுண்டு
மானுக்கு புள்ளியுண்டு மயிலுக்கு தோகையுண்டு
உனக்கிங்கு என்ன உண்டு காலமுண்டு பதிலைத்தேடு

03. ஆலயம் என்பது இறைவனின் இல்லமாகும்
இறைவனது இல்லத்தில் எல்லாமும் எல்லோரதும்
நானென்றும் எனதென்றும் எனதென்றும் உனதென்றும்
நாமெண்ண நமைவிட்டு நெடுந்தூரம் இறைசெல்லும்

04. வல்லமை அற்றேரென்று வையத்தில் சிலரைநாங்கள்
மெல்லவே தள்ளிவிட்டு மேற்கொண்டு நடந்துவந்தால்
அல்லைதொல்லை சூழ்ந்துஎமை வல்லமை அற்ரோராக்க
புல்லெனநாம் நினைத்தவரே பின் வல்லமைக்கு வாரிசாவார்

05. பிச்சைகேட்டு வருவோர்தனையும் கொச்சைபடப் பேசிடாதீர்
பச்சைமனம் வருந்திநின்றால் உச்சமாகும் ஆத்மசக்தி
எச்சமது போட்டகொக்கும் எரிந்ததந்தச் சக்தியாலே
அச்சமின்றி அணைப்பீரவரை நிச்சயம்நீர் உயர்வீர்வாழ்வில்

06.புகழ்ச்சிக்கு பூக்களும் மகிழ்ச்சிக்கு கனிகளும்
நிகழ்ச்சிக்கு இருக்கையும் திகழ்ச்சிக்கு பொருட்களும்
வெகிழ்ச்சிக்கு தடிகளும் அகழ்ச்சிக்குப் பிடிகளும்
இகழ்ச்சிக்கு இடமேயின்றி மரம்தரும் மாந்தரேதோ

07. விமர்சனங்கள் மட்டுமிங்கு விளைவெதையும் தந்திடாது
அவரவர் கடமைகளை அவரவரே செய்யவேண்டும்
உவர் நிலத்து மண்ணும்கூட உயர்தரத்து உப்பைநல்கும்
எவரிங்கு வேண்டாதவரோ அவராலும் இங்கொன்றாகும்

08.படைப்பதற்கு தட்டமும் காப்பதற்கு கனியதுவும்
அழிப்பதற்கு தேங்காயும் அருள்வதற்கு தீபமும்
மறைப்பதற்கு வெற்றிலையும் அர்ச்சனைக்காய் கொடுத்திடுதல்
ஐந்தொழிலும் செய்தென்னை ஆட்கொள்வாய் என்பதற்காம்

09. நீங்கள் நினைப்பதெல்லாம் சரியென்று எண்ணுமுன்னர்
உங்களில் ஒருவரிடம் கேட்டுமதைப் பாருங்கள்
எங்களது எண்ணங்கள் தவறாயும் இருந்திடலாம்
பங்கம் பிறர்க்கானால் பாவங்கள் எமக்காகும்.

10.பரிபாலனம் என்பது சரியாசனம் பெறுவதன்று
மரியாதையோடுசில பரிகாரம் புரிவதாகும்
தெரிந்ததை நடந்தாலே விரிந்திடும் இறைபக்தி
புரியாமல் நடப்பதெல்லாம் பரிதாபத்திற் குரியதாகும்.

# வழித்துணை - 23

01. தலைமைத்துவம் என்பது தலைமைதாங்கல் மட்டுமன்று
தான் நடந்துகாட்டி பிறரை நடக்கச் செய்வதாகும்
தத்துவத்தை உணர்ந்தோற்கே தலைவரென்று பெயராகும்
உணராதபேர்களுக்கு தலைக்கனமே பொருளாகும்

02. அங்கத்துவம் என்பது அங்கம்வகித்தல் மட்டுமன்று
பங்கெடுத்துப் பலபணியும் செய்து முடித்தலாகும்
எங்கும் இவ்வுண்மையினை எல்லோரும் ஏற்றிட்டால்
மங்காத புகழோடு மானிடமும் மகிழ்ச்சியுறும்

03. அதிகாரம் செலுத்துவோர்தான் அதிகாரி என்றல்ல
அதிககருமம் ஆற்றுவோற்கே அதிகாரி என்றுபெயர்
உணர்ந்துயர்ந்த சேவைசெய்வோர் அதிகாரியாவார்
உணராத பேர்களிங்கு சர்வாதிகாரி ஆவார்

04. தன்னை உணர்ந்திடவே இறையிங்கு எனைப்படைத்தான்
என்னையே என்னால் உணர்ந்திட முடியவில்லை
உன்னையும் நீயுணர முயன்றுபார் முடிந்திட்டால்
பிள்ளைப் பரம்பொருளின் லீலைகளை உணர்ந்திடலாம்

05. நன்றி உணர்வற்ற நெஞ்சினோடு நானிலத்து
மன்றில் அதையுரைக்கும் நாவும் அற்றவர்கள்
குன்றின்மேல் நின்றிந்தக் குவலயத்தை வாங்கினாலும்
இன்றோ நாளையோ என்றோ நலிவர்

06.பாதையிலே ஓர்மகனார் போவதினைக் கண்டுவிட்டால்
பாதசாரி போகின்றார் என்பதோடு நின்றிடாமல்
சரியான பாதையில்தான் செல்கிறாரா என்றறிந்து
உயர்வழி காட்டுதலே உயர்ந்ததொரு வழித்துணையாம்.

07. பதவியிலே இருக்கையிலே உதவிசெய்ய மறுத்துநீங்கள்
கதவினையே அடித்திறுகச் சாத்திவிட முயற்சியாதீர்
பதவிவிட்டு விலகியதும் உமக்குதவி தேவைவர
மதவொன்றில் இருந்ததற்காய் வருத்தமுற நேர்ந்துவிடும்

08.வாழ்த்துரையும் இழித்துரையும் பலித்திடவே சொல்வதற்கு
காழ்ப்புணர்ச்சி ஏதுமிலா ஆத்மசக்தி வேண்டும்
கீழ்த்தரமோ மேல்த்தரமோ சக்தியதைத் தந்திடாது
ஏழ்இரண்டு பிறப்புணரின் எம்மிலது ஓங்கும்.

09. உண்டியல் என்பது நிதிசேர்க்கும் பெட்டியன்று
உன்னியல் என்பதுவே உண்டியல் ஆனதுவாம்
படைத்தல் காத்தல் அழித்தல் அருளலொடு
மறைத்தலுமே உன்னியலாம் உண்டியலும் அதுவே.

10.நினைவுகளின் வெளிப்பாடே கனவுகள் ஆகும்
கனவுகள் கலைவதுண்டு நினைவுகள் கலையாமைபோல்
ஆத்மாவின் வெளிப்பாடே மானிடம் ஆகும்
மானிடம் அழிவதுண்டு ஆத்மாக்கள் அழிவதில்லை.

# வழித்துணை - 24

01. நல்லதை நல்லதென்று சொல்லுதற்கு நாவெடுக்க
எல்லையிலோர் உயர்வுதாழ்வு காரணமாய் இருக்குமெனில்
கற்சிலையில் எப்படியாம் கடவுளையும் ஏற்றிடுவார்
வல்லவர்கள் நல்லவர்கள் வாய்திறந்தே சொல்வீர்

02. தம்மவர்கள் சொல்வதெல்லாம் வேதமென்று ஏற்பவர்கள்
பிறர்சொல்லும் நல்லதையும் பேதமாயே கொள்வர்
தொல்லைகள் சூழ்ந்துஅவர் துயர்க்கடலில் வீழ்ந்தபின்பே
நல்லைமணி ஓசையையும் போதமாகக் கொள்வர்.

03. நீதிக்கு அப்பால்நீர் எடுத்தடி வைக்காமையும்
நேர்மையை என்னாளும் நெஞ்சத்தில் கடைப்பிடிப்பதும்
சாதிக்காய் சமயத்தில் சோதிகளை ஏற்றாமையும்
ஆதிசிவன் அருள்பெறற்கு வழித்துணையாம் என்றறிவீர்

04. தன்னுணர்வை தனித்துவமாய் பிறருணர்வை பைத்தியமாய்
எண்ணுகின்ற எண்ணங்கள் எண்ணத்தில் இருக்குமட்டும்
மனித நேயமும் பொய் மனிதாபி மானமும் பொய்
புனிதமின்னும் புரியாத புதிரென்பதே மெய்யாகும்.

05. மண்ணுக்குள் தேடியும் காணாத மாமணியை
விண்ணுக்குள் தேடியும் விளங்காத விழுப்பொருளை
பொன்னுக்குள் பொருளுக்குள் புகழுக்குள் தேடாமல்
உன்னுக்குள் தேடிப்பார் உள்ளொளியாய் விளங்கிவிடும்.

06.தேங்காய் என்பது படைத்தல் பொருளன்று
முடியினுள் முக்கண்ணை மூடிநிற்கும் அசுரனாம்
பொடிபட அடித்தந்த கொடியோனை அழித்தபின்
எடுத்திடும் கருமமே ஏற்றத்தில் முடியுமாம்.

07. பிறர்வீட்டு அமங்கலரை அமங்கலராய் ஏற்பவர்கள்
தம்வீட்டில் அவரிருந்தால் தள்ளியோ வைத்திடுவர்
தம்வீட்டார் பிறர்வீட்டார் எண்ணெண்ணிப் பாரமல்
நொந்தாரை நோகாமல் காப்போரே சுமங்கலராம்

08.பூசை என்பது ஒருஓசை வெளிப்பாடன்று
பூக்காட்டும் சைகையே பூசை எனப்படும்
பூப்பிறந்து பிறர்க்குதவி நின்னடியை சேருதல்போல்
நாம்பிறந்து புவிக்குதவி நினையடைவோம் என்பதாகும்

09. ஐம்பூதம் தனையெண்ண ஆண்டவனின் தோற்றமெழும்
ஐந்தொழிலைத் தானுணர அவனசைவு தான்தெரியும்
ஐம்புலனை அடக்கிடவே அம்பிகையோ டெம்பிரானார்
ஐந்துள்ளும் ஒன்றாகி உன்னுருவில் தான்வருவார்

10.குற்றங்கள் புரிபவர்கள் சுற்றத்தைத் திருத்துதற்கு
முற்றத்தில் வந்திருந்து முயற்சித்தால் அதுநல்ல
பற்றிய நெருப்பணைக்க நிலத்தடி நெய்யெடுத்து
சுற்றுமுற்றும் சிந்திவிடல் போலாகும் அறிந்திடுவீர்

# வழித்துணை - 25

1. நீதி சிலருக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கும்
இன்னும் சிலருக்கு வெகிழ்ச்சியைக் கொடுக்கும்
மகிழ்ச்சியும் வெகிழ்ச்சியும் வேறுவேறு ஆனாலும்
நீதி எல்லோற்கும் ஒன்றேதான் அறிந்திடுவீர்

2 வெள்ளியும் செவ்வாயும் ஆலயம் செல்வதற்கு
அன்றிறை அங்கிருக்கும் என்பதன்று அர்த்தம்
செய்வாயில் கஸ்ரமுண்டு வெள்ளியில் செல்வமுண்டு
இரண்டிற்கும் இறைவணக்கம் அவசியம் என்பதாலாம்

3. ஒலியாக ஒளியாக இருப்பவனும் அவனே
மணமாக சுவையாக மலர்பவனும் அவனே
உணர்வாக உள்நின்று துடிப்போனும் அவனே
உணர்ந்திடுவீர் புலன்ஒன்றாய்க் குவிவதுவே இறையாம்

4. நாமும் இறைவனதே நமதும் இறைவனதே
வாழ்வும் இறைவனதே வளமும் இறைவனதே
பிறப்பும் இறைவனதே இறப்பும் இறைவனதே
தருவதை வாங்கிடுவோம் தராததை வேண்டிடுவோம்

5. மணியதில் ஒலியாக மலரதுள் மணமாக
கனியதுள் சுவையாக தீபத்துள் ஒளியாக
உடலுக்குள் உணர்வாக மறைந்துள்ள இறைவனை
உன்னுக்குள் ஒன்றாக்கி உணர்ந்திடுவாய் எழுந்தருள்வான்

6. அட்டாங்கம் பஞ்சாங்கம் நிலவணக்கம் ஆகும்
ஆலயத்துத் தீர்த்தமுண்ணல் நீர்வணக்கம் ஆகும்
கற்பூரம் ஊதுபத்தி தீகாற்று வணக்கமென
கோபுர வணக்கமும் ஆகாய ஐம்பூத வணக்கங்களாம்

7. உயரமோ அகலமோ மரியாதையின் சின்னமன்று
உள்ளத்தின் அளவே மரியாதைக் குரியதாம்
குழந்தைபோல் பிறர்முன்னே குழைவோடு நிற்போரை
மூத்தோர்போல் மற்றோர்கள் முன்னின்று மதிப்பர்

8. நிலவணக்கம் இல்லையெனில் நிலம் நடுங்கி ஆடும்
நீர்வணக்கம் இல்லையெனில் கடல் தரையுட்பாயும்
தீகாற்றை வணங்கிடில்நாம் அனல்கக்கும் புயல்வீசும்
ஆகாய வணக்கமின்றேல் ஓயாது துன்பமதே

9. ஆசிரியம் இல்லையெனில் அகிலம் இல்லை
நேசித்த மாணவற்குத் துயரம் இல்லை
பூசிப்போம் அவர்தம்மை கோசிப்போம் அவர்பெயரை
வாசித்தே வாழ்த்துரைகள் ஆசிரியம் வாழ்கவென்றே

10. கல்வியினைக் கற்காமல் காலத்தைக் கடத்துவோரும்
உண்கின்ற உணவினை உதாசீனம் செய்வோரும்
இல்லத்தை இடிப்போரும் உடைகளைக் கிழிப்போரும்
பின்னொருநாள் அதற்காகத் தவம்கிடக்க நேரும்

## வழித்துணை - 26

01. மாதாவை வணங்காத மானிலத்து மாந்தரும்
பிதாவினைப் பேணாது பிள்ளைகளாய் இருப்போரும்
குருவோடு தெய்வத்தைக் கும்பிடாத கூட்டமும்
தாம்பிறந்த காரணத்தை அறியாமல் இருப்போராம்

02. காவடி கந்தனுக்கு பிரதட்டை பிள்ளையாற்கு
காரணம் உண்டுஅதை உணர்ந்துநீர் கடைப்பிடிப்பீர்
மயிலாகிக் கந்தனைநாம் சுமந்தாடல் காவடியாம்
உலகத்தைச் சுற்றியோனை நாம்சுற்றல் பிரதட்டையாம்

03. மழையில்லை என்றுஅழும் மக்களைநீர் காப்பதற்கு
பிழைபொறுத்து வந்தருளும் பிள்ளையாரே பெருமானே
அழையாத விருந்தாக வருவேனோ என்றிராமல்
விளையாத நிலமென்று பிறர்அழையாமல் வந்தருளும்

04. சமைக்கின்ற உணவதனில் சிறிதிடுதல் நெருப்பிற்கு
குடிக்கின்ற நீரதனில் சிறிதிடுதல் மண்ணுக்கு
விற்கின்ற பண்டத்தில் சிறிதிடுதல் விண்ணிற்கு
காற்றோடு கலந்திருக்கும் கடவுளிற்கே காணிக்கையாம்

05. என்னுணர்வைத் தடுப்பதற்கு எவற்குரிமை உண்டென்று
முன்னுணர்வின் வழிநடந்து முறைகெட்டுப் போவதிலும்
தன்னுணர்வைத் தானுணர்ந்து தக்கவழி நடந்திட்டால்
பின்னுணர்வால் பெருந்துன்பம் ஏற்படாமல் தடுத்திடலாம்

06.பூரணமாய் இருப்பதனால் அதுபூரண கும்பமன்று
காரணமும் உண்டதிலே கருத்தோடு அறிந்திடுவீர்
படைத்தல் காத்தல் அழித்தல் அருளலொடு
மறைத்தலும் மறைந்திருக்கும் அர்த்தமே கும்பமாகும.

07. பாலிருக்கத் தயிரும் வெண்ணையும் இருத்தல்போல்
சிவரிருக்கச் சிலையோடு சித்திரமும் இருக்குமன்றோ
விதையிருக்கப் பயிரோடு விளைவும் இருத்தல்போல்
கல்வியும் இருந்திட்டால் செல்வம் வீரம் இருந்தேயாகும்.

08.தீபங்கள் ஏற்றுதலும் மணியோசை ஒலிப்பதுவும்
மங்கலங்கள் இசைப்பதுவும் மனந்திறந்து பாடுவதும்
தோன்றாமல் இருப்பதொன்று தோற்றுவிக்கத் தோன்றுதல் போல்
சிலையுள்ளும் தோற்றுவித்தால் சிவபிரானார் தோன்றிடுவார்

09. தலையினுள் சளியதுவும் காலினில் முள்ளதுவும்
உடலின் உள்ளிருக்க வேதனையைத் தருதல்போல்
நெஞ்சத்துள் வஞ்சனையும் வேதனையே எனஉணர்ந்து
அஞ்சாமல் அதைஅகற்றிப் பேரின்பம் பெற்றிடுவீர்.

10.சிறிதென்று ஒன்றைநீர் ஏற்காமல் விடுவதனால்
பெரிதாகப் பிறிதொன்று கிடைக்காமல் போய்விடலாம்
பரிநாமம் சிறிதிருந்தே பெரிதாகி விடுவதனால்
சிறிதினையும் பெரிதென்றே பெருமையோடு ஏற்றிடுவீர்.

# வழித்துணை - 27

01. உள்ளத்தை உள்ளபடி உரியவற்கு உரைப்பதனால்
கள்ளமின்றிக் கனகருமம் கச்சிதமாய் முடித்திடலாம்
எள்ளளவும் உண்மையிலா வார்த்தைகளை எடுத்தியம்பில்
உள்ளதையும் இழந்துநாம் உளம்வருந்த நேர்ந்துவிடும்

02. இறப்போடு எல்லாமே முடிந்ததாக எண்ணாதீர்
இறப்பிற்கு பின்னால்தான் சிறப்புண்டு அறிந்திடுவீர்
அருவமாய் நின்றஇறை உருவமாகி உதவுதல்போல்
உருவமாய் இருந்திறந்தோர் அருவமாய்ப் பின்தொடர்வர்

03. இருக்கின்ற போதில்நீர் இயற்றுகின்ற கருமந்தான்
இறப்பிற்குப் பின்னாலும் இறவாது இங்கிருக்கும்
பிறப்பிற்குப் போதவதற்காய் இறப்பென்ற நிலைவருமுன்
இறவாமல் இருப்பதற்காய் சிலகருமம் இயற்றிடுவீர்

04. எதிரிகளாய் யாரையும்நீர் எண்ணாமல் இருந்திட்டால்
மதியுடையோர் மனதிலுமை மறவாமல் வைத்திருப்பர்
நிதியென்றும் பதியென்றும் நித்தம்நீர் பகைசுமப்பின்
புதிதில்லை உண்மையிது உம்மையேநீர் பகைத்திடுவீர்

05. பணிவு என்பதைப் பலவீனம் என்றிராதீர்
அணிகளில் சிறந்ததே பணிவுதான் என்றறிவீர்
துணிவென்று சொல்லிப்பெரும் துயர்க்கடலில் வீழ்வதிலும்
பணிவோடு நடந்திட்டால் நன்மைபல பெற்றிடலாம்

06.பூகோளம் குளிர்ந்ததுவும் புல்லிங்கு முளைத்ததுவும்
ஓகோவென் றெழுந்ததுவும் ஒன்று பலவானதுவும்
பாகோடு பருப்பும்நாம் படைத்திடவே எமைக்காக்கும்
ஏகோபித் திருக்குமிறை சக்தியினால் என்றறிவீர்

07. கோவிலில் குலதெய்வம் குடியிருக்கும் வேளையிலே
பூவினால் பூசைசெய்வர் பொருளுண்டு அறிந்திடுவீர்
தாவியே வந்திங்கு தன்கடமை முடித்துப்பூ
மேவியிறை அடைதல்போல் நாமடைவோம் என்பதாகும்

08.என்னால்தான் எல்லாமே முடியுமென்று இருந்துவிட்டு
தன்னால்பின் எதுவுமே முடியாமல் போமிடத்து
உன்னால்தான் முடியும்நீ எழுந்தருள்வாய் என்றழைத்தால்
முன்னாளை மறந்திறைவன் பின்னாளில் வருவானோ

09. எனக்குப்பின் என்சொத்து பிறர்க்கென்று எழுதிடலாம்
பிறர்க்குப்பின் அவர்சொத்து எனக்கென்றும் எழுதிடலாம்
இவையெல்லாம் இறைக்குப்பின் என்றெண்ணத் தவறிவிட்டால்
சிறைக்குப்பின் விடுதலையும் சிறுபுல்லாய் முளைப்பதேயாம்

10.துன்பங்கள் சூழ்ந்திடவே கோவிலை தேடுதலும்
இன்பங்கள் பெருகிடவே ஆலயத்தை நாடுதலும்
நன்றோதான் அதனிலும் நன்றிங்கு யாதென்றால்
என்றுபக்தி எழுகிறதோ அன்றங்கு சொல்லலாகும்.

# வழித்துணை - 28

01. இறைவனை ஏற்கவைக்கக் கடும்முயற்சி வேண்டும்
இல்லையென்று மறுத்துரைக்க ஓர்நொடியே போதும்
ஏற்றாலும் மறுத்தாலும் மானிடராய் வாழ்ந்திடலாம்
மனதார ஏற்றால்தான் மறுமையில்நாம் மகிழ்ந்திடலாம்

02. கூறுகின்ற வார்த்தைகளில் உண்மையேதும் இல்லையெனில்
ஊறுபல விளையுமென்று உணர்ந்திடுதல் வேண்டும்
மாறுபாடாய் நாம்பேசும் வார்த்தைகளால் மானிடத்தில்
வேறுபாடே தோன்றிப்பின் வேற்றுமைகள் வளரும்.

03. சாத்வீகம் இருந்தால்தான் ஆத்மீகம் இருக்கும்
ஆத்மீகம் இருந்தாலே இறைபக்தி பிறக்கும்
இறைபக்தி பிறந்தாலே இம்மையிலும் மறுமையிலும்
குறைவில்லாப் பேரின்பப் பெருவாழ்வு மலரும்

04. பிறர்வாழத் தன்னலனை அர்ப்பணம் செய்பவர்கள்
அறவழியில் வாழ்பவர்கள் என்றிறைவன் அறிந்து
திறமான பெருவாழ்வைப் பிறப்பிதனில் தருவதுடன்
பிறவாத பேரின்பப் பெருவாழ்வும் பின்அருள்வான்

05. பிறந்தோம் வளர்ந்தோம் இறப்போமென்றெண்ணி
எப்படியும் வாழலாம் என்றெண்ணி வாழ்ந்திடாமல்
வையத்தில் வாழுகின்ற நெறியோடு வாழ்ந்திட்டால்
இறப்பிற்கு முன்னரே சிறப்பெல்லாம் அடைந்திடலாம்

06.நாணயம் என்பது மற்றவற்கு மட்டுமன்றி
ஏணையில் இருந்தே எம்மிடமும் வளரவேண்டும்
தூணையோ துரும்பையோ பொறுத்ததில்லை நாணயம்
சாணையும் முழமாக மதித்தலே நாணயமாம்.

07. மனச்சாட்சி என்பது மற்றவர்கள் தருவதன்று
தனக்காகத் தானே தன்னுள்ளே வளர்ப்பதாகும்
தினம்தினம் நடப்பவற்றை மனத்துள்ளே மதிப்பிட்டு
கனம்பண்ணி நடத்தலே மனச்சாட்சி என்பதாகும்.

08.தனக்குண்டு சுதந்திரம் என்றுஓர் பொருள்சொல்லி
பிறர்க்கு இடைஞ்சலாகவே வாழ்கின்ற பேர்களை
எனக்கு இடைஞ்சல் என்றிறைவன் ஏற்காமல் விடுமிடத்து
தனக்கு இடைஞ்சல் தானேதான் என்றுணர்ந்து தவிதவிப்பர்.

09. நல்லோரை ஏற்கார்கள் நல்லதையும் கேட்கார்கள்
கல்லையும்நான் கடவுளென்று வணங்குவேனோ என்பார்கள்
இல்லாரை உதைப்பார்கள் இருப்போரை மதிப்பார்கள்
பொல்லா இவையகலப் பிறப்பதுவே மானிடமாம்

10.உறக்கத்தைக் கெடுத்தலும் உண்பதனைக் குழப்புதலும்
கலக்கத்தைக் கொடுக்கின்ற கருத்தினைக் கூறுதலும்
விலக்கப்பட வேண்டிய பலவற்றில் சிலவாகும்
சிலஇவற்றை விலக்கிடுவீர் பலரும்மைப் போற்றிடுவர்.

# வழித்துணை - 29

*01.* மூத்திகரம் என்பது ஆலயத்தில் மட்டுமன்று
அடியார்கள் மனத்திலும் அதுஇருத்தல் வேண்டும்
மனத்துக்கண் மாசுடனே ஆண்டவனை வேண்டிவிட்டு
ஆலயத்தில் மூத்திகரம் இல்லையெனல் தகுமாமோ

*02.*பிறர்க்கு ஓர்கருமத்தை நாமிழைக்கும் வேளையிலே
அவராக நாமிருப்பின் எண் றெண்ணிப் பார்க்கவேண்டும்
நமக்குஅது தீமையெனில் பிறர்க்குமது தீமையென்றே
தீர்மானம் செய்திடுதல் மனிதநேய வழித்துணையாம்

*03.* மானிடத்து வேற்றுமைகள் மனத்துக்குள் இருக்குமட்டும்
வானிடையே இருக்குமிறை வானிடையே தானிருப்பான்
தேனினைச் சொரிந்தாலும் தெருவீதி உருண்டாலும்
வான்விட்டு அவனிறங்க அதற்கு நானில்லா நீவேண்டும்

*04.*லாபம் கிடைக்குமென்றால் முண்டி அடிப்பவர்கள்
நஷ்ரத்தைக் கண்டுபின்னர் நழுவிடுதல் நன்றன்று
லாபமோ நஷ்ரமோ நமக்குத்தான் என்றெண்ணி
நியாயமாக நடந்திட்டால் லாபமாகும் அதுவேதான்

*05.* மன்னவர்போல் இருப்பதுவும் தன்னவரைக் காப்பதுவும்
மனிதாபி மானமென்று மனதிற்குள் எண்ணலாமோ
அன்னியர்போல் இருந்தாலும் அடுத்தவற்காய் இரங்குவோரே
மனிதாபிமானமுள்ள புனிதமான மனிதர்களாம்

06.பாத்திரத்தை விளக்குதற்கு நடிப்பொன்றோ வழியாகும்
வாழ்க்கையிலே நடிப்பிருப்பின் அதுவே நமக்கழிவாகும்
நாடகத்து நடிப்புக்கள் கலையினையே வளர்த்தல்போல்
வாழ்கையின் நடிப்புக்கள் கவலையினை வளர்த்திடுமாம்

07. தன்னலனைப் பேணாமல் பிறர்நலனைப் பேணுபவர்
இன்முகத் தோடென்றும் விளங்கிடுவர் ஏனென்றால்
அன்பொன்றே அவர்களது அடிமனத்துள் இருப்பதனால்
பின்முகங்கள் ஏதுமின்றித் தெளிவோடு இருப்பதாலாம்

08. வேஷங்கள் வெளிப்படுதல் நாடகத்திற் கழகாகும்
யதார்த்தங்கள் வெளிப்படுதல் வாழ்க்கைக்கு அழகாகும்
வாழ்க்கையிலே வேஷத்தை வெளிப்படுத்த முயற்சித்தால்
யதார்த்தத்தைக் கூடஅவர் யாசிக்க நேர்ந்துவிடும்

09. சுவாசத்தின் பைகளோடு குருதிமீட்கும் இருதயமும்
சிறுநீரகத்தோடு சிறப்புடனே இரைப் பையும்
உன்னுக்குள் இருந்துகடன் தவறாமல் செய்திடவும்
நீமட்டும் உன்கடனைச் செய்திடாமல் உறங்கலாமோ

10.ஏணி சடப்பொருள்தான் ஏறுவோர்கள் உயர்திணைதான்
எறியபின் ஏணியைநீர் உதைத்துமட்டும் தள்ளிடாதீர்
வேறுவழி ஏதுமில்லை இறங்குதற்கும் அதுவேண்டும்
இறங்கவேண்டி வருகையில்தான் ஏணியதன் பணிதெரியும்

## வழித்துணை - 30

01. கதைகளுக் கற்பனையே மூலதனம் ஆகும்
வாழ்க்கையில் கற்பனையே மூலவேரை அறுக்கும்
கற்பனை வாழ்க்கையும் கற்பனையில்லாக் கதைகளும்
ஏற்றதல்ல என்றுநீர் ஏற்றபடி வாழ்ந்திடுவீர்

02. கன்னத்தில் கவர்ச்சியின்றிக் கடுகடுப்பாய் இருந்தாலும்
எண்ணத்தில் நல்லெண்ணம் இருந்திட்டால் போதும்
அன்னம்போல் நல்லெண்ணம் பிரித்தெடுத்து வாழ்வோரே
இன்பமெனத் துன்பத்தில் வீழாமல் வாழ்ந்திடுவர்.

03. மேடையில் பேசுதற்கோர் சந்தர்ப்பம் கிடைத்துவிட்டால்
சபையோரை மட்டமாக எண்ணிவிடல் ஆகாது
சபையிலேயும் பேரறிஞர் பலரிருப்பர் எண்றெண்ணி
ஆய்ந்தறிந்து பேசுதல் பேசுவோற்கு அழகாம்

04. இறையன்பு உடையோராய் இருந்திட்டால் போதும்
அடியாற்கு பணிசெய்ய ஆண்டவனே வருவான்
இறைவனே தானென்று இறுமாப்பு அடைவோரை
அடியாராய்க் கூடஅவன் கருதாமல் மறைவான்

05. சந்தேகம் நம்பிக்கை இரண்டுமே வேறுவேறு
இறைவன்மேல் இரண்டுமொன்றாய் இருந்திடுதல் நன்றன்று
சந்தேகத் தோடிறைவன் சன்நிதியைத் தொழுவதிலும்
நம்பிக்கை யோடவனை நினைந்திடுதல் நன்றாம்

06. கரத்தொலியும் சரத்தழகும் நிரந்தர மென்றாகாது
அரங்குவிட்டு இறங்கிவர அவையெல்லாம் மறைந்துவிடும்
பரம்பொருளைப் பற்றிநிற்கும் பக்குவம் ஒன்றே
நிரந்தரமாய் நின்றெமக்கு நீடுபுகழ் சேர்க்கும்.

07. இறையோடு சக்தியுமே தந்தையொடு தாயுமெனில்
ஈரேழு பிறப்புமெங்கள் உடன்பிறப்பு ஆகுமன்றோ
ஆதலினால் இறைபடைப்பு அனைத்திலுமே அன்புசெய்வீர்
அதுவொன்றோ இறைவனுக்கு நாம்செய்யும் கடனாகும்

08. விரக்தியே ஒருவனது வாழ்வுக்கு விஷமாகும்
முயற்சியே அவன்வாழ்வில் உயர்ச்சியைச் சேர்க்கும்
விரக்தியோடு இருந்திந்த வாழ்வுதனை அழிப்பதிலும்
முயற்சித்து வாழ்வுதனில் உயர்ச்சியுறல் நன்றாம்

09. அறிஞர்க்காய் அவைகளிலே ஆழஉரை நிகழ்த்தலிலும்
அறியாற்காய் அறிந்தவற்றை உரைத்திடுதல் நன்று
அறிஞர்க்காய் உரைத்தெம்மை அவரறிந்து கொள்வதிலும்
அறியாற்காய் உரைத்தவரை அறிஞராக்கல் நன்றாம்.

10. ஆத்திரத்தை தூண்டுவது சிறுவிடயம் ஆனாலும்
காத்திரமாய் விளைவதுவோ பெருவிடயம் ஆதலினால்
பாத்திரத்தை உணர்ந்துநீர் பணிவோடு அணுகுமது
சூத்திரமாய் அமைந்துவிடும் சுமூகமாய் வாழ்வதற்கே.

# வழித்துணை - 3!

01. தந்தையோடு தாயாரும் பிள்ளைகுட்டி மட்டுமே
வம்சாவழியென்று வாழ்வுதனை வரையாதீர்
இறையோடு இறைபடைத்த ஆத்மாக்கள் அனைத்துமே
வம்சாவழி என்றுணரும் மானிடத்தை வெல்வீர்

02. பேசிப்பெறும் பலனைவிடப் பேசாமல் பெறலதிகம்
நேசித்து ஒருவரைநீர் பேசாமல் இருந்துபாரும்
தூசித்து தன்னைநீர் துன்புறுத்த வில்லையென்று
யோசித்து பெரும்பலனை உமக்காக்கி அவர்மகிழ்வார்

03. சாபங்கள் பலிப்பதற்கு பாவங்கள் வேண்டும்
பாவமேதும் அறியாற்கு சாபங்கள் பலிக்காது
கோபங்கள் தாபங்கள் கூடவே இடும் சாபம்
ஆபத்து அதுபின்னர் சபிப்போரைத் தாக்கிவிடும்

04. தெய்வீகம் என்பது வெறும்ஜதிகம் ஆகாது
உய்வதற்கு இருக்கின்ற ஒரேயொரு வழியாகும்
மெய்ஞான நிலையூடே மேதினியைக் கடப்போற்கு
பொய்யான போயகலும் தெய்வீக நிஜம்தோன்றும்

0[illegible] ம[illegible]னிதனை இறைவனே மாண்புடன் படைத்தான்
[illegible]தனோ நவீனத்தை நாளெல்லாம் படைக்கிறான்
[illegible]ன் படைப்பதை இறைவனும் விரும்பினால்
[illegible]னேன் படைப்பதை மாறாமல் படைக்கின்றான்.

06. கால்தொட்டுப் பணிதலும் கைதூக்கிக் கும்பிடலும்
ஞாலத்தில் இழிவென்று எண்ணிடுதல் நன்றன்று
மிகப்பெரும் பணிவினையும் மதிப்பினையும் அதுகாட்டுவதால்
ஆத்மீகம் மகிழ்ந்துமக்கு ஆசிதரும் உயர்வுறவே

07. தேவைக்கு குஞ்சரமும் இல்லையெனில் இழித்துரைப்பும்
சேவையென்ற வரம்பிற்குள் வந்திடாது மாறாக
நாவை அடக்குதலும் நன்றியோடு நடத்தலுமே
பூவைவிடச் சிறந்ததுவாம் புனிதமான பூசைகட்கே

08. தீங்கென்று அறிந்தபின்பும் பிறர்க்குநாம் தீங்கிழைப்பின்
தாங்கொணாத் துன்பத்தைப் பின்னரது தந்துவிடும்
ஏங்கித் தவித்தாலும் ஓங்கிஓங்கி அழுதாலும்
நீங்காது விதைத்ததே முளைத்துப்பின் பலன்தருமாம்.

09. தன்நிலமை உயர்வதற்குக் காரணமாய் அமையுமெனில்
தாழ்வு மனப்பான்மையதும் தரணியிலோர் வழியாகும்
மொத்தத்தில் அதுவாழ்வை அழைப்பதற்கே வழிவகுப்பின்
உயர்வு மனப்பான்மையொடு தாழ்ந்திருத்தல் தவறன்று

10. தான்செய்யும் சரிபிழையை தானேற்கும் தன்மையற்கே
இறைவனே எமைப்படைத்தான் என்றேற்கும் மனமிருக்கும்
தான்செய்தால் சரியேதான் தவறில்லை என்றுரைப்போர்
இறையெங்கே எமைப்படைத்தான் என்றெண்ணி அழிவுறுவர்.

# வழித்துணை - 32

01. பாலோடு நீரையும் பக்குவமாய் கலந்துவைத்தால்
நீர் விடுத்துப் பால்குடிக்கும் அன்னமென்று நாமுரைப்போம்
நாம்மட்டும் என்னவாம் பால்விடுத்தோ நீர்குடிப்போம்
உம்முக்குள் இருப்பதை நீரேன் என்னுக்குள் தேடுகின்றீர்

02.பிறர்துயரை தன்துயராய் எண்ணுகின்ற தன்மையற்கு
பிறிதோர் துயர்தன்னைப் பின்னிறைவன் கொடுக்கமாட்டான்
துயர்சுமக்கும் பலன்அவற்கு அத்தோடு முடிந்ததனால்
இன்பமே இனியவற்கு துன்பமென்ப தில்லையாம்

03. மண்ணுக்கு மழைபசளை மரத்திற்கு இலைபசளை
கண்ணுக்கு நீர்பசளை கருத்திற்கு உருப்பசளை
பண்ணுக்கு இசைபசளை பாலுக்கு இரைபசளை
உனக்குப் பசளையிங்கு உன்சொல்லோடு செயலுமேயாம்

04.ஏமாற்றி விட்டோம்நாம் பிறரையென்று எண்ணிடுதல்
தாமாகத் தவறொன்றைத் தாமேற்கும் தன்மையதாம்
நாமாக உணர்ந்ததற்கு பரிகாரம் தேடாவிடில்
ஏமாற்றும் அவற்கல்ல எமக்கேதான் என்றறிவீர்

05. தவறென்று பிறர்கூறும் தன்மையொன்றை ஆராய்ந்தால்
அவர்பக்கம் ஆதாயம் இருப்பதையே நீருணர்வீர்
எவரொருவர் தான்நலியத் தவறொன்றை இழைக்கிறாரோ
அதுவேதான் தவறாகும் மற்றவைகள் பாசாங்காம்

06.உதவிக்கு வருகின்றோம் என்றுசிலர் வந்துங்கள்
பதவிக்குப் பங்கங்கள் புரிந்திட்டும் சென்றிடலாம்
ஆதலினால் உதவிக்கு ஆட்சேர்க்கும் விடயத்தில்
மிதமாக நடவாதீர் நிதானத்தைக் கடைப்பிடிப்பீர்

07. மாடிமனைகட்டி மகிழ்ந்திருக்க முன்னர் நீர்
நாடியே நல்லோர்தம் மனத்திருக்க முயற்சிப்பீர்
தேடியே அவர்கள்தம் மனத்திருக்கா மனையிருத்தல்
கோடி இருந்தாலும் குப்பைமேட்டில் இருத்தலாம்

08.வெற்றி வெற்றியென்று வேட்கை மிகக்கொண்டு
பற்றினொடு பாரிற்பல வென்றிடுதல் வெற்றியன்று
சுற்றியுள்ள மாந்தர்தம் மனங்களைநீர் வென்றிடுவீர்
வெற்றியென்ப ததுவேயாம் மற்றெல்லாம் தோல்வியேயாம்

09. மதிப்போடு மரியாதை வேண்டுமென்று எண்ணுபவர்
துதித்துத் தூய்மையோடு பிறர்தம்மை மதிக்கவேண்டும்
மிதித்துப் பலதுன்பம் மற்றையோர்க்கு விளைவிப்போர்
எதிர்ப்பினையே மதிப்பென்று எண்ணிப்பின் இகழ்வுறுவர்

10.முயற்சியால் சிலவற்றை நீங்களும் செய்யவேண்டும்
பிறர்முயற்சியினை முற்றாக அனுபவித்தல் பாவமாகும்
பாவத்தின் சம்பளங்கள் மறுமையிலே மட்டுமன்று
இம்மையின் இறுதிகளும் அவ்வவற்றின் பாலதேயாம்

## வழித்துணை - 33

01. அனியாயம் அளவுக்கு அதிகமாகப் போய்விட்டால்
நியாயங்கள் நிலைக்காமல் நிலைபெயர்ந்து சென்றுவிடும்
நியாயங்கள் நிலைக்காமல் நிலைபெயர்ந்து சென்றதனால்
அனியாயம் நிலைக்குமென்று எண்ணிடுதல் தவறாகும்

02. வாக்குறுதி என்பது பெறுமதியில் ஒன்றாகும்
காற்றாடி போலஅது காற்றினிலே பறப்பதன்று
காற்றாடி பறந்திட்டால் மீண்டுமொன்று கட்டிடலாம்
வாக்குறுதி பறந்திட்டால் வாழ்வுறுதி பறந்துவிடும்

03. மனத்தினை மாண்புடன் படைத்தவன் இறைவனே
சினத்திலும் சரிபிழையை மாறியது நினைக்காது
குணத்தினை மாற்றிநாம் எமக்கேற்ப நடந்திட்டால்
கணமேனும் தரிக்காமல் கடவுளெம்மைத் தண்டிப்பார்

04. ஆத்மீக பயணத்தின் படிமுறையை வகுக்கவே
சாத்வீகச சாடசயினை மனிதத்துள் இறைபடைத்தான்
நேர்த்தியான பயணத்தின் சிலவருட பாத்திரத்தை
மனச்சாட்சியை பகைத்துநீர் பாழாக்கிக் கொள்ளாதீர்

05. கோபத்தைத் தடுப்பதற்கு எண்ணுரைத்தல் ஓர்வழியாம்
ஆபத்தைத் தடுப்பதற்கு அதுவொன்றே நல்வழியாம்
சிறுகோபம் என்றிட்டால் நூறுவரை எண்ணும்நீர்
இறங்கவே இல்லையெனில் இறங்கும்நீர் இறங்கிவிடும்

06. சிறப்பெல்லாம் இப்போது உமக்கிங்கு கிடைப்பதனால்
மறம்கூடச் சரியென்று மனத்தளவில் எண்ணாதீர்
அறமிங்கு அல்லலுற மறம்கூட மகிழ்ந்திருக்கும்
இறப்பிற்கு பின்னால்தான் அறமோங்க மறமுழலும்

07. கேட்டுவாங்குவது கல்வி கேளாமல் வாங்குவது நன்றி
கொடுத்துவாங்குவது மரியாதை கொடுக்காமல் வாங்குவதுஅன்பு
அடுத்து முயன்றிந்த நான்கினையும் வாங்கிடுவீர்
கிடைத்துவிடும் உங்களுக்கே மானிடத்தின் மாண்பு

08. கறந்தால்தான் பால்சுவைக்கும் கறக்காவிடில் கசக்கும்
கற்றால்தான் வாழ்வினிக்கும் கற்றிடில்நாம் அழிக்கும்
தெளிந்திந்த உண்மையினை கறந்திடுவீர் அறிவை
முயன்றால்தான் உயர்வுண்டு முயற்சியின்றேல் தாழ்வே

09. மலர்படைத்தது மரமாகும் பால்படைத்தது பசுவாகும்
அதை நீபடைத்தாற் போற்படைத்து நிம்மதியை அடையாதே
நீபடைக்கச் சிலவுண்டு அதுநீதி நேர்மை நியாயத்தோடு
பயபக்திப் படையலுமாம் படைத்துப்பார் பலனுண்டாம்

10. வாங்குகையில் உதவியென்பார் கொடுக்கையிலே எதிரியென்பார்
வாதாடி வழக்காடி நாணயத்தைப் போட்டுடைப்பார்
வாங்காமல் கொடுப்பதுவே வையகத்துச் சிறப்பெனினும்
வாங்கியதை கொடுப்பதற்கே வையகத்தோர் ஏங்குவாரேன்

## வழித்துணை - 34

01. கரும்போடு கனிச்சாறும் கசக்கிப் பிழிந்தெடுத்து
விருப்போடு படைத்திட்டு விரும்பியதைக் கேட்டிட்டால்
ஊனினை உருக்காமல் உள்ளொளியைப் பெருக்காமல்
தேடியெமை வந்திறைவன் கேட்டதனைத் தருவானோ

02. சூரியனும் ஒன்றுதான் சந்திரனும் ஒன்றுதான்
பூமியும் ஒன்றுதான் வானமும் ஒன்றுதான்
மனிதமும் ஒன்றுதான் என்றெண்ணும் எண்ணம்தான்
இனிவரும் நாட்களில் உலகினைக் காக்குமாம்

03. மேலிருந்து கீழ்ஊத கிளர்ந்தெழுந்து எரியாத்தீ
கிழிருந்து மேலூத கிளர்ந்தெழுந்து எரிதல்போல்
மானிடமும் மேலோங்க மேல்நின்று உரைக்காமல்
கிழிறங்கிச் சேவைசெய்வீர் மேலோங்கும் மானிடமாம்

04. உழைக்காமல் வளர்வதெல்லாம் தளைக்காத மரத்தளிராம்
மழையிலோ வெய்யிலிலோ மறுகணமே வாடிவிடும்
இளைத்தாலும் களைத்தாலும் உழைத்துண்ணும் வாழ்க்கை
துளைத்தாலும் வளைத்தாலும் தளைத்தெழுமாம் பாரில்

05. மின்னொளியும் கண்ணொளியும் இருந்திட்டால்போதும்
வழித்துணைக்கு அதுபோதும் என்றுமட்டும் எண்ணாதீர்
நல்வழியும் அறிவொளியும் இருந்தாலே நீங்கள்
குறிக்கோளை அடைவதற்கு அவை வழித்துணைகளாகும்

06. கைப்பிரம்பும் கண்டிப்பும் இருந்திட்டால் போதும்
வழிப்படுத்த அவைபோதும் என்றுமட்டும் எண்ணாதீர்
அன்புவழி அரவணைப்பும் இருந்தாலே நீங்கள்
மற்றோரை வழிப்படுத்த அவை வழிவகைகளாகும்

07. கைப்பொருளும் கனவளமும் இருந்திட்டால்போதும்
வாழ்வாங்கு வாழ்வதற்கு என்றுமட்டும் எண்ணாதீர்
மெய்ப்பொருளை அறிந்திடலும மேன்மைகளைப் புரிதலுமே
வாழ்வாங்கு வாழஅவை வழித்துணைகளாகும்

08. கற்றோர்க்கு அணிகலம் கற்றபடி ஒழுகலைப்போல்
உற்றோர்க்கு அணிகலம் உறவோடு கலத்தலாகும்
விற்போர்க்கு அணிகலம் விலைமதிக்கும் தன்மையைப்போல்
பெற்றோர்க்கு அணிகலம் பிள்ளைகளின் சிறப்பேயாம்

09. எக்கருமம் ஆனாலும் எடுத்தொருவர் தொடுக்கையிலே
அக்கருமம் தவறென்று அடித்துரைக்கக் கூடாது
தக்கபடி சென்றுஅது தவறின்றி முடிந்திட்டால்
துக்கமது உமக்கேதான் தூயபுகழ் அவர்க்கேயாம்

10. சுயநலமும் பொறாமையும் முற்கோபம் தானதுவும்
பயவாழ்வை பாரதனில் பயக்கும் ஆதலினால்
தயவோடு தாட்சனிய மயமாக உமைமாற்றும்
கயமையும் உமைக்கண்டால் தயவாக மாறும்

## வழித்துணை - 35

01. எப்போதும் எவரிடத்தும் நாணயமாய் நடந்திட்டால்
இப்போது அதுஎமக்கு உதவாமல் போனாலும்
தப்பித் தவறியோர்நாள் அவரெமக்குத் தேவையுறின்
அப்போது நாம்காட்டிய நாணயமே கைகொடுக்கும்

02. உமக்குதவா ஒன்றிங்கு பிறர்க்கும் உதவக்கூடாதென்று
உமக்குள்ஓர் கொள்கையினை நீர்வகுத்துக் கொள்ளாதீர்
பிறர்க்குதவி வாழ்வதுவே இறைபடைப்பின் நோக்கமதால்
தமக்குதவாக் கொள்கையோரை தன்படைப்பாய் இறைகருதான்

03. வேதனைகள் இல்லாத வாழ்வுதனை விரும்புபவர்
ஏனையோரை வேதனையுள் தள்ளாமல் இருக்கவேண்டும்
பிறர்தம்மை வேதனையுள் தள்ளியவர் துன்பமுற
நாம்மட்டும் மீழஎண்ணல் நீழ்துயரே தந்துவிடும்

04. பலன்கருதிப் பாரில்நாம் உயிர்வளர்த்தல் பாவம்
வளர்த்ததற்காய் பலன்தருதல் உயிரினத்தின் சுபாவம்
நலன்கருதி இறைவனைநாம் வணங்குதலும் பாவம்
வணங்குதற்காய் பலன்தருதல் இறைவனது சுபாவம்

05. போலியான அன்போடு மரியாதை கௌரவமும்
கேலிசெய்து ஒருவரைநாம் பழிப்பதற்குச் சமமாகும்
காலினையே தொட்டறிஞர் களித்திடநீர் பணிந்துபாரும்
மேலிருந்து மெய்யான அம்மூன்றும் உமைச்சேரும்

06.குப்பி விளக்கென்று கூடவுள்ள ஒளிவிடுத்து
ஒப்பரிய ஓரோளிக்காய் ஒருபோதும் காத்திராதீர்
இப்புவியில் நாம்வாழ இருப்பவை ... ஆண்டே
அப்பப்போ பெறுயொளியைப் பெற்றிடுவீர் ஒளிர்ந்திடுவீர்.

07. நிதானம் புரிந்துணர்வு நேர்வழி நல்லொழுக்கம்
இவை உதாரணமாய் வாழ்வதற்கு ஏற்றநல்ல வழிமுறையாம்
சதாநம் வாழ்விலிதைக் கடைப்பிடித்து வாழ்ந்திட்டால்
எதனாலும அழிவிலையாம் ஏற்குமதை உலகமுமாம்

08. உன்நிலை நன்றாக உயர்ந்திருக்கும் வேளையிலே
என்நிலையை நீகொஞ்சம் எண்ணுதற்கும் மறவாதே
அன்நிலை பிறிதோர்நாள் உனைவந்து சேர்ந்திட்டால்
நன்நிலையில் நீவாழ அன்நிலையே உதவிடுவாம்

09. உன்நாவொரு தாமரைப் பூவிதள் ஆகும்
நாமகள் அதிலென்றும் இருந்திடல் வேண்டும்
நாளிலும் பொழுதிலும் அதில்அவள் வாழ
உண்மையும் இனிமையும் ஊறிடல் வேண்டும்

10.ஏழை என்றொருவன் தனைஎண்ணி வருந்துதற்கு
நாளை நம்செயலே காரணமாய் அமையுமெனில்
வேளைவரும் போதிலவன் தோளை நிமிர்த்தியெமை
கோழையென்பான் ஏழையிலும் கோழை இழிவன்றோ

## வழித்துணை - 36

01. வாழைகுட்டி போடுவது அதுவும்குட்டி போடவன்று
இறுதியிலே தன்னையது தாங்கியும் நிற்பதற்காம்
அதுபோல்தான் பெற்றோரும் பிள்ளைகளைப் பெற்றெடுத்தல்
அவர்கள் பெறமட்டுன்று தம்மையும்தான் தாங்குதற்காம்

02.பெற்றறோர் பிள்ளையினால் ஏதும்பலன் இல்லையென்று
உற்றதோர் பெற்றவர்கள் உளம்நோக நேர்ந்திட்டால்
மற்றவைகள் எல்லாமே மலைபோல்தான் இருந்தாலும்
குற்ற உணர்வொன்றவரை குழிதோண்டிப் புதைத்துவிடும்

03. வெட்டுகின்ற பல்லிடையே வெறுந்தசையால் நாக்குண்டு
கொட்டுகின்ற முள்ளிடையே றோசாவில் மலர்களுண்டு
பட்டதெல்லாம் போதுமென் பக்கத்துணை கொடிதென்று
எட்டியோட முயற்சியாதீர் ஒட்டிநில்லும் சிறப்புமக்கே

04.சீருடைகள் இல்லாமல் செல்லலாம் கோயிலென்று
பேருடைகள் தரித்தங்கு பெருமைகாட்டச் செல்லாதீர்
ஓர்குடையுள் எல்லோரும் நிற்குமிடம் கோயிலதால்
யாருடைய மனமுமங்கு நோகாமல் நடந்திடுவீர்

05. அதிகாரம் செய்வதுவும் அடுத்தவரை வருத்துவதும்
அதிகாரி என்பதற்கு அர்த்தமென்று கொள்ளாதீர்
அதிக கருமம் ஆற்றுவதும் அடுத்தவற்காய் உழைத்தலுமே
அதிகாரி என்பதற்கு அர்த்தமென்று அறிந்திடுவீர்

06.வேண்டுவோரின் வேண்டுதற்காய் தடைதாண்டி ஓடுபவர்
ஆண்டியென்று கண்டிட்டால் நொண்டியாக மாறிடுவர்
தீண்டியவர் கொள்கையினை தோண்டிநாம் பார்த்தால்தான்
மாண்டபின்பு புதைத்தவர் மனிதாபிமானத்தை என்றறிவீர்.

07. வைரமும் மணிகளும் இரத்தினக் கற்களும்
பொன்னோடு பொருட்களும் புதைந்திருக்கும் என்பதால்
மகிழ்ந்தோடிச் சென்றுநாம் நிலம்தோண்டிப் பலனில்லை
மறைந்திருக்கும் திறமைகளைத் தோண்டிடுவீர் பலனுண்டாம்

08.சிற்றின்பம் வாழ்க்கையிலோர் சிறுஇன்பம் மட்டும்தான்
அதற்காகப் பேரின்பம் பலவற்றை இழக்காதீர்
சிலஇன்பம் சிலகாலம் சென்றதுமே சலித்துவிடும்
பேரின்பம் பெருவாழ்வு இறுதிவரை நிலைத்திருக்கும்

09. சந்திர மண்டலத்தில் இறங்கியேதான் நடந்தென்ன
செவ்வாய்க் கிரகத்தை ஆராய்ந்து அறிந்தென்ன
பூமியில் மானிடர் மனங்களை அறியாமல்
விண்வெளி ஆய்வதனால் விடிவுண்டோ சொல்வீர்நீர்

10.தருமதியும் வருமதியும் அதிகமுண்டு என்பதற்காய்
வெகுமதிகள் வாங்குவதற்காய் திருமதிகள் தேடாதீர்
ஏற்றுமதி இறக்குமதிப் பிழைப்பல்ல வாழ்க்கை
கொடுக்குமதி நல்வாழ்க்கை வாங்குமதி நிம்மதியாம்

## வழித்துணை - 37

01. பொழுதுபோவதற்காய் ஒருவரிடம் சென்று நாங்கள்
பொழுதே தெரியாமல் பேசிடுதல் நன்றன்று
பொழுது சிலருக்குப் பொன்போன்ற தாயிருக்கும்
பொழுதறிந்து ஒருவரிடம் பேசுதலே நன்றாம்

02. நேற்றைய நிலையிலேதான் இன்றொருவர் இருப்பரென்று
ஆற்றுகின்ற கருமத்தை அறியாமல் ஆற்றிடாதீர்
மாற்றமுறு நிலமைகளால் மனங்கலங்கி அவரிருப்பின்
ஏற்றிடார் எதையுமவர் அறிந்துசெய்தால் போற்றிடுவார்

03. கண்டிப்பு ஒன்றும்மேல் விழுகின்ற போதினிலே
துண்டித்துத் தூரநீர் விலகியே சென்றிடாதீர்
தெண்டித்து அதற்குநீர் பரிகாரம் தேடுதலே
தண்டிப்புத் தாக்காமல் தடுப்பதற்கு வழியாகும்

04. உத்தியோகம் என்பது உமக்கடித்த யோகமன்று
பக்தியோடு பணியாற்றக் கிடைத்ததொரு பாத்திரமாம்
ஊதியமும் அதற்குண்டு உயர்வுகளும் அதற்குண்டு
நீதியோடு பணிசெய்வீர் இறைபணியும் அதுவொன்றே.

05. உடல்சிறிது என்றுசிலர் உம்மோடு தமைவிடுத்து
கடல்பெரிது மலைபெரிது எண்றெண்ணிக் களிப்பதுண்டு
அடலேறு கடலைவிட அமைதியான மனத்தினொடு
திடலேறு மலையைவிட நிம்மதியும் பெரிதேயாம்

06.நம்விரலே நம்கண்ணைக் குத்துகின்ற வேளையிலே
நாமெடுக்கும் நிலைப்பாட்டை பிறதினிலும் எடுத்திட்டால்
தம்பிட்டுப் போயிருக்கும் மனிதநேயம் தலைதூக்கி
கும்பிட்டுக் கூத்தாடிக் குதூகலிக்கும் மானிடமாம்

07. தாய்வயிற்றுள் பிள்ளையது தாக்குதல்கள் நடத்துகையில்
சேய்நலமாய் உள்ளதென்று தாய்மகிழல் போல
வாய்திறந்து யாருமுமை வார்த்தைகளால் தாக்கினாலும்
பாய்ந்தவரைத் தாக்காமல் பரிந்திடுவீர் பலன்பெறுவீர்

08.ஊனுடலின் மேலிருக்கும் உடையலங்காரங்கள்
மானுடத்துள் மறைந்திருக்கும் மனநிலையைக் காட்டாது
கூனுடலம் ஆனாலும் கோவணம்தான் தரித்தாலும்
வானுயர்ந்த நடத்தைகளே மனத்தழகைக் காட்டிடுமாம்

09. அறிவெனப்படுவது படிப்பறிவு மட்டுமன்று
நெறியோடு கூடிய பகுத்தறிவுப் பாடமுமாம்
படிப்பறிவு பதவிகளை வகிப்பதற்கு உதவுமாப்போல்
பகுத்தறிவு வாழ்வியலை நடாத்துதற்கு உதவிடுமாம்

10.நல்லதோ கெட்டதோ அதைஏற்றிடப் பழகுதலும்
ஏற்றதற்கு ஏற்றபடி பரிகாரம் தேடுதலும்
மாற்றமிலா வாழ்வுவாழ உதவிடுமாம் மற்றெல்லாம்
காற்றுள்ள போதெதையும் தூற்றிடாத கவலையதாம்

## வழித்துணை - 38

01. துக்கம் நெஞ்சத்தை அடைக்கின்ற வேளையிலே
தக்கோர்க்கு அதைஉரைத்துத் தக்கவழி கேட்டிடுவீர்
வெட்கம் என்றதனை வெளிக்காட்டா திருந்திட்டால்
பக்கத்து மகிழ்வுகூடப் பலதூரம் சென்றுவிடும்

02. சந்தேகம் ஒன்றுமுள் சங்கமிக்கும் வேளையிலே
சிந்தித்துச் செயலாற்றி சீராக்கித் தீர்த்திடுவீர்
பேந்து பின்னையென்று பெரும்பொழுது கழித்திட்டால்
வந்தது வளர்ந்துபின் வாழ்வினையே விழுங்கிவிடும்

03. ஊனுடலை வளர்க்கின்றீர் உறவுகளை வளர்க்கின்றீர்
ஆணுறவில் பெண்ணுறவில் ஆசைகளை வளர்க்கின்றீர்
வானுயர்ந்த கோபுரம்போல் பேர்புகழை வளர்க்கின்றீர்
மானிடத்துள் ஆத்மீக பலம்வளர்த்தல் ஆகாதோ

04. இருளில் மறைவது ஒளியாகும் இதமான
ஒளியில் மறைவது இருளாகும் அதேபோல
மாயை இருளில் மறைவது இறையாகும் இறை
அருளில் மறைந்திடும் துன்ப இருளாகும்

05. கலியுகம் அகன்றாலே இனியுகம் வாழும்
இனியுகம் வாழ்வதற்கு புதுயுகம் வேண்டும்
புதுயுகம் பிறப்பதற்கு இறையருள் வேண்டும்
இறையருள் வேண்டுமெனில் ஆத்மபலம் வேண்டும்

06.தொற்றிடும் வியாதியென்று தூரத்தே நிற்பவர்கள்
பற்றிடும் பதவியென்று படித்துயர மறுப்பதுஏன்
செற்றபின் முடிந்திடும் உடல்நலத்தைப் பேணுபவர்
கற்றவித்தை எழுபிறப்பும் தொற்றுமென்று அறியாரோ.

07.பெற்றாற்கு உதவுதல்போல் உற்றாற்கு உதவுதல்போல்
மற்றோற்கு உதவநாம் மனமுவந்து முன்வந்தால்
கற்றார் என்றுலகம் எமைப்போற்றி மதிப்பதுடன்
பற்றோடு மற்றோரும் உற்றாராக உதவிடுமாம்

08. செயலாலோ நினைப்பாலே செய்வதைச்செய்து நாங்கள்
தயவின்றிப் பிறர்தம்மைத் துன்பத்தில் ஆழ்த்திவிட்டால்
யார்வயலில் விதைத்தாலும் விதைத்தவற்கே அறுவடைபோல்
பெருவிளைவைப் பின்னர்நாம் அனுபவிக்க நேர்ந்துவிடும்

09.தவறிளைக்கத் துணிந்தவர்கள் தண்டனைக்கும் துணியவேண்டும்
தண்டனையால் தப்புதற்கு தவறுகளை மறைந்திட்டால்
மறைக்கின்ற தவறுகளேபின் மாபெரும் தவறாகி
தப்பிடவே முடியாத தண்டனையைத் தந்துவிடும்

10. நேர்மையோடு நடந்திட்டால் நெஞ்சுக்குள் கனமிராது
கனமில்லா நெஞ்சோற்கே நிரந்திர மகிழ்விருக்கும்
மகிழ்விருக்கும் என்றெண்ணி நேர்வழியைக் கைவிட்டால்
அவ்வழியே மகிழ்வழித்து நின்மதியைக் குலைத்துவிடும்

## வழித்துணை - 39

01. சுற்றத்தைக் கண்டிக்க கூர்மையோடு இருத்தல்போல்
சுற்றத்திற் குதவற்கும் சற்றேனும் சலிக்காதீர்
சற்றேனும் சலிக்காமல் சுற்றத்திற் குதவுதல்தான்
குற்றத்தைக் கண்டித்த குறையினையும் போக்கிடுமாம்

02. களவொன்றை எடுக்கையிலே கள்ளனென்ற பேர்வராது
கண்டுஅதைப் பிடிக்கையில்தான் கள்வனென்ற பேர்கிடைக்கும்
கள்வனென்ற போர்போக்கக் கலங்கிநாம் அழுவதிலும்
களவெதையும் செய்யாமல் இருந்திடலே நன்றாம்

03. குற்றத்தைத் தான்புரிந்து கூடவுள்ளோர் தனில்சுமத்தி
பற்றுள்ள உறவுகளைப் பகைவர்களாய் ஆக்கிவிட்டு
நற்பெயரோ டிருக்கின்றோம் என்றெண்ணி நலிவதிலும்
குற்றத்தைத் தானேற்றும் நற்பெயரைக் காத்திடலாம்

04. தனக்குச் சாதகமாய் நியாயத்தை வகுப்பவர்கள்
கனக்கின்ற மனத்தோடு காலத்தைக் கழித்திடுவர்
உனக்கென்றும் எனக்கென்றும் எண்ணாமல் எல்லோற்கும்
ஒன்றே நியாயமென்போர் கனவானாய்த் திகழ்ந்திடுவர்

05. எனக்கிரங்கி வாவென்ற இறையோனை நாமழைத்தால்
தனக்கிருக்கும் வேலைவிட்டு அவன் எமக்கிரங்கி வரமாட்டான்
பிறர்க்கிரங்கி நாம்செய்யும் தியாகத்தைக் கண்டுவிட்டால்
தனக்கிரங்கினோம் நாமென்று அவன் எமக்கிரங்கி வந்தருள்வான்.

06.செயற்கைக்கோள் தன்னிலேறி இறைமுடியைக் தேடிக்காணார்
அணுவாற்றல் கொண்டிறைவன் அடிதேடி அதுவும் காணார்
பகுத்தறிவுப் பாதைசென்று அவர் உள்ளத்துள் தேடிப்பார்த்தால்
அணுவுக்குள் அணுவாயுள்ளே அவன்தோன்றும் காட்சிகாண்பார்.

07. கண்களைத்தானம் செய்தால் செய்தோற்கே பலனுண்டாம்
ரத்தத்தைத் தானம்செய்தால் செய்தோற்கே பலனுண்டாகும்
பால்பழம் இளநீர்கொடுத்தல் வெறும்பரிமாறும் பலனேயென்று
உமதன்புப் பக்திஈயும் உயர்பலன் உமக்கே உண்டாம்

08. பூப்பறித்துக் கொடுப்பதனால் மரத்திற்கே பலன்அதிகம்
பால்கறந்து கொடுப்பதனால் பசுவிற்கே பலன் அதிகம்
இவைகளால் உமக்கு உள்ளதோ பகிர்ந்தபலன் மட்டுமென்று
அன்போடு பக்திகொள்ளும் முழுப்பலனும் உமக்கேயாகும்

09. கேட்பது நியாயமென்றால் கடவுளார் கண்திறப்பார்
நியாயத்திற் கப்பால்நாம் கேட்பதற்காய்க் கண்திறவார்
கண்திறவாக் காரணத்தால் கண்கெட்ட கடவுளென்று
நெற்றிக்கண் அவர்திறக்க நாம்வழிவகுத்துக் கொடுக்கலாமோ

10.கடவுளை வணங்குவது ஒருமுறையென்று எண்ணாதீர்
மானிடராய்ப் பிறந்தோரின் கட்டாய கடமையது
கடமையென்று எண்ணுபவர் இறையடியை அண்மிப்பர்
முறையென்று எண்ணுபவர் பலமுறை பிறந்துழல்வர்

## வழித்துணை - 40

01. கருவறையில் குழந்தையது கண்களுக்குத் தெரிவதில்லை
இருந்தாலும் குழந்தையில்லை என்றுயாரும் சொல்வதில்லை
அதுபோல்தான் கடவுளாரும் எம்முள்ளே நிறைந்துள்ளார்
உள்ளார் என்று நம்புவோற்காய் உரியநேரம் அவர்வருவார்

02. நட்பும் ஒருவகையில் கற்பினை ஒத்ததுதான்
புனிதம் அதிலே புதைந்திருக்க வேண்டும்
புனிதம் இல்லாத நட்பினை நாம் சுமப்பின்
தனிமையைக் கூடஅது இனிமையற்ற தாக்கிவிடும்

03. மனிதத்தை மனிதம் மதிக்காத வரையிலே
மனிதத்தின் மாண்பைநாம் அனுபவிக்க முடியாது
புனிதராய் வாழவும் இனியோராய் இருக்கவும்
மனிதத்தை மதிக்கின்ற மார்க்கமே வழியாகும்

04. வேண்டிய உணவதே வந்திங்கு தொங்குதென்று
தூண்டிலில் அகப்பட்டு துடித்திறக்கும் மீன்போல
காண்பதைக் கண்டவுடன் எமக்கென்று ஏற்றிட்டால்
மீழவே முடியாமல் துடித்திறக்க நேர்ந்துவிடும்

05. நேற்று நடந்ததையும் நாளை நடப்பதையும்
இன்றே எண்ணுகின்ற இயல்பினை உடையோற்கே
என்றும் நடப்பவைகள் நன்றாகும் மற்றோற்கு
அன்றவரின் நடைபொறுத்தே நன்மையும் தீமையுமாம்

06.பெருந்தகை என்றொருவர் பெருமையோடு இருந்திட்டால்
பெருந்தன்மை பெருந்தன்மை யாகவே இருந்திடாது
வருந்துவோற்கு மருந்தாகி அருந்தொண்டு ஆற்றினால்தான்
இருந்தவரை அனுபவிப்போர் பெருந்தகைதான் என்றுரைப்பர்

07. லாபம் நமக்கென்றால் பெருங்குற்றம் சிறிதாகும்
பிறர்க்கந்த லாபமெனில் சிறுகுற்றம் பெரிதாகும்
லாபநஷ்டம் பார்த்தெவரும் குற்றத்தை மதிக்காமல்
குற்றத்தால் விழைவது நஷ்டமென்றே கருதிடுவீர்

08.வேண்டாம் என்றுஒன்றைத் தூக்கிநீர் எறிந்திடாதீர்
அதுவேண்டுகின்ற வேளையிலே தூரத்தே நின்றுவிடும்
தூரத்தே நிற்கின்ற வேண்டியதை வேண்டலிலும்
வேண்டுமென்று கருதியதே வேளையதில் உதவவரும்

09. உதவிகள் புரிந்தோரை உரியபடி மதித்தல்போல்
உதவிட விரும்பியோரையும் உள்ளத்தால் மதித்திடுவீர்
உதவிகூடச் சிலவேளை விரும்பாமல் செய்திடலாம்
விரும்புதலே உலகத்தில் உதவிடலில் மேலாம்

10.அறியாமல் செய்திட்ட தவறுக்காய் வருந்தாதீர்
அறிந்துநீர் தவறெதையும் செய்யாமல் தவிர்த்திடுவீர்
அறியாமல் செய்ததற்காய் வருந்தாமல் இருப்பதற்கு
அறிந்து தவறுசெய்யாமல் இருப்பதுவே வழியாகும்

## வழித்துணை - 41

01.. எங்களுக்கு சிறிதாக இருக்கின்ற ஓர்விடயம்
மற்றோற்கு மிகமிகப் பெரிதாயும் இருந்திடலாம்
சிறிது பெரிதென்று எதையும்நீர் நோக்காமல்
எதற்குமோர் மதிப்பளித்தல் எல்லோற்கும் நன்றாம்

02.பாசம் வாழ்க்கையில் பரிணாமம் ஏற்படுத்தும்
இரக்கம் இணையில்லா இறையின்பம் சேர்க்கும்
பாசத்திற் காட்பட்டு இரக்கத்தை இழந்திட்டால்
இல்வாழ்க்கை சிறக்கும் இறையின்பம் அகலும்

03. வேலிவாசல் கோணல்நீக்கி நேராக்க விரும்புதல்போல்
மனங்களையும் கோணாமல் நேராக்க விரும்பவேண்டும்
வேலிவாசல் நேராக்கல் பார்வைக்கே அழகுதரும்
மனங்களைநாம் நேராக்கல் மானிடர்க்கே அழகுதரும்

04.பாலாகப் போனாலும் தேனாகப்போனாலும்
பரமசிவன் உடல்கழுவத் தீர்த்தம் என்றுஆதல்போல்
நானாகப் போனாலும் நீயாகப் போனாலும்
நாமாக மாறுதலே ஆலயத்திற் கர்த்தமாகும்

05. அரிசியாகப் போனாலும் பருப்பாகப் போனாலும்
அவனடியில் படைத்தபின்னால் பிரசாதம் ஆதல்போல்
ஆணாகப் போனாலும் பெண்ணாகப் போனாலும்
அடியாராய் மாறுதலே கோயிலதன் பொருளாகும்

06.பூவாகப் போனாலும் இலையாகப் போனாலும்
பூசைக்குப் பின்னரது வில்வமென்று ஆதல்போல்
மனிதராகப் போனாலும் அசுரராகப் போனாலும்
புனிதராக மாறுதலே பூசையதன் பொருளாகும்.

07. வாழ்க்கை அமையவில்லை எண்றெண்ணி வருத்தமுற்று
வாழா வெட்டியாக வாழ்வுதனை ஓட்டலிலும்
வாய்த்த வாழ்வு சிறப்பதற்கு அயராதுபாடுபடும்
வாழ்வாங்கு வாழஅது வழித்துணையாய் அமைந்துவிடும்

08.சித்திரங்கள் வரைகையிலே சிலகோடு வரிமாறி
ஒத்துவர மறுத்திட்டால் ஒருவாறு வரைதல்போல்
உத்தமரோ உத்தமியோ வழிதவறிப் போய்விட்டால்
பத்திரமாய்ப் புத்திசொல்லி பாதையிடல் பிழையாமோ

09. சிற்பங்கள் செதுக்குகையில் சிற்றுளிதான் சறுக்குண்டு
அற்பபிழை வந்திட்டால் முயன்றதனை முடித்தல்போல்
பற்றுடையார் சிலபேரும் புரிந்திடாமல் தவறிழைத்தால்
கற்றுணர்ந்தார் அதைமறந்து கைகோர்த்தல் தவறாமோ

10.ஊருக்குள் உமக்கேதான் நற்பெயர்கள் உண்டென்று
பாருக்குள் பட்டுடுத்துப் பவனிகள் வருவதிலும்
ஊருக்கு உம்மாலோர் நற்பெயர்தான் கிடைப்பதற்காய்
பாருக்குள் பாடுபடும் ஊருயர நீருயர்வீர்

## வழித்துணை - 42

01. துளைபோடும் வலியதனைத் தாங்குகின்ற போதில்தான்
வளைந்தாடும் மூங்கிலும் வாத்தியத்து மேடையேறும்
இளைத்தாலும் களைத்தாலும் இடர்களைநீர் தாங்குதல்தான்
அது தளைத்தோங்கி உம்வாழ்வு தலைநிமிர வழிவகுக்கும்

02. எல்லாச் சுதரந்திரமும் உமக்கேதான் உண்டென்று
அடுத்தவரின் சுதந்திரத்தை அலட்சியம் செய்திடாதீர்
எப்படியும் வாழலாம் என்பதல்லச் சுதந்திரம்
இப்படித்தான் வாழவேண்டும் என்பதுவே சுதந்திரமாம்

03. வாய்த்தவாழ்வில் வளமில்லை என்றெண்ணி வருத்தமுற்று
மாய்த்துவாழ்வை முடிப்பதற்கு மனத்தாலும் நினைக்காதீர்
சாய்த்தமரம் காய்த்ததாகச் சரித்திரமே கிடையாது
ஏய்த்தமரம் காய்த்துவிடும் ஏற்றபடி முயற்சிப்பீர்

04. பூத்தபூ அத்தனையும் காயகிப் போகுமெனில்
காய்த்தமரம் காய்ப்பாரம் தாங்காமல் முறியுமென்று
தோய்த்துமழை பூக்கழுவி சிலகாய்க்க விடுதல்போல்
வாய்த்ததெல்லாம் ஏற்காமல் வாழச்சில ஏற்றிடுவீர்

05. இன்றுஓர் துன்பத்தை அனுபவிக்கும் வேளையிலே
என்றோஅதைப் பிறர்க்குநாம் விழைவித்த நினைவுவரும்
அன்றையதன் கூலியேதான் இன்றெமக்குக் கிடைத்ததென்று
நன்றே நீர் செய்திடுவீர் நன்றேபின் பெற்றிடுவீர்.

06.உங்களின் விடயத்தில் அக்கறை மிகநன்று
அதற்காக அடுத்தவரை கெடுத்துவாழல் நன்றன்று
அடுத்தவரைக் கெடுத்துநாம் ஆயிரம்தான் பெற்றாலும்
கொடுக்கஒரு கேடுவரும் கொடுத்தேதான் தீரவேண்டும்.

07. பொறுப்பொன்றை ஒருவரிடம் பொறுப்போடு கொடுத்துவிட்டால்
மறுப்பின்றி முடிவிற்காய் பொறுமையோடு காத்திருப்பீர்
வெறுப்புற்று வேறும் பலரிடமிதை ஒப்படைத்தால்
பொறுப்புக்கள் வலுவிழந்து பெறும்பேறும் பிசகிவிடும்

08.பணஉதவி செய்தவரை மனதார மதித்தல் போல்
பொருளுதவி செய்தவரைப் போற்றிநாம் புகழ்தல்போல்
அருள்நிறைந்த அறிவுரைகள் ஆற்றுவோர் தன்னையும் நீர்
பொருளோடு பணிந்திடுவீர் இருளகற்றும் ஒளியவராம்

09. பால்வாங்கிக் குடிப்பவர்கள் பணம்கொடுத்து முடித்திட்டால்
பசுவிடம் பட்டகடன் தீர்ந்துதான் போகாது
பொருளிற்குப் பணம்கொடுத்து பெறுமதியை மதித்தல் போல்
அருளிற்கும் பொருளுணர்ந்து மதிப்பளித்தல் நன்றாம்

10.நீர்அழிய வேண்டுமென்று பிறரொருவர் எண்ணுதற்கு
காரணமாய் எதையும்நீர் காலத்தால் செய்திடாதீர்
ஆத்மீக பலம்யாற்கும் ஆள்ப்பார்த்து வருவதில்லை
ஆண்டிகூடச் சபித்திட்டால் அரசனேபின் ஆண்டியாவான்

## வழித்துணை - 43

*01.* பால்குடித்து வளர்த்ததனால் பால்போலக் குணமிராது
தேன்குடித்து வளர்ந்ததனால் தேன்போலக் குரலிராது
வான்கொடுத்த நீர்குடித்து வையத்தில் வளர்ந்தாலும்
தான்குடிக்கும் நல்லறிவே குரலோடு குணந்தருமாம்

*02.* இறப்போடு எல்லாமே முடிவதாக எண்ணிடாதீர்
இறப்பிற்குப் பின்னால்தான் சிறப்புண்டு அறிந்திடுவீர்
அருவமாய் இருந்துபின்னர் உருவமாகும் இறைபோல
உருவமாய் இருந்துபின்னர் அருவமாதல் இறப்பாகும்

*03.* இருக்கின்ற போதில்நீர் இயற்றுகின்ற கருமம்தான்
இறப்பிற்குப் பின்னாலும் இறவாது இங்கிருக்கும்
பிறப்பிற்குப் போவதற்காய் இறக்கின்ற நிலைவருமுன்
இறவாது இங்கிருக்கச்சில நற்கருமம் ஆற்றிடுவீர்

*04.* இறைவன் உமக்கென்று தருவதைநீர் ஏற்றிடுவீர்
நிறைவான திறமையொன்றும் உமக்கிருப்பின் ஏற்றிடுவீர்
மறைவாகச் சலுகையென்று உமக்கேதும் கிடைத்துவிட்டால்
மற்றவர்க்கு இலாததொன்றை நீரேற்றல் தவறாகும்

*05.* உங்களை நீங்களே உணராத வரைக்கும்
திங்களைச் சூடியோனை நீருணர முடியாது
அங்கங்கள் எங்குமே அவனாட்சி உண்டென்று
தங்களை உணர்வோற்கே இறையுணர்வு தோன்றுமாம்

*06.*மனிதர்கள் முகம்பார்த்தே கருமங்கள் செய்வர்
இனிதான இறைவனோ மனம்பார்த்தே அதைச்செய்வான்
புனிதராய் மனிதரும் மனம்பார்க்க முற்பட்டால்
கனிவான மனத்திலிறை முகம்காட்டி நிற்பான்.

*07.* இறைவனைத் தேடிநாம் செல்கின்ற பயணத்தை
நிறைவாக இறைவனைக் காண்பதில் முடித்திட
குறைவிலாச் செல்வமே கண்டால் கேட்பதென்ற
மறைவான எண்ணத்தை நீக்கினால் நிறைவேறும்

*08.*வயதுகள் போவதால் இறப்பெம்மைத் தழுவுமென்று
மனத்தாலும் செயலாலும் விரக்தியுற்று நலியாதீர்
உயர்பிறப்பு ஒன்றிலே பிறப்பதற்காய் இறந்திடலாம்
இயன்றவரை இறப்புவரை நல்வழியே நடந்திடுவீர்

*09.* இயலாமை உமைநன்றாய் இறுக்கமாகப் பற்றுதென்றால்
இணையில்லா இறையும்மை நெருங்குதென்றே அர்த்தமாகும்
இயலாமை வந்ததற்காய் இறைவன்மேல் வெறுப்புற்று
மேலான அவனருளைக் கைநழுவ விட்டிடாதீர்

*10.*கெட்டவரும் கடவுள்மேல் நம்பிக்கை அற்றவரும்
தொட்டதெலாம் துலங்கிடவே வாழ்கின்றார் என்றிராதீர்
இட்டதை இறைவனிங்கே இயன்றவரை பறிக்கமாட்டான்
பட்டபின்னர் பரம்பரைக்கே பலாபலனை அவன்கொடுப்பான்

## வழித்துணை - 44

01. நீரோடு நெருப்பிருக்கும் சூட்டோடு குளிரும்போல்
வானோடு காற்றிருக்கும் ஈரமும் வெப்பமும்போல்
நிலத்துள்ளே நிறைந்திருக்கும் ஈர்க்கின்ற சக்தியும்போல்
இறையோடு நிறைந்திருக்கும் கிருபையையும் உணர்ந்திடுவீர்

02. சும்மா சொல்லிடலாம் என்றெதையும் சொல்லாதீர்
சொல்வதே உண்மையாகி உமக்கிங்கே பலித்துவிடும்
பலித்துவிடும் என்பதைப் பாரில்நீர் உணர்ந்துகொண்டு
சொல்வதையும் செய்வதையும் உண்மையோடு செய்திடுவீர்

03 தரமற்ற ஒன்றைநீர் பிறர்தலையில் சுமத்திவிட்டு
பெருநஷ்டம் அடையாமல் லாபங்கள் ஈட்டலிலும்
உம்மோடு நஷ்டமது போகட்டும் எனநடத்தால்
இணையில்லா லாபத்தை இறுதியிலே அடைந்திடுவீர்

04. விரலுக்கு ஏற்றபடி வீக்கமதைத் தேடாமல்
உரலுக்கு ஏற்றபடி வீக்கத்தைத் தேடிப்பின்
விரலாயும் உரலாயும் இல்லாமல் போவதிலும்
வரவுக்கு ஏற்றபடி செலவுசெய்வீர் வாழ்ந்திடுவீர்

05. நல்லவற்குக் காலமில்லை என்றுஓர் கதைசொல்லி
கெட்டவராய் வாழ்வதைநீர் நியாயப் படுத்தலிலும்
காலத்தால் நல்லதையே கடைசிவரை செய்திடுவீர்
கெட்டவரும் விட்டவற்றை நல்லவராய் மாறிடுவர்

06.மலர்விரிந்து மணம்பரப்பி மாலையிலே மடிதல்போல்
காய்காய்த்துக் கனியாகி கடவுளையும் அடைதல்போல்
மானிடராய்ப் பிறந்தோரும் தன்கடன் முடிந்திறந்தால்
மறுபிறப்பில் மகத்தான இறைவனையே அடைந்திடலாம்.

07. தன்வீட்டு நிலமைகளால் தவிக்கின்ற ஒருவரிடம்
உம்வீட்டு நிலமைசொல்லி உள்ளதையும் கெடுத்திடாதீர்
அவர்வீட்டு நிலமைமாற அனுசரணை காட்டுமவர்
உம்வீட்டு நிலமைமாற உரியநேரம் உதவிடுவார்

08. குழந்தையிலே எல்லாமும் அழகாக இருப்பதெல்லாம்
வளர்ந்தவர்கள் வாஞ்சையுடன் வளர்த்தெடுக்கத் தானாகும்
வயோதிபத்தில் எல்லாமே அசிங்கமாக இருப்பதெல்லாம்
இறப்பென்ற பிரிவதனை இடரின்றித் தாங்குதற்காம்

09. அடுத்தவரின் ஒன்றைநீங்கள் உமதாக்கிக் கொள்ளஎண்ணில்
உம்முடைய ஏதோஒன்றை இழந்தேதான் ஆகவேண்டும்
உமதையும் நீரிழந்து அடுத்தவரது அவற்கேயானால்
அபகரிப்பின் விலையைநீங்கள் அதிகமாய்த்தான் கொடுக்கவேண்டும்.

10. தன்னைப்பற்றியே என்றும் சிந்தித்து வாழ்பவர்கள்
ஏதோஒரு வகையில் சிறையில்தான் வாழ்கிறார்கள்
தன்னோடு பிறரையும் சிந்தித்து வாழ்பவரே
விடுதலை என்றவானில் சிறகடித்தப் பறக்கிறார்கள்

## வழித்துணை - 45

01. உடல்பற்றால் மட்டுமிங்கே இல்வாழ்வை அமைத்தவர்கள்
உளப்பற்றாய் உடனதனை, மாற்றிடுதல் நன்றாம்
உடல்பற்று பருவங்கள் மாறியதும் மாறிவிடும்
உளப்பற்று ஈரேழு பிறப்பிலுமே இணைந்துவரும்

02. இளமையது மனத்திருக்க முதுமையினை மறந்துநீர்
இளைஞர்போல் சிலகருமம் ஆற்றிடுதல் நன்றன்று
அது பழம்பெருமை பலதையும் பறித்தெடுத்துக் கொள்வதோடு
வளர்த்ததோர் கௌரவத்தையும் இழந்ததாய் ஆக்கிவிடும்

03. வயதிற்கு ஏற்றபடி வாழ்வுதனில் வாழ்ந்துவந்தால்
பயமேதும் இல்லாத சகவாழ்வு வாழ்ந்திடலாம்
தயவேதும் இல்லாத கயமையினைக் கையாண்டால்
சுயவீட்டார் கூடஉம்மேல் தயவேதும் காட்டமாட்டார்

04. உரியதோர் கருமமது உரியபடி நடந்திடில்நீர்
உணர்ச்சி வசத்தினால் உளறியேதும் தள்ளிடாதீர்
விதிவசத்தால் ஏதேனும் விபரீதம் நடந்துவிட்டால் அதில்
உண்மையில்லை என்றாலும் அதைஉம்தலையே சுமக்கநேரும்

05. பயிர்வளர்த்தல் போல என்றும் கதைவளர்க்கக் கூடாது
வளர்த்திடுதல் இரண்டுமே ஒன்றாக இருந்தாலும்
பயிர்வளர்த்தல் பாட்டாளி வாழ்வதற்கு உதவும்
கதைவளர்த்தல் கடும்சண்டை மூள்வதற்கே வழியாகும்

06. தேன்குடித்தால் இனிக்குமென்று தேன்கூட்டைச் சிதைக்கையிலே
தேனீக்கு அதுகசக்கும் தன்தேட்டம் அழிந்ததென்று
திருடியவர் இனித்திருக்க தேடியோற்கு அதுகசக்கும்
தன்தேட்டம் எல்லாமே திருடியோரால் அழிந்ததென்று

07. பணம் கொடுத்தல் பொருள் கொடுத்தல் பக்கத்தே தோள் கொடுத்தல்
இவையெல்லாம் காலத்தால் அழியாத உதவிகள்தான்
ஆனாலும் அகிலத்தில் பேருதவி எதுவென்றால் ஒருவர்
துன்பத்தைத் துடைப்பதற்காய் கூறுகின்ற வார்த்தைகளாம்

08. தோல்வருத்தம் தசைவருத்தம் தொற்றுகின்ற நோய்வருத்தம்
இவையெல்லாம் தீர்த்துவைக்கும் பெரியாரும் பெரியார்தான்
ஆனாலும் அகிலத்தில் பெரும்பெரியார் யாரென்றால் ஒருவர்
மனவருத்தம் தீர்வதற்காய் சிலவார்த்தை கூறுவோராம்

09. சங்கீதம் பிரசங்கம் சபைமயங்கும் இசைமுழக்கம்
இவையெல்லாம் கேட்பவரும் கேள்விச்செல்வம் உடையவர்தான்
ஆனாலும் அச்செல்வம் அதிகமுள்ளோர் யாரென்றால் ஒருவர்
துயர்கூறப் பொறுமையோடு செவிமடுக்கும் மானிராம்

10. பள்ளியில் படித்திடுதல் பல்கலையில் படித்திடுதல்
இவையெல்லாம் படிப்புகளில் மேலான படிப்புகள்தான்
ஆனாலும் அதைவிடவும் மேற்படிப்புயாதென்றால் ஒருவர்
படிப்பதற்குக் காரணமாய் இருந்தோரைப் பணிவதுவாம்

## வழித்துணை - 46

*01.* புத்தகங்கள் படித்திடுதல் வித்தகங்கள் புரிந்திடுதல்
இவையெல்லாம் கல்வியினை வளர்த்தெடுக்க உதவிடும்தான்
ஆனாலும் அதைவளர்க்க மிகஉதவும் எதுவென்றால் ஒருவர்
உத்தமரின் உறவுகளை உள்ளத்தில் பேணுதலாம்

*02.* பாட்டுக்கள் கேட்டிடுதல் பேச்சுக்கள் கேட்டிடுதல்
இவையெல்லாம் அறிவுதனை வளர்த்தெடுக்க உதவிடும்தான்
ஆனாலும் அதைவளர்க்க மிகஉதவும் எதுவென்றால் ஒருவர்
வீட்டுக்குள் பெற்றோரின் அறிவுரைகள் கேட்பதுவாம்

*03.* துள்ளிக் குதித்திடுதல் துடுக்கோடு நடந்திடுதல்
இவையெல்லாம் இளம்பராய இலட்சணத்திற்குரியவைதான்
ஆனாலும் இணையில்லா இலட்சணமிங் கெதுவென்றால் ஒருவர்
பள்ளிக்குச் சென்றிடலும் படித்துயர்ந்து வளர்தலுமாம்.

*04.* ஓடிஓடிப் படித்திடுதல் ஓய்வின்றிப் படித்திடுதல்
இவையெல்லாம் படிப்பவரின் உயர்வுக்கு உதவிடும்தான்
ஆனாலும் அதியுயர இங்கேற்றவழி எதுவென்றால் ஒருவர்
தேடிப்படித்தவற்றை தினம் தினம் மீட்டிடலாம்

*05.* வினாக்களை விளங்கிடுதல் விடைகளை எழுதிடுதல்
இவையெல்லாம் பரீட்சையில் சித்திபெற உதவிடும்தான்
ஆனாலும் விசேடசித்தி பெறஉதவும் எதுவென்றால் ஒருவர்
கனாக்காணும் நிலைவிடுத்துக் கண்விழித்துப் படித்திடலாம்

06. கற்றுப் பெருமைசேர்த்தல் கற்பிப்போற்கு பெருமை சேர்த்தல்
இவையெல்லாம் மாணவரின் மகத்தான கடமைகள்தான்
ஆனாலும் மாணவர்க்கு பெருங்கடமை எதுவென்றால் ஒருவர்
இவன்பள்ளி எதுவென்று வியக்கும்படி நடந்திடலாம்

07. தித்திக்கத் தேன்குடித்தல் தெவிட்டாத பால்குடித்தல்
இவையெல்லாம் பலவானாய் ஆவதற்கு உதவிடும்தான்
ஆனாலும் மிகப்பலவான் ஆக்குவது எதுவென்றால் ஒருவர்
நித்தம்தான் படித்தவற்றால் புத்திமானாய் ஆவதுமாம்

08.நடிப்போடு நாடகங்கள் நல்லபல பாத்திரங்கள்
இவையெல்லாம் கலைவளர்க்கக் காலத்தால் உதவிடும்தான்
ஆனாலும்உயர்கலைக்கு இங்குஉதவுவதுஎதுவென்றால் ஒருவர்
படிப்பது போல இங்கு நடிக்காமல் படிப்பதுவாம்.

09. குருவோடு தெய்வத்தைப் பெற்றோரைப் பணிந்திடுதல்
இவையெல்லாம் வாழ்வுயர வாய்த்திட்ட வழிவகைதான்
ஆனாலும் அதிஉயர ஏற்றவழி இங்கெதுவென்றால் ஒருவர்
கருவறையில் சுமந்தாளைக் காலமெலாம் பணிவதுவாம்

10. சுகங்களை அனுபவித்தல் சொத்துக்கள் குவித்திடுதல்
இவையெல்லாம் சிறப்பான வாழ்க்கைக்கு அறிகுறிதான்
ஆனாலும் வாழ்க்கைக்கு மிகச்சிறப்பு எதுவென்றால் ஒருவர்
சகமனிதன் வாழ்வுக்கும் சந்தர்ப்பம் கொடுத்திடலாம்

## வழித்துணை - 47

*01.* பிள்ளைகளைப் பெற்றெடுத்தல் பேணியே வளர்த்திடுதல்
இவையெல்லாம் இல்வாழ்வின் இயல்புகளாய் இருப்பவைதான்
ஆனாலும் இல்வாழ்வின் சிறப்பியல்பு எதுவென்றால் ஒருவர்
எள்ளிநகையாடாமல் பிள்ளைகளை வளர்ப்பதுவாம்

*02.* ஆத்திரம் கொண்டிடுதல் அடிதடியை நாடிடுதல்
இவையெல்லாம் வீரமென்ற வகைக்குள்ளே வருபவைதான்
ஆனாலும் வீரத்தில் வீரமிங்கு எதுவென்றால் ஒருவர்
கன்னத்தில் அடித்தால்நீர் மறுகன்னம் கொடுப்பதுவாம்

*03.* அடுப்பிலிடுவதை வாயிலிடுவது நெருப்பிலிடுவதைவயிற்றிலிடுவது
இவையெல்லாம் மிடுக்கோடு உற்சாகம் தருபவைதான்
ஆனாலும் மிகமிக உற்சாகம் இங்கெதுவென்றால் ஒருவர்
குடலோடு ஈரலையும் பாதுகாத்து வாழ்வதுவாம்

*04.* வாழ்க்கைக்கு துணைதேடல் துணைக்குப்பின் இணைதேடல்
இவையெல்லாம் இளையோர்கள் கடைப்பிடிக்கும் வழிவகைதான்
ஆனாலும் வாழ்வோற்குச் சிறந்தவழி இங்கெதுவென்றால் ஒருவர்
வாழ்க்கைக்கு வழிதேடி வழிக்குப்பின் துணைதேடலாம்

*05.* பட்டங்கள் பெற்றிடுதல் பதவிகள் பெற்றிடுதல்
இவையெல்லாம் மாந்தர்க்கு மேலான தகுதிகள்தான்
ஆனாலும் அதைவிடவும் உயர்தகுதி இங்கெதுவென்றால் ஒருவர்
மனம்மகிழ பணிவினோடு மக்கள்பணி செய்திடலாம்

06. பரதங்கள் ஆடிடுதல் கரகங்கள் ஆடிடுதல்
இவையெல்லாம் கலைகளிலே மிகச்சிறந்த கலைகள்தான்
ஆனாலும் அதைவிடவும் சிறந்தகலை யாதென்றால் ஒருவர்
கரம்பற்றிக் கல்லுமுள்ளுக் கடப்பதற்கு உதவிடலாம்

07. பரம்பரை உமக்கிங்கு பலவுண்டு என்றெண்ணி
திரும்பவும் நீர் மானிடராய்ப் பிறந்திடலாம் என்றெண்ணாதீர்
மானிடப் பிறப்பிங்கு எல்லோற்கும் ஓர்முறைதான்
பிறப்பினை மதித்துயர்வீர் இன்றேல்நீர் தாழ்வுறுவீர்

08. பிறர்சுமக்கும் குறையொன்றைப் பெரிதாகப் பேசுபவர்
தாம்சுமக்கும் குறையெதையும் கிஞ்சித்தும் உணர்வதில்லை
குறையில்லா மாந்தராகக் குவலயத்தில் வாழவேண்டில்
தம்குறையைத் தாமுணர்ந்து நடந்திடலே வழியாம்

09. உயிர்களுக்கு இறைவன் உணர்வுசக்தி கொடுத்துள்ளான்
மனிதருக்கு இறைவன் அறிவுசக்தி கொடுத்துள்ளான்
அறிவுசக்தி கொண்டொருவர் உணர்வுசக்தி பெறத்தவறின்
உணர்வற்ற மாந்தரிலும் உணர்வுயிர்கள் மேலாம்

10. வானிலே வட்டமிடும் பருந்தொன்றைக் கண்டகோழி
கொக்கரித்துக் குஞ்சுகளை எச்சரித்துக் காத்தல்போல்
கலியுகத்தின் வாய்ப்பட்டு அழிந்திடாமல் உயிர்களையும்
தக்கநேரம் இறைகாக்கும் நாம்தாயாக அவனைஏற்றால்

## வழித்துணை - 48

01. சிறுவர்க்கு பெரியவர்கள் கருத்தொன்றைக் கூறுகையில்
உறுதியான உயர்கருத்தாய் அதுஇருந்திடுதல் வேண்டும்
பெறுமதி அற்றதொரு கருத்தவர்க்கு உணர்த்திடுதல்
மறுபுறத்தால் நஞ்சுரைத்து ஊட்டுதற்குச் சமமாம்

02.தொழிலொன்றில் பெரியதொழில் சிறியதொழில் கிடையாது
தொழிலென்ற வகையிலே எல்லாமும் ஒன்றேதான்
ஆனாலும் பெருந்தொழிலாய்க் கருதிடலாம் எதையென்றால்
விசுவாசத் தோடொருவர் செய்கின்ற தொழிலினையாம்

03. மனிதத்தில் பெருமனிதம் சிறுமனிதம் கிடையாது
மனிதமென்ற வகையிலே எல்லாமும் ஒன்றோதான்
ஆனாலும் பெருமனிதம் என்றிடலாம் யாரையெனில்
பெரிது சிறிது பாராமல் நடக்கின்ற ஒருவரையாம்

04.செல்வத்தில் பெருஞ்செல்வம் சிறுசெல்வம் கிடையாது
செல்வமென்ற வகையிலே எல்லாமும் ஒன்றேதான்
ஆனாலும் பெருஞ்செல்வம் என்றிடலாம் எதையென்றால்
இருக்கின்ற செல்வமதை இல்லாற்கும் பகிர்வதையாம்

05. பக்தியிலே பெரும்பக்தி சிறுபக்தி கிடையாது
பக்திஎன்ற வகையிலே எல்லாமும் ஒன்றேதான்
ஆனாலும் பெரும்பக்தி என்றிடலாம் எதையென்றால்
கடமையினைத் தெய்வமெனக் கருதுகின்ற தன்மையையாம்

06.மனிதாபி மானத்தை மரியாதையீனமென்று
மனதிற்குள் எண்ணியே மதிக்காமல் நடப்பவர்கள்
மதிப்போடு மரியாதை என்றிங்கு வாழ்ந்திடுதல்
மண்குதிரை மேற்செய்யும் சவாரிக்குச் சமமாகும்.

07. பிறர்வீடு என்றொருவர் வீட்டைநீர் புறக்கணித்து
என்வீடு என்னுறவு என்றிங்கு வாழ்ந்திட்டால்
தன்வீட்டைப் புறக்கணித்தீர் என்றிறைவன் அதையறிந்து
மணல்வீடு போலுங்கள் வாழ்வுதனை ஆக்கிடுவான்

08.போலியாய் ஒருவர்முன் புகழ்ந்துரைகள் பேசிவிட்டு
கேலிகள் செய்வதுவும் கிண்டல்கள் செய்வதுவும்
ஆறறிவாம் பகுத்தறிவு கொண்டோற்கு உகந்ததன்று
அதுபகுத்தறிவுப் பயிருண்ணும் வேலிக்குச் சமமாகும்.

09. உமக்கிங்கு பாதிப்பு வரும்போது வருமுணர்வே
பிறர்க்கிங்கு பாதிப்பு வரும்போதும் வந்திடுமாம்
உணர்வுகள் எல்லோற்கும் ஒன்றுதான் என்றுணர்ந்து
எவற்குமே பாதிப்பு ஏற்படாமல் நடந்திடுவீர்

10. ஆத்திரம் வருகையிலே அடிதடியை நாடாமல்
சாத்திரத்தை ஒருகணம் சரியாகப் பார்த்திட்டால்
கோத்திரத்திற் கிழிவும் பாத்திரத்திற் கழிவுமென
காத்திரமாய் இருக்கும்நீர் அமைதிகாத்தல் நன்றாம்

## வழித்துணை - 49

01. சிறுதியாகம் ஒன்றிங்கு செய்வதற்கு நேர்கையிலே
சீற்றமது கொண்டிங்கு சினந்துநீர் சீறுமுன்னர்
மாற்றமது கொண்டுஅதை மனமேற்கும் தன்மைவர
பெருந்தியாகம் புரிந்தோரை மனதிருத்திப் பார்த்திடுவீர்

02. சிறுநோய்கள் வந்துங்கள் உடல்சோரும் வேளையிலே
வாழ்க்கையது முடிந்ததுபோல் வகையற்று வாடிடாமல்
மாற்றமது கொண்டுடலைத் தேற்றுகின்ற தன்மைவர
பெருநோய்க ளோடுமிங்கே உழைப்போரை எண்ணிடுவீர்

03. சிறுநஷ்டம் ஒன்றிங்கு அடைவதற்கு நேர்கையிலே
அதையெண்ணிப் புலம்பியே ஆயுளினைக் குறைத்திடாமல்
சிறுநஷ்டம் லாபத்தின் அத்திவாரம் என்றுணர
பெருநஷ்டம் அடைந்தும்பின் நிமிர்ந்தோரை நோக்கிடுவீர்

04. ஆகாயக் காற்றதனை அகத்துள்ளே இழுத்தெடுக்க
அகத்தழுக்கு ஓடியே உற்சாகம் பெருகுதல்போல்
ஆலயத்துள் ஆண்டவனை அகத்துள்ளே இழுத்தெடுக்க
மலமனைத்தும் ஓடியே மங்கலங்கள் உமதாகும்.

05. மலரது மட்டுமே மலரடியில் வீழவென்று
மனதுக்குள் எண்ணியே மனமதனை வீழ்த்தாமல்
புலர்பொழுதில் பூப்பறித்து பூந்தாழிற் கிட்டென்ன
மனமதனை வீழ்த்திப்பின் மலர்வீழ்த்தும் இறைமகிழ்வான்.

06. கரங்கூப்பல் மட்டும்தான் கடவுளாற்கு உகந்ததென்று
கரமேந்தி நிற்போற்காய் கரங்கொடுத்து உதவாமல்
பரம்பொருளைப் பகலிரவாய் கரங்கூப்பி நின்றென்ன
கரமேந்துவோற்குதவி பின் கரங்கூப்பும் இறைமகிழ்வான்

07. ஒழுக்கமது கெட்டோற்கும் ஒழுக்கத்தின் விலைதெரியும்
விலைதெரிந்து ஒழுக்கவழி ஒழுகஅவர் வருதற்கு
பக்கத்துணையிருக்க ஒழுக்கமுள்ளோர் தவறிவிட்டால்
ஒழுக்கமற்றோர் உருவாக ஒழுக்கமுளோர் காரணமே.

08. உண்மைக்கு மாறாகக் குற்றமொன்றை நீர்சுமப்பின்
ஆத்திரம் கொண்டலறி அதற்குஉரம் சேர்க்காதீர்
உண்மையது துலங்கும்வரை மௌனமாகக் காத்திருந்தால்
குற்றத்தைச் சுமத்தியோரே பின்குற்றவாளிபோல் நிற்பர்

09. தன்பிழையைப் பிழையென்று ஏற்றொருவர் நிற்கையிலே
பின்பிழையே பிழையேதான் என்றுரைத்தல் நன்றன்று
ஏற்றிடாமல் வாதாடி வழக்காடும் நம்செயல்தான்
பிழைகூடச் சரியாக வழிவகுத்து விட்டுவிடும்.

10. பிறப்பும் இறப்பும் உண்டென்று நம்புமாப்போல்
மானிடப் பிறப்பும் ஓர்முறைதான் நம்பிடுவீர்
மறுமுறையும் பிறந்துநாம் சிறந்திடலாம் என்பதிலும்
பிறந்திட்ட இப்பிறப்பில் சிறந்திடலே நன்றாம்.

## வழித்துணை - 50

01. பிறப்புக்கள் பதின்நான்கு என்றிங்கு ஏற்கும்நீர்
மறுபடியும் மானிடராய்ப் பிறப்பீரென் றெண்ணாதீர்
எல்லாப் பிறப்பினையும் கடந்தவர் நீரதனால்
மானிடப் பிறப்பினதும் மகத்துவத்தை உணர்ந்துயர்வீர்

02. சாபத்தால் இறந்தால்நீர் கல்லாகப் பிறந்திடுவீர்
பாவத்தால் இறந்தால்நீர் புல்லாகப் பிறந்திடுவீர்
சாபமோ பாவமோ இல்லாமல் இறந்திட்டால்
பிறவாத இறவாத பேரின்பப் பிறப்பெடுப்பீர்

03. மறுமுனையைக் குறியாக்கி பயணிக்கும் வண்டியொன்று
கோளாறு ஏற்பட்டால் தொடங்குமிடம் திரும்பல்போல்
இறைவனையே குறியாக்கி பயணிக்கும் ஆத்மாவும்
மானிடத்தில் தவறிவிட்டால் மறுபடியும் புல்லாகும்.

04. காற்றடைத்த பையிலொன்று கவர்ச்சி குன்றிவிட்டால்
காற்றுப் போனதென்று காரியத்தை உணர்தல்போல்
ஆத்மாவின் உடலொன்றும் அசைவற்றுப் போய்விட்டால்
அழிந்ததென்று அர்த்தமல்ல அகன்றதென்றே அர்த்தமாகும்

05. உறவுகள் எல்லாமே எங்களோடு முடிபவை
இறப்போடு எல்லாமே மறைந்து போய்விடும்
இறைவனுக்கும் ஆத்மாக்கும் இருக்கின்ற உறவுமட்டும்
பிறப்புக்கள் கடந்து இறைகலப்பதிலே முடியும்.

06.மானிடற்கு மானிடரே பிறக்கின்றார் என்பதனால்
மானிடமோர் மாறாத பிறப்பென்று எண்ணிடாதீர்
கல்லுக்குள் ஆத்மாவே மனுவுக்குள் பிறக்கும்
மனுவுக்குள் ஆத்மாபின் வேறொன்றாய்ப் பிறக்கும்.

07. புல்லாய்த் தொடங்கி கல்லாய் வரைக்கும்
எல்லாப் பிறப்பும் பிறந்தே உயர்ந்தீர்
உயர்ந்ததோர் மானிடத்தை உதாசீனம் செய்துபின்
உழலகின்ற பிறப்பொன்றில் பிறந்துநீர் உழலாதீர்

08.இறைவனை அடைகின்ற பதின்நான்கு படிகளில்
ஒன்பதாம் படியுமது மானிடப் பிறப்பாகும்
என்பதை உணர்ந்திடாமல் அன்புவழி தவறவிட்டு
முதலாம் படிக்கே பின்உரித்தாகி உழலாதீர்

09. ஆத்மீகம் என்பதே தெய்வீகம் என்பதால்
புத்தரும் யேசுவும் நபிகளும் தோன்றினர்
நித்தமும் நீரதை உணர்ந்தே நடந்திடும்
நீரும் இறைவனின் அம்சமாய்த் தோன்றுவீர்

10.தளத்தில் இருந்தே புறப்படும் விமானம்
தரிப்பிடம் பலதில் தரித்தே நின்றுபின்
தளத்திற்கே திரும்பும் தன்மையை ஒத்ததாம்
இறைவனின் ஆத்மா பின் இறைவனை அடைவதும்

## வழித்துணை - 51

01. ஐம்பூதம் ஐந்துமே இறைவனாய் இருப்பதால்
அஃறிணை அனைத்துமே மதித்ததை உயர்ந்திட
உயர்திணை மனிதனோ உணராமல் மிதித்ததை
மீண்டும் மீண்டும் அஃறிணை ஆகிறான்

02.புற்றுக்குள் கறையானில் புதிரொன்றும் கிடையாது
அது செட்டைகட்டிப் பறத்தலே ஆபத்தில் முடிதல்போல்
செல்வத்தைச் சேர்ப்பதிலும் தவறொன்றும் கிடையாது
அது செருக்காக மாறுதலே ஆபத்தில் முடியுமாம்

03. சில்வண்டு கத்துவதும் அதற்கேதோ இன்பம்தான்
சக்திக்கு அப்பாலது கத்தியே அழிதல்போல்
வையத்தில் வாழ்வோர்க்கு வசதிகளும் இன்பம்தான்
வரட்டுக் கௌரவமாய் அதுமாறுதலே அழிவாகும்

04.மாரியிலே தவளைகளும் கத்துவது மகிழ்ச்சியால்தான்
கத்துதலே அதற்கழிவாய் இறுதியிலே முடிதல்போல்
மகிழ்ச்சியிலே திழைத்திடுதல் மானிடற்கும் சகஜம்தாம்
அது மமதையாக மாறுதலே துன்பத்தில் முடியுமாம்

05. தாய் அணைப்பில் குஞ்சுகளும் வாழ்வதுதான் வாழ்வாகும்
அவை தனித்துஇரை தேடவென எண்ணியே அழிவதுபோல்
பெற்றோரின் சொற்கேட்டல் பிள்ளைகட்கு வாழ்வாகும்
அது புறக்குடத்து நீராதல் பிள்ளைகட்கே அழிவாகும்

06.நெடுங்கடலில் மீனோடி வசித்திடுதல் வாழ்வாகும்
அது மின்னலென விண்பறக்க எண்ணியே அழிதல்போல்
வையகத்தோர் இயற்கையுடன் ஒன்றிவாழ்தல் வாழ்வாகும்
அதையும்நாம் விஞ்சுகிறோம் என்பதுவே அழிவாகும்.

07. கடல்நின்றோர் சிறுநண்டு தரைபார்த்தல் தவறன்று
அது தனைமறந்தே சிலநேரம் தரையேறி அழிவதுபோல்
கரைநின்றோர் மனிதமனம் கடல்பார்த்தல் தவறன்று
அதுகரைமீறிச் சிலநேரம் கடல்குதித்தல் அழிவாகும்

08.சோலைக் குயிலதற்குச் சொக்கவைக்கும் குரலிருந்தும்
காகத்தின் கூட்டிலது கூவியே அழிதல்போல்
வாலைப் பருவமதில் வளமான துடிப்பிருந்தும்
அவர் காலத்திற்கொவ்வாத சில ஆற்றுதலே அழிவாகும்

09. சிறுநூலில் ஏறும்வரை உயரவேதான் பட்டமேறும்
அது பெருநூலாய் மாறுதலே இறங்கவழி வகுத்தல்போல்
சிறுதினைப் பெரிதாக மதித்திடலே உயர்வுதரும்
உயர்விருந்தும் திருப்பியின்றேல் அதுவேதான் தாழ்வுதரும்

10.அகத்தழகு கொண்டகாகம் அவனியெலாம் பவனிவர
முகத்தழகு கொண்டசிட்டு முட்கூட்டில் அழிவதுபோல்
அகத்தழகாம் அறிவழகை அவனிதனில் ஏற்றிடாமல்
முகத்தழகை மட்டுமிங்கே அழகெனலே அழிவாம்.

## வழித்துணை - 52

01. பொங்குவேன் படைப்பேன் எண்ணியதை முடித்திடென்று
பேரங்கள் பேசிநாம் இறைவனை வேண்ட அவன்
வெள்ளியும் செவ்வாயும் வேண்டிவாங்கி விற்கவரும்
ஆண்டிமகன் அல்லஅவன் படைத்தவன் என்றுணர்வீர்

02. இறைவனார் எமக்கேதும் செய்யவில்லை என்றெண்ணி
மறைமுகமாய்க் கோவித்துக் காலத்தைக் கழிப்பதிலும்
படைத்தவன் அவனுக்காய் நீரேது செய்தீரென்று
கேள்விக்கு விடைகாணும் உமக்கெல்லாம் அவன்செய்வான்

03. பச்சைக் கிளியதற்கு பரவசமாம் குரலிருந்தும்
கொச்சையுடன் பெற்றம்மா என்றே அதுசிறைபுகல்போல்
மானிடராய்ப் பிறந்தோற்கும் மாசில்லா மொழியிருந்தும்
தகாதவார்த்தை பேசுதலே சிறைபுகற்கு வழிதருமாம்

04. முட்டையிட்ட கோழியதன் கொக்கரிக்கும் தன்மையே
திட்டமிட்டுத் தன்னினத்தைப் பெருகாமல் அழிப்பதுபோல்
கெட்டித்தனம் பலவிருந்தும் கொட்டமிடும் செயலதுவே
மட்டமாக்கி அவர்திறனை மலராமல் அழித்துவிடும்

05. வாயிலே இருக்குமட்டும் எச்சிலுக்கும் மதிப்புண்டு
அதுவெளியிலே வீழ்ந்துவிட்டால் அருவெருக்கும் தன்மைபோல்
பண்புக்குள் இருக்குமட்டும் மாந்தருக்கும் மதிப்புண்டு
அது பாழாகிப் போய்விட்டால் பழகுதற்கே அருவெருப்பாம்

06. தலையிலே இருக்குமட்டும் தலைமுடிக்கும் மதிப்புண்டு
அதுவேறொன்றில் வீழ்ந்துவிட்டால் அருவெருக்கும் தன்மைபோல
பாத்திரத்தை உணர்ந்தொருவர் நடக்குமட்டும் மதிப்புண்டு
பாத்திரத்தை மறந்துஅவர் பழகுதலே அருவெருப்பாம்

07. விரலோடு இருக்குமட்டும் நகத்திற்கும் மதிப்புண்டு
அதுகைநழுவிப் போய்வீழ்ந்தால் அருவெருக்கும் தன் மைபோல
ஒட்டிவாழ்ந்தால் ஒருவர்க்கு உறவுக்குள் மதிப்புண்டு
ஒட்டாமல் தனித்துவாழ்ந்தால் அதுவுமோர் அருவெருப்பாம்

08. முரசோடு இருக்குமட்டும் பல்லுக்கும் மதிப்புண்டு
அதுமுரசுவிட்டுக் கழன்றுவிட்டால் அருவெருக்கும் தன்மைபோல்
பொறுப்போடு இருக்குமட்டும் மானிடற்கும் மதிப்புண்டு
பொறுப்பற்ற நடத்தையெனில் அதுவுமோர் அருவெருப்பாம்

09. கட்டைப் பிரம்போடு கைவிளக்கும் கண்ணொளியும்
வெட்டை கடப்பதற்கு வேண்டிய வழித்துணைபோல்
திட்டம் குலையாமல் தினம்வாழ்வைக் கடப்பதற்கு
சட்டம் மட்டுமல்ல சகிப்பும் ஓர் வழித்துணையாம்

10. ஆட்பலமும் ஆள்ப்பலமும் அஞ்சாத மனபலமும்
மாட்சியுடன் ஆட்சியை நடாத்துதற்கு துணையதுபோல்
ஈட்டுகின்ற புகழோடு இல்வாழ்வை நடாத்துதற்கு
தேட்டம் மட்டுமல்ல தெளிவும் ஓர் வழித்துணையாம்.

## வழித்துணை - 53

01. பட்டமும் பதவிகளும் பார்புகழும் தகுதிகளும்
எட்டாத புகழதனை எட்டுதற்கு துணையதுபோல்
கிட்டாத மானிடத்தை கீர்த்தியுடன் கடப்பதற்கு
துட்டு மட்டுமல்ல சொட்டறிவும் வழித்துணையாம்

02.பொட்டோடு பூவதுவும் பட்டோடு பலநகையும்
கட்டுக்குலையாத சுமங்கலத்தின் துணையதுபோல்
மட்டிலா வாழ்க்கையில்நாம் முழுமையினைப் பெறுதற்கு
கொட்டுசெல்வம் மட்டுமன்று கெடாதஅன்பும் வழித்துணையாம்

03. ஆடையும் அணிகலமும் ஆடம் பரங்களும்
பீடையில்லா வாழ்வினிற்கு பின்புலத் துணையதுபோல்
சோடைபோகா வாழ்வில்நாம் சொர்க்கத்தைக் காண்பதற்கு
மேடைகள் மட்டுமன்று மேண்மைகளும் வழித்துணையாம்

04.மாரியிலே தளைப்பதுவும் கோடையிலே காய்ப்பதுவும்
வாரிவழங்கும் வாழ்விற்கு பின்புலத் துணையதுபோல்
பேரிலே ஓங்குதற்கும் பெருந்தன்மை பெருகுதற்கும்
வீரியம் மட்டுமன்று சீரியமும் வழித்துணையாம்

05. இல்லிடமும் இணைதுணையும் இனிதான எண்ணங்களும்
நல்லறத்தை நாடுவோற்கு நாளும் துணையதுபோல்
பல்லோரும் போற்றிடநாம் பண்போடு மிளிர்வதற்கு
வல்லமை மட்டுமன்று வாய்மையும் வழித்துணையாம்

*06.* வாகனமும் வசதிகளும் வேகமான புதுமைகளும்
நாகரீக வாழ்வுதனை நகர்த்துதற்கு துணையதுபோல்
சோகமிலா வாழ்வுதனில் சுகங்களைநாம் காண்பதற்கு
தேகபலம் மட்டுமன்று ஆத்மபலமும் வழித்துணையாம்.

*07.* பாட்டும் பரதமும் கூத்தும் இசைகளும்
ஈட்டும் புகழினிற்கு இணையில்லாத துணையதுபோல்
வீட்டின் சிறப்பதனை நாடறியச் செய்வதற்கு
சூட்டும்பெயர் மட்டுமன்று கூட்டுறவும் வழித்துணையாம்

*08.* மதமும் மொழிகளும் மாண்புறு நெறிகளும்
இதமான வாழ்விற்கு மிதமான துணையதுபோல்
அதர்மத்தை அழித்தொழித்துத் தர்மத்தை வளர்ப்பதற்கு
வதங்கள் மட்டுமன்று அணுகும் விதங்களும் வழித்துணையாம்

*09.* முகத்தழகும் சுகத்தழகும் முதன்மையுறு நடைப்பழகும்
அகத்தழகைக் காட்டுதற்கு அர்த்தமுள்ள துணையதுபோல்
இகழ்ச்சியிலா வாழ்வில்நாம் புகழ்ச்சியுடன் வாழ்வதற்கு
நிகழ்ச்சிகள் மட்டுமன்று நிகழ்பவையே வழித்துணையாம்

*10.* வரவேற்பும் வாழ்த்துரையும் வகையான விருதுகளும்
தரமான மதிப்பதனைத் தக்கவைக்கத் துணையதுபோல்
உரமான வாழ்வில்நாம் கரம்கோர்த்து வாழ்வதற்கு
சரம்குவித்தல் மட்டுமன்று மனங்குவித்தல் வழித்துணையாம்

## வழித்துணை - 54

01. அந்தரத்தில் சுற்றும்பூமி அதன்நிலையே இறைவன்கையில்
இந்நிலத்தில் சிறிதோர்துண்டை இலட்சத்தால் வாங்கும்மாந்தர்
தன்நிலையை நிலையாய்எண்ணித் தரித்தாற்றும் செயல்கள்கண்டு
புன்னகைக்கு இறைவன்தன்னை யாரறிவார் பூமியல்லால்

02. கண்ணகமாய்க் கடவுள்தந்த எண்ணரிய எழிலாமிந்த
மண்ணகத்தே வீடுகட்டி மகிழ்ந்திருக்க வொண்ணாமாந்தர்
விண்ணகத்து மீன்கள்தன்னில் வீடுகட்ட எண்ணல்கண்டு
புன்னகைக்கும் இறைவன்தன்னை யாரறிவார் பூமியல்லால்

03. தான்தரிக்க இடமேயின்றி தத்தளிக்கும் பூமிமாதா
நாம்தரிக்க இடமும்தந்து வான் வளி தீ நீரும்தந்து
இன்பமுற வாழுமென்ன இயற்கையைநாம் உதைத்தல்கண்டு
புன்னகைக்கும் இறைவன்தன்னை யாரறிவார் பூமியல்லால்

04. ஓய்ந்திருக்க நாழியின்றி ஓயாமல் சுழலும்பூமி
சாய்ந்திருக்கச் சரசம்பண்ணச் சந்தர்ப்பம் தந்ததாலே
ஆய்ந்ததற்கு மேல்நாமென்று எண்ணிடலும் செயலும்கண்டு
புன்னகைக்கும் இறைவன்தன்னை யாரறிவார் பூமியல்லால்

05. பால்கொடுக்கும் பசுவின்மடியை பற்றிநாம் முற்றும்கறந்து
தீன்கொடுக்க மறுத்துப்பின்னர் தீங்கிழைக்கும் தன்மைபோல
மண்மேல்நாம் வாழ்ந்துகொண்டே மண்நாசம் செய்தல்கண்டு
புன்னகைக்கும் இறைவன்தன்னை யாரறிவார் பூமியல்லால்

06.தீப்பிழம்பைக் கக்கும்போதும் திசையெல்லாம் நடுங்கும் போதும்
நாம்பிழைக்க வழிகள்செய்யும் நல்லதாய் பூமிதன்னை
வீம்புக்கு இழுக்கும் போதும் விதவைபோல் நடத்தும் போதும்
புன்னகைக்கும் இறைவன்தன்னை யாரறிவார் பூமியல்லால்

07.ஈர்ப்பென்றோர் பந்தம்வைத்து இடையறாது எம்மைத்தாங்கி
இயற்கையென்றோர் வனப்புவைத்து இன்புற்றே வாழுமென்ன
போர்க்கோலம் பூண்டேநாமும் பூமிதனைச் சிதைத்தல் கண்டு
புன்னகைக்கும் இறைவன்தன்னை யாரறிவார் பூமியல்லால்

08.தொப்புள்கொடி உறவதனால் உயிர்காக்கும் தாயைப்போல்
பொற்பாத உறவுவைக்க எமைக்காக்கும் பூமித்தாயை
அற்பத்தனம் செய்தே நின்று கருவழிப்போர் நிலையைக்கண்டு
புன்னகைக்கும் இறைவன்தன்னை யாரறிவார் பூமியல்லால்

09.பூமியிலே பிறக்கின்றோம் பூமியிலே வளர்கின்றோம்
புதைந்திட்ட போதுமிறை அடிபுக்கார் என்றோ சொல்வோம்
வாழ்கின்றபோதிலதனை உணராமல் வாழ்தல் கண்டு
புன்னகைக்கும் இறைவன்தன்னை யாரறிவார் பூமியல்லால்

10.தன்னைப்போல் நாமும்எதையும் தாங்கியே வாழ்வோமென்று
நம்பியே எம்மைத்தாங்கி வளர்த்ததாய் பூமிதன்னை
இம்சைக்கு உட்படுத்தி இடிவீழ வைத்தல் கண்டு
புன்னகைக்கும் இறைவன்தன்னை யாரறிவார் பூமியல்லால்

## வழித்துணை - 55

01. இறைவனைத் தேடித்தேடி எங்குமே காணமாட்டார்
காணாமல் விட்டபோதும் தேடாமல் விடவும்மாட்டார்
தேடியே தேகம்செத்து ஆத்மாதான் அகலும்போதே
போவதே இறையென்றறிவார் அறிந்தினி ஆவதேதோ

02. கோயிலும் குளமும் நாடி கும்பிடும் தெய்வம்தேடி
பாவோடு பூவும்கொண்டு பூசையும் புகழும்பாடி
நாவிலே நீரும்வற்றி நலிந்தாத்மா போகும்போதே
போவதே இறையென்றறிவார் அறிந்தினி ஆவதேதோ

03. வெண்ணையும் நெய்யுமந்தத் தயிருள்ளே இருக்குமென்று
கண்ணோடு கருத்துமூன்றி கடைந்ததை எடுத்தும்கொள்வார்
தன்னோடு இறைவனுள்ளான் என்பதை உணர்ந்திடாமல்
கண்மூடும் போதுணர்வார் உணர்ந்தினி ஆவதேதோ

04. மண்ணுக்குள் வைரமுண்டு சிப்பிக்குள் முத்துமுண்டு
என்பதைக் கண்டும்கொள்வார் எடுத்ததை அணிந்தும்கொள்வார்
தன்னுக்குள் இறைவனுள்ளான் என்பதை ஏற்றிடாமல்
மண்மூடும் போதிலேற்பார் ஏற்றினி ஆவதேதோ

05. கோயிலும் தானேயாகத் தெய்வமும் தன்னுள்ளாகத்
தீபமும் தானேயாகத் திகளொளி தன்னுள்ளாகத்
வாழ்வதை அறியாமாந்தர் அவைபின்னர் அகலும்போதே
அகல்வதே இறையென்றறிவார் அறிந்தினி ஆவதேதோ.

06.மாங்கனி வித்தினுள்ளே பித்துண்டு புழுக்களறியும்
விழாம்பழ நடுவினுள்ளே தசையுண்டு அணில்களறியும்
நம்முள்ளே ஆத்மாவாக இறையுள்ளான் அறிவதுண்டோ
ஆத்மாதான் அகன்றபின்னால் அறிந்துதான் ஆவதேதோ.

07. வீட்டின்மேல் இருக்கும்காகம் விருந்தினர் வருகைசொல்லும்
ஓட்டின்மேல் இருக்கும்பல்லி ஒவ்வொன்றும் அறிந்துசொல்லும்
எட்டறிவிருந்தும் மாந்தர் தம்மைத்தாம் அறிவதுண்டோ
காட்டில்தான் அறிவேமென்றால் அறிந்துதான் ஆவதேதோ

08.கிணற்றுள்ளே வாழும் தவளை வானிலை அறிந்துசொல்லும்
உப்பிட்டார் உடல்மணத்தை ஊர்நாய்கள் அறிந்துசொல்லும்
படைத்தவன் நோக்கம்தன்னை பார்மாந்தர் அறிவதுண்டோ
கிடைத்தது அகன்றபின்னால் அறிந்துதான் ஆவதேதோ

09. கூட்டுக்குள் கிளிகள்ஊர்க்கு சாத்திரம் சரியாய்சொல்லும்
வீட்டுக்குள் குடத்துப்பாலை ஊர்ப்பூனை அறிந்துசெல்லும்
நம்மோடு இறைவன்தன்னை நாமிங்கே அறிவதுண்டோ
அவனுறவு அறுந்தபின்னால் அறிந்துதான் ஆவதேதோ

10.இரவிலும் பறவைகட்டு விடியலின் குறிதெரியும்
பகலிலும் மரம்செடிகள் இரவதன் வரவறியும்
அறிவுள்ளோர் நம்முள் நாமாய் இருப்போனை அறிவதுண்டோ
வாழ்வுதான் இருண்டபின்னால் அறிந்துதான் ஆவதேதோ

## வழித்துணை - 56

*01.* எதிர்பார்த்து ஒன்றைநீர் ஒருபோதும் செய்திடாமல்
எதைநீங்கள் எடுத்தாலும் திறம்படவே முடித்திடுவீர்
எதிர்பார்ப்பு சிலநேரம் எதிர்மாறாய்ப் போனாலும் கூட
எதையும் நீர்தாங்குதற்கு எதிர்பாராமையே வழியாகும்.

*02.* தொடக்கத்தில் இருந்ததைப்போல் தொடர்ந்தும்நீர் இருந்திடாமல்
முடிக்கின்ற போதெதிலும் அவதானம் காத்திடுவீர்
ஆபத்து எப்போதும் முடிவில்தான் காத்திருக்கும்
முடிவுகள் சுபமாய் மாற அவதானமே வழியதாகும்.

*03.* இன்சொல்லும் சுடுசொல்லும் உரைப்பதற்கு இருந்தாலும்
இன்சொல்லைத் தேர்ந்தெடுத்தே எப்போதும் உரைத்திடுவீர்
சுடுசொல்லால் விழைவது நெடுந்துன்பம் ஆதலினால்
இன்புற்று வாழ்வதற்கு இன்சொல்லே வழியதாகும்

*04.* வன்செயலும் அகிம்சையும் தீர்வெட்டும் வழியெனினும்
அகிம்சையையே தீர்விற்கு வழியதுவாய்த் தேர்ந்திடுவீர்
வன்செயலால் எஞ்சுவது வெறுமையே ஆதலினால்
நிறைவோடு வாழ்வதற்கு அகிம்சையே வழியதாகும்

*05.* விட்டிடலும் விடாப்பிடியும் வெற்றிபெறும் வழியெனினும்
விட்டுக் கொடுத்தலையே வழியதுவாய் ஏற்றிடுவீர்
விடாப்பிடிகள் சிலவேளை சம்பவத்தில் வெற்றிதரும்
வாழ்வெல்லாம் வெற்றிபெற விட்டுக்கொடுத்தலே வழியதாகும்.

06.காய்ச்சிப் பழுக்கவைத்த ஒருபானை பாலதனை
ஊற்றுகின்ற ஒருதுளி உறைமோரே மாற்றுதல்போல்
போற்றிப் புகழ்திட நீர் சேர்த்துவைத்த நற்பெயரை
சாற்றுகின்ற ஒருவார்த்தை மாற்றிவிடும் ஆய்ந்துரைப்பீர்.

07. குளக்கரைநீர் அழுக்கென்று நெடுந்தூரம் நீர்சென்று
நடுக்குளத்தே நன்நீர் எடுத்துவரும் தன்மைபோல
கிட்டநிற்கும் கெட்டபெயர் எட்டியதை வாங்கிடாமல்
நெடுந்தூரம் நடந்தேனும் நற்பெயரை வாங்கிடுவீர்

08.பெயரொன்று இல்லையெனில் அடையாளம் இல்லையென்று
பெற்றோர்கள் இட்டபெயர் போதுமென்று எண்ணியே
எப்படியும் நடக்கலாம் என்றெண்ணி நடந்திடாமல்
நற்பெயரை வாங்குதற்காய் நாளெல்லாம் உழைத்திடுவீர்

09. மௌனத்தை ஒருபோதும் தரக்குறைவாய் எண்ணாதீர்
அதுவே உலகத்தின் அதிசிறந்த மொழியாகும்
மொழிபுரிந்த பின்னால்தான் பொருள்புரியும் மற்றயவை
பொருள் புரிந்தபின்னாலே மொழிபுரியும் மௌனம்

10.மௌனத்தால் விளைவது ஏதுமில்லை என்றெண்ணி
அதுகலைந்த பின்னாலே பெருவிளைவுக் காட்பட்டு
துன்பமும் துயரமும் சூழ்ந்தெம்மை வருத்திடத்தான்
மௌனத்தில் விலைமிகவும் அதிகமெனத் தெரியவரும்

## வழித்துணை - 57

01\. ஊன்உடலை வருத்திவிட்டால் போதுமென்று எண்ணிநீர்
நான்என்ற நிலைநிலைக்க நாதனையே அணுகாதீர்
நாம்வருந்தும் எதனாலும் நம்பிரானார் மகிழமாட்டார்
பிறர்வருந்தா நடைகண்டால் பின்னவரே மகிழ்ந்தருள்வார்

02\. கெட்டவர் என்றுகண்டால் எட்டநிற்றல் நன்றேதான்
ஆனாலும் கெட்டவரைக் கெட்டவராய் விட்டிடாமல்
நல்லவராய் ஆக்குதற்கு நாடிநாம் செல்லாவிடத்து
கேடுகெட்டார் என்றெமையே அவர்விடுப்பார் பிழையாமோ

03\. எனதென்று எதுவுமில்லை என்றெண்ணும் ஆலயத்துள்
ஆலயமே தனதென்று எண்ணுவோரைக் கண்டிறைவன்
எனக்குரியர் இவரல்லர் என்றவரின் உறவைவிட்டு
பிணக்குவியல் எரியுமிடச் சாம்பலிலே போயுறைவான்

04\. தனக்காக ஆண்டவனின் ஆலயத்துள் சென்றங்கு
ஆண்டவற்காய் வந்தவர்போல் காட்டுவோரைக் கண்டிறைவன்
தனக்குதவி இவரல்லர் என்றவரின் உறவைவிட்டு
மனத்துள்ளே தனைச்சுமப்போர் மகிழவந்து அருகுறைவான்

05\. கோயிலில்லா ஊரென்றால் குறையென்ற காலம்போய்
ஊருக்குள் கோயில்வேண்டாம் என்போரைக் கண்டிறைவன்
தாயின்றிப் பிறந்தவர்போல் நடப்போரின் உறவைவிட்டு
தனக்குள்ஓர் கோயிலிட்டார் தன்னுள்ளே போயுறைவான்

06. வீட்டிற்கும் படலைக்கும் ஆண்டவனின் நாமமிட்டு
நாமத்திற்கேனும் இறைவழிபுகாரைக் கண்டிறைவன்
ஏட்டுச் சுரைக்காயார் என்றவரின் உறவைவிட்டு
மாட்டுமனை வாழ்ந்தாலும் மனத்துயர்ந்தோர் மடியுறைவான்

07. பாட்டுக்கு ஏற்றால்போல் மெட்டமைத்தல் போலும்
மெட்டுக்கு ஏற்றால்போல் பாட்டமைத்தல் போலும்
முரண்பாடே இல்லாத வாழ்வைநீர் வாழ்வதற்கு
குடும்பத்தின் நிலைக்கேற்பக் கொள்கைகளை வகுத்திடுவீர்

08. கையினால் ஆகாத் தனத்திற்கோர் காரணமாய்
செய்வினை சூனியம் என்பதையே சொல்லி நிற்போர்
மெய்வருந்தி மேதினியில் மேலுயரும் வழிவிடுத்து
பொய்யான சிலதிற்கு மதிப்பளித்து வாழ்விழப்பர்

09. துளிநீரே அகலுதென்று இருக்கமுற்றும் அகன்றுவிடும்
துளிநீரே நிரம்புதென்று ஏந்தஏனம் நிரம்பிவிடும்
இழைத்த குற்றம் சிறிதென்று ஏற்கஅதே எமைநிரப்பும்
இழைத்த நன்மை சிறிதெனினும் இழைக்கஅதே புகழ்பரப்பும்

10. தேடாமல் கிடைப்பதுமோர் கிடைப்புத் தான் ஆனாலும்
தேடலில் கிடைப்பதுவே பெரும் கிடைப்பாம் ஏனென்றால்
தேடாமல் கிடைப்பது கிடைப்போடு முடிந்துவிடும்
தேடலில் கிடைப்பதோ மேலதிகம் பலவாகும்.

## வழித்துணை- 58

01. மௌனத்தைப் பலவீனம் எனக்கருதி அதைக்கலைத்து
வாய்ப்பேச்சு முற்றிப்பின் வாழ்வீச்சும் தான்நடாத்தி
சொத்தோடு சுகங்களையும் அழித்தபின்னர் தான்புரியும்
மௌனமே உலகத்தில் மிகப்பெரிய சக்தியென்று

02.எதுவுமே பேசாமல் இருக்கின்றார் என்றொருவர்
மௌனத்தைப் பார்த்துநீர் மௌனமென்று விட்டிடாமல்
மௌனத்தின் பொருளதனை ஆராய்ந்து பார்த்திடுவீர்
மௌனத்தின் குரலுங்கள் உள்ளத்தில் உரத்தொலிக்கும்

03. உடல்வருத்தம் உண்டென்று அதையுணர்ந்து மருந்துண்போர்
திடமான உடலோடுபின் நெடுங்காலம் வாழ்தல்போல்
தன்மீதும் தவறுண்டு என்றுணர்ந்து திருந்திடுவோர்
பின் மண்மீது மதிப்போடு நெடுங்காலம் வாழ்திடுவர்

04.நாகத்தின் விஷம்கூட நகர்த்தாமல் இருந்திட்டால்
காலத்தால் அதுதிரண்டு இரத்தினமாய் ஆகுதல்போல்
கோவத்தின் தொடரினைநீர் தொடராமல் இருந்திட்டால்
ஞாலத்து மாந்தரில்நீர் இரத்தினமாய் மாறிடலாம்

05. உருக்குகின்ற வேதனையைத் தாங்குகின்ற தங்கம்தான்
கருப்பொருளாய் பின்னொருநாள் கழுத்திலேறக் கிடைப்பது போல்
வருத்துகின்ற வாழ்வுதனில் வளையாமல் நிற்போர்தான்
பெருத்ததொரு வாழ்வில்பின் தங்கமென ஜொலித்திடுவர்.

06. அடக்கமின்றி வெளியேறில் மாமிசமாய் வெளியேறும்
சிப்பிஅடக்கமாய் இருந்திட்டால் முத்துக்கள் ஈணல்போல்
அடக்கமிலா மாந்தரும் வெறும்மாமிசத்தைச் சுமந்துவர
அடக்கமாய் இருப்பவர்கள் பின்முத்தெனவே ஜொலித்திடுவர்.

07. பொறுமையின் பொக்கிசமாய் பூமிக்குள் இருந்தகல்லு
மாணிக்கம் வைரமென அகழ்தெடுக்கக் கிடைப்பதுபோல்
புவியின்மேல் பொறுமையினைக் காத்திருக்கும் மாந்தரும்
மனிதருள் மாணிக்கம் வைரமென ஜொலித்திடுவர்

08. கோள்சொல்லிக் குடிகெடுத்தல் வசைபாடி வாழ்வழித்தல்
உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசிடுதல்
போகவிட்டுப் புறங்கூறல் பொய்யான கதைகட்டல்
இவையெல்லாம் பின்னொருநாள் இயற்றுவோற்கே சமர்ப்பணமாம்

09. இறைகொடுத்த பிறர்வாழ்வை தாமழிக்க வழிதேடி
செய்வினைகள் செய்கின்றோம் என்றுதீங்கு செய்பவர்கள்
தம்வினையே தம்மைப்பின் சுடுமென்ற தத்துவத்தால்
வெவ்வினைகள் சூழ்ந்திடப்பின் வேரோடு தாமழிவர்

10. நிதானத்தை இழந்திடுதல் நேசத்தை மறந்திடுதல்
சந்தேகப் பிசாசுகள் போகும்வழி போய்வருதல்
கோவத்தை அடக்காமல் குறைகூறி வாழ்ந்திடுதல்
இவையெல்லாம் தன்தலைக்கே தான்கொட்டும் மண்போலாம்

## வழித்துணை - 59

01. அர்த்தமற்ற கற்பனைகள் அளவற்ற ஆசைகள்
பிறர்வாழ்வை எண்ணாமல் தான்மட்டும் வாழஎண்ணல்
மற்றவரை மதியாமை மனந்திறந்து பேசாமை
இவையெல்லாம் தனக்கேதான் வெட்டுகின்ற படுகுழியாம்.

02.மன்னிக்கும் மனமின்மை மாற்றாரை மதியாமை
தன்குறையை எண்ணாமல் பிறர்குறையைப் பெரிதாக்கல்
அன்புக்குள் அடங்குவதை வம்புக்கு இழுத்திடுதல்
இவையெல்லாம் பின்னோர்நாள் வளர்த்தமார்பில் பாய்ந்திடுமாம்

03. சிறியதோர் பகையைத்தீர்க்கப் பெருவழிகள் பலதும்தேடி
பகையதுவும் பெரிதாய்மாறி சிறுவழியும் தீர்க்கஇன்றி
கரியாக வாழ்வும் வளமும் போவதிலும் மிக்கநன்று
பெரிதினையும் சிறிதாய்எண்ணிப் புரிந்துணர்ந்து விட்டிடலாம்

04.பள்ளிப் படிப்பிழப்பும் பார்த்ததோர் தொழிலிழப்பும்
வாழ்க்கைத் துணையிழப்பும் வைத்திருந்த பொருளிழப்பும்
இழந்தோர்க்கு இழப்பென்று தெரியவரும் என்றென்றால்
தட்டுகின்ற படலையேதும் திறந்திடாத வேளையிலாம்

05. தான்கட்டும் வலையினுள்ளே சிலந்தியது சிக்காது
அது தீன்மட்டும் போதுமென்று தினமதிலே இருப்பதனால்
நாம்தீட்டும் திட்டமதில் நாம்சிக்கல் ஏனென்றால்
போதுமென்ற மனமெமக்கு இல்லாமல் இருப்பதனால்

06.நோயிருப்பின் மருந்துண்ணல் நோயதனைக் குணமாக்கும்
நோயின்றேல் மருந்துண்ணல் நோயினையே உருவாக்கும்
தவறுண்டேல் தண்டித்தல் தவறதனைச் சரியாக்கும்
தவறின்றேல் தண்டித்தல் தவறினையே உருவாக்கும்

07. தன்பெயரின் பொருளுணர்ந்து தானிங்கு நடந்திட்டால்
மானிடம் உயர்வதற்கு வேறெதுவும் தேவையில்லை
பெயர்மட்டும் பொருளோடும் செயல்யாவும் வேறாயும்
இருக்கின்ற வரையிலே மானிடற்கும் உய்வில்லை

08.உப்புக் கடல்தன்னுள் உயிர்வாழும் மீனனித்தில்
உப்பின் தன்மையேதும் ஊறித்தான் இருப்பதில்லை
தப்புக்கள் செய்வோரும் தாம்கூடும் கூட்டத்தால்
தப்புக்கள் செய்கின்றோம் என்றிடுதல் தவறாகும்.

09. பட்டஇடம் கொப்பளிக்கும் மாங்காயின் பாலேதான்
தொட்டுநாம் சுவைக்கப்பின் கனிரசமாய் மாறல்போல்
கெட்டபிள்ளை என்றிடாமல் கெட்டோற்கும் அறிவுரைத்தால்
பட்டம் பதவியொடு பாரிலவர் உயர்ந்திடுவர்

10. பூக்களிலே தேனெடுத்தல் போக்கத்த வேலையென்று
பொந்திலே தேனெடுத்துப் பாவத்தைச் சேர்த்தல்போல்
தானுழைத்து உண்பதெல்லாம்தேவையற்ற வேலையென்று
பிறர்உழைப்பைச் சுரண்டிஉண்ணல் மாபெரும் பாவமாகும்.

## வழித்துணை 60

01. செப்புப் பானையிலே செழும்பு பிடித்திடலும்
சப்புப் பலகையிலே சந்து அடித்திடலும்
ஒப்பிட்டுப் பார்க்கையிலே ஒன்றுமட்டும் புலனாகும்
எப்போதும் சும்மா நாம் இருந்தாலும் நோய்பிடிக்கும்.

02. கஞ்சிக்கு அரிசியில்லை என்றொருவன் துஞ்சியழ
வஞ்சிக்கு வாசமிட்டு இன்னொருவன் வாழ்ந்து கொண்டு
மஞ்சங்கள் கட்டினாலும் மணவறையுள் அழைத்தாலும்
கிஞ்சித்தும் இறைபெருமான் இஞ்சி கூட இறங்கிவரான்

03. இருதயம் துடிப்பதனை கைநாடி பிடித்தறிவீர்
கருவறையின் சிசுத்துடிப்பை கர்ப்பிணியின் வயிற்றறிவீர்
திருவருளின்கிருபையையும் திருத்தலத்துள் அறிந்திடாமல்
அருவாயோ உருவாயோ இறையுண்டோ என்றிடாதீர்.

04. வேண்டுமென்று நட்டமரம் வேளைக்கே பட்டுவிட
வேலிக்காய் நட்டமரம் விருட்சமாய் மாறிடல்போல்
வேண்டியது கிடைத்திடேல் நீர் வருத்தி உமை அழித்திடாதீர்
வேண்டாமென்று விட்டசில கைகொடுக்கும் காத்திருப்பீர்.

05. பிறர்க்கொன்று கிடைத்திட்டால் எமக்குமது வேண்டுமென்றும்
எமக்கொன்று இல்லையென்றால் பிறர்குமது இல்லையென்றும்
எண்ணுகின்ற எண்ணத்தை மாற்றிவிட்ட மறுநாள்தான்
எமக்கிங்கு எல்லாமே கிடைக்கின்ற நாள்வருமாம்.

06.மானிடர் வாழ்வதற்கே மற்றைய பிறப்பெல்லாம்
என்றெண்ணும் எண்ணமது மாறாத வரைக்கும்
கூவித்தான் அழைத்தாலும் கும்பிட்டு வேண்டினாலும்
மானிடற்காய் வராஇறைன் மற்றவைக்காய் இரங்கிடுவான்.

07. இறுதியாக நடந்தோர் சம்பவத்தின் அடிப்படையில்
அறுதியாக ஒருவரின் உறவை மாற்றிக் கொள்ளாதீர்
உறுதியோடு அவர்முன்னர் செய்தவற்றை நினைத்தேநீர்
பெறுமதியாய் அவருறவைப் பேணும் நீர் மனிதராவீர்.

08.கொடியின்றி சிலகொம்பு தானாக நிற்காது
கொம்பின்றிக் சில கொடிகள் பூப்பிச்சைத் தாங்காது
அதுபோலப் பெற்றோரும் பிள்ளைகளும் இணைந்தால்தான்
ஆத்தலைவு அற்றவாழ்வில் அனைவருமே திழைத்திடலாம்.

09. வயது கூடுவதாய் வாழ்க்கையிலே எண்ணி நீங்கள்
ஆயுள் குறைவதினை அலட்சியம் செய்யாதீர்
காலமுண்டு சில கருமம் செய்வதற்கு என்றிருந்தால்
ஆயுள் முடிந்துவிடும் வயது கூடி என்னபலன்.

10.தொட்டவுடன் சுருங்கிவிடும் தன்மை இருப்பதால்தான்
தொட்டால் சுருங்கிக்கும் பூமியிலே வாழ்க்கையுண்டு
கெட்டதென்று கண்டிட்டால் எட்டியோடும் செயலேதான்
தொட்டதெலாம் துலங்கவைக்கும் தூயவராய் வாழவைக்கும்.

## வழித்துணை 61

*01.* சூரியன் தோன்றுவதும் சுடரொளி பரவுதலும்
விடியலுக்கு அர்த்தமென்று எண்ணிவிடக் கூடாது
இறையுணர்வு தோன்றுதலும் இதயசுத்தி பரவலுமே
விடியலென்ற அர்த்தத்தின் அடிப்படை அம்சமாகும்.

*02.* மணியின் ஓசையும் கற்பூர தீபமும்
வாத்திய ஒலியும் தோத்திரப் பாடலும்
தோன்றாமல் இருக்கும் தோற்றுவிக்கத் தோன்றல்போல்
பக்தியின் உச்சியில் பரம்பொருளும் தோன்றிடுவார்.

*03.* விதையுண்டு எண்றெண்ணி விதைக்காமல் இருந்திட்டால்
செடி வளர்ந்து பூவாகிக் காயாகிக் கனிதராது
ஆத்மாவும் உண்டென்று வளர்க்காமல் இருந்திட்டால்
முனிவராய்த் தேவராய்ப்பின் இறையடைய முடியாது.

*04.* வீசிடும் காற்றிலே உருவங்கள் தெரியாது
விளைவினை வைத்து நாம் உருவத்தை உணர்தல் போல்
நேசிக்கும் கடவுளின் உருவமும் தெரியாது
பூசிக்கத் தருவதால் அவன் தோற்றத்தை உணரலாம்.

*05.* சிந்தித்துச் சொல்வதே சொல்லாகும்
அல்லாமல் சொல்லியபின் சிந்தித்தல் சிந்தலாகும்
சொல்லிப்பின் சிந்தித்துச் சோகத்தை வளர்ப்பதிலும்
சிந்தித்துக் சொல்வோரே சொல்லின் செல்வராவார்.

06.குத்தினால் கடுகடுக்கும் தேனீயைக் கடந்தால்தான்
தித்திக்கத் தேன் கிடைக்கும் வாழ்விலும் அப்படித்தான்
முத்திவரும் துன்பத்தை முடிவுவரை கடந்தால் தான்
அத்தனைக்கும் பின்னாலோர் முத்தான வாழ்விருக்கும்.

07. நேருக்கு நேரெதையும் பேசுகின்ற பெரியார் தான்
சீருக்குள் வாழ்கின்ற செம்மலெனப் பேர்பெறுவர்
ஊருக்கே உபதேசம் உனக்கல்ல என்று வாழ்வோர்
யாருக்கும் உதவாமல் பின்பாருக்கும் பாரமாவார்.

08.ஆதியும் அந்தமும் இல்லாமல் இருந்தாலும்
அடியொடு முடியதுவும் தோன்றாமல் இருந்தாலும்
அடங்கித் தலை வணங்கும் அடியாரைக் கண்டிட்டால்
ஒடுக்கித் தன் உருவத்தை உறவைப்போல் இறைகாட்டும்.

09. பெற்றோரின் வளர்ப்பதுவும் பிள்ளைக்கோர் பாடமாகும்
படித்திட்ட பாடமதே இறுதிவரை கூடவரும்
கண்ணியமாய் வளர்ந்திட்டால் கண்ணியம் தான் காத்திடுவர்
அன்னியர்போல் வளர்ந்திட்டால் புண்ணியமோ பூத்திடுவர்.

10.பெருமை பேசிடலும் பிழையென்று ஆகாது
அது அருமையோடு பிறரையும் வழிநடந்த உதவுமெனில்
ஒரு நோக்கும் அதிலின்றி தற்பெருமை மட்டுமெனில்
குருவிகூடச் சிறந்ததுவாம் அது குலத்திற்காய் கூவுதலால்.

## வழித்துணை - 62

01. பணம் படைத்தோம் என்று மட்டும் பேர்சுமந்து பலனில்லை
பிறர்வாழ்வும் நகரஅது வழித்துணையாய் இருக்கவேண்டும்
பிறர்வாழ்வுக் குதவாத பணம்பிணத்து அணிகளாக
பிறர்க்குதவும் மனமதுவே தனம்பொருளாய் மாறிவிடும்.

02. பேரறிஞர் என்றுமட்டும் பேர்சுமந்து பலனில்லை
ஊரவரும் அறிவுபெற அது வழித்துணையாய் இருக்கவேண்டும்
ஊருலகிற் குதவாத பேரறிவுப் பெருந்தகைகள்
வீதிவரும் தேரெனினும் சாமி யில்லாத் தேரேயாம்.

03. பக்தியாளன் என்றுமட்டும் பேர்சுமந்து பலனில்லை
மற்றையோரும் பக்தியுற அதுவழித்துணையாய் இருக்க வேண்டும்
மற்றையோர்கள் விரக்தியுற வழியமைத்துக் கொடுத்திட்டு
பக்தியென்றால் தொடர்ந்திறைவன் புத்தியினைத் தருவானோ.

04. அழகியலார் என்றுமட்டும் பேர்சுமந்து பலனில்லை
அகத்தழகு பெருகஅது வழித்துணையாய் இருக்க வேண்டும்
அகத்தழகிற் குதவாத முகத்தழகு மோகனங்கள்
பூசைக்கு உதவாத புஸ்பங்கள் போன்றதுவாம்.

05. வீரவான்கள் என்றுமட்டும் பேர்சுமந்து பலனில்லை
ஈரவிளி காயஅது வழித்துணையாய் இருக்கவேண்டும்
ஈரவிளி காய்வதற் குதவாத வீரங்கள்
வீரமென்று பேர்பெறினும் அசுரமென்றே முடிறுவுமாம்.

6. தனம்படைத்தோம் என்று மட்டும் பேர்சுமந்து பலனில்லை
இனம்சனம் உயர அது வழித்துணையாய் இருக்க வேண்டும்
இனஞ்சனத்திற் குதவாத தனம்பொருட் தகுதியெலாம்
கனமழையாய் இருந்தாலும் கடல்மழையைப் போன்றதுவாம்.

07. குணமுடையார் என்றுமட்டும் பேர்சுமந்து பலனில்லை
கூடவுள்ளோர் மகிழ்ந்திருக்க அது வழித்துணையாய் இருக்க வேண்டும்
கூடவுள்ளோர் மகிழ்விற்கு உதவிடாத குணத்துடமை
குடம் நிறைந்த பாலெனிலும் திரைந்து போன பாலேயாம்.

08. குலத்துயர்ந்தோம் என்றுமட்டும் பேர்சுமந்து பலனில்லை
நிலத்துயர்ந்தோர் ஆவதற்கு அதுவழித்துணையாய் இருக்கவேண்டும்
நிலத்துயர்ந்தோர் ஆவதற்கு வழிவகுக்கா குலத்துயர்வு
பேருக்குப் பெரிதெனினும் பாருக்குப் பாரமதாம்.

09. மானிடர் நாம் என்று மட்டும் பேர் சுமந்து பலனில்லை
வானவரும் வாழ்த்தவாழ அது வழித்துணையாய் இருக்க வேண்டும்
வானிடையோர் வாழத்தவாழ வழிவகுக்கா மானிடங்கள்
மேனியிலே மானிடம்தான் மேன்மைகளில் விலங்கேயாம்.

10. பதவியாளர் என்று மட்டும் பேர் சுமந்து பயனில்லை
பிறர்க்குதவி செய்ய அது வழித்துணையாய் இருக்க வேண்டும்
பிறர்க்குதவி செய்திடாத பெரும் பதவிப் பொக்கிசங்கள்
கலங்கரைதான் இருந்தாலும் விளக்கில்லாக் கலங்கரையாம்.

## வழித்துணை - 63

01. ஓரிருநாள் ஒவ்வாமை ஒருபோதும் நோய்தராது
ஒவ்வாமை மேலோங்க தீராத நோய்பிடிக்கும்
தீராத நோய்தீர்க்கத் தேசமெலாம் அலைவதிலும்
ஒவ்வாமை தனை நாங்கள் ஒதுக்கிட லே நன்றாகும்.

02.நன்மைதனைப் பெற்றோரின் நாவிலே இருந்துநீர்
நன்றிவரும் என்றெண்ணி நாளெல்லாம் காத்திராதீர்
தன்படைப்பு ஒன்றிற்கு நீர் செய்த உதவிக்காய்
என்றென்றும் இறையுமைக்கு நன்றிசொல்வான் நன்மை செய்வீர்.

03. ஏணியென உங்களையே பாவித்து உயர்ந்தவர்கள்
கேணியிலே தள்ளுமாப்போல் கதைசொல்வார் கலங்காதீர்
ஆணிவேரை அறுத்துவிட்டே உச்சியேறும் மானிடர்கள்
நாணிப்பின் உமைப்பணியும் நாளும்வரும் காத்திருப்பீர்.

04.துக்கத்தில் துவழ்கின்ற காலத்தில் உங்களுக்கு
பக்கத் துணையிருந்தோர் தகுதியினைக் குடையாதீர்
எக்காலம் சென்றாலும் எப்படித்தான் வாழ்ந்தாலும்
முக்காலத் தெய்வமவர் முறைகாத்து உயர்ந்திடுவீர்.

05. திக்குத் திசைதெரியா திருந்ததொரு நேரத்தில்
தக்கதிசை காட்டியோரைத் தரணியிலே மறவாதீர்
வக்கற்றோர் வகையற்றோர் என்றவரை ஒதுக்கிவிட்டால்
துக்கத்தால் அவர்போடும் சாபத்தால் நீர் துவழ்வீர்.

*06.*அடுப்புக்குள் நெருப்பதுவும் எடுத்தவுடன் எரியாது
அடுத்தடுத்து ஊதிடத்தான் மிடுக்கோடு எரிதல்போல்
எடுத்தவுடன் வெற்றிகளும் எழிதினிலே கிட்டாது
தொடுத்துப்பல தோல்விவரும் தொடர்ந்தாலே வெற்றிவரும்

*07.*நிறைவேற்ற முடியாத கோரிக்கை ஒன்றதனை
இறையோடு பிறரிடமும் கேட்டவரைப் பகைக்காதீர்
குறைகூறும் உம்செயலால் நிறைகுடங்கள்தளம்பிப்பின்
நிறைவேற்ற முடிந்தவையும் முடியாமல் போய்விடலாம்.

*08.*எல்லோற்கும் இறைவனால் உணர்த்தப்படும் கல்வியுண்டு
இடையில் நாம் கற்பதெல்லாம் மேலதிகம் மட்டுமே
மேலதிகம் தனைப்பற்றி இறைகல்வி தனைவிடுப்போர்
இறைகல்வி மட்டுமுளோர் தன்னிலும் தாழ்ந்தவரே!

*09.*வாழ்வோற்கு வாழ்வதுவே வாழ்க்கையது ஆனாலும்
மாண்டபின்பும் வாழ்க்கையுண்டு என்பதையும் மறவாதீர்
தனக்கென்று வாழ்வதெல்லாம் தன்வாழ்வு சிறப்பதற்காம்
பிறர்க்கென்று வாழ்வதுவே மாண்ட பின்பும் வாழ்வதற்காம்.

*10.*நோய் உடலின் வந்துவிட்டால் இனங்கண்டு அதையறிந்து
வாய்த்ததோர் மருந்துண்டு மாற்றியதை வாழ்தல்போல்
பகையொன்றும் வந்துவிட்டால் காரணத்தைக் கண்டறிந்து
வகைசெய்வீர் பகைதீர அதிகலாபம் நட்பிலுண்டாம்.

## வழித்துணை - 64

01. கண்ணுக்குள் என்றுமே நீர்நிறைந்து நிற்பதில்லை
எண்ணத்தில் சோகமெழ அது எழுந்தோடி வருதல்போல்
முன்னுக்கே இறையோனும் முழுநாளும் நிற்பதில்லை
உன்னுக்குள் பக்தியெழ ஊற்றெடுத்து அவன் வருவான்.

02. வேண்டியவர் பின்னொரு நாள் வேண்டாமல் போவதும்
வேண்டாதார் பின்னொருநாள் வேண்டியோராய் மாறுதலும்
இயற்கைதான் எண்ணெண்ணி இழிநிலைக்குச்சென்றிடாமல்
எல்லோரும் எப்போதும் வேண்டுமென்றே நடந்துயர்வீர்.

03. தன்னுறவு பிறருறவு என்றிங்கு தரம் பிரித்து
மண்ணுறவு வைத்திருக்கும் மாந்தரினை விட்டு விட்டு
பிறருறவை தன்னுறவாய் எண்ணுவோர் தம் பேருறவை
இறையுறவாய் எண்ணிநாம் ஏற்றிடுதல் நன்றாம்.

04. பிறருக்காய் வாழ்வதையும் பிறர்மகிழ நடப்பதையும்
பைத்தியம் என்றெண்ணிப் பரிகாசம் செய்பவர்கள்
தன்னலத்தால் இங்கொருவர் தலைவிரித் தாடிடத்தான்
பிறர் நலத்தைப் பேணுவோரைத் தியாகிகள் தான் என்றுரைப்பர்.

05. கன்றுக்கு பால் கொடுக்கும் கடமையினைப் பசுமடு
என்றுமே தியாகமென்று எண்ணுவது கிடையாது
கன்றுக்காய் இருந்தபாலை எமக்களித்தல் தியாகம் போல்
எமக்காக இருந்தஒன்றை நாம் பிறர்களித்தல் தியாகமாம்.

06. வாழைமரப் பொத்தியது வாழையிலே வரும்போதே
வாழைக் குலைதேடி அதைப்பிரித்துப் பார்க்கலாமோ
ஏழ்மையும் அப்படித்தான் எளனங்கள் செய்திடாதீர்
நாளை அவர் வாழ்வும் வாழைபோல மாறிடலாம்.

07. உலையின் மேல் நீரதுவும் ஓரளவுதான் கொதிக்கும்
அளவுக்கு மிஞ்சிவிட்டால் அதுபொங்கி வழிதல்போல்
இன்பமோ துன்பமோ அளவோடு அனுபவிப்பீர்
அளவுக்கு மிஞ்சிவிட்டால் ஆவிகூட அடங்கிடலாம்.

08. உலைக்களத்தே தணலொடு இருப்பதுவும் தணலாகும்
இருந்தாலும் இரும்பு ஈற்றில் இரும்பாயே இருத்தல் போல்
கோவத்தால் கொடியவர் போல் தோற்றத்தில் தோற்றினாலும்
மறுகணமே சாந்தமுற மாறுவோரே மானிடராம்.

09. சந்தையிலே வந்துபல வாடைகள் வீசினாலும்
வந்ததேவை அதுவதனால் சகிப்போடு நடத்தல்போல்
எந்தநிலை வந்தபோதும் சகிப்பினையே கடைப்பிடிப்பீர்
மற்றவரின் தேவைகளும் உம்தேவை போன்றதுவாம்.

10. போதையை ஊட்டும் பாணம் பானையில் மாற்றம்செய்தால்
மோதகப் பருப்பினோடு வெல்லமாய் வீழ்வதுண்டு
பாணத்தை உண்போர் மட்டும் போதனை செய்த போதும்
பாதையை மாற்றிடாமல் பள்ளத்தில் வீழலாமோ.

## வழித்துணை - 65

01. கடமைஒன்றும்மைத் தடுக்கின்ற வேளையிலே
கடவுளைத்தான் வணங்காமல் விட்டாலும் வருந்தாதீர்
கடமையே கடவுளின் கட்டளை எனஉணர்ந்து
கட்டளையை நிறைவேற்றும் கடவுளுங்கள் அருகிருப்பார்.

02.போனவழி தவறாகிப் போனதென்று எண்ணிநீர்
ஆனவழி அனைத்தையுமே அவசரத்தால் மூடாதீர்
மாற்றுவழி எதற்குமே மானிலத்தில் உண்டென்று
நாலுநாள் பொறுத்திருப்பீர் நல்லவழி திறந்திடுமாம்.

03. கம்பியிலே மின்சாரம் கண்களுக்குத் தெரிவதில்லை
நம்பியதைக் கையாண்டால் நல்லஒளி தருதல் போல்
எம்பெருமான் திருமேனி எமக்கும்தான் தெரிவதில்லை
நம்பியே தொழுதேத்த ஞானஒளி அவர் அருள்வார்.

04.என்வழி உன்வழி என்றுவழி தரம்பிரித்து
வெவ்வேறு வழிகளில் சென்றுநாம் வாழ்வதிலும்
மானிடம் வாழ்வதற்கு ஓரே வழிதான் என்றுணர்ந்து
அன்புவழி சென்றிடுவீர் அகிலத்தை வென்றிடலாம்.

05. உமக்கான ஒன்றைநீர் உமக்கென்று எடுக்கையிலே
பிறர்க்கான ஒன்றினையும் பிறரிடமே கொடுத்திடுவீர்
பிறர்க்கான ஒன்றினையும் நீர் பிறரிடமே கொடுக்காமல்
உமக்கான ஒன்றையும் நீர் உமக்கெடுத்தல் கெடுதலாகும்.

06.புகழ்தனைச் சுமப்பதற்கு புவிதனிலே சித்தமுள்ளோர்
பிறர்புகழைப் புகழுகின்ற பண்பினையும் பேண வேண்டும்
எல்லாப் புகழும் எந்தனுக்கே என்றிருப்பின்
புகழென்று நினைப்பதுவே பின் இகழ்வாக மாறிவிடும்.

07. சூடென்று கண்டிட்டால் குளிராக்க வழிசமைப்போம்
குளிரென்று கண்டிட்டால் சூடாக்க வழிசமைப்போம்
கோபமொன்று வந்திட்டால் அதைத்தணிக்கும் வழிவிடுத்து
கொடுக்கோபம் கொள்வதனால் லாபமுற்றோர் யாருளரோ.

08.குளம் வற்றிப்போனதென்று கொக்குகள் இருந்திடாமல்
தளம்விட்டுத் தளந்தாவிக் காலத்தை வெல்லுதல் போல்
அழுந்தது இதுவேதான் என்றுமனம் தளர்ந்திடாமல்
உளம்கொண்டு உழைத்திடுவீர் உலகில்நீர் உயர்ந்திடுவீர்.

09. இருள் சூழ்ந்து விட்டதென்று வௌவால்கள் உறங்கிடாமல்
இருளுக்குள் வழிசமைத்தே இரை தேடி வாழ்தல்போல்
துயர்சூழ்ந்து விட்டதென்று துவண்டுநீர் வீழ்ந்திடாமல்
துயர்விடுத்துத் துடித்தெழுவீர் உயர்வுதனை எட்டிடுவீர்.

10.எழுந்தபோது விழுந்ததனால் எழுந்திடவே முடியாதென்று
தவழ்ந்த போது நினைத்திருந்தால் நடப்பதற்கு யாருமிரார்
விழுந்தபோதெல்லாம் எழுந்தெழுந்து முயற்சிப்பீர்
நடக்கின்ற போதுநீர் விழாதிருக்க வழியறிவீர்.

## வழித்துணை - 66

01. கட்டியாகப் போனது கடல் நீரும் என்றிராமல்
கரைக்கின்ற போதிலது கறியுப்பாய் மாறுதல்போல்
கல்நெஞ்சாய்ப் போனது மனிதமனம் என்றிராமல்
கருத்தினையே தொட்டிடுவீர் இழகியது கருணைசெய்யும்.

02. விளையாத நிலமென்று நிலமொன்றை ஒதிக்கிடாமல்
விளைகின்ற விதைவிதைத்தால் நிலமதிப்பு உயருதல் போல்
பிழைக்காத பிள்ளையென்று பிள்ளையொன்றை ஒதுக்கிடாமல்
பிழைக்கின்ற பிழைப்பளிப்பீர் பிள்ளைவாழ்வும் உயர்ந்துவிடும்.

03. கௌரவம் உடையோராய் வாழ்வதற்கு விருப்புடையோர்
பிறர்மனங்கள் நோகாமல் நடக்கவேண்டும் ஏனென்றால்
கௌரவம் என்பது எம்மிடையே இருப்பதன்று
எம்மைப் பற்றியது பிறர்மனதில் இருப்பதுவாம்.

04. பெருந்தன்மை உடையோராய் வாழ்வதற்கு விருப்புடையோர்
அருந்தன்மை பலதிலுமே சிறக்கவேண்டும் ஏனென்றால்
பெருந்தன்மை என்பது எமக்குள்நாம் எண்ணலன்று
எம்மைப்பற்றிப் பிறர் எண்ணுவதில் இருப்பதுவாம்.

05. மரியாதைக் குரியோராய் வாழ்வதற்கு விருப்புடையோர்
அடுத்தவதற்கும் மரியாதை கொடுக்க வேண்டும் ஏனென்றால்
மரியாதை என்பது ஒருவழிப் பாதையன்று
நாம்போகும் வழிபார்த்து பிறர்வரும் வழியதுவாம்.

06.புகழோடு புவிதனிலே வாழ்வதற்கு விருப்புடையோர்
இகழ்வில்லா நற்பணிகள் ஆற்றவேண்டும் ஏனென்றால்
புகழென்று கருதுவது நம்முடைய எதுவுமன்று
நாம் செய்யும் பணிகண்டு பிறரெமக்குத் தருவதுவாம்.

07. அந்தஸ்து உடையோராய் வாழ்வதற்கு விருப்புடையோர்
எல்லோர்க்கும் என்னாளும் உதவவேண்டும் ஏனென்றால்
அந்தஸ்து என்பது எம்பதவி பட்டமன்று
எம்மைப் பிறர் கணிக்கும் கணிப்பீட்டில் இருப்பதுவாம்.

08.பட்டிடத்தான் போகுது மரரென்று கண்டிட்டால்
கிட்ட வந்து நீரூற்றித் துளிர்த்திடத்தான் மகிழ்கின்றோம்
கெட்டிடத்தான் போகுது மனிதகுலம் என்றிட்டால்
தட்டியதைத் தடுக்காமல் கெட்டிடத்தான் விடலாமோ.

09. ஊனுடலில் புண்பட்டால் வேதனையைத் தாங்காமல்
ஊசியூடு மருந்தேற்றி தணித்து அதை மகிழ்கின்றோம்
மானிடத்து மனங்களிங்கு புண்படுத்தல் கண்டிட்டால்
ஆற்றவழி ஆற்றாமல் அழிந்திடத்தான் விடலாமோ.

10.பசியென்று வந்திட்டால் பத்தும் பறந்ததென்று
புசித்திடவே வழி தேடி ருசித்து அதை மகிழ்கின்றோம்
வசிப்போர்க்கும் வாழ்வினிலே வாழ்வுப்பசி வந்திட்டால்
பொசிப்போடு உதவிடாமல் நசிந்திறக்க விடலாமோ.

## வழித்துணை - 67

01. அறுகம் புல்லென்றோர் அற்புத மாமருந்து
இறுக இவ் வுலகினைப் பற்றுதல் விட்டகன்று
உறுதியாய் என்றுஅது இல்லையென்று ஆகிறதோ
அன்றோ இவ்வுலகினை அழிவும் கௌவுமாம்.

02.கடவுள் நம்பிக்கையும் ஆத்மீக பலமும்தான்
கலியுகத்தை வெல்கின்ற மார்க்காமென இருந்தாலும்
என்றுநாம் கலியுகத்தை முழுமையாக ஏற்கிறோமோ
அன்றே இவ்வுலகினை அழிவும் கௌவுமாம்.

03. ஐந்திதழ் அல்லாத பூக்களை எடுத்துநாம் பூசைக்கு
உகந்ததென்று என்று பூசை செய்கின்றோமோ
அன்றே ஆகமங்கள் பிழைத்ததென்று அர்த்தமாகி
நின்றுஅது நீளுலகை நெடிதெனவே கொல்லுமாம்.

04.மனச்சாட்சிக் கொவ்வாத மாபெரும் தவற்றினை
நியாயங்கள் கற்பித்து என்றுநாம் செய்கிறோமோ
அன்றே இவ்வுலகினை மானிடம் அழிக்குமென்ற
தத்துவம் பலித்திடத் தரணியே மறையுமாம்.

05. உறிஞ்சிநீர் குடிப்பவை தாவர போசணிகள்
நக்கிநீர் குடிப்பவை மாமிச போசணிகள்
என்றிருந்தும் உறிஞ்சும்நாம் மாமிசத்தை நாடிடுதல்
படைத்தவன் வகுத்ததைக் கிடைத்தவன் அழிப்பதாம்.

06.இறைவன் படைத்ததை மனிதன் படைப்பவை
சில்வேளை விஞ்சலாம் விஞ்சலின் உச்சமாய்
இறைவன் படைத்ததை இறைவனே நிறுத்தினால்
மொத்தத்தில் உலகமே அழிவதில்முடியாதோ.

07. உண்ணும் உணவிலே நஞ்சுண்டு என அறிந்தும்
லாபமுலாம் பூசி உண்போற்கு அதைக் கொடுத்தால்
மூடாத விழியுடையான் மூன்றாம்கண் திறந்திடவே
நாடாத உலகழிவு நாடியும்மால் நடந்திடாதோ.

08.நவீனம் என்பதால் இறைவனும் நவீனமாய்
உடலையோ உறுப்பையோ படைத்ததைக் கண்டீரோ
காரணம் கொண்டிறை படைத்திட்ட உறுப்பொன்றுள்
காரியம் நவீனமாய் புகுத்தினால் அழிக்காதோ.

09. அன்பிற்காய் எமையெல்லாம் ஈன்றெடுத்த பூமியினை
நீருக்காய் குடைதலிலே நியாமுண்டு என்றிருக்க
பொன்னுக்காய் பொருளுக்காய் எண்ணைக்காய் குடைந்தும்பின்
போருக்குமாய்க் குடைந்தால் தன்னையவள்அழிக்காளோ.

10.நாட்டுக்குநாடு மடிநெருப்பென்றே ஆயுதத்தை
ஏட்டிக்குப் போட்டியாக நிறைந்துமே வைத்திருந்து
வேட்டுக்கு நேரமும் காலமும் பார்த்திருந்தால்
படைத்தாரோ இவரென்று இறை உலகை அழிக்காதோ.

## வழித்துணை - 68

01. சாய்ந்ததோர் கோபுரத்தைச் சாயாமல் நிமிர்த்தி விட்டு
வாய்த்தது புகழென்று வரலாற்றில் மகிழ்கின்றோம்
வாழ்ந்தமனம் பலவிங்கு சாய்வதனைக் கண்டுநாம்
ஆய்ந்ததனை நிமிர்த்தாமல் சாய்ந்திடத்தான் விடலாமோ.

02. காயாத மரமென்று கண்டதுமே நாடிவந்து
ஓயாமல் பசளையிட்டு கனிபறித்து மகிழ்கின்றோம்
வாயாது உழைப்பிங்கு வாடுவோரைக் கண்டும்நாம்
மேயாத மாடென்று மெலிந்திடத்தான் விடலாமோ.

03. வேலிக்குள் பாசம் நிற்கும் வெளியாலே வேசம் செல்லும்
வெளிச்செல்லும் வேசத்தாலே நாசங்கள் உருவாகும்
வேலிக்குள் வேசம் வைத்து வெளியாலே பாசம் வைத்தால்
தேசம் நம்வாசமென்ற நேசங்கள் உருவாகும்.

04. வேலிக்குள் செயலிருக்கும் வெளியாலே எண்ணம்செல்லும்
வெளிச்செல்லும் எண்ணத்தால்தான் வேற்றுமைகள் உருவாகும்
வேலிக்குள் எண்ணம் வைத்து வெளியாலே பாசம் வைத்தால்
நாடேநம் வீடுஎன்ற நல்லெண்ணம் உருவாகும்.

05. வேலிக்குள் அன்பிருக்கும் வெளியாலே ஆசை செல்லும்
வெளிச்செல்லும் ஆசையால்தான் மோசங்கள் உருவாகும்
வேலிக்குள் ஆசைவைத்து வெளியாலே அன்பை வைத்தால்
அகிலம் நம் உலகமென்ற அர்த்தங்கள் உருகுவாகும்.

06.வேலிக்குள் பொறுப்பிருக்கும் வெளியாலே வெறுப்பிருக்கும்
வெளிச்செல்லும் வெறுப்பினால் தான் பேதங்கள் உருவாகும்
வேலிக்குள் வெறுப்பை வைத்து வெளியாலே பொறுப்பை வைத்தால்
வையம்நம் தெய்வமென்ற எண்ணங்கள் உருவாகும்.

07. வேலிக்குள் கடமைநிற்கும் வெளியாலே மடமைசெல்லும்
வெளிச்செல்லும் மடமையால்தான் குரோதங்கள் உருவாகும்
வேலிக்குள் மடமைவைத்து வெளியாலே கடமை வைத்தால்
உலகம் நம் இதயமென்ற உள்ளுணர்வு உருவாகும்.

08.பாத்திரங்கள் உடையாமல் பாதுகாத்தால் மட்டும்
காத்திரம் உடையதோர் சமுதாயம் தோன்றாது
ஆத்திரம் கொண்டொருவர் மனமுடைக்கா திருந்தால்தான்
ஏற்றிநாம் போற்றிடவோர் சமுதாயம் உருவாகும்.

09. பொருள் பண்டம் சிதறாமல் பாதுகாத்தால் மட்டும்
அருளாட்சி உடையதோர் சமுதாயம் தோன்றாது
மருண்டோடும் மனங்களை நாம் சிதறடிக்கா திருந்தால்தான்
உருண்டோடும் உலகிலுயர் சமுதாயம் உருவாகும்.

10.உறவுகளைப் பிரிக்காமல் இருந்திட்டால் மட்டும்
சிறந்ததோர் சமுதாயம் சீருலகில் தோன்றாது
மறந்தேனும் பிறர் மனதைப் பிரிக்காமல் இருந்தால்தான்
அறவழியில் செல்லுமோர் சமுதாயம் உருவாகும்.

## வழித்துணை - 69

01. தன்மனதை நோகாமல் பாதுகாத்தால் மட்டும்
பின்னாலோர் எண்ணரிய சமுதாயம் தோன்றாது
மண்ணுலகோர் மனங்களைநாம் நோகாமல் காத்தால்தான்
பொன்னுலகம் போற்றிடுமோர் சமுதாயம் உருவாகும்.

02. நம்முள்ளம் வலிக்காமல் இருந்திட்டால் மட்டும்
இம்மையிலோர் இனிமையுறு சமுதாயம் தோன்றாது
எம்மைப்போல் பிறருள்ளம் வலியின்றி இருந்தால் தான்
செம்மையுறு சமுதாயம் செகமிதனில் உருவாகும்.

03. கறிவேம்பைப் போட்டுத்தான் கறிவேண்டும் என்றில்லை
பரிமாறும் போதிலே பரிவிருந்தால் போதுமாகும்
பரிவில்லாப் பரிமாறல் மணமேதும் கொடுப்பதில்லை
மணமில்லாக் கறிகூட பரிவிருப்பின் மணங்கமழும்.

04. சீனிபோட்ட பாணம்தான் இனிமைதரும் என்றில்லை
அன்புடைய நெஞ்சங்கள் அதைவிடவும் இனிமைதரும்
அன்பின்றி இனிப்பதெல்லாம் பின்னொருநாள் கசப்பாகும்
கசத்தாலும் கசப்பதெல்லாம் அன்பிருப்பின் இனிப்பாகும்.

05. பொன்னாடை பொற்கிளிதான் பெருமை தரும் என்றில்லை
பண்புடையோர் பாதணிகள் சுமப்பதுமோர் பெருமையேதான்
பண்புடையோர் பாதணியைச் சுமப்பதற்கு தயங்கிடுவோர்.
பொன்னாடை பொற்கிளிகள் சுமப்பதுமோர் சுமையேதான்.

06.உடமைபல உள்ளோர்தான் உயர்ந்தவர்கள் என்றில்லை
கடமைதனைச் செய்வோரும் காலத்தால் உயர்ந்தவர்தான்
கடமைதனைத் தவறவிட்டு உடமைதனைக் கொண்டிருப்போர்
உடமைகளில் உயர்ந்திடலாம் உள்ளத்தால் தாழ்ந்தவரே!

07. பட்டங்கள் பதவிகள்தான் கௌரவம் என்றில்லை
பாடுபட்டு உழைப்பதுவும் உயர்ந்ததோர் கௌரவம்தான்
பாடுபட்டு உழைக்காத பட்டமும் பதவிகளும்
பட்டமரக் கொப்புநட்டுப் பழம்கீறி விடல்போலாம்.

08.உண்ணுகின்ற உணவிலேதான் இறைமார்க்கம் என்றில்லை
எண்ணுகின்ற எண்ணத்திலும் இறைமார்க்கம் அதிகமுண்டு
உணவதில் புனிதத்தை உரியபடி பேணுதல்போல்
எண்ணத்தில் புனிதத்தைப் பேணுடுவீர் இறையடைவீர்.

09. புறச்சுத்தம் தன்னிலேதான் இறைமார்க்கம் என்றில்லை
அகச்சுத்தம் தன்னிலேதான் இறைமார்க்கம் அதிகமுண்டு
புறச்சுத்தம் பேணுவதற்கு புனல்கொண்டு கழுவுதல்போல்
அகச்சுத்தம் பேணுவதற்கு அகம்பாவம் போக்கிடுவீர்.

10.அணிகின்ற அணிகளில்தான் இறைமார்க்கம் என்றில்லை
பணிகின்ற பணிவிலேதான் இறைமார்க்கம் அதிகமுண்டு
அணிகலத்துப் பலாபலன்கள் வணிகமாயும் முடிந்திடலாம்
பணிவினையே அணியாக்கும் பலாபலனாய் இறையடைவீர்.

## வழித்துணை - 70

01. உம்மைநீர் வருத்துதல்தான் இறைமார்க்கம் என்றில்லை
பிறர்வருத்தம் நீக்குதலில் இறைமார்க்கம் அதிகமுண்டு
நீர்வருந்த மகிழ்வதற்கு இறை கொடிது இல்லையதால்
பிறர்வருந்தா வழி வழிநடப்பீர் இறுதியிலே இறையடைவீர்.

02. கேட்பதும் பார்ப்பதும்தான் இறைமார்க்கம் என்றில்லை
சொல்லிலும் செயலிலும்தான் இறைமார்க்கம் அதிகமுண்டு
கேட்பதுவும் பார்ப்பதுவும் இறையுணர உதவுதல்போல்
நல்லனவே செய்து சொல்வீர் நாளடைவில் இறையடைவீர்.

03. நண்பருக்கு உதவுவது நியாயம்தான் ஆனாலும்
எதிரிக்கு உதவுவதே மேலாகும் ஏனென்றால்
நண்பருக்கு உதவுவது நட்பினையே மேம்படுத்தும்
எதிரிக்கு உதவுவது எதிரியையும் நண்பராக்கும்.

04. தன்னவற்கு உதவுவது நியாயம்தான் ஆனாலும்
பிறருக்கு உதவுவதே மேலாகும் ஏனென்றால்
தன்னவற்கு உதவுவது தம்முறவை மேம்படுத்தும்
பிறருக்கு உதவுவதே பிறருறவைத் தனதாக்கும்.

05. அறிஞர்க்கு உதவுவது நியாயம் தான் ஆனாலும்
அறிவிலாற்கு உதவுவதே மேலாகும் ஏனென்றால்
அறிஞர்க்கு உதவுவது பேரறிவை உருவாக்கும்
அறிவிலாற்கு உதவுவது அறிஞர்களை உருவாக்கும்.

06.சொந்தத்திற் குதவுவது நியாயம் தான் ஆனாலும்
நொந்தாற்கு உதவுவதே மேலாகும் ஏனென்றால்
சொந்தத்திற் குதவுவது பந்தத்தைப் பலப்படுத்தும்
நொந்தாற்கு உதவுவது சொந்தத்தை உருவாக்கும்.

07. எல்லோற்கும் உதவுவது நியாயம்தான் ஆனாலும்
இல்லாற்கு உதவுவதே மேலாகும் ஏனென்றால்
எல்லோற்கும் உதவுவது உதவியென்றே முடிந்துவிடும்
இல்லாற்கு உதவுவது உதவுவோரை உருவாக்கும்.

08.கொடியவர் என்றொருவர் குணத்திற்குக் குறிசுடுமுன்
அடியவர் அப்படியேன் மாறினார் என்றறிவீர்
முடிவிலோர் காரணம் நாமாயும் இருந்திடலாம்
படியிறங்கிப் பார்த்திடுவீர் கொடியவரும் அடிபணிவார்.

09.கடிதான வார்த்தைகளைக் காலத்தால் உதிர்க்கு முன்னர்
மடியிலதைச் சுமப்போரின் மனநிலையை அறிந்திடுவீர்
முடிவிலது எமக்கேதான் இடியாயும் வீழ்ந்திடலாம்
துடிதுடிப்பால் இழந்தவற்றை நிதானத்தால் பெற்றிடலாம்.

10.பிடிவாதம் காட்டியே பிரச்சினையை வளர்க்கு முன்னர்
அடிதடியால் ஆவது ஏதென்று கண்டறிவீர்
முடிவிலது எமக்கேதான் முடிவாயும் முடிந்திடலாம்
படித்திடத் தவறியதை படிப்பினையில் பெற்றிடலாம்.

## வழித்துணை - 71

*01.* குடித்துக் கூத்தாடிக் குதூகலம் அடையுமுன்னர்
வடித்தகஞ்சி குடிப்பதற்கே வகையிலாரை எண்ணிடுவீர்
முடிவதனில் குடிநம்மைக் குடித்துமே மகிழ்ந்திடலாம்
விடிவினை இருளாய் மாற்றும் குடிநீத்தால் குடிகள் வாழும்.

*02.* காயோடு கனபறித்துக் களித்துண்டு மகிழவேண்டில்
பூவோடு பிஞ்சிருக்கும் மரந்தறித்தல் ஆகாது
தாயோடு தந்தையும் பிள்ளைகளும் மகிழ்ந்திருப்பின்
வாயோடு வருங்கோபம் வார்த்தையாகல் ஆகாது.

*03.* பொறுமையின் பெறுமதி பொறுத்தான் தெரியவரும்
கோபத்தின் பெறுமதியோ கூடவே தெரிந்துவிடும்
கூடவே தெரியவரும் கூடாத வழிவிடுத்து
பொறுமையினைக் காத்திடுவீர் பொறுத்துப்பலன் தெரியவரும்.

*04.* நம்வீட்டு மாங்கிளைகள் அயல்வீட்டில் காய்காய்த்தால்
மாவினையே தறித்தெறியும் மனப்பான்மை மாறவேண்டும்
இறைவீட்டுச் சூரியனார் யார் வீட்டில் எறிக்கவில்லை
அவருமதைத் தடுத்துவிட்டால் யார்வீசு ஒளிருமிங்கே.

*05.* நம்வீட்டுப் பூவாசம் பிறர்மூச்சுள் புகுந்து விட்டால்
பூவினையே பறித்தெறியும் மனப்பான்மை மாறவேண்டும்
இறைவீட்டுப் பிராணவாயு யார்மூச்சில் புகவில்லை
அவருமதைத் தடுத்துவிட்டால் யார்மூச்சு மிஞ்சுமிங்கே.

06. நம்வீட்டு மின்விளக்கு பிறர்வீட்டில் ஒளிகொடுத்தால்
மறைப்பிட்டு அதைமறைக்கும் மனப்பான்மை மாறவேண்டும்
இறைவீட்டுச் சந்திரனார் யார் வீட்டில் காயவில்லை
அவருமதைத் தடுத்துவிட்டால் யார்வீடு மிளிருமிங்கே.

07.நம்வீட்டு நீரூற்று பிறர் வீட்டில் ஊற்றெடுத்தால்
ஊற்றினையே அடைத்துவிடும் மனப்பான்மை மாற வேண்டும்
இறை வீட்டுக் கார்மேகம் யார்வீட்டில் பெய்யவில்லை
அவருமதைத் தடுத்து விட்டால் யார்தாகம் தீருமிங்கே.

08. இருப்போற்கு கொடுப்பதெல்லாம் வேண்டாத ஒன்றாகும்
இல்லாற்குக் கொடுப்பதுவே கொடையென்று ஆதல்போல்
அறிஞர்களிற்கும் பெரியோற்கும் அறிவுரைத்தல் மடமையாகும்
நெறிதவறிப் போனோற்கே அறிவுரைத்தல் கொடையாகும்.

09.விருந்திற்கு மருந்துண்ணல் வேண்டாத ஒன்றாகும்
மருந்திற்கு மரியாதை வருத்தத்திற் குண்பதில் போல்
புரிந்தோற்கும் புனிதற்கும் போதனைகள் பொழுதுபோக்கு
புரியாற்கே போதனைகள் புனிதராக்கும் பெரும்பேறு.

10. பாதைகள் புரிந்தோற்கு வழிகாட்டல் பகல்விளக்கு
திசையறியா திருப்பவற்கே திசைகாட்டல் கலங்கரை போல்
பக்தியில் திளைப்பவற்கு பக்கத்துணை இடையூறு
புத்தியில் குறைந்தோற்கே புத்திமதி பெரும்பேறு.

## வழித்துணை - 72

01. இரையினைத் தேடலும் இனத்தினைப் பெருக்கலும்
அஃறினை என்பதற்கு அர்த்தமாம் அதுபோல
இறைவனைத் தேடலும் அறிவினைப் பெருக்கலும்
உயர்திணைக்கு அர்த்தமாம் உணர்ந்தே உயர்வீர்.

02. இறைவனைக் கண்டால் கேட்டுவாங்கப் பலவுண்டு
என்றெண்ணும் வரைக்கும் இறைகாட்சி தென்படாது
கண்டதே போதுமுனை வேறென்ன வேண்டுமினி
என்றெண்ணும் நிலைதோன்றக் கண்முன்னால் இறை தோன்றும்.

03. வெண்ணிலா வானில் வெளிவரும் வேளைதனில்
எண்ணரிய வானமது எம்கண்ணில் தொலைதல் போல்
மனக்கண்ணுள் இறைவனை நினைத்திட்டால் போதும்
அகிலத்து மற்றவைகள் மறைந்தே போகும்.

04. பசியோடு இருக்கின்றான் இறைவன் எண்றெண்ணி
பலகாரம் சுட்டுநாம் படைத்துப் பலனில்லை
படைத்தவன் தருகின்றான் பெற்றுண்போம் என்பதுவே
படைத்தவன் பாதத்தில் படைத்துப்பின் உண்பதுவாம்.

05. கல்லிலே கட்டையை உரைத்திட உரைத்திட
கரையிலே தோன்றித் திரள்கின்ற சந்தனம்போல்
நெஞ்சிலே இறைவனை நினைத்திட நினைத்திட
உணர்வுக்குள் ஒளியாகத் திரள்வோனே இறைவனாம்.

06. நமக்கிறைவன் தந்தவற்றை பிறர்க்கு நாம் கொடுப்பது
தானம் என்கின்ற தத்துவத்துள் அடங்காது
எமக்குப் பின்னது பிறர்க்கு என்பது
நியதியாம் கொடுத்தே கடன்தனை அடைப்போம்.

07.செப்புச் சங்கிலிக்கு தங்கமுலாம் பூசியதை
அப்போதைக் கணியலாம் தங்கமதாய் ஆகாது
அப்படித்தான் பக்தியும் விரதமுலாம் பூசியதை
அப்போதைக் கேற்றிடலாம் பக்தியதாய் ஆகாது.

08. மத்தினைக் கொண்டே நாம் தயிரினைக் கடைந்திட
வெண்ணை திரண்டதில் வெளியாகி வருதல் போல்
பக்தியைக் கொண்டு நாம் புத்தியைக் கடைந்திட
சிவத்தோடு சக்தியும் வெளிப்படும் காணலாம்.

09.சேறு குழைக்கையிலே சேறென்று இருந்திடுவோம்
பிள்ளையார் ஆனபின் தான் பெருமைகளைத் தெரிந்திடுவோம்.
எளிமையாய் இருப்போரை எழியோராய்க் கருதிடுவோம்
எழுந்தவர் இறையடைய இழந்தேநாம் வருந்திடுவோம்.

10. மினுக்குதற்கு சாம்பலிட்ட பாத்திரத்தைக் கண்டுநாம்
அழுக்கென்றே ஒதுக்கிடுவோம் கழுவப்பின் பற்றுவோம்
உளம்மினுக்க அழுக்குடலும் சுமப்போரைக் கண்டு நாம்
விலகென்போம் விலகிடத்தான் உள்ளத்தை உணருவோம்.

## வழித்துணை - 73

01. நெஞ்சத்தை எமக்கொருவர் திறந்து காட்டிவிட்டால்
வஞ்சகத்தை அவர் நெஞ்சில் விதைத்திடுதல் நன்றன்று
திறந்திருக்கும் நெஞ்சமதுள் இறைவனார் உறைவதனால்
வஞ்சகங்கள் இறைவனுக்கே வெஞ்சினத்தை எற்படுத்தும்.

02. நம்காலின் முள்வலியை நாமுணரும் வேளையிலே
பிறர்காலின் வலியதையும் நாமுணர்தல் நன்றாகும்
பிறர்காலின் வலியதனை நாமுணரத் தவறிவிட்டு
நம்வலியை மட்டுமிங்கே வலியெனலே தவறாம்.

03. வேண்டாதார் என்றொருவர் பாதைக்கு முள்ப்பரப்பி
வேண்டுவோற்காய் பின்னரதைஅகற்றிடுதல் நன்றன்று
வேண்டாரும் வேண்டுவோரும் இறைவனுக்கு வேண்டுவதால்
வேண்டாற்காய்ப் பரப்புவது இறைவனுக்கும் பரப்புவதாம்.

04. பொய்யான போயகல மெய்ஞான வழிதேடி
தொய்யாத பக்தியினை மேதினியில் துணையாக்கி
தெய்வீகக் கோயில்களை நெஞ்சத்துள் நிறுவினால் தான்
உய்வதற்கு உகந்ததொரு மனிதமிங்கு உருவாகும்.

05. சிந்திக்கும் ஆற்றலினைச் சிறைமீட்கும் சட்டமாக்கி
வந்துரைக்கும் சாட்சியாக மனச்சாட்சி தனைமாற்றி
சொந்தத்தில் நெஞ்சுள்ளோர் நீதிமன்றம் நிறுவினால் தான்
சுந்தரங்கள் சுடர்விடுமோர் மனிதமிங்கு உருவாகும்.

06. கோலத்தால் அகத்தேயும் புறத்தேயும் அழுக்ககற்றி
காலத்தால் அழியாதார் வரலாற்றை பொருளாக்கி
சீலத்தார் கல்லறையை நெஞ்சத்துள் நிறுவினால் தான்
என்றென்றும் போற்றிடவோர் மனிதமிங்கு உருவாகும்.

07.பண்போடு பற்றினையும் பரப்பியே விறகாக்கி
எண்ணத்தில் தீயவற்றை இழுத்து வந்து அதிலேற்றி
சுட்டெரிக்கும் சுடுகாட்டை நெஞ்சத்துள் நிறுவினால் தான்
என்றென்றும் போற்றிடவோர் மனிதமிங்கு உருவாகும்.

08. ஆறாம் அறிவதனைப் புத்தகமாய்த் தினம் சுமந்து
நூறாம் ஆண்டுவரை இறைவனையே குருவாக்கி
கூறாம் பள்ளிகளை நெஞ்சத்துள் நிறுவினால்தான்
பேறாம் பெருமை தரும் மனிதமிங்கு உருவாகும்.

09.வலிகாலில் வந்துவிட்டால் கால்களுக்கு மருந்திடாமல்
கைகளுக்கு மருந்திடுதல் பெரும் வலியாய் மாறல்போல்
தவறுண்டேல் தவறியோற்கு அதையுரைத்துத் திருத்திடாமல்
தவறிலார்க்கு அதையுரைத்தல் பெருந்தவறை உருவாக்கும்.

10. செப்பிலோர் நாகம் செய்து செம்பினுள் பாலில் வைத்து
ஒப்பரிய கோயில் சென்று ஓர்நேத்தி முடித்துவிட்டு
அப்பவே திரும்பும் வேளை வீட்டுப்படியிலோர் நாகம் கண்டு
தப்பிடா தடித்துத் தாப்பார் இறை நிசத்திலில்லை நிழலிலாமோ.

## வழித்துணை - 74

*01.* காகத்தைக் கரைந்துகூவி வாவென்று வரவழைத்து
பாகத்துச் சோறளித்து அது உண்டபின் உண்டுவிட்டு
தாகத்தால் பின்னொருநாள் அதுதவித்து வந்து கரைந்த வேளை
கோவத்தால் கல்லெறிவோம் இறை நிசத்தில்லை நிழலிலாமோ.

*02.* கல்லிலோர் நாயைச் செய்து கட்டிடம் ஒன்றுள் வைத்து
சரமாக்க வடைகள சுட்டு சூடியே வணங்கிவிட்டு
உரத்ததோர் குரலைக்காட்டும் ஊர்நாயைக் கண்டு விட்டால்
துரத்தியே அடித்தும் கொல்வார் இறை நிசத்தில்லை நிழலிலாமோ.

*03.* பால்தரும் பசுவைத் தெய்வம் என்றதை மதித்துவந்து
கால்தொட்டு வால்வரைக்கும் கடவுளாய் வணங்கிவிட்டு
பால்வற்றிப் போனதென்று நால்வரோடைவர் சேர்ந்து
தோல் நீக்கித் தசை சமைப்பார் இறைநிசத்தில்லை நிழலிலாமோ.

*04.* சன்னதி முருகனென்றோர் வண்டியில் நாமம் தீட்டி
புண்ணிய தலங்ளோடிப் பூசைகள் பண்ணிவிட்டு
பின்னரோர் வேள்விதன்னில் வெட்டிய ஆடுமேற்றி
உண்ணவே கொண்டு செல்வார் இறை நிசத்தில்லை நிழலிலாமோ.

*05.* அறுகெடுத்து ஆண்டவனின் அம்சமென்று அதை வணங்கி
அதுபோல வேரூன்றிவாழ்கவென்றும் வாழ்த்திவிட்டு
பத்தறுந்து போகாதாம் அறுகென்றும் சுட்டெரிப்போம்
இத்தனைக்கும் இறைவனார் நிசத்தில்லை நிழலிலாமோ.

06. ஆண்டவரே இறைவா என்று நாங்கள் தினம் வணங்கி
தாண்டவங்கள் பலஆடி அவன்புகழைப் பேசிவிட்டு
சிலையென்றும் படமென்றும் வியாபாரச் சின்னமென்றும்
வீதியிலும் விட்டெறிவோம் இறை நிசத்தில்லை நிழலிலாமோ.

07.பிள்ளையார் பிடித்துப் பொங்கல் தன்னிலே வைத்துப் பொங்கி
அள்ளியே மோதகத்தால் அபிஷேகம் செய்துவிட்டு
துள்ளியே ஓடும் ஆற்றில் தூரவே எறிந்தும் நிற்போம்
இறைபக்தி இதுதானென்றால் இறை நிசத்தில்லை நிழலிலாமோ.

08. கோயிலில் சிலைகளென்போம் வீட்டினில் படங்களென்போம்
பப்படத்தில் பற்பொடியில் வியாபாரச் சின்னமென்போம்
இப்படி எல்லாம் நாங்கள் இறைவனை எண்ணிக் கொண்டால்
எல்லாம் செப்படிவித்தைதானோ இறை நிசத்தில்லை நிழலிலாமோ.

09.மரத்திலோர் எலியைச் செய்து ரதத்தினில் அதனை ஏற்றி
கரத்தினில் ஐந்தானுக்கு வாகனம் ஆக்கிவிட்டு
இறப்பிலோர் பொறியை வைத்து இருக்கின்ற எலியைக் கொன்று
பருத்ததோர் பூனைக்கிடுவோம் இறை நிசத்தில்லை நிழலிலாமோ.

10.சட்டியில் தீயை மூட்டி சிரசினில் அதனைத்தாங்கி
திருத்தல வீதிசுற்றி நேத்தியை முடித்து விட்டு
மூட்டியே தீயைக் கோயில் வாசலில் குளித்தலென்று
காலினால் மிதித்தும் செல்வோம் இறை நிசத்தில்லை நிழலிலாமோ.

## வழித்துணை - 75

01. பற்றினை அறுத்தால்தான் பரமனடி கிட்டுமென்று
பொற்பதி முன்னால் நின்று பேருரை நிகழ்த்திவிட்டு
சற்றுமுன் சொன்னதெல்லாம் சபைக்கேதான் எனக்கன்றென்று
அற்பனுக்காசை கொள்வார் இறை நிசத்தில்லை நிழலிலாமோ.

02. அர்ச்சனைத் தட்டமேந்தி அர்ச்சகர் கைக்கொடுத்து
ஆண்டவன் அடிக்கே இவைகள் அர்பணம் என்றுவிட்டு
அர்ப்பணம் செய்ததட்டம் மாறியே வருதல் கண்டால்
இது எனதன்று வேறு என்போம் இறை நிசத்தில்லை நிழலிலாமோ.

03. அந்தணம் தன்னைக் கூட்டிக் கடவுளாய் வணங்கி நின்று
தெப்பனம் பண்ணிததாலி கட்டியே முடித்துவிட்டு
வந்தனம் செய்த ஐயர் வழியிலே வருதல்கண்டால்
சகுனமே பிழைத்த தென்போம் இறை நிசத்தில்லை நிழலிலாமோ.

04. பத்துநாள் விரதம் காத்து பாலொடு பழங்களுண்டு
செத்தமீன் மாமிசத்தை சுத்தமாய் வெறுத்துவிட்டு
மெத்தவோர் கோயில்தேரும் தீர்த்தமும் முடிந்தபின்னால்
பித்தமாம் மச்சமுண்பார் இறை நிசத்தில்லை நிழலிலாமோ.

05. எம்மோடு வரஇறைவன் விருப்புற்றால் வேண்டாமென்போம்
தன்னோடு வாவென்றிறைவன் அழைத்தாலும் மறுத்துவிட்டு
உன்னோடு எமக்குள் உறவு கோயிலில்தான் மட்டுமென்போம்
இறைபக்தி இதுதானென்றால் இறை நிசத்தில்லை நிழலிலாமோ

06. அகத்துன்பம் இறைக்குக் கூற புறச்சுத்தம் செய்துகொண்டு
புகலிடம் தேடியோடி ஆலயம் வந்துவிட்டு
மிகத்துன்பம் செய்வோம் ஊரார் சுகதுக்கம் அங்கேபேசி
மகத்துவம் இதுதானென்றால் இறை நிசத்தில்லை நிழலிலாமோ

07.பாலோடு பழங்களெந்தி பூச்சூடிப் புகழ்ந்துபாடி
சேவலும் மயிலும் போற்றி போற்றியென்று போற்றிவிட்டு
ஆவலால் பின்னரோர்நாள் சேவலும் சமைத்து உண்போம்
கூவியபாடல் பொய்யோ இறை நிசத்தில்லை நிழலிலாமோ.

08. விநாயகப் பெருமானாரை விரும்பியே வணங்குதற்காய்
உள்ளதோர் வீட்டினுள்ளே உயரத்தில் வைக்கும்போது
தாண்டவக் கோலம் வேண்டாம் தவக்கோலம் போது மென்போம்
இறையிலும் குறையே கண்டால் இறை நிசத்தில்லை நிழலிலாமோ.

09.முருகனைத் தேடி நாங்கள் முந்தியே வணங்குதற்காய்
இருகரம் ஏந்தியெங்கள் இல்லத்தே வைக்கும் போது
துணைவியர் வேண்டாம் முருகன் மட்டுமே போதுமென்மேன்போம்
இறையிலும் குறையே கண்டால் இறை நிசத்தில்லை நிழலிலாமோ.

10. கண்ணனார் தன்னைக் காத்தல் தெய்வமாய்க் கருத்தில்கொண்டு
எம்மரும் வீட்டினுள்ளே எழுந்தருள வைக்கும் போது
ஊதிடும் கண்ணன் வேண்டாம் சங்குசக்கரம் போதுமென்போம்
இறையிலும் குறையே கண்டால் இறை நிசத்தில்லை நிழலிலாமோ.

## வழித்துணை - 76

01. லட்சுமித் தெய்வத்தாயை செல்வத்தைத் தருவாளென்று
இல்லத்தே வைப்பதற்கு இனங்கண்டு வாங்கும் போதும்
கொட்டும்தாய் வேண்டாம் சும்மா இருப்பதே போதுமென்போம்
இறையிலும் குறையே கண்டால் இறை நிசத்தில்லை நிழலிலாமோ.

02.நிலமே இறைவனது பாதமென்று உணராமல்
பலங்காட்டிப் பலவழியில் பாரிதனைப் பிழந்திட்டு
தலமொன்று [illegible] அதை வலம் வந்து பணிந்திட்டால்
நலம்பல தந்திறைவன் நமைக்காத்து அருள்வானோ.

03. ஜலமே இறைவனது இடுப்பென்று உணராமல்
மலமெல்லாம கொட்டியதை மாசடையச் செய்திட்டு
கலமொன்றில் ஜலமெடுத்து கும்பமெனக் கும்பிட்டால்
புலம் காக்க இறைவனார் புகுந்ததற்குள் வருவாரோ.

04.நெருப்பே இறைவனது வயிறென்று உணராமல்
செருப்பினால் கூடஅதை மிதித்தரைத்து அணைத்திட்டு
தெருக்கோடிப் பிள்ளையாற்கு தீபமொன்று ஏற்றிவிட்டால்
கருப்பொருளார் அதற்காக கருணைபொங்கி அருள்வாரோ!

05. காற்றே இறைவனது நெஞ்சென்று உணராமல்
தூற்றியே அவர் நெஞ்சைத் தூசாக மாற்றிவிட்டு
சேற்றிலே மலர்ந்ததொரு தாமரையைச் சாத்திவிட்டால்
நேற்றையதை மறந்திறைவன் இன்றுஅருள் புரிவானோ.

06. வானமே இறைவனது சிரமென்று உணராமல்
ஆனமட்டும் அழுக்கெல்லாம் அதில்சேர விட்டிட்டு
கானத்தை மட்டும்நாம் இசைத்து அதில் கலக்கவிட்டால்
ஈனத்தை மறந்திறைவன் எமக்கிரங்கி அருள்வானோ.

07. சமயம் ஒன்றில்நீர் பிறந்ததற்காய் மகிழாமல்
சமயம் ஒன்றில் நீர் பிறந்தற்காய் வருந்தாமல்
சமயங்கள் எல்லாமே ஓர் வழியைக் காட்டுவதால்
ஏதோஒரு சமயத்தில்நீர் இருப்பதற்காய் மகிழ்ந்திடுவீர்.

08. சமுதாயம் ஒன்றில் நீர் பிறந்ததற்காய் மகிழாமல்
சமுதாயம் ஒன்றில்நீர் பிறந்தற்காய் வருந்தாமல்
மனிதம் ஓர்முறைதான் எல்லோற்கும் கிட்டுவதால்
மனித சமுதாயதத்தில்நீர் பிறந்ததற்காய் மகிழ்ந்திடுவீர்.

09. பாசை ஒன்றினை நீர் பேசுதற்காய் மகிழாமல்
பாசை ஒன்றினை நீர் பேசுதற்காய் வருந்தாமல்
பேசுதற்கே முடியாரும் பாரிதனில் வாழ்வதால்
ஏதோஒரு பாசையைநீர் பேசுதற்காய் மகிழ்ந்திடுவீர்.

10. நாடு ஒன்றில் நீர் வாழ்வதற்காய் மகிழாமல்
நாடு ஒன்றில் நீர் வாழ்வதற்காய் வருந்தாமல்
வாழவே முடியாமல் மாழ்வோரும் இருப்பதனால்
ஏதோஒரு நாட்டில் நீர் வாழ்வதற்காய் மகிழ்ந்திடுவீர்.

## வழித்துணை - 77

*01.* தேசம் ஒன்றில் நீர் பிறந்தமைக்காய் மகிழாமல்
தேசம் ஒன்றில் நீர் பிறந்தமைக்காய் வருந்தாமல்
தேசங்கள் எல்லாமே இறைமடிதான் என்பதனால்
ஏதோஒரு தேசத்தில் நீர் பிறந்ததற்காய் மகிழ்ந்திடுவீர்.

*02.* தான் கடித்தால் விசமென்று பாம்பிற்குத் தெரியாது
தெரிந்ததால் நாமதனை விலத்தியே நடத்தல் போல்
தீயோற்கும் தாமிழைத்தல் தீதென்று தெரியாது
தெரிந்து நாம் விலகிடலே எல்லோற்கும் நன்றாகும்.

*03.* பூவிடத்தேர் வாசமுண்டு பூவிற்கு அது தெரியாது
தெரிந்ததால் நாமதனைப் பேணியே வளர்த்தல் போல்
தந்தையிடம் உழைப்பிருக்கும் அவருக்கது தெரியாது
தெரிந்து நாம் அவர் தம்மைப் பேணுதலே நன்றாம்.

*04.* பால்சுரக்கும் பசுவிற்கு பாலினெடை தெரியாது
தெரிந்ததால் நாமதற்குப் பணிவிடைகள் செய்தல்போல்
தாயிடத்தே பரிவிருக்கும் அவற்குஅது தெரியாது
தெரிந்துநாம் பணிவிடைகள் அவற்காற்றல் நன்றாம்.

*05.* நிலாவிடத்தே நிலவிருக்கும் அதற்குஅது தெரியாது
தெரிந்ததால் நாமதனை அனுபவித்தே மகிழல் போல்
அறிஞரிடம் அறிவிருக்கும் அவர்க்கு அது தெரியாது
தெரிந்துநாம் அவரிடத்தே அறிவுபெறல் நன்றாம்.

06. சாக்கடையில் மணமிருக்கும் அதற்குஅது தெரியாது
தெரிந்ததால் நாமதனை அகற்றியே விடுதல்போல்
மானிடத்தும் துர்நடத்தை குடியிருக்கும் தெரியாது
தெரிந்துநாம் நன்நடத்தை புகட்டுதலே நன்றாம்.

07. குறுக்கு வழியொன்றில் செல்வதையே சுலபமென்று
அவ்வழியே சென்றதற்கு தடையிடையில் வருமிடத்து
நேர்வழியில் செல்வதற்குப் பின் நெடுந்தூரம் செல்வதிலும்
எப்போதும் நேர்வழியில் செல்வதுவே சுலபமாகும்.

08. பிறர்கெட்டுப் போகவேண்டும் என நினைப்போர் மாறாக
தாம்கெட்டுப் போவதினை கிஞ்சித்தும் உணரமாட்டார்
தாம்கெடாமல் தரணியிலே தளைத்தோங்கி வாழ்வதற்கு
பிறர்கெடாமல் இருக்கவேண்டும் என நினைத்தல் வழியாகும்.

09. சிறுதுன்பம் ஒன்றினைநீர் சந்திக்க விரும்பாமல்
பெருந்துன்பம் பலவற்றைப் பிறருக்குக் கொடுக்காதீர்
பிறருக்கே பெருந்துன்பம் எனக்கென்ன என்றிருப்பின்
பிறராக நீரோர்நாள் பரிணமித்தே அதைச் சுமப்பீர்.

10. பிறப்பில் இருந்துநாம் இறக்கின்ற வரையிலே
இடையிலே நடப்பவை வாழ்க்கையின் அம்சங்கள்
அம்சம் ஒன்றினையே வாழ்க்கையென்று எண்ணாமல்
வாழ்க்கை வாழ்வதற்கே வாழ்வதுங்கள் கடனாகும்.

## வழித்துணை - 78

01. ரசித்திட இறைவனார் படைத்திட்ட சிலவற்றை
ருசித்திட நாங்கள் நினைப்பதற்தே கலியுகம்
ரசித்திடப் படைத்ததை ரசிப்போடு நிறுத்திட்டால்
கலியுகம் நம்மிடம் தோற்றுமே ஓடுமாம்.

02. காத்தலை அழிப்பதும் அழித்தலைக் காத்தலும்
காலத்தின் கோலமல்ல அதுவே கலியுகம்
காத்தலைக் காத்துநாம் அழித்தலை அழித்திட்டால்
கலியுகம் நம்மிடம் தோற்றுமே ஓடுமாம்.

03. மதித்திட இறைவனார் படைத்திட்ட சிலவற்றை
மிதித்திடப் படைத்தாய் மிதிப்பதே கலியுகம்
மதித்திடப் படைத்ததை மதித்தேநாம் நிறுத்திட்டால்
கலியுகம் நம்மிடம் தோற்றுமே ஓடுமாம்.

04. இயற்கையை இறைவனின் அம்சமாய்க் கருதாமல்
செயற்கையினாலதைச் சீண்டலே கலியுகம்
இயற்கையை இறையதாய் மதித்துநாம் நடத்திட்டால்
கலியுகம் நம்மிடம் தோற்றுமே ஓடுமாம்.

05. பரிணாமம் கண்டு நாம் பரிதாபம் விட்டதை
பசியாற நினைப்பதே பாரினிற் கலியுகம்
பரினாமம் கண்டுநாம் பரிவோடு நடந்திட்டால்
கலியுகம் நம்மிடம் தோற்றுமே ஓடுமாம்.

06.கெட்டதென்று கண்டால் நாம் எட்டவே செல்லாமல்
கிட்டவே சென்றதை அணைப்பதே கலியுகம்
கெட்டதென்று கண்டுநாம் எட்டவே சென்றிட்டால்
கலியுகம் நம்மிடம் தோற்றுமே ஓடுமாம்.

07. பாதியில் வாழ்க்கையை அழிக்குமென்று தெரிந்த ஒன்றை
வீதியில் விலை கொடுத்து வாங்குதலே கலியுகம்
முழுமையான வாழ்க்கையை நாம் முறைகேட்டால் கெடாவிட்டால்
கலியுகம் நம்மிடம் தோற்றுமே ஓடுமாம்.

08.அவரவர் கடமையை அவரவர் செய்யாமல்
பலன்பெற நினைப்பதே பாரினில் கலியுகம்
அவரவர் கடமையை அவரவர் செய்திட்டால்
கலியுகம் நம்மிடம் தோற்றுமே ஓடுமாம்.

09. நிசத்தினை மறந்துநாம் நிழலினை நினைந்தே
பசப்பினில் வாழ்வதே பாரினிற் கலியுகம்
நிழலினை நீக்கிநாம் நிசத்தினை மதித்திட்டால்
கலியுகம் நம்மிடம் தோற்றுமே ஓடுமாம்.

10.இறைவனை மதியாமல் ஆத்மாவை உணராமல்
நம்பிக்கை யின்றி நாம் வாழ்வதே கலியுகம்
இறைவனை நம்பி நாம் ஆத்மாவை வளர்த்திட்டால்
கலியுகம் நம்மிடம் தோற்றுமே ஓடுமாம்.

## வழித்துணை - 79

*01.* கிடைத்ததோர் வாழ்க்கையது சிறிதோ பெரிதோ
திருப்தியோடு வாழ்வதே பெருவாழ்வு வாழ்வதாகும்
பெருவாழ்வு வேறென்று வாழாமல் இருந்திட்டால்
வாழ்க்கையே முடிந்துவிடும் வாழ்வது பின் எப்போதாம்.

*02.* கிழியல் ஒன்றினை நீர் கிழிந்தவுடன் தைத்திட்டால்
மேலுமது கிழியாது கிழிந்ததோடு நிற்றல்போல்
விரிசலும் வந்திட்டால் வந்தவுடன் தீர்க்க வேண்டும்
விரிவடைய விட்டிட்டால் பெரும்போரில் அதுமுடியும்.

*03.* சந்தேகத் திரையரங்கில் தோன்றிடும் காட்சிகளை
உண்மை போல் உள்ளத்தில் உருவகித்துக் கொள்ளாதீர்
உருவகித்துக் கொண்டவைகள் உருவங்கள் மாறிப்பின்
உயிருக்கே உலைவைக்கும் உட்பொருளாய் மாறிவிடும்.

*04.* மானிடர் படைத்திட்டபொன்யையும் பொருளையும்
வானிலும் உயர்ந்தென மகிழ்தலுமோர் துயரமாகும்
நானிலம் தனைப்படைத்தோன் படைத்திட்ட நல்லறிவை
மானிலத் துயர்ந்ததென சேர்ப்பதுவே மகிழ்வாகும்.

*05.* பொன்னோடு பொருளையும் பொக்கிசமாய்க் கொண்டிருப்போர்
செல்வந்தர் எனத்தம்மை எண்ணிடுதல் தவறாகும்
நாளைக்கும் உழைக்கின்ற நலத்துடனே இருப்பவரே
ஏழையெனப் பெயர்தாங்கும் ஏற்றமிகு செல்வராவார்.

06. எவ்வளவு தான் எண்ணையது விளக்கினுள்ளே இருந்தாலும்
திரிவழியே செல்லாமல் அது தீபமென்று ஆகாது
செல்வமும் அப்படித்தான் அறிவுவழி செல்லாமல்
அதுயாற்கும் பலன்தராது அழிவிற்கே வழிவகுக்கும்.

07. உறக்கத்தில் நாமெல்லாம் விட்டுவிட்டு உறங்குதல்போல்
இறப்பிலும் நாமெல்லாம் விட்டுவிட்டே இறக்கின்றோம்
இறப்போடு உறக்கமதில் எல்லாமே விட்டிடும் நாம்
இறவாமல் இருக்கையிலே சிலவிடுதல் இழிவாமோ.

08. கைப்பொருளை வாழ்க்கையிலே நிலையென்று நம்பிநாம்
மெய்ப்பொருளை உணராமல் இருப்பதுவே தவறாகும்
கைப்பொருள் சிலநேரம் உயிருக்கும் உலை வைக்கும்
மெய்ப்பொருளே இறவாத பெருவாழ்வை எமதாக்கும்.

09. குப்பையைக் கிளறுவதில் கோழிகட்கு வாழ்க்கையுண்டு
குப்பையைக் கூட்டுவதில் மானிடற்கு வாழ்க்கையுண்டு
கூட்டுவது கோழிகளாய் கிளறுவது மானிடராய்
இருப்பதால் பலனுண்டோ பழையவற்றைக் கிளறாதீர்.

10. சட்டைப் பையினுள் பணத்தினைப் போன்றதுதான்
நமக்கென்று இருக்கின்ற வாழ்நாளின் காலமதும்
பணம் முடிய முன்னரேதும் பலனுள்ள செய்தல் போல்
வாழ்நாள் முடிய முன்பும் வரலாறு படைத்திடுவீர்.

## வழித்துணை - 80

01. அடுத்தவற்குத் தேவையென்று இருப்பது வேறாகும்
உங்களுக்குத் தேவையென்று இருப்பது வேறாகும்
எடுத்தற்கெல்லாம் நீர் அடுத்தவரை காட்டல் விட்டு
உங்களுக்குத் தேவையெதோ அதைத்தேடும் பெற்றிடுவீர்.

02. குருதி உள்ளவரை குற்றுயிரும் நிலைத்திருக்கும்
குருதி ஓடிவிட்டால் குற்றுயிரும் ஓடிவிடும்
மனிதம் உள்ளவரை மானிடமும் நிலைத்திருக்கும்
மனிதம் அகன்று விட்டால் மானிடமும் அழிந்து விடும்.

03. புனிதம் என்பது பூசகர்கள் தருவதன்று
நமக்குள் நாமே உருவாக்கிக் கொள்வதாகும்
புனிதம் தோன்றுமட்டும் நமக்குநாமே குருவாவோம்
புனிதம் தோன்றி விட்டால் பூசகரும் குருவாவார்.

04. நோய்கொடி பற்றிநாம் நினைத்தபடி இருப்பதுவே
நோய்நொடி தீராமல் இருப்பதற்குத் காரணம் போல்
ஏழ்மையையும் தாழ்மையையும் ஏற்றுநாம் நடப்பதுவே
ஏழ்மையும் தாழ்மையும் நிலைப்பதற்குத் காரணமாம்.

05. நடத்தையின் ஒழுக்கத்தால் நாய்வீட்டில் நிலைத்திருக்க
ஒழுக்கமிலாத் தன்மையினால் பூனையை நாம் அகற்றுதல் போல்
ஒழுக்கமுளோர் பேரோடும் புகழோடும் நிலைத்திருக்க
ஒழுக்கமிலார் தமையகற்றப் பலர் முயல்வார்கண்டறிவீர்.

06. வாய்க்கால்வழி நீர்கூட வழிகாட்டல் இருத்தால் தான்
பாத்திவழி பாய்ந்து அது பயிர்களுக்குப் பலன்தரல்போல்
வாழ்க்கையிலும் எல்லோரும் வழிகாட்டலினை ஏற்றால்தான்
வாழ்க்கையின் முழுமையை நாம் முடிந்தவரை வென்றிடலாம்.

07. கைகள் இரண்டுமே இருந்திட்டால் போதுமதால்
கருமம் எதையுமே செய்திடலாம் என்றிராதீர்
செய்கின்ற கருமத்தில் விசுவாசம் இருந்தால்தான்
கைகளினால் செய்பவைகள் காரியத்தில் சித்திதரும்.

08. விழிப்புணர்வு கல்வியிலோ கலைகளிலோ இருந்திடலாம்
சாதி சமய விழிப்புணர்வு சாவுவரை தேவையில்லை
சாதிசமய விழிப்புணர்வு சங்கடத்தால் கோடேறும்
கல்விகலை விழிப்புணர்வு கற்றவர்கள் சபையேறும்.

09. நசித்திடும் போதிலெள்ளு எண்ணையாய் உயர்ந்தே போகும்
கரும்பது கற்கண்டாகும் இரும்புமோர் கருவியாகும்
அருந்தமிழ் கூட நாங்கள் நசித்திடக் கவிதையாகும்
மானிடம் மட்டும்வேறோ அதுவும் நசித்திட உயர்ந்தே போகும்.

10. மண்ணுக்குள் தோன்றிடும் மண்ணெண்ணை பின்னொருநாள்
மண்ணையும் அழித்தே மண்ணில் உள்ளதையும் அழிந்திடல் போல்
எம்முக்குள் இருந்து தோன்றும் தீயவையும் பின்னொருநாள்
எம்மோடு எமதினையும் அழித்துவிடும் என்றறிவீர்.

## வழித்துணை - 81

01. தீக்குச்சி மட்டும் இருந்தால் தீப்பற்றி எரிந்திடாது
தீண்டியதை உரசும் போதே தீப்பற்றி எரிதல் போல
ஆண்டவனும் உள்ளானென்றால் அருள் மழை பொழிந்திடாது
வேண்டி நாம் ஈர்த்திட்டாலே அருள்மழை பொழியும் காண்பீர்.

02. குச்சியால் ஏற்றும் தீபம் தன்னைநாம் வணங்கிக் கொண்டு
ஏற்றிய குச்சியைப் பின் மிதித்துமே அழித்தல் போல
கிடைத்ததோர் வாழ்வுதன்னை மதித்துநாம் வாழும் வேளை
பெற்றதைத் தந்தோர் மனதை மிதித்திடல் மனிதமாகா.

03. தீயிலே ஊற்றும் எண்ணை திடீரென அழிந்தே போகும்
திரிவழி ஊறும் எண்ணை தினம் பல எரிதல் போல
தீயவழிச் செலவால் செல்வம் திடீரென அழிந்தேபோகும்
உரியவழிச் செலவால் செல்வம் ஊழிவரை நிலைத்தே நிற்கும்.

04. அடுப்புக்குள் நெருப்பை வைத்தால் உலையது கொதித்தே அவியும்
அவிந்ததால் பொழுது ஒன்றில் அது கெட்டுமே போதல் போல
வாயிலே நெருப்பை வைத்தால் புலனைந்தும் கொதித்தே அவியும்
அவிந்ததால் ஆயுள்தன்னைப் பாதியில் பறித்தும் போகும்.

05. பெரிதாக ஒன்றை நீங்கள் விரும்புதல் பிழையென்றன்று
சிறிதான ஒன்றை அதற்காய் வெறுத்தலே பிழையென்றாகும்
பெரிதாக விரும்பியது கிடைக்காமல் போகும்வேளை
சிறிதான ஒன்றை அதற்காய் இழத்தலே பிழையென்றாகும்.

06. ஒருவரின் நடத்தை பற்றி அவரிடம் உரைக்கு முன்னர்
எங்களின் நடத்தைதன்னை நாங்களே எண்ணல் வேண்டும்
நடத்தையில் பிழையதிகம் நம்மிலும்இருந்திடலாம்
நம்மைநாம் சீர்செய்தாலே அடுத்தவர் நமதை ஏற்பார்.

07.ஒன்றுமிலார் என்றொருவர் உறவினை ஒதுக்கு முன்னர்
ஒன்றறிவீர் அவரிடம் ஒன்றிருக்கும் அது ஆத்மபலம்
நன்றவரை மதித்தே நீங்கள் அவர்மகிழ நடக்காவிட்டால்
ஒன்றுண்மை அவர் கொதிப்பே உமதழிக்கும் உணர்ந்துயர்வீர்.

08. கறையான்கள் இலாப்புற்றில் பாம்பு குடியேறல் போலும்
பிறையில்லா வானைவந்து இருள்கௌவும் தன்மை போலும்
மறைந்திடும் எதிர்ப்பால் உடலை நோய்வந்து கௌவும் அதுபோல்
இறையில்லா இதயம்தன்னை அசுரமும் கௌவும் கௌவும்.

09.தேவைக்கு ஒருவரை தேடிப் பயன்படுத்திப்பின்
தேவையெல்லாம் முடிந்ததென்று ஒதுக்கிடுதல் நன்றன்று
பூசைக்குப் போகின்ற பூக்களெல்லாம் பூசையின் பின்
பூவையரின் பூங்குழலில் யொலித்திடுதல் வேறாமோ?

10. ஆபத்து எமக்கென்றால் கூட்டுப் பொறுப்பென்போம்
அதுவேதான் பிறர்க்கென்றால் எமக்கென்ன என்றிருப்போம்
பிறர்துன்பம் எமதாக்கி எமதின்பம் பிறர்க்காக்கி
வாழாத வரைக்குமிங்கே எல்லாமே வேசமாகும்.

## வழித்துணை - 82

01. பிரதட்டைசெய்வதுஓர் நேத்திக்கடன் மட்டுமன்று
நிலத்தூடு இறையை எம்முள் பிரதிட்சை செய்வதுமாம்
பிரதிட்சை செய்வதற்காய் பிரதட்டை செய்யாதார்
பிரதட்டை செய்தென்ன அது நிசம் நீத்த நிழலேயாம்.

02. குளித்தல் என்பது ஓர் உடல்களுவல் மட்டுமன்று
நீரூடு இறையை எம்முள் பிரதிட்சை செய்வதுமாம்
பிரதிட்சை செய்வதற்காய் குளித்தலினை மேற்கொள்ளார்.
குளித்தென்ன முழுகியென்ன அதுநிசம் நீத்த நிழலேயாம்.

03. தீமூட்டி நாம் காணல் குளிர் காய்தல் மட்டுமன்று
தீயூடு இறையைஎம்முள் பிரதிட்சை செய்வதுமாம்
பிரதிட்சை செய்வதற்காய் தீமூட்டிக் குளிர்காயார்
குளிர்காய்ந்து என்னபலன் அதுநிசம் நீத்த நிழலேயாம்.

04. சுவாசித்தல் என்பது ஓர் காற்றிழுத்தல் மட்டுமன்று
காற்றூடு இறையை எம்முள் பிரதிட்சை செய்வதுமாம்
பிரதிட்சை செய்வதற்காய் காற்றிழுத்து மூச்சுவிடார்
சுவாசித்து என்னபலன் அதுநிசம் நீத்த நிழலேயாம்.

05. ஆகாயம் பரந்திருத்தல் ஏகாந்தம் காட்டவன்று
ஆகாயத்தூடு இறையை எம்முள் பிரதிட்சை செய்யவுமாம்
பிரதிட்சை செய்வதற்காய் ஆகாயம் நோக்காதார்
ஏகாந்தம் நோக்கியென்ன அதுநிசம் நீத்த நிழல்தானே.

06. தம்முடலில் இருந்துவீசும் நாற்றம் கூட
தம்தமக்கு சிலவேளை வாசமாகும்
சங்கடங்கள் மணத்திலில்லை மனத்திலேதான்
நம்போலப் பிறரை எண்ணில் பகையே இல்லை.

07. உடல்கூறு ஒன்றினிற்கு பழக்கம் ஒன்றை
உரியபடி பழக்கிவிட்டால் அஃது வழக்கமாகும்
ஒழுக்கமும் அப்படித்தான் அதைப் பழகிக் கொண்டால்
அதுவே பின் வாழ்வெல்லாம் வழக்கமாகும்.

08. பெரிதாக ஒன்றினைநாம் மனத்தெண்ணி வாழ்வதிலும்
சிறிதெனினும் கிடைத்ததினை அனுபவித்தல் மேலாகும்
மனதிலே நினைத்துவிட்டால் மாடிமனை தோன்றிடாது
கிடைத்ததைக் தவறவிட்டால் வெறுங்கை பின் முழமிடாது.

09. சூரியன் மேல் தீமூட்டி வைத்தவர்கள் நாங்களன்று
சந்திரனை வீழாமல் காப்பவரும் நாங்களன்று
பூமியினை ஓய்ந்திடாமல் சுழற்றுவதும் நாங்களன்று
அதுவேதான் இறையென்று அந்நிறையைப் பணிந்துயர்வீர்.

10. விண்வெளியில் எத்தனைதான் ஒலியலைகள் ஒளியலைகள்
அதில் ஒன்றேனும் எங்களுக்குகேட்பதில்லை தெரிவதில்லை
ஆனாலும் கருவியொன்றில் தெரிதல் போல் கேட்டல் போல்
இறைஒளியோடு ஒலிகேட்க உள்ளத்தை உருக்க வேண்டும்.

## வழித்துணை - 83

1. மரத்திற்கு ஒரு போதும் நீரூற்றி வளர்த்திடாமல்
மருந்திற்கு தேவையெனில் மரத்தோடு முறித்திடல்போல்
வருந்துவோற்கு ஒருபோதும் வருத்தத்திற் குதவிடாமல்
விருந்திற்கு அழைத்திடுதல் மரம்முறிக்கும் செயல்போலாம்.

02. நான் போட்ட தடத்திலொன்று என்னையே வீழ்த்திடலும்
நான்போட்ட முள்ளிலொன்று என்காலைக் குற்றிடலும்
தற்செயலாய் நடக்கின்ற சம்பவங்கள் என்றன்று
விதைத்ததை அறுதிடும் வினைப்பயனே அதுவாகும்.

03. பெரிதாக ஒன்றை நாங்கள் பேசிடுதல் பெரிதேதான்
சிறிதாக ஒன்றை நாங்கள் பேசிடுதல் சிறிதே தான்
பெரிதாகப் பேசியது வெறும் பேச்சோடு முடியுமானால்
சிறிதாகப் பேசினாலும் அது செயலானால் பெரிதேதான்.

04. நீர்நிலைகள் வெப்பத்தால் கொதித்தாவி யானால்தான்
பார்முற்றும் குளிரப்பின் பருவமழை பெய்தல் போல்
மாணவரும் கற்றலுக்காய் கடும்முயற்சி எடுத்தால்தான்
தேனமுத வாழ்வு பின்னர் தேடிவந்து வளம்படுத்தும்.

05. உலைக்கழத்து வெப்பத்தில் உருகியே ஓடினால் தான்
வலக்கரத்து வளையல்களாய் தங்கமது தரம் பெறல்போல்
மாணவரும் கற்றலுக்காய் கடும் முயற்சி எடுத்தால் தான்
விலைமதிக்க முடியாத நிலைக்குப்பின் உயர்ந்திடலாம்.

06. வெள்ளியைத் தேடலாம் செவ்வாயைத் தேடலாம்
சந்திரத் தரையிலே சந்தித்தும் பேசலாம் ஆனாலும்
இறைவனார் கீறிய கோடொன்று உள்ளது
அதையும் நாம் தாண்டலாம் தாண்டலே அழிவாகும்.

07. அன்பினால் இறைவனிடம் அருள்பெறுவோம் என்போரிலும்
அடாவடியால் அதைப் பெறுவோம் என்போரே அதிகமாகும்
ஆத்மீக வழிவிடுத்து ஆத்திரத்தின் வழிநடந்தால்
இறையருள் தேடிவரும் சாத்வீகவழி மூடிவிடும்.

08. முட்டைக்கு கோழி தரும் வெப்பத்தின் தன்மையால்தான்
குஞ்சுகள் பலபொரித்து சிறகடித்துப் பறந்திடல்போல்
மாணவரும் ஆசிரியர் அரவணைப்பில் நகர்ந்தால் தான்
சித்திகள் பலபெற்றுச் சிறகடித்துப் பறந்திடலாம்.

09. சூரியனின் வெப்பத்தைத் தானேற்கும் தன்மையால்தான்
சந்திரனின் குளிர் நிலவில் நாம் காயக் கிடைத்தல் போல்
குருத்துவத்தை மருத்துவமாய் மாணவரும் ஏற்றால் தான்
பெருத்ததொரு வாழ்வில் பின் பெருமைபல பெற்றிடலாம்.

10. சுரங்கத்தின் வெப்பத்தைச் சுதாகரித்துக் கொள்வதுதான்
தங்கத்தை அகழ்ந்தெடுத்து தரையிலிட உதவுதல் போல்
மாணவரும் இன்னல்களைத் தாங்கித் தாம் கற்றால்தான்
வான்புகழ் கொண்டிங்கு வரலாறு படைத்திடலாம்.

## வழித்துணை - 84

01. வைபவம் ஒன்றிற்கு சந்தனமும் குங்குமமும்
திருநீறும் வாசலிலே வைத்தழைப்பர் ஏனென்றால்
சிவத்தோடு சக்தியும் விநாயகரும் எமில்அமர
அசுரத்தார் அகன்றங்கே கருமங்கள் சிறந்திடவாம்.

02. நாள்தோறும் வாசலிலே நீர்வைத்துப் பாத்திரத்தில்
மலர்சிறிதும் இட்டுப்பின் மகிமைகொள்வர் ஏனென்றால்
நீருக்குள் இறைவனை பிரதிட்சை செய்து பின்னால்
அவனடிக்கு மலரிடுதல் அர்த்தமென அறிந்து செய்வீர்.

03. நெற்றியிலே தொண்டையிலே உச்சியிலே என்று பெண்கள்
மூன்றிடத்தில் குங்குமத்தைச் சாற்றிடுவர் ஏனென்றால்
தனித்துவமாய் நானிருந்தேன் தலைவனிப்போ மேலுள்ளான்
கீழ்ப்படிந்து நடந்திடுவேன் என்பதுவே அர்த்தமாகும்.

04. வாழைமரம் கட்டிப்பின் வைபவத்தின் வாசலிலே
மாவிலையும் தோரணமும் தொங்க வைப்பர் ஏனென்றால்
அசுரத்தார் வைபவத்தைக் குழப்புதற்கு வந்திடாமல்
எச்சரிக்கை செய்து பெரும் காவலும் புரிந்திடவாம்.

05. கும்பமும் வைத்துப்பின் குத்து விளக்கேற்றி
வைபவம் தொடங்குமுன்னோர் கிரிகைசெய்வர் ஏனென்றால்
இறைவனின் பிடிக்குள்ளே அசுரத்தை அகப்படுத்தி
தேவரும் சூழ்ந்ததனைத் திறம்படவே நடத்திடவாம்.

06. அர்த்தமுள்ள ஒருவர் முன் ஆராத்தி எடுத்துப்பின்
பொட்டுமதில் தொட்டு வைப்பார் தொடர் கருமம் ஏனென்றால்
அர்த்தமுள்ளோர் போகு முன்னர் அசுரத்தார் சென்றிடாமல்
விநாயகரை முன்னாலே செல்லவைக்க என்றறிவீர்.

07. கூட்டிப் பெருக்கிப்பின் முற்றத்தில் கோலமிட்டு
வீட்டிற்கு முன்னாலே அலங்கரிப்பர் ஏனென்றால்
தாய்க்கெல்லாம் தாயான பூமாதாத் தாயாளை
தலைவாரிப் பூச்சூடி பொட்டிட்டும் பார்ப்பதற்காம்.

08. எக்கருமம் செய்தாலும் தேங்காயை உடைத்துப்பின்
முடியையும் அகற்றியதை முன்வைப்பர் ஏனென்றால்
தேங்காயில் அசுரத்தைப் பிரதிட்சை செய்தழித்து
கருமத்தைத் தொடங்கினால் அதுவெற்றி பெறும் என்பதாலாம்.

09. ஆயிரம் தான் இருந்தாலும் வீடுதேடி வந்தவருக்கு
வெற்றிலை கொடுத்துத்தான் வரவேற்பர் ஏனென்றால்
பகை மறைத்துப் பெறுமதியை உயர்த்துகின்ற தன்மை
வெற்றிலைக்கு மட்டுமே உண்டென்ற தன்மையாலாம்.

10. முழுவியளம் என்று சொல்லி வீட்டாரை முன்னிறுத்தி
வெளியாலே செல்கின்ற வழமையுண்டு ஏனென்றால்
பயணங்கள் வெற்றியாக முடியுமென்பதற் காகவன்று
வீட்டாரின் நினைவு திரும்பி வரும்வரை நிலைப்பதற்காம்.

## வழித்துணை - 85

01. அடுத்தவரின் நிம்மதிக்குப் பங்கங்கள் விளைவிப்போர்
நிம்மதியாய் வாழ்வது போல் பார்வைக்குத் தோன்றினாலும்
நிம்மதிக் குறைவு பின்னர் அவர் மனதை நிரப்பிவிட
தன்மதியை எண்ணியவர் நிம்மதியை இழந்திடுவர்.

02. அமைதியான பிறர்வாழ்வை சீர்குலைத்து வாழ்பவர்கள்
அமைதியாக வாழ்வதுபோல் அடுத்தவற்கு தோன்றினாலும்
அமைதியின்மை பின்னரவர் அகத்தினையே ஆட்கொள்ள
சுமைகூலி கிடைத்ததென்று அமைதிவாழ்வை இழந்திடுவர்.

03. பிறர் வாழ்வைக் கெடுத்துவிட்டு தாம் மட்டும் வாழ்பவர்கள்
பெருவாழ்வு வாழ்வது போல் மற்றவற்குத் தோன்றினாலும்
கெடுமதிகள் பலபின்னர் அவர்வாழ்வைக் கெடுத்துவிட
கொடுத்ததே கிடைத்ததென்று நல்வாழ்வை இழந்திடுவர்.

04. பிறருக்குத் துன்பத்தைக் கொடுத்துவிட்டு இன்புறுவோர்
இன்பமாக வாழ்வது போல் பார்ப்போற்குத் தோன்றினாலும்
இன்பமென்று எண்ணியதே பின்துன்பமாக மாறிவிட
கைமாறு கிடைத்ததென்று கண்ணீரில் கரைந்திடுவர்.

05. பிறருக்கு வேதனையைக் கொடுத்துவிட்டு மகிழ்ந்திருப்போர்
சாதனைகள் புரிந்தவர் போல் சார்ந்தோற்குத் தோன்றினாலும்
வேதனையைச் சுமப்போரின் சாபங்கள் பலித்துவிட
சோதனைமேல் சோதனைக்கு ஆழாகி மகிழ்விழப்பர்.

06. ஆழக் கடலினுள்ளே மூச்சடக்கி மூழ்கினால் தான்
தாழக் கிடக்கின்ற முத்தெடுக்க முடிவதைப்போல்
மாணவரும் புலனடக்கி கல்விக் கடல் மூழ்கினால் தான்
வாழ்வதற்குத் தேவையான வகையனைத்தும் பெற்றிடலாம்.

07. திங்களோர் பத்து அன்னை தியாகங்கள் புரிவதால் தான்
தங்கிய மகவைப் பெற்று தாயென்று மகிழ்வதைப்போல்
மாணவரும் ஆண்டுசில அர்பணித்துக் கற்றிட்டால் தான்
வேண்டிய தெல்லாம்பெற்று வெற்றிபல குவித்திடலாம்.

08. சந்தனக் கட்டைதனை கல்லிலே உரைப்பதால்தான்
மங்கலம் பொங்கிநல்ல மணமது கமழ்தல்போல
மாணவரும் தம்மைத்தம் கல்விக்காய் வருந்தினால் தான்
திக்கெல்லாம் போற்றும் நல்ல திகழொளி பெற்றிடலாம்.

09. நிலத்தினைப் பண்படுத்தி விதையினை விதைப்பதால்தான்
அறுவடைக் காலம்நல்ல நிறைவினை அடைதல்போல
மாணவரும் தம்மைத்தாமே பண்படுத்திக் கற்றிட்டால்தான்
பெறுவன எல்லாம் பெற்று பெருவாழ்வு வாழ்ந்திடலாம்.

10. சின்னநெற் கதிரெடுத்து சிறுபுற்றில் குவிப்பதால் தான்
வண்ணமனை மக்களொடு பின்னெலிகள் மகிழ்வதைப் போல்
மாணவரும் சிறுகச்சிறுக பெருங்கல்வி பெற்றிட்டால்தான்
நன்மதிப்பினொடு பின்னர் நானிலத்தில் மகிழ்ந்திடலாம்.

## வழித்துணை - 86

*01.* பாங்கிளை தன்னில் தோன்றி மாவெல்லாம் தானாய் மாறும்
குருவிச்சை மாவினோடு தன்னையும்பின் அழித்திடல்போல்
மனதுக்குள் சிறிதாய்த் தோன்றி மனமெல்லாம் தானாய் மாறும்
தீயவை மனத்தினோடு மனிதத்தை அழிக்கும் காண்பீர்.

*02.* நெல்லினுள் சிறிதாய்த்தோன்றி நெல் முற்றும் தானாய் மாறும்
புல்லது நெல்லினோடு தன்னையும் பின் அழிந்திடல் போல்
சிந்தையுள் சிறிதாய்த்தோன்றி பின் சிந்தனை முழுவதுமாகும்
சந்தேகம் சிந்தையோடு சந்ததி அழிக்கும் காண்பீர்.

*03.* வீட்டின் மேல் சிறிதாய் வீழ்ந்து வீடெலாம் தானாய் மாறும்
நெருப்பது வீட்டினோடு தன்னையும்பின் அழித்திடல் போல்
நட்பின் மேல் சிறிதாய வீழ்ந்து நட்பெல்லாம் தானாய் மாறும்
பகையது நட்பினோடு நாட்டையே அழிக்கும் காண்பீர்.

*04.* பாற்குடம் தன்னுள் வீழ்ந்து பால்முற்றும் தானாய் மாறும்
மோர்த்துளி பாலினோடு தன்னையும் பின் அழித்திடல் போல்
உள்ளத்துள் சிறிதாய் வீழ்ந்து உள்ளமே தானாய் மாறும்
கள்ளம்பின் உள்ளத்தோடு உள்ளதும் அழிக்கும் காண்பீர்.

*05.* நீரினுள் வீழ்ந்து பின்னர் நீர் முற்றும் தானாய் மாறும்
உப்பது நீரினோடு தன்னையும் பின் அழித்திடல் போல்
நெஞ்சினுள் சிறிதாய்த் தோன்றி நெஞ்சமே தானாய் மாறும்
வெஞ்சினம் வாழ்வினோடு வளத்தையும் அழிக்கும் காண்பீர்.

06. அலைச்சல் அதிகமென்று கருமமொன்றைத் தவறவிட்டு
விளைச்சலைப் பெற்றிடாமல் வீண்காலம் கழிப்பதிலும்
விளைச்சலை மனத்திருத்தி அலைச்சலினை எதிர்கொண்டால்
அலைச்சலே பின் விளைச்சலாகி பெரும்லாபம் தந்திடுமாம்.

07. பிரச்சினை அதிகமென்று பொறுப்பொன்றைத் தவறவிட்டு
நிம்மதியைப் பெற்றிடாமல் நீண்டதுயர் கொள்வதிலும்
நிம்மதியை மனத்திருத்தி பிரச்சினையை எதிர்கொண்டால்
பிரச்சினைகள் தீர்ந்திடலேபின் பெருஞ் சுகத்தைத் தந்துவிடும்.

08. முடியாத கருமமென்றோர் முடிவதனை எடுத்துவிட்டு
விடிவுதனை எட்டிடாமல் வீண்காலம் கழிப்பதிலும்
விடிவுதனை மனத்திருத்தி முடியுமென்று முயற்சித்தால்
முடியுமென்ற முடிவேபின் விடிவுதனைத் தந்துவிடும்.

09. கொடுமைகள் அதிகமென்று கூடிவாழ்தல் தனைவிடுத்து
இனிமையான இல்லறத்தை இழந்து நாம் வாழ்வதிலும்
இனிய வாழ்வை மனத்திருத்தி கொடுமைகட்குமுகம் கொடுத்தால்
கொடுமையேபின் இரக்கமாகி இனிய வாழ்வைத் தந்துவிடும்

10. கடினமான காரியம் என்று ஒன்றை எண்ணிவிட்டு
சுலபத்தை அடைந்திடாமல் சோகத்தில் வாழ்வதிலும்
சுலபத்தை மனந்திருந்தி கடினமதைக் கையாண்டால்
கடினமே பின் சுலபமாகி சுகவாழ்வைத் தந்துவிடும்.

## வழித்துணை - 87

1. தந்ததிற்கு நன்றிசொல்லல் இறைவழிபாடு
நீதந்தால் நான் தருவேன் என வணங்கல் குறைபாடு
கேட்டதைத் தந்தால் தான் நன்றியுண்டு என்றல்ல
கேட்காமல் தந்ததிற்கே நன்றி காட்டல் சிறப்பாகும்.

2. பிறக்கின்ற போதிறைவன் குறையேதும் விடுவதில்லை
பிறந்தபின்னால் உறுப்பொன்றை மேலதிகம் தாராமையைப்போல்
வாழ்க்கையின் நியதியையும் பிறந்த அன்றே தருமிறைவன்
மாற்றமதில் கேட்டிட்டால் மீளாய்வு செய்ய மாட்டான்.

3. கோயிலை இடித்தாலும் கோபுரத்தைக் கட்டினாலும்
தந்தவற்றில் இறைவனேதும் மாற்றங்கள் செய்யமாட்டான்
நன்மைக்கும் தீமைக்கும் பலன்கிடைக்கும் காலமது
மறுபிறப்பே என்றறிந்து இப்பிறப்பில் நடந்திடுவீர்.

4. படைத்தெம்மை விடுவது இறைவனது கடனாகும்
படைத்தபின்னால் பிளைப்பது எங்களது கடனாகும்
பிளைப்பினையும் தாவென்று இறைவனை நாம் கேட்பது
மானிடத்தின் மகிமைதனை உணராத செயலாகும்.

5. தான் படைத்த படைப்பினிற்கு பணியாற்றிக் கிடப்பதற்கே
எமைப்படைத்தான் இறைவனென்று நாமறிந்து கொள்ளாமல்
அவன் படைப்பை நாமழித்து அவனைமட்டும் வணங்கிநின்றால்
ஏன் படைத்தேன் மனிதத்தை என்றிறைவன் எமையழிப்பான்.

6. அறிவாளி என்று நாங்கள் சொல்பவரும் அதுவன்று
அறிவிலிகள் என்று நாங்கள் சொல்பவரும் அதுவன்று
புத்தகத்தில் அற்றசில புத்திக்குள் வருமந்த
பொக்கிஷத்தைக் கொண்டோரே அறிவாளி என்றறிவீர்.

7. பக்திமான்கள் என்று நாங்கள் சொல்பவரும் அதுவன்று
பக்தியிலார் என்று நாங்கள் சொல்பவரும் அதுவன்று
கோயிலுக்குள் அற்ற சில கோடிகளில் இருக்குமதை
உணர்ந்து சேவை செய்வோரே பக்திமான்கள் என்றறிவீர்.

8. செல்வந்தர் என்று நாங்கள் சொல்பவரும் அதுவன்று
வறியவர்கள் என்றுநாங்கள் சொல்பவரும் அதுவன்று
சொத்துக்குள் அற்றசில சித்தத்துள் இருக்குமந்த
சிறப்பினைப் பெற்றோரே செல்வந்தர் என்றறிவீர்.

9. வீரர்கள் என்று நாங்கள் சொல்பவரும் அதுவன்று
கோழைகள் என்றுநாங்கள் சொல்பவரும் அதுவன்று
போருக்குள் சுற்றசில பொறுமைக்குள் இருக்குமதை
பாருக்குள் கொண்டவரே வீரர்கள் என்றறிவீர்.

10. அழகுடையார் என்று நாங்கள் சொல்பவரும் அதுவன்று
அழகிலார் என்று நாங்கள் சொல்பவரும் அதுவன்று
முகத்தினில் அற்றசில அகத்தினில் இருக்குமந்த
மகத்துவம் உடையோரே அழகுடையார் என்றறிவீர்.

## வழித்துணை - 88

01. நுனியிருந்து படித்தால்தான் புத்தகத்தின் பொருள் புரியும்
அடியிலிருந்து படித்திட்டால் அர்த்தங்கள் மாறிடல்போல்
முதலிருந்து வாழ்வுதனை அறிந்தால்தான் வாழ்வாகும்
அல்லாத எல்லாம் அடிபடிக்கும் செயல்போலாம்.

02. அடிப்பக்கம் நட்டால் தான் மரம்தளிர்க்கும் அல்லாமல்
நுனிப்பக்கம் நடுவதால் மரம்பட்டு அழிதல்போல்
மூத்தோரை மதித்தால்தான் இளையோரும் வளம்பெறுவர்
அல்லாத எல்லாம் நுனிப்பக்கம் நடல்போலாம்.

03. நுனிப்பக்கம் உரித்தால்தான் தேங்காயில் பொச்சகலும்
அடிப்பக்கம் உரித்திடுதல் கடினமான காரியம் போல்
மென்போக்கை கடைப்பிடிப்போர் மேன்மேலும் வளம்பெறுவர்
அல்லாத எல்லாம் அடியுரிக்கும் செயல்போலாம்.

04. அடித்துலாவை மிதித்தால்தான் ஆழநீரை எடுத்திடலாம்
நுனித்துலாவை மிதிப்பதனால் ஆழமதே கண்டிடல்போல்
அடிப்படையை அறிந்தால்தான் பிரச்சினையைத் தீர்த்திடலாம்
அல்லாத எல்லாம் நுனி மிதிக்கும் செயல்போலாம்.

05. நுனிக்கடலால் நடந்தால் தான் அடியாழம் தெரியவரும்
அடியாழம் தெரியாமல் காலைவிடல் அபாயம் போல்
படிப்படியாய் முயன்றால்தான் முன்னேற்றம் கைகூடும்
அல்லாத எல்லாம் ஆழமறியாமல் கால்விடும் செயல்போலாம்.

06. உங்களிடம் இருப்பதொன்று பிறரிடம் இல்லையெனில்
அதற்காக அவரை நீங்கள் தாழ்வாக எண்ணாதீர்
அவரிடம்இருப்பதொன்று உங்களிடம் இருக்காது
அறிந்தவரை மதித்தால்தான் உம்மதிப்பு மதிப்பாகும்.

07. தோல்வியாளர் என்றொருவர்நிலையினைவைத்துநீங்கள்
மேல்நிலையில் உள்ளவர்போல் மேதினியில் நடவாதீர்
வெற்றியினைத் தந்தவரும் அவரேதான் என்றறிந்து
பற்றோடு நடந்திடுவீர் வெற்றியென்பது அதுவேயாம்.

08. குற்றவாளி என்றொருவர் கூண்டிலே ஏறிவிட்டால்
மற்றவர்கள் சுற்றவாளி என்று அர்த்தம் கொள்ளாதீர்
மனச் சாட்சிக் கூண்டிலெமை நாமேற்றி விசாரித்தால்
மிகப்பெரிய குற்றவாளி நாமாயும் இருந்திடலாம்.

09. நோயாளி என்றொருவர் உடல்நிலைக்கு நாமமிட்டு
உடனிருக்க விரும்பாமல் ஊரைவிட்டே ஓடாதீர்
அறிந்தநோய் சிறியதாகும் அறியாநோய் பெரிதாகும்
அறியாநோய் உடையவர்கள் நாமாயும் இருந்திடலாம்.

10. ஊனமுற்றோர் என்றொருவர் உறவுதனை வெறுத்துவிட்டு
வானமெங்கள் காலடியில் என்று எண்ணல் தவறாகும்
ஆனமட்டும் உள்ளமதை அகழ்ந்துநாம் பார்த்தால்தான்
ஊனமெங்கள் உள்ளத்துள் இருப்பதுவும் தெரியவரும்.

## வழித்துணை - 89

01. நாம் விரும்பும் பூவை நாங்கள் இறைவனக்குச் சாத்துகையில்
அவன் விரும்பும் அன்பினையும் அதனோடு சாத்தவேண்டும்
அவன் விரும்பும் அன்பைநாங்கள் அவனுக்குச் சாத்தாமல்
நாம் விரும்பும் பூவை மட்டும் சாத்திடுதல் சரியாமோ.

02. நாம் விரும்பும் ஆலயத்துள் இறைவனைநாம் இருத்துகையில்
அவன் விரும்பும் நெஞ்சத்தும் அவனைநாம் இருத்த வேண்டும்
அவன் விரும்பும் நெஞ்சத்தே அவனைநாம் இருத்திடாமல்
நாம் விரும்பும் ஆலயத்துள் இருத்திடுதல் சரியாமோ.

03. நாம் விரும்பும் வேளையெலாம் இறைவனைநாம் அழைக்கையிலே
அவன் விரும்பும் வேளையிலும் அவனிடம் நாம் செல்ல வேண்டும்
அவன் விரும்பும் வேளையிலே அவனிடம் நாம் செல்லாம்
நாம் விரும்பும் வேளை மட்டும் அழைத்திடுதல் சரியமோ.

04. நாம் விரும்பும் இப்பிறப்பில் இறைவனைநாம் போற்றுகையில்
அவன் விரும்பும் பிறப்பினையும் நாம் போற்றித் துதிக்க வேண்டும்
அவன் விரும்பும் பிறப்பினைநாம் போற்றித் துதிக்காமல்
நாம் விரும்பும் பிறப்பில் மட்டும் போற்றிடுதல் சரியாமோ.

05. கடலோரம் சங்கொன்றைக் கண்டெடுத்தோர் எறிந்திடாமல்
வலம்புரியோ இடம்புரியோ என்றறிந்து பலன்பெறல் போல்
வாழ்க்கையிலும் எதையும் நீர் ஆய்ந்தறிவீர் நஸ்ரமில்லை
லாபமெனில் அதன்லாபம் உங்களுக்கே என்றறிவீர்.

06. பெருமுயற்சி சிலவேளை வெற்றியிலே முடிவடையும்
அதே முயற்சி சிலவேளை தோல்வியிலே முடிவடையும்
வெற்றியும் தோல்வியும் முடிவுதான் என்றறிந்து
முயற்சியைக் கனம்பண்ணும் வெற்றி பின்னர் உமதாகும்.

07. அறுசுவையும் அதன்மதிப்பும் நாவிலே இருக்குமட்டும்
நாவையது கடந்து விட்டால் எல்லாமே ஒன்றேபோல்
பெறுமதியும் பெருமதிப்பும் இப்புவியில் இருக்குமட்டும்
இறையுலகுட் புகுந்திட்டால் எல்லாமே ஒன்றாகும்.

08. அணுகுமுறை சரியானால் பெரும்லாபம் உமக்குண்டு
அது கொஞ்சம் பிசகானால் பெருநஷ்டம் உமக்குண்டு
தவறான அணுகுமுறை தனைத்தவிர்த்து வாழ்க்கையிலே
நிதானமாய் அணுகிடுவீர் நிகரில்லாப் பலன் பெறுவீர்.

09. தேவையென்று வந்திட்டால் தடைபெரிதாய்த் தெரிந்திடாது
தேவையில்லை என்று கண்டால் சிறுதடையும் பெரிதாகும்
சிறுதடையோ பெருந்தடையோ தடை தாண்டிச் செல்வதுவே
சிறப்புற்று வாழ்வதற்குச் சிறந்தவழி என்றறிவீர்.

10. விண்வெளியில் ஒலிஒளிகள் வியாபித்து இருந்தாலும்
வேண்டுவோர்க்கு வேண்டுவது கருவிமூலம் கிடைத்தல்போல்
ஆண்டவனும் அகிலமெலாம் வியாபித்து இருந்தாலும்
வேண்டுதலின் தன்மைக்கேற்ப காட்சிதந்து அவனருள்வான்.

## வழித்துணை - 90

01. விதைத்தது முளைத்திடுதல் நெல்லு எள்ளில் மட்டுமன்று
அன்றாடம் நாம் செய்யும் கருமங்கள் அனைத்திலுமாம்
நல்லதைச் செய்வோற்கு நல்லதே கிடைத்தல்போல்
கெடுதலைச் செய்வோற்கும் கெடுதலே கிடைத்திடுமாம்.

02. கேட்டதும் கிடைப்பது பொருள் பண்டம் மட்டுமன்று
இறையருள் கூடநாங்கள் கேட்டதும் கிடைப்பதாகும்
பொருள் பண்டம் பெறுதற்காய் பிறரைநாம் ஈர்த்தல் போல்
இறையினையும் ஈர்த்தாலே இறையருள் கிட்டுமாம்.

03. கொடுத்துநாம் வாங்குவது பட்சணங்கள் மட்டுமன்று
மரியாதைகூட நாங்கள் கொடுத்தேதான் வாங்கவேண்டும்
பட்சணங்கள் விடயத்தில் காட்டுகின்ற பரிவைப்போல்
மரியாதை கொடுத்தால்தான் மரியாதை கிடைக்குமாம்.

04. போதுமென்று எண்ணுவது சாப்பாட்டில் மட்டுமன்று
வாழ்க்கையின் அனைத்திலும் அந்தமனம் இருக்கவேண்டும்
சாப்பாட்டில் ஏற்படும் போதுமென்ற மனத்தைப்போல்
வாழ்க்கையிலும் வந்தாலே வாழ்க்கைப்பலன் கிடைத்திடுமாம்.

05. சுட்டெரிக்க வேண்டியது சுடலைப்பிணம் மட்டுமன்று
பட்டொழியக் காரணமாய் இருக்கின்ற பலதையுமாம்
பட்டொழியக் காரணமாய் இருப்பவற்றைச் சுட்டிடாமல்
பிணம் சுட்டு என்னபலன் சுடாதவையும் பிணம் தானே.

06. விட்டுக்கொடுக்க வேண்டியது பட்டத்துநூலை மட்டுமன்று
விடாப்பிடியாய் நிற்கின்ற வேண்டாத பலதையுமாம்
பட்டத்து நூலைவிட அதுஉயர உயரப் பறத்தல்போல்
விடாப்பிடியை விட்டிடவும் உயர்நிலையே கிட்டிடுமாம்.

07. கட்டழிக்க வேண்டியது கால் நெரிஞ்சி மட்டுமன்று
கெட்டவழி எமைநடத்தும் கேடுகெட்ட குணத்தையுமாம்
கேடுகெட்ட குணங்களை நாம் கட்டழிக்க முயலாமல்
கால்நெரிஞ்சி அழித்தென்ன நாம் பிறர்க்கு நெரிஞ்சிதானே.

08. தட்டிநாம் கேட்பதெல்லாம் பிறர்தவறை மட்டுமன்று
கொட்டிக் கிடக்கின்ற எம்மிடத்துக் குறையையுமாம்
எம்மிடத்துக் குறைகளை நாம் எமைத் தட்டிக் கேட்காமல்
தட்டிப்பிறர் தவறுகேட்டல் மிகப்பெரிய தவறாகும்.

09. வட்டிகட்ட வேண்டியது கடன்தொகைக்கு மட்டுமன்று
பாடுபட்டுப் பெற்றெடுத்து வளர்த்த கடன் தனக்கதுமாம்
பெற்றெடுத்து வளர்த்தகடன் வட்டியை நாம் கட்டாமல்
கடன்வட்டி கட்டியென்ன வளர்த்தகடன் வட்டிதானே.

10. பூட்டிநாம் வைத்திடுதல் புதையல்களை மட்டுமன்று
ஏட்டிக்குப் போட்டிபோட்டு எதிரியாக்கும் வழியையுமாம்
எதிரியாக்கும் வழிகளைநாம் பூட்டிவைக்க முயலாமல்
புதையல்களைப் பூட்டியென்ன எதிரியாலது திறந்திடாதோ.

## வழித்துணை - 91

01. வேகமாய்க் சிந்தைசொல்ல விவேகத்தை நழுவவிட்டு
ஆகவே மொத்தமந்த அவலத்தால் அழிவதிலும்
ஏகமும் போற்றுகின்ற நிதானத்தைக் கடைபிடித்து
சோகத்தை நீக்கிநல்ல சுகத்தினைப் பெறுதல் நன்றாம்.

02. பேர்பெற்ற அனைத்துமிப்போ தெருக்களில் மலிந்ததாலே
ஆர்வத்தை நழுவவிட்டு அசமந்தம் ஆதலிலும்
பாரினைவெல்ல எதிலும் பற்றோடு ஆர்வம் காட்டி
சோர்வினைப் போக்கிநல்ல சுகத்தினைப் பெறுதல் நன்றாம்.

03. கடும்போக்கு வழியை நாங்கள் காலத்தால் கையிலேந்தி
குடும்பத்தைக் கூடக்குலைத்து குறைவாழ்க்கை வாழ்வதிலும்
அடுக்குமோர் வழியாமந்த மென்போக்கைக் கடைபிடித்து
எடுத்ததோர் வாழ்வில் நல்ல நிறைவுகள் பெறுதல் நன்றாம்.

04. இனிதான வழியிருக்க அநியாய வழியைத்தேடி
மனிதாபி மானத்தோடு நல்மதிப்பையும் இழப்பதிலும்
கனிவோடு பேசிமற்றோர் களிப்புறும் வழியை நாடி
புனிதராய் வாழும்வாழ்வைப் புவியதில் பெறுதல் நன்றாம்

05. ஏட்டிக்குப் போட்டியென்ற எதுகையில் கருமமாற்றி
ஈட்டிய செல்வத்தோடு இன்பத்தை இழப்பதிலும்
கூட்டியே வாழ்வில் நாங்கள் ஒருமித்த நிலையில்நின்று
தீட்டியே நன்மை பலதைத் திரட்டியே பெறுதல் நன்றாம்.

06. மயிலாடக் கண்டது போல் தானாட வேண்டுமென்று
குயிலாடிக் குரல்பெருமை தன்னையும் தான் இழத்தல்போல்
குடும்பத்தைப் பிறர்நடத்தக் கண்டுசில குழந்தைகளும்
தாமுமதை நடத்தவெண்ணல் தம்மைத்தாம் அழிப்பதாகும்.

07. கனியுதிர அதுபோலத் தானுதிர வேண்டுமென்று
காயுதிர்ந்து காலத்தால் அழிந்தொழிந்து போதல்போல்
பருவத்து சுகம் சிலதை பாலத்தில் பெற எண்ணல்
பாலத்தினோடுபின் பருவத்தையும் அழிப்பதாகும்

08. மான்பாய அது போலத் தான்பாய வேண்டுமென்று
மரை பாய்ந்து மரத்தோடு மோதித்தான் அழிதல்போல்
விரைவாகப் பிள்ளைகளும் விபரத்தை அறியாமல்
இல்லறத்துள் புகஎண்ணல் இல்வாழ்வை அழிப்பதாகும்.

09. கானல் மண்தெறிக்கக் கண்டுஅதை நீரென்று
கன்று ஒன்று குடிக்க ஓடிக் கானகத்தில் தொலைந்திடல்போல்
கவர்ச்சியினைக் கண்டுசில பிள்ளைகளும் பின்செல்லல்
போகுமிடம் தெரியாமல் பொறியொன்றுள் வீழ்வதாகும்.

10. தாய்பறக்க அதுபோலத் தாம் பறக்க வேண்டுமென்று
குஞ்சுகளும் பறந்துபின் பருந்திற் கிரையாதல் போல்
சிறுவர்களும் பருவத்திற் கப்பாலே பறக்க எண்ணல்
விசமிகட்கு விருந்தாகி வாழ்வுதனை அழிப்பதாகும்.

## வழித்துணை - 92

01. மழைபொழிய அதுபோலத் தான்பொழிய வேண்டுமென்று
மரம்பொழிந்து சிளுநீரைத் தானிழந்து கருகிடல்போல்
துடைத்தெறிய வழியறிந்தோர் துர்நடத்தை பலவிழைக்க
அறியாத பருவத்தார் அதையிழைத்தல் அழிவாகும்.

02. அணில் தாவ அதுபோலத் தான்தாவ வேண்டுமென்று
எலிதாவி எழிலிழந்து பூனையின்வாய்ப் போதல்போல்
பகட்டாக வாழ்வோரின் பசபசப்பிற் கிரையாகி
பாலர்தம் பசுமையினைப் பறிகொடுத்தல் அழிவாகும்.

03. பாம்பாட அதுபோலத் தானாடவேண்டுமென்று
சிறுஓணான் தானாடித் தனைக்காட்டிக் கொடுத்தல்போல்
பெருமாந்தர் சிலர் தீய செயல் செய்யக் கண்டுகொண்டு
சிறுபாலர் அதைநாடல் தமக்கேதான் அழிவாகும்.

04. நிலாக்காய அதுபோலத் தான்காய வேண்டுமென்று
மின்மினிகள் தாம் காய்ந்து தம்ஒளியும் கெட்டிடல்போல்
சொர்க்கமெனப் பிறர்காட்டும் சுகபோகத்திற் காட்பட்டு
பிள்ளைகளும் நடந்திடுதல் நிஜவாழ்விற் கழிவாகும்.

05. தேடிப்பிடிக்க வேண்டியது தொலைந்தவற்றை மட்டுமன்று
தேடக் கிடைக்காத தெளிவான அறிவையுமாம்
தெளிவான அறிவை நாங்கள் தேடாமல் விட்டுவிட்டு
தொலைந்தவற்றைத் தேடியென்ன மடமை வாழ்வைத் தொலைத்திடாதோ.

06. விட்டெறிய வேண்டியது வீட்டமுக்கை மட்டுமன்று
ஒட்டுண்ணி போல நெஞ்சுள் ஒட்டி நிற்கும் அழுக்கையுமாம்
ஒட்டி நிற்கும் நெஞ்சமுக்கை விட்டெறிய முயன்றிடாமல்
வீட்டமுக்கை விரட்டியென்ன நெஞ்சமுக்கு நிறையும் தானே.

07.வளர்தெடுக்க வேண்டியது வாரிசினை மட்டுமன்று
மறைந்த பின்னால் இறைவனைநாம் அடைகின்ற மார்க்கமுமாம்
இறைவனை நாம் அடைகின்ற மார்க்கத்தை வளர்த்திடாமல்
வாரிசினைவளர்த்தென்ன வழித்துணை பின் இறைதானே.

08. கட்டிவைக்க வேண்டியது கட்டாக்காலி மட்டுமன்று
கண்டபடி அலைகின்ற எங்களது மனத்தையுமாம்
எங்களது மனங்களை நாம் கட்டி வைக்க முயலாமல்
கட்டாக்காலி கட்டியென்ன நாமுமந்த வகைதானே.

09.எட்டிப் பிடிக்க வேண்டியது எட்டாதவை மட்டுமன்று
எட்டக் கூடியதும் எட்டிப்பிடிக்க வேண்டியதாம்
எட்டக் கூடியதை எட்டிப்பிடிக்க முயலாமல்
எட்டாதவற்றிற்கு எட்டுவது எட்டுவதையும் விடத்தானே.

10. முகஸ்துதிகள் பார்ப்பதுவும் பிழையென்று ஆகாது
முடிந்தோர்க்கு அதுவன்றி முடியாற்காய் அதுவிருந்தால்
முடியாரை ஒதுக்கி விட்டு முடிந்தோர்க்காய் முகம் பார்த்தால்
முடியார்க்கு முகம் பார்த்து முடிந்தோரை இறைஒதுக்கும்.

## வழித்துணை - 93

01. வெள்ளத்தைத் திறந்திடல்தான் முறையென்று ஆகாது
அதன் பாதையினை அடைக்காமல் இருப்பதுவே முறையது போல்
கொடை கொடுக்கும் முறையேதான் முறையென்று ஆகாது
பிறர் பிழைப்பைக் கெடுக்காமல் இருப்பதுவே முறையதுவாம்.

02. முற்றத்தைக் கூட்டுதல் தான் முறையென்று ஆகாது
அதில் குப்பையினைக் கொட்டாமல் இருப்பதுவே முறையது போல்
திருந்திவிட்டோம் என்றிடல் தான் முறையென்று ஆகாது
நாம் கெட்டிடாமல் இருப்பதுவே முறையான முறையதுவாம்.

03. சிரமதானம் செய்திடல் தான் முறையென்று ஆகாது
கல்லுமுள்ளை கொட்டாமல் இருப்பதுவே முறையதுபோல்
சமாதானம் செய்திடல்தான் முறையென்று ஆகாது
யாரும் சண்டையினைத் தொடங்காமல் இருந்திடலே முறையது வாம்.

04. வேலிவாசல் அடைத்தல் தான் முறையென்று ஆகாது
யாரும் எல்லைகளைத் தாண்டாமல்இருப்பதுவே முறையதுபோல்
கோடேறி வழக்கிடல்தான் முறையென்று ஆகாது
ஒரு கோடுபோட்டு வாழ்வதுவே வாழ்கின்ற முறையதுவாம்.

05. மூக்கினைப் பொத்துதல் தான் முறையென்று ஆகாது
நாற்றமெனில் புதைத்திடலே முறையான முறையதுபோல்
சோகத்தைச் சுமப்பது தான் முறையென்று ஆகாது
சோலிகளை வளர்க்காமல் இருந்திடலே முறையதுவாம்.

06. வாங்குபவர் மலிவாக வாங்கிடவே முயற்சிப்பர்
விற்பவர்கள் அதிகவிலை விற்றிடவே முயற்சிப்பர்
பெறுமதிக்குவாங்குவோரும் விற்போரும் தோன்றுமட்டும்
வாழ்க்கையுமோர் வர்த்தகம் தான் என்ற நிலை மாறாது.

07.கொடுப்பவர்கள் குறைத்துத்தான் கொடுப்பதற்கு முயற்சிப்பர்
எடுப்பவர்கள் கூடுதலாய் எடுத்திடத்தான் முயற்சிப்பர்
உரியபடி கொடுப்பவரும் எடுப்பவரும் தோன்று மட்டும்
வாழ்க்கையுமோர் வர்த்தகம் தான் என்றநிலை மாறாது.

08. நம்நலனைப் பேணிடவே நாமிங்கு முயற்சிப்போம்
தம்நலனைப் பேணிடவே பிறரிங்கு முயற்சிப்பர்
பிறர்நலனைத் தம்நலனாய் பேணுபவர் தோன்று மட்டும்
வாழ்க்கையுமோர் வர்த்தகம்தான் என்றநிலை மாறாது.

09.நம்பக்க நியாயமதே சரியெனநாம் முயற்சிப்போம்
தம்பக்க நியாயமதே சரியென பிறர் முயற்சிப்பர்
நியாயத்தை நியாயமென்போர் நீழுலுகில் தோன்றுமட்டும்
வாழ்க்கையேமோர் வர்த்தகம் தான் என்ற நிலை மாறாது.

10. இன்புறுவோர் மேலும் தாம் இன்புறவே முயற்சிப்பர்
துன்புறுவோர் இன்புறவே இடையறாது முயற்சிப்பர்
இன்பமும் துன்பமும் சகஜம் என்போர் தோன்றுமட்டும்
வாழ்க்கையுமோர் வர்த்தகம் தான் என்றநிலை மாறாது.

## வழித்துணை - 94

01. வெண்ணிலா தன்னைத்தேடி வேகமாய் விரைந்து சென்று
தண்ணொளி பரப்பும் தரையை கிண்டியே அள்ளிவந்து
மண்ணுக்குள் என்னஉண்டு என்றறிய முயன்றிடும்நாம்
அண்மைக்குள் நிற்கும் மாந்தர் மகிமையை அறிவதுதுண்டோ.

02. இறைவனைத் தேடிக் காண இடையறா முயற்சிசெய்து
குறையேது விட்டோமென்று அதனையும் நிறைவு செய்து
மறைவாக நின்றுதானும் இறைகாண முயன்றிடும்நாம்
உறைகின்றான் எம்முள் என்ற உண்மையை உணர்வதுண்டோ.

03. தர்மங்கள் செய்யவென்று தடல்புடல் பலவும் செய்து
அர்த்தங்கள் பலவும் சொல்லி அவைதனுக் குணவளித்து
கர்வமும் கொஞ்சமோங்க களித்திட முயன்றிடும் நாம்
நிர்க்கதியினோற்குதவ நினைத்தேதும் செய்வதுண்டோ.

04. மாடிமேல் மாடிகட்டி மணவறை பலதும் வைத்து
கொடிகள் பலதைக்கொட்டி சொகுசுகள் பலதும் செய்து
நீடித்த இன்பங்காண நினைத்திங்கு முயன்றிடும் நாம்
கூடியே வாழக் கூடக் குடிசை இல்லாரை நினைப்பதுண்டோ.

05. போட்டியாய் ஒன்றைவைத்து பொருளொன்றைப் பரிசாய்க் காட்டி
ஈட்டியே அதனைவெல்வோர் இணையில்லா வீரரென்று
சூட்டியே பெயரும் புகழும் சூவென்று வியந்திடும் நாம்
நாட்டிலே அதையே தொழிலாய்ச் செய்வோரை நயப்பதுண்டோ.

06. கோயில்கள் பலதைக்கட்டி கோபுர வளமும்சேர்த்து
பாயிரம் பலதும்பாடிப் படையல்கள் படைத்துவைத்து
ஆயிரம் தடவைஐயன் பேர்சொல்லி வணங்கிடும் நாம்
கோயில்கள் யாருக்கென்ற உண்மையை உணர்வதுண்டோ.

07.பட்டங்கள் பலதும் சூட்டி பதவிகள் பலதும் பெற்று
திட்டங்கள் பலதும் தீட்டி தேசத்தில் உயர்ந்திருந்து
மட்டிலா நிலையிலுள்ளோம் என்றிங்கு மகிழ்ந்திடும் நாம்
கிட்டவே சென்றோர் சீவன் குறைசொல்லக் கேட்பதுண்டோ.

08. வட்டமாய் மேசைவந்து வரிசையாய் அமர்ந்திருந்து
சட்டமும் கொஞ்சம் சேர்த்து சபைகளில் முழக்கம் செய்து
எட்டிடும் திசைகளெல்லாம் எடுத்ததை இயம்பிடும் நாம்
கெட்டுமே நொந்தார் தம்மை ஏன்கெட்டார் கேட்பதுண்டோ.

09.சுட்டபொன் நகைகள்சூடி சுடாதநிற உடைகள்போட்டு
அட்டமயல் அசத்துபோக அலங்காரம் பலவும் செய்து
மெட்டுக்குப் பாட்டுப்போல வளத்தோடு வாழ்ந்திடும் நாம்
கட்டவே உடையிலாரைக் கண்டுமனம் கசிவதுண்டோ.

10. முழுவியளம் பார்த்தனுப்பி கண்ணூறும் படாதெரித்து
தம்மவரின் நலன்பேணி நாளாந்தம் பலவும் செய்து
தன்னலக் குதிரையேறி தரைவாழ்வைக் கடத்திடுவோர்
பிறர்நோகும் தம்நடையைக் கிஞ்சித்தும் உணர்வதுண்டோ.

## வழித்துணை - 95

01. முன்னாலே நிற்பவரால் எமக்கிடஞ்சல் என்றிடும் நாம்
பின்னாலே நிற்பவற்கு இடஞ்சலோ நாம் பார்க்க வேண்டும்
நாம் பிறர்க்கு இடஞ்சலாக இருப்பதினை உணராமல்
பிறரெமக்கு இடஞ்சலெனல் ஒற்றை வழிப் பயணமாகும்.

02. அறம்செய்ய விரும்பென்று பிறர்க்கிங்கு உணரத்திடும் நாம்
பிறர்க்கு அறம் செய்கிறோமோ என்றெண்ணிப் பார்க்கவேண்டும்
நாம்பிறர்க்கு அறம் செய்யா திருப்பதினை உணராமல்
பிறர்க்கு அறம் போதித்தல் ஒற்றைவழிப் பயணமாகும்.

03. ஒழுக்கத்தைக் கடைபிடிக்க பிறரையிங்கு தூண்டிடும் நாம்
ஒழுக்கமாக வாழ்கிறோமோ என்றெண்ணிப் பார்க்க வேண்டும்
நாமொழுக்கம் தவறுவதை கிஞ்சித்தும் உணராமல்
பிறர்க்கொழுக்கம் கற்பித்தல் ஒற்றை வழிப் பயணமாகும்.

04. பிறர்தவறை பலபேற்கும் எடுத்திங்கு இயம்பிடும் நாம்
நம்மேலும் தவறுண்டோ என்றெண்ணிப் பார்க்க வேண்டும்
நம் தவறைத் தவறென்று நாமிங்கு உணராமல்
பிறர் தவறைப் பெரிதாக்கல் ஒற்றைவழிப் பயணமாகும்.

05. நம்பிள்ளை நலன்பேணி மகிழ்விக்க முயன்றிடும் நாம்
பிறர்பிள்ளை மனங்களையும் நோகாமல் பார்க்க வேண்டும்
பிறர்பிள்ளை மனங்களது நோவதினை உணராமல்
நம்பிள்ளை நலன்பேணல் ஒற்றைவழிப் பயணமாகும்.

06. நிம்மதியாய் வாழ்வதற்கு நினைத்திங்கு முயன்றிடும் நாம்
அடுத்தவரின் நிம்மதியைக் கெடுக்கிறோமோ பார்க்க வேண்டும்
அடுத்தவரின் நிம்மதியைக் கெடுப்பதைநாம் உணராமல்
நாம் மட்டும் அதைத்தேடல் ஒற்றைவழிப் பயணமாகும்.

07. நல்வாழ்வு வாழ்வதற்ககாய் நாளெளல்லாம் உழைத்திடும் நாம்
பிறர் பிழைப்பைக் கெடுக்கிறோமோ என்றெண்ணிப் பார்க்க வேண்டும்
பிறர் பிழைப்பை கெடுப்பதைநாம் சிறிதேனும் உணராமல்
நாம் பிழைத்து நாம் வாழல் ஒற்றைவழிப் பயணமாகும்.

08. சுகவாழ்வு வாழ்வதற்காய் சுத்தமதைப் பேணும் நாம்
மற்றையோரின் சுகவாழ்வைக் கெடுக்கிறேமோ பார்க்க வேண்டும்
மற்றையோரின் சுகவாழ்வைக் கெடுப்பதை நாம் உணராமல்
நாம் மட்டும் சுகம் தேடல் ஒற்றை வழிப் பயணமாகும்.

09. சுடுவார்த்தை கேளாமல் இருப்பதற்கு முயன்றிடும் நாம்
பிறர் தம்மை வார்த்தைகளால் சுடுகிறோமோ பார்க்க வேண்டும்
வார்த்தைகளால் பிறரைநாம் சுடுவதினை உணராமல்
நல்வார்த்தை நாம் தேடல் ஒற்றை வழிப் பயணமாகும்.

10. நம்துன்பம் தீர்த்திட்டால் போதுமென்று இருந்திடும் நாம்
பிறர் துன்பம் உற நாங்கள் காரணமோ பார்க்க வேண்டும்
பிறருக்கு துன்பத்தைக் கொடுப்பதை நாம் உணராமல்
நம் துன்பம் தீர்க்க எண்ணல் ஒற்றை வழிப் பயணமாகும்.

## வழித்துணை - 96

01. தாயினார் அமுதமுலை சுரந்தபால் சிறிதெனினும்
சேயினாற் கதைசுரக்க எண்ணியதே பெரிதாகும்
எண்ணியதைப் பெரிதென்று எண்ணியே நாமவரைக்
கண்ணியமாய்க் காத்திடுதல் காலத்தின் கடனாகும்.

02. தந்தையார் நமக்காக உழைத்தகூலி சிறிதெனினும்
பிள்ளைகட்காய் அவர் உழைக்க எண்ணியதே பெரிதாகும்
எண்ணியதைப் பெரிதென்று எண்ணியே நாமவற்காய்
உழைத்தவரைக் காத்திடுதல் உற்றகடன் அடைப்பதாகும்.

03. குருமகனார் எமக்களித்த போதனைகள் சிறிதெனினும்
போதனைகள் எமக்காற்ற அவர் எண்ணியதே பெரிதாகும்
எண்ணியதைப் பெரிதென்று எண்ணியே நாமவரை
பின்பற்றல் வாழ்வாங்கு வாழ்வதற்கோர் வழியாகும்.

04. இறைவனார் எமக்கிங்கு தந்தவைகள் சிறிதெனினும்
எமக்கிந்தப் பிறப்பையவர் தந்ததுவே பெரிதாகும்
பெரும் பிறப்பைத் தந்தமையை எண்ணியே நாமவரை
தொழுதெழுதல் பெரும்பேறு பெறுதற்கோர் வழியாகும்.

05. தாகத்தைக் கண்டொருவர் தந்தநீர் சிறிதெனினும்
நம் தாகம் தீர்க்க அவர் எண்ணியதே பெரிதாகும்
எண்ணியதைப் பெரிதென்று எண்ணியே நாமவரின்
சோகத்தில் பங்கெடுத்தல் அவர்தாகம் தீர்ப்பதாகும்.

06. ஆசானார் எமக்களித்த அருங்கல்வி சிறிதெனினும்
கற்றவராய் எமையாக்க அவர் எண்ணியதே பெரிதாகும்
எண்ணியதைப் பெரிதென்று எண்ணியே நாமவரின்
பொற்பாதம் போற்றிடுதல் பெருங் கல்விப் பேறாகும்.

07.வைத்தியனார் நோய் தீர்த்த மருந்தளவு சிறிதெனினும்
நம் நோயைத் தீர்க்கஅவர் எண்ணியதே பெரிதாகும்
எண்ணியதைப் பெரிதென்று எண்ணியே நாமவரின்
சேவையினைப் போற்றிடுதல் குறைவிலாச் செல்வமாகும்.

08. உயிர்காக்க எமக்கொருவர் செய்த ஒன்று சிறிதெனினும்
உயிர்காக்க உத்தமனார் எண்ணியதே பெரிதாகும்
எண்ணியதைப் பெரிதென்று எண்ணியே நாமவரின்
எண்ணத்தைப் போற்றிடுதல் வாழ்வினிற்குப் பலமாகும்.

09.இல்லாற்கு இருப்பவர்கள் கொடுத்தவைகள் சிறிதெனினும்
கொடுக்க வேண்டும் என்றுஅவர் எண்ணியதே பெரிதாகும்
எண்ணியதைப் பெரிதென்று எண்ணியே நாமவரின்
ஈகையினைப் போற்றிடுதல் இறைவனையும் போற்றலாகும்.

10. நிலமகளாள் எமக்களித்த நிலத்தளவு சிறிதெனினும்
நாம்வாழ இடமளிக்க அவள் எண்ணியதே பெரிதாகும்
எண்ணியதைப் பெரிதென்று எண்ணியே நாமவளை
கண்ணிலொற்றி வணங்கிடுதல் இறைபாதம் வணங்கலாகும்.

## வழித்துணை - 97

01. நீர்மகனாள் எமக்களித்த நீரளவு சிறிதெனினும்
நாம் வாழ உணவளிக்க அவள் எண்ணியதே பெரிதாகும்
எண்ணியதைப் பெரிதென்று எண்ணியே நாமவளை
என்றென்றும் வணங்கிடுதல் இறையிருப்பை வணங்கலாகும்.

02. தீ மகளாள் எமக்களித்த தீயளவு சிறிதெனினும்
எம் முன்னே தோன்ற அவள் எண்ணியதே பெரிதாகும்
எண்ணியதைப் பெரிதென்று எண்ணியே நாமவளை
தீபமென வணங்கிடுதல் இறைவயிற்றை வணங்கலாகும்.

03. காற்றழகாள் எமக்களித்த காற்றளவு சிறிதெனினும்
எம்மூச்சுள் அவள் புகுதற் கெண்ணியதே பெரிதாகும்
எண்ணியதைப் பெரிதென்று எண்ணியே நாமவளை
எம்முக்குள் வணங்கிடுதல் இறை நெஞ்சை வணங்கலாகும்.

04. வான்மகளாள் எமக்களித்த அற்புதங்கள் சிறிதெனினும்
என்றுமவள் எமைக்காக்க எண்ணியதே பெரிதாகும்
எண்ணியதைப் பெரிதென்று எண்ணியே நாமவளை
சிரம்தாழ்த்தி வணங்கிடுதல் இறைமுடியை வணங்கலாகும்.

05. கடவுளின் பெயரைச் சொல்லி கடமைகள் தவறுவோர்க்கு
கடவுளார் ஒருபோதும் கருணை மழை பொழியமாட்டார்
கடமையே கடவுளென்று கடமையைச் செய்வோர்கென்றும்
கடவுளார் இறங்கிவந்து கடமைகள் அவரே செய்வார்.

06. சமூகத்தின் பெயரைச்சொல்லி ஒழுக்கங்கள் தவறுவோர்க்கு
சமூகத்தார் ஒருபோதும் துணையாக இருக்கமாட்டார்
ஒழுக்கமே சமூகமென்று ஒழுக்கமாய் நடப்போர்க் கென்றும்
சமூகத்தார் பரிந்து வந்து பணிவிடைகள் தாமே செய்வார்.

07.பெற்றோரின் பெயரைச் சொல்லி தம்வாழ்வை ஓட்டுவோர்க்கு
உற்றார்கள் ஒருபோதும் அனுசரனை காட்டமாட்டார்
தம்பேரைப் பெற்றோர் சொல்ல வைக்கின்ற மக்கட்கென்றும்
பற்றோடு பலரும் வந்து பணிவிடைகள் செய்திடுவர்.

08. பதவியின் பெயரைச் சொல்லி பலன்பெற எண்ணுவோர்க்கு
பதவியை வழங்கியோர்கள் பரிந்துரைகள் செய்யமாட்டார்
பதவியே பலனாமமென்று பதவியை மதிப்போர்க்கென்றும்
பதவியை வழங்கியோர்கள் பலன்பல செய்திடுவர்.

09.பரம்பரையின் பெயரைச்சொல்லி அரங்கேற விரும்புவோர்க்கு
கரம்நீட்டி மற்றவர்கள் ஆதரவு நல்கமாட்டார்
தரமான கொள்கையோடு தரணிமிசை வாழ்வோர்க்கென்றும்
சிரம் தாழ்த்திக் கரம்கூப்பிப் பிறர் கடமை செய்திடுவர்.

10. காரணம் ஒன்றைச்சொல்லி காலத்தைக் கடத்துவோர்க்கு
காரியம் அதுவேயாகி ஆழவேர் ஊன்றிவிடும்
உள்ளதை உள்ளபடி உரைத்திடும் உள்ளத்தார்க்கு
உள்ளது எல்லாம் வாழ்வில் உயர்வாயே அமைந்துவிடும்.

## வழித்துணை - 98

01. ஆயிரம் மரங்கள் நாட்டி அழகிய பூக்கள் வைத்து
வாயிலில் நுளைவோர் மகிழ வரவேற்புத் தருவதிலும்
புன்னகை ஒன்றே பூத்துப் புகுவோர்முன் நிற்றல்போதும்
ஆயிரம் பூக்களந்தப் புன்னகைக்குள் புதைந்தே தோன்றும்.

02.சோறொடு கறியுமாக்கி சொக்கிடும் பரிசும் சேர்த்து
விருந்தென்று வருவோற்கிட்டு வரவேற்புத் தருவதிலும்
மாறிடா அன்பாலவரை மகிழ்ந்திடச் செய்தால்போதும்
ஆயிரம் பரிசோடுணவும் அந்த அன்பிற்குள்புதைந்தே தோன்றும்.

03. கோயிலும் குளமுமோடிக் கும்பிட்டுக் கூத்துமாடி
வாயினால் புகழ்ந்து பாடி வணக்கம் நாம் தருவதிலும்
இறைவனார் படைப்பிலொன்றின் இடரினைக் களைந்தால் போதும்
ஆயிரம் வணக்கமந்த அருமைக்குள் புதைந்தே தோன்றும்.

04.வெள்ளையாய் வேட்டிகட்டி வெழுத்ததோர் சட்டைபோட்டு
அள்ளியே அணிகள் சாத்தி அழகைநாம் காட்டலிலும்
உள்ளத்தை மட்டுமென்றும் வெள்ளையாய் வைத்தால் போதும்
ஆயிரம் அழகுமந்த வெண்மைக்குள் புதைந்தே தோன்றும்.

05. பொன்னாடை தன்னைப்போர்த்தி பொற்கிளி தானும் தந்து
ஆயிரம் கரங்கள் தட்டி மரியாதை செய்வதிலும்
சொன்னதோர்சொல்லைக்கேட்டு சொன்னபடி நடந்தால் போதும்
ஆயிரம் மதிப்புமந்த அம்சத்துள் புதைந்தே தோன்றும்.

06. வதைத்துடலைச் சிதைத்துநீர் வாட்டியே வதைத்திட்டாலும்
வளர்த்த நாய் வாலாட்டிவரவேற்கும் தன்மைபோல
உதைத்தொருகால்உம்மைப்பிறர் உதறியே தள்ளினாலும்
பதைத்தவற்காய்ப் பரிந்திடலே பண்புமிகு மனிதமாகும்.

07. முகம்காட்டி முகம் மறைய ஏதுமின்றி இருக்கின்ற
ரசம்நிறைந்த கண்ணாடி தருகின்ற தத்துவம் போல்
பகைதோன்றி மறைந்த பின்னால்அகத்தினிலே ஏதுமின்றி
புதுமுகமாய்ப் பகைமுகத்தைப் பார்த்திடலே மனிதமாகும்.

08. கழுத்தோடு வெட்டுண்ட கதலிவாழை மரமொன்று
உடலினால் குலைபோட்டு தந்துகடன் முடிப்பது போல்
சொத்தோடு சுகமனைத்தும் அழிந்துதான் போனாலும்
மானிடத்தில் மகிமைதனைக் காத்திடலே மனிதமாகும்.

09. தன்னைத் தாங்குதலை இறைவனிடம் விட்டுவிட்டு
எம்மைத் தாங்கி நிற்கும் எழிலார்ந்த பூமியைப் போல்
எம்மைத் தாங்குதலை இறைவனிடம் விட்டுவிட்டு
நாம் பிறரைத் தாங்குவதே பெருமைமிகு மனிதமாகும்.

10. தரை முற்றும் தான் நடந்து தனக்கு இரை தான்தேடி
பிறர்க்கு அதை இரையாக்கித் தருகின்ற பசுவினைப்போல்
நமக்காக நாம் வாழ்ந்து நம்வாழ்வில் தேடுவதை
ஏற்றவற்கு ஏற்றபடி அளித்திடலே மனிதமாகும்.

## வழித்துணை - 99

01. தன்குணம் என்றொருவர் தன்குணத்துப் பெருமைபேசி
அவர்குணம் என்றவரும் அவர் குணத்துப் பெருமைபேசி
ஈர்குணத்தராய் இருந்து அழிந்தொழிந்து போவதிலும்
நற்குணத்தார் என்றதோர் குணரத்தராதல் வாழ்வாகும்.

02.என்னழகே அழகென்று தன்னழகுப் பெருமைபேசி
அவரழகே அழகென்று அவரழகுப் புகழ்பாடி
ஈர் அழகராய் இருந்து அழிந்தொழிந்து போவதிலும்
அகத்தழகர் என்றதோர் அழகராதல் வாழ்வாகும்.

03. என்னினமே சிறந்த இனம் என்றினத்துப் பெருமைபேசி
அவரினமே சிறந்தஇனம் என்றவரும் பெருமைபேசி
ஈர்இனத்தராயிருந்து அழிந்தொழிந்து போவதிலும்
மனித இனம் என்றதோர் இனத்தராதல் வாழ்வாகும்.

04.என்மதமே சிறந்த மதம் என்றுநான் மமதைகொண்டு
அவர் மதமே சிறந்த மதம் என்றவரும் மமதைகொண்டு
ஈர்மதத்தாராய் இருந்து அழிந்தொழிந்து போவதிலும்
எம்மதமும் சம்மதம் என்றமதம் வாழ்வாகும்.

05. என்வழி என்றதோர் வழியதனை நான்வகுத்து
அவர் வழி என்றதோர் வழியதனை அவர்வகுத்து
ஈர் வழியராய் இருந்து அழிந்தொழிந்து போவதிலும்
நேர்வழியர் என்றதோர் வழியராதல் வாழ்வாகும்.

06. மரத்திலைகள் ஆனமட்டும் மரத்திற்கு உதவிவிட்டு
மரம் விட்டு உதிர்ந்த போது மரத்திற்கே உரமாதல் போல்
மானிடரும் ஆனமட்டும் மானிடற்காய் வாழ்ந்து விட்டு
மறைகையிலே மானிடற்கே உதாரணமாதல் மகிமையாகும்.

07. ஆற்றுவெள்ளம் ஆனமட்டும் ஆற்றின் பெயர் காத்து விட்டு
ஈற்றிலது அழிவில்லா ஆழ்கடலில் கலத்தல் போல்
மானிடரும் ஆன மட்டும் இல்லறப்போர் காத்து விட்டு
ஈற்றிலவர் பேரின்பப் பேறுபெறல் மகிமையாகும்.

08. கடல் நீரும் வெப்பத்தால் முகிலாக்கி விண்ணளந்து
பின் கடலோடு திடல்களிக்கக் கனமழையாய் பொழிதல்போல்
மானிடமும் துன்பத்தில் துவண்டேனும் உயர்வுற்று
பின் தன்னோடு பிறருயர வழிகாட்டல் மகிமையாகும்.

09. புல்லதுவும் பசுவிற்கு இரையாகிப்பின் எருவாகி
தொல்லை வினையகற்றும் திருநீறாய் மாறுதல் போல்
மானிடமும் இறைவிருப்பிற்கு இரையாகி வாழ்ந்து விட்டு
மடிந்தபின்னால் இறைபூசப் பொடியாதல் மகிமையாகும்.

10. தனக்கழகு தரப்பூத்த தாவரத்து மலர்கள் பின்
பிறர்க்கழகு தந்திறைவன் தாழிணையே அடைதல் போல்
தான் வாழப் பிறந்திங்கு வளர்த்திட்ட மானிடமும்
பிறர்வாழ வாழ்ந்திறைவன் தாழ்சேரல் மகிமையாகும்.

## வழித்துணை - 100

01. அதிஸ்ரம் வருமென்று சீட்டின்மேல் சீட்டெடுத்து
அதிஸ்ரமே கிட்டாமல் ஆயுளினை முடிப்பதிலும்
அடுத்தவற்கு உதவுதலே அதிஸ்ரம் என நடந்தால்
அது ஓர்நாள் அதிஸ்ரமாகி உம்மிடத்தே வந்துசேரும்.

02.மதிப்பேறும் என்றெண்ணி மற்றவரை ஒதுக்கி விட்டு
மதிப்பேதும் கிட்டாமல் மனமொடிந்து போவதிலும்
மற்றவரை மதிப்பதுவே மதிப்பாகும் என நடந்தால்
நீர்தேடும் மதிப்போர் நாள் உம்மையே தேடிவரும்.

03. புகழோங்கும் என்றெண்ணி தற்பெருமை தான்பேசி
இகழ்ச்சிக்கே ஆழாகி இருப்பதையும் இழப்பதிலும்
பணிவோடு நடந்துபிறர் பணிக்கு உமை அர்ப்பணித்தால்
ஓங்குபுகழ் பின்னோர் நாள் ஓடிவந்து உமைச்சேரும்.

04.வெள்ளி திசை வருமென்று வேளையெலாம் காத்திருந்து
திசையாவும் இருண்டபின்னால் திக்கற்று அலைவதிலும்
உழைத்தாலே வெள்ளிதிசை உருவாகும் என உழைத்தால்
நீர்தேடும் வெள்ளிதிசை இன்றே உமை வந்தடையும்.

05. காலம் வருமோர் நாள் நானுயர்வேன் என்றிருந்து
காலம் சென்ற பின்னால் உயர்ந்திடாமல் தாழ்வதிலும்
இதுவேதான் காலமாகும் நானுயர என முயன்றால்
நீர் தேடும் உயர்ச்சியது இன்றே உமை வந்தடையும்.

06. பிறர் வருந்த நீர்வகுக்கும் வழிமுறையே பின்னொருகால்
நீர்வருந்தப் பிறர் வகுக்கும் வழிமுறையாய் மாறிவிடும்
யார் வருந்தினாலுமதை நீர் வருந்தல் போல் எண்ணுவதே
நிரந்தரம் நீர் மகிழ்ச்சியுறக் காரணமாய் அமைந்துவிடும்.

07.பிறர்கெடற்காய் நீர் செய்யும் சூட்சிகளே பின்னொருகால்
நீர்கெடப் பிறர்செய்யும் சூட்சிகளாய் மாறிவிடும்
யார்கெட்டுப் போனாலும் அதை நீர் கெடல் போல் எண்ணுவதே
நிரந்தரம் நீர் உயர்ச்சியுறக் காரணமாய் அமைந்து விடும்.

08. பிறர்நோக நீர் நடக்கும் நடையதுவே பின்னொருகால்
நீர்நோகப் பிறர்நடக்கும் நடையாக மாறிவிடும்
யார் நொந்து போனாலும் அதைநீர் நோதல்போல் எண்ணுவதே
நிரந்தரம் நீர் அமைதியுறக் காரணமாய் அமைந்துவிடும்.

09.பிறர்மாழ நீர்செய்யும் செய்கைகளே பின்னொருகால்
நீர் மாழப் பிறர் செய்யும் செய்கையாக மாறிவிடும்
யார் மாண்டு போனாலும் அதை நீர் மாழல்போல் எண்ணுவதே
நிரந்தரம் நீர் நீடுவாழக் காரணமாய் அமைந்துவிடும்.

10. பிறர் அலைய நீர்காட்டும் பாதையதே பின்னொருகால்
நீர் அலையப் பிறர்காட்டும் பாதையதாய் மாறிவிடும்
யார்அலைந்து போனாலும் அதை நீர்அலைதல் போல் எண்ணுவதே
நிரந்தரம் நீர் சுகமடையக் காரணமாய் அமைந்துவிடும்.

## வழித்துணை - 101

*01.* பிறப்பிற்கோ இறப்பிற்கோ மண்நாடா வௌவால்கள்
பகலினைக்கூட எமக்காய்விட்டு இரவுதனில் இரைதேட
வலைவிரித்து நாமதனைக் கொன்றுண்டால் செத்தது
வௌவால்கள் மட்டுமன்று மனிதமும் கூடத்தான்.

*02.* மனிதற்கு தீங்கின்றி மறைந்துவாழும் காட்டு முயல்
பற்றைக்குள் இருந்து கொண்டே உண்டுறங்கி உயிர்வாழ
பொறியதற்கு நாம் வைத்துக் கொண்றுண்டால் செத்தது
காட்டு முயல் மட்டுமன்று மனிதமும் கூடத்தான்.

*03.* கூரைமீது இருந்து கொண்டே விடியலினை அறிவிக்கும்
கொக்கல்ல நாரையல்ல கொண்டைச் சேவலதை
விடியலின் பின் துரத்தியே நாம் கொண்றுண்டால் செத்தது
சேவலது மட்டுமன்று மனிதமும் கூடத்தான்.

*04.*பாலினை பொழிந்து தரும் பூசத்திருநீறு தரும்
முன்னுக்கு நின்றாலே முத்தி சித்தி தரும் மாட்டை
பால்வற்றிப் போனதென்று கொண்றுண்டால் செத்தது
பால்மாடு மட்டுமன்று மனிதமும் கூடத்தான்.

*05.* பொன் பொருளைச் சேர்ப்பதினைப் பொருட்டாக எடுக்காமல்
மனங்களினைச் சேர்ப்பதினை மனதார ஏற்றிடுவீர்
பொன் பொருட்கள் வாழ்வுதனைப் பாதியிலே பறித்தெடுக்கும்
மனங்களினைச் சேர்த்திட்டால் மடிந்த பின்பும் வாழவைக்கும்.

06. இறைவனார் அழைத்திடுதல் பேரின்ப வாழ்வுதர
என்பதினை உணராமல் அவர் பின்னே செலமறுத்து
அழைக்காமல் கலியுகத்தின் பின்னேநாம் செல்வது
வாழ்வையும் அழித்துப்பின் நரகத்தில் வீழ்வதற்காம்.

07.பொன் பொருளை உடையவர்தான் உடமையாளர் என்றல்ல
இங்கவற்றை இழப்பதுதான் உடமையிழப்பும் என்றல்ல
கடமை என்பதுவும் மானிடற்கு உடமையதால்
கடமைகளை மறந்தவரும் உடமைகளை இழந்தவரே.

08. ஒன்றினை உமக்கொருவர் செய்யவில்லை என்பதற்காய்
அன்றே அவருறவை அடியோடு வெறுத்திடாதீர்
என்றோ ஒருநாள் உமக்கொன்று அவர் செய்வார்
நன்றே நடந்திடுவீர் நன்மைபல பெற்றிடுவீர்.

09.நிதிதருவோர் தம்மையே பிரமுகர்கள் என்றெண்ணி
மதி தருவோர் தம்மைநீர் மிதிப்பவர்போல் நடந்திடாதீர்
நீளநிதி நதிபோல நில்லாமல் ஓடிவிடும்
நன்மதியே பின் நிதியாகி வாழ்வினிற்கு வளம் சேர்க்கும்.

10. ஒன்றுமே இல்லையென்று ஒருபோதும் சொல்லாதீர்
நீர் சொன்னால் நடக்குமென்று நீர்தானே சொல்லுகின்றீர்
ஆதலினால் இல்லையெனல் இல்லையென்றே ஆகிவிடும்
உண்டென்று சொல்லும்நீர் இல்லாததும் வந்து சேரும்.

## வழித்துணை - 102

01. முள்ளினை முள்ளால்தான் எடுக்கலாம் என்றுரைத்து
வன்முறையின் வழிச்சென்று அல்லலுற்றுப் போவதிலும்
முள்ளென்றால் விலகியேதான் நடந்திடுதல் நன்றென்று
விலகிநீர் நடந்திடுவீர் முள்ளும்மைத் தேடிவரா.

02. அடியாத மாடுஅது படியாது என்றுரைத்து
தடியெடுத்து தண்டித்து குடிகெடுத்து விடுவதிலும்
முடிந்தவரை அன்பு வழி முயற்சித்தல் நன்றென்று
முயற்சிப்பீர் அந்தவழி கொடிதும்மைத் தேடிவரா.

03. அடியைப் போல் அண்ணந்தம்பி உதவமாட்டார் என்றுரைத்து
கொடியதோர் பாதையினை கொள்கையாக்கி நடப்பதிலும்
மடிமீது அமர வைத்து மதியுரைத்தல் நன்றென்று
படித்துரைப்பீர் பாதகங்கள் ஏதுமுமைத் தேடிவரா.

04. சூடுபட்ட பூனையது அடுப்படிக்கு வராதென்று
வன்முறைக்கே தூபமிட்டுப் பகைவளர்த்துக் கொள்வதிலும்
அவரவற்கும் உரியவற்றை அவர்க்களித்தல் நன்றென்று
அளித்திட்டால் சூடுபோடும் தேவையும்மைத் தேடிவரா.

05. தம்பி உடையான் சண்டைக்கு அஞ்சானென்று
தத்துவங்கள் பேசியே சண்டையினைத் தூண்டலிலும்
அண்ணன தம்பி உடையவர்கள் அமைதிகாத்தல் நன்றென்று
அமைதியினைக் காத்திட்டால் சண்டையும்மைத் தேடிவரா.

06. கோரமுகம் கொண்டவரைப் போவென்று துரத்திவிட்டு
ஆனைமுக அபிஷேகம் செய்தேது கண்டு கொண்டீர்
ஆண்டவனார் ஆனைமுகம் கொண்டதன் அர்த்தமதே
கோரமுகம் தன்னையும் நீர் நேசிக்க வேண்டுமென்றே.

07.ஏழையென்று கண்டவரை எட்டியோடத் துரத்திவிட்டு
ஆண்டிவேட அற்புதங்கள் பேசியேது கண்டுகொண்டீர்
ஆண்டவனார் ஆண்டியாகி வேண்டி உண்ணும் அற்புதமே
ஏழை மனம் தன்னையும் நீர் நேசிக்க வேண்டுமென்றே.

08. கந்தைகட்டிவந்தவரை நொந்து ஓடத் துரத்திவிட்டு
பழனிமலைக் கோவணத்தைத் பாடியேது கண்டு கொண்டீர்
கந்தனவன் கோவணத்தைத் தரித்துநின்ற தத்துவமே
ஏதுமிலார் தம்மையும் நீர் நேசிக்க வேண்டுமென்றே.

09. உதவிகோரி வருபவரை ஓடென்று துரத்திவிட்டு
பிட்டுக்கு மண்சுமத்தல் பேசியேது கண்டு கொண்டீர்
பெருமானார் பிட்டுக்கு மண்சுமத்தல் உணர்த்துவதே
உதவி கோரி வருவோரை நேசிக்க வேண்டுமென்றே.

10. பித்தனார் வந்தொருவர் படலை தொடத் துரத்திவிட்டு
பித்தாப் பிறைசூடி பாடியேது கண்டுகொண்டீர்
பெருமானார் பித்தனாய்ப் பரிணமித்த பக்குவமே
பித்தரையும் பேயரையும் நீர் நேசிக்க வேண்டுமென்றே.

## வழித்துணை - 103

01. தன்னை ஓர் மகனார் தாழ்த்திக் கொள்ளுதலே
பிறரொருவர் தனையுயர்த்தக் கிடைத்ததொரு பின்புலமாம்
என்பதனை உணர்ந்து நீர் தனைத்தாழ்த்திக் கொண்டவரை
உயர்ந்தவராய்க் கருதுவதே மேலுமுமை உயர்த்திடுமாம்.

02. இங்கொருவர் காட்டுகின்ற பொறுமையின் பெறுமதியே
பிறரொருவர் சிறுமையின்றி வாழ்வதற்குப் பின்புலமாம்
என்பதனைப் புரிந்துநீர் பொறுமை காத்தோர் தன்மையையும்
பெறுமதியாய் எண்ணுவதே உம்பெறுமதியைக் காட்டிடுமாம்.

03. விட்டுக்கொடுக்கின்ற கொடையொருவர் செய்வதுவே
பிறரொருவர் பெருவாழ்வு வாழ்வதற்குப் பின்புலமாம்
என்பதனைப் புரிந்துநீர் விட்டுக்கொடுப்போர் செயலினையும்
கொடையாகக் கருதுவதே பலகொடையை உமக்கிடுமாம்.

04. முன்னொருவர் வாழ்நாளில் சேர்த்துவைத்த நல்லவையே
பிறரொருவர் பெருவாழ்வு வாழ்வதற்குப் பின்புலமாம்
எனபதனை அறிந்துநீர் அவர் வழியில் நடப்பதுவே
பின்னவற்காய் நீராற்றும் பொறுப்புள்ள பணியதுவாம்.

05. மனிதாபி மானத்தை இங்கொருவர் காட்டுவதே
பிறரோருவர் மகிழ்வோடு வாழ்வதற்குப் பின்புலமாம்
என்பதனைத் தெரிந்து நீர் மனிதநேயம் காட்டுவதே
மானிடப் பிறப்பினைநீர் எடுத்ததற்குப் பின்புலமாம்.

06. பாதையிலே நின்றொருவர் பத்து ரூபாய் பணம் கேட்க
பார்வையாளர் இல்லையென்று போவென்று துரத்திவிட்டு
மேடையின் மேல் நின்றவரே மேல்மாடி கட்டுதற்கு
வாரிவாரிப் பணம் கொடுத்தால் பத்துச்சதம் அது பெறுமோ.

07. சோறுகேட்டு வந்தவரை ஓடென்று துரத்திவிட்டு
நூறு மூடை அரிசிகாய்ச்சி தானமிட்டு என்னகண்டீர்
மாறுவேடத் தோடிறையே சோறுகேட்டும் வந்திடலாம்
ஏறுமாறாய் நடந்துவிட்டு நீறுபூசி என்ன கண்டீர்.

08. வேட்டியொன்று கட்டுதற்கு வேண்டுமென்று கேட்டவற்கு
எட்டுமணி வேலை செய்நீ எடுத்தளிப்பேன் என்றுவிட்டு
பட்டுவேட்டி சால்வையோடு பகட்டாக வாழ்பவற்கு
சூட்டிவிட்டால் பொன்னாடை சுதந்திரம்தான் கிட்டிடுமோ.

09. ஊனமுற்றோர் என்றொருவர் உள்ளத்தைக் குழப்பிவிட்டு
ஊன்றுகோல் அவர்க்கெடுத்து உவந்தளித்து என்ன கண்டீர்
ஊனமிலார் கூடவுமே உளம்குழம்ப ஊனராவார்
ஊனமுற்றோர் உளம் காத்தால் அவர்க்கதுவே ஊன்றுகோலாம்.

10. வயோதிபர் என்றொருவர் பருவத்தின் தன்மைகண்டு
அவமானச் சின்னம்போல் அவரை நாங்கள் கருதிவிட்டு
பருவத்தால் அவர் பழுத்து வீழ்ந்தபின்னால் திவசமென்று
தவவேடம் தாங்கிவிட்டால் வயோதிபம் பின் எமக்கிலையோ.

## வழித்துணை - 104

*01.* பருந்திற்கு விண்வெளியின் விந்தைகள் பல புரியும்
எறும்புக்கு மண்வெளியின் மகிமைகள் பல புரியும்
என்னோடு எழுத்துமது கற்கவில்லை என்பதற்காய்
மட்டமாக எண்ணாதீர் அவை எம்மைவிடச் சிலதில்மேல்.

*02.*போகுமிடப் பெறுபேறு பல்லியாற்குத் தான் தெரியும்
வருவிருந்தின் வகைபற்றிக் காக்கையாற்குத் தான் தெரியும்
பேச்சோடு மொழியுமவை கற்கவில்லை என்பதற்காய்
மட்டமாக எண்ணாதீர் அவை எம்மைவிடச் சிலதில் மேல்.

*03.* கிணற்றினுள் தவளையாரே வானிலையை நன்கறிவார்
கல்லினுள் தேரையாரே காலநிலை நன்கறிவார்
பாசையொன்றை பேசமட்டும் அவைகற்கவில்லை என்பதற்காய்
மட்டமாக எண்ணாதீர் அவை எம்மைவிடச் சிலதில்மேல்.

*04.*பரம்பொருளின் பெருவடிவை மரம் செடிகள் தினம் காணும்
கருவுற்றால் தம்மினத்தை அஃறிணைகள் கௌரவிக்கும்
வாய்ந்திறந்து சொல்ல அவை கற்கவில்லை என்பதற்காய்
மட்டமாக எண்ணாதீர் அவை எம்மைவிடச் சிலதில்மேல்.

*05.* மழைவரவை மயிலினங்கள் மனத்தளவில் உணர்ந்தறியும்
வெயில் வரவை சேவலினம் கூவியே உரத்துரைக்கும்
நம்பாசை மட்டுமவை கற்கவில்லை என்பதற்காய்
மட்டமாக எண்ணாதீர் அவை எம்மைவிடச் சிலதில்மேல்.

06. பூனைக்கு நாய்கூட நிலையறிந்து பால்கொடுக்கும்
உணவளித்தோர் மறைவையொட்டிப் பசுமாடு கண்கலங்கும்
உரைத்து அதைக் கூறுவதற்கு முடியவில்லை என்பதற்காய்
மட்டமாக எண்ணாதீர் அவை எம்மைவிடச் சிலதில்மேல்.

07. தலைக்குரியர் இறப்பதனைப் பேனினங்கள் நன்கறியும்
அலைதரைக்கு வருமென்றால் விலங்கினங்கள் முன்னறியும்
பேசுவதற்கு வார்த்தை சில கற்கவில்லை என்பதற்காய்
மட்டமாக எண்ணாதீர் அவை எம்மைவிடச் சிலதில்மேல்.

08. காட்டுவழி உளவறிந்து ஆட்காட்டி ஊர்க்குரைக்கும்
நாட்டாரின் பாடலுக்கு நாற்றுமேடை குருத்தெறியும்
ஏட்டறிவை மட்டுமது எட்டவில்லை என்பதற்காய்
மட்டமாக எண்ணாதீர் அவை எம்மைவிடச் சிலதில்மேல்.

09. ஓலைவிழும் காலம்வர கூடுவிட்டுக் குழவியோடும்
மாலையின்றி மேளமின்றி மாட்டெருது உழைத்து வரும்
வேலைசெய்யும் வேறெதும் தெரியவில்லை என்பதற்காய்
மட்டமாக எண்ணாதீர் அவை எம்மைவிடச் சிலதில்மேல்.

10. மலர்விரியும் ஓசையினை வண்டினங்கள் தானறியும்
புலர் பொழுதின்புதுமைகளை புள்ளினங்கள் புரிந்தறியும்
நலம் தரும் கல்வியினைக் கற்கவில்லை என்பதற்காய்
மட்டமாக எண்ணாதீர் அவை எம்மைவிடச் சிலதில்மேல்.

## வழித்துணை - 105

*01.* தொற்றுவியாதி மட்டும்தான் தொற்றி உலகழிப்பதன்று
யுத்தமும் தொடங்கி விட்டால் தொற்றி உலகழிப்பதுதான்
தொற்றுவியாதி தொற்றிடாமல் தடை மருந்து ஏற்றுதல் போல்
யுத்தமும் தொடங்கிடாமல் தடை விதித்தல் நம்கடனாம்.

*02.* காட்டுக்குள் போய்விட்டால் கொடுவிலங்கு கொல்லுமென்று
காட்டுக்குள் போகாமல் கவனங்கள் காப்பவர் நாம்
போருக்குள் போய்விட்டால் போர்ச் சூழல் கொல்லுமென்று
போருக்கும் போகாமல் இருந்திடலே நம் கடனாம்.

*03.* சமூகம் என்பதற்கு புது அர்த்தம் புகுத்தியாரும்
சாதியென்றும் சமயமென்றும் சண்டையிடக் கூடாது
சமூகம் என்பது சண்டைக்கான வியூகமன்று
சுமூகமாக வாழ வகுத்த சங்கமெனல் நம் கடனாம்.

*04.* யுத்தத்தில் பல பேரை பலிகொடுத்த பின்னால் தான்
அமைதியை உலகோரால் கொண்டுவர முடியுமென்றால்
கொண்டுவந்த அமைதியோடு பலியுண்டோர் வருவாரோ
சுமந்தவருக்கு கூலியில்லை சுமத்தியோற்கு கூலியாமோ.

*05.* சிறிதினைப் பெரிதாக்கிப் புரியும் போர் போரன்று
பெரிதினைச் சிறிதாக்கிப் புரியும் போர் போரன்று
உணர்ச்சிகளை அடக்கியே உரிய வழி செலுத்துவதற்கு
அறிவாயுதம் எடுத்துளமை அடக்குவதே போராகும்.

06. மறதியினால் பலதையும் இழந்துவிடும் நிலையறிந்து
மறதிக்கும் மருந்துண்டோ என்றெண்ணித் தவிக்காதீர்
மறதிக்கோர் மருந்துண்டு உம்மிடமே உண்டு அது
மறந்தெதையும் விட்டோமோ என்றெண்ணிப் பார்ப்பதாகும்.

07.மனத்துள்ளே நினைப்பதனை மற்றவர்கள் அறிவாராயின்
கெட்டது நினைப்பதனை எண்ணியாரும் பார்க்கமாட்டார்
நினைப்பதனை யாரறிவார் என்றெதையும் நினைத் திடாமல்
இறையறிவான் நினைப்பதனை என்றறிந்து நலநினைப்பீர்.

08. நோக்க நோக்க நோக்கினில் தெரிவது
நோக்கம் என்கின்ற தாக்கம் ஆதலால்
நோக்கினில் நல்லதை நோக்கும் நோக்கமும்
நல்லதோர் நோக்கமாய் நன்மைகள் பயக்கும்.

09.இனிப்புவகை விற்றுவரும் வண்டி மணி கேட்டதுமே
அதன் சுவையைக் சுவைத்துவிட நாவூறித் துடிப்பதுபோல்
இறைகோயில் மணியோசை இதமாகக் கேட்டதுமே
இறையின்பம் தனைச்சுவைக்க மனமூற வேண்டாமோ.

10. தெருவீதி தன்னையும் தனதென்று எண்ணுவோர்க்கே
தன்வீடு தனதென்ற தத்துவமும் நிலைத்திருக்கும்
பிறர் போகும் தெருவென்று பெருந்துன்பம் அதிலிழைத்தால்
தெருநாற்றம் வீடடைந்து வீடே பின் தெருவாகும்.

## வழித்துணை - 106

01. மண்ணுக்குள் தண்ணீரும் கண்ணுக்குள் கண்ணீரும்
விண்ணுக்குள் மழை நீரும் உணர்த்துவது எதுவென்றால்
அங்குண்டு இங்குண்டு என்றிறையைத் தேடுவோர்க்கு
உன்னுக்குள் இறையுண்டு என்கின்ற உண்மையையாம்.

02. கிளை ஒன்றை வெட்டிவிட்டால் ஒன்பது கிளை தளிர்க்கும்
வெட்டியதை நட்டுவிட்டால் இன்னும்பல கிளைதளிர்க்கும்
மானிடம் அதுவன்று வெட்டிவிட்டால் முடிந்ததுதான்
ஆதலினால் மானிடத்தின் மகோன்னதத்தைக் காத்திடுவீர்.

03. சாதனை என்பதுவும் அற்புதம் என்பதுவும்
ஏதோஒரு வகையிலே ஒன்றாக இருந்தாலும்
அர்த்தம் ஒன்றினை அது உணர்த்திடும் எதுவென்றால்
சாதனை எனததும் அற்புதம் இறையதுமாம்.

04. ஓடுகின்ற வண்டியிலே ஓரிடத்தில் இருப்பவற்கு
இருக்குமிடம் பெரிதன்று போகுமிடம் பெரிததுபோல்
வாழ்வோற்கும் வாழ்கின்ற வாழ்க்கை முறை பெரிதன்று
வாழ்ந்து நாம் முடிக்கையிலே போகுமிடம் பெரிதாகும்.

05. பாலர்கள் படிப்பதுவும் பாரிலவர் உயர்வதும்
பட்டங்கள் பெறுவதுவும் பதவிகள் வகிப்பதுவும்
பரிணாமம்தான் அதனைப் போற்ற வேண்டும் ஆனாலும்
அதனால் சிலர் மமதைகொள்வர் அதுவே மிகப் பரிதாபம்.

06. புகையிரத வண்டியிலே வகுப்புக்கள் பலவிருந்தும்
ஏறுமிடம் இறங்குமிடம் எல்லோருக்கும் ஒன்றேபோல்
வாழ்கின்ற மக்களுள்ளும் வகுப்புக்கள் பலவிருந்தும்
தோன்றுவது தாய்மடியும் மறைவது சுடுகாடுமேயாம்.

07. அலங்கோலமாய் ஒருவர் இருப்பதனைக் கண்டுவிட்டால்
அசிங்கம் என்றவரை ஒதுக்கிடுதல் நன்றன்று
அலங்கோலப் பாத்திரத்தை அவர் ஏற்றிருத்தல் ஏனென்றால்
அலங்காரம் பலதையவர் ஆற்றலாலாம் என்றறிவீர்.

08. நீர்மகிழ இங்கொருவர் தனையொறுத்தல் கண்டவரை
பயித்தியம் என்றுசொல்லிப் பரிகசித்து ஒதுக்காதீர்
பயித்தியப் பாத்திரத்தை அவர் ஏற்றிருத்தல் ஏனென்றால்
மகிழ்ந்து நீர் வாழ்வதற்கு வைத்தியம் செய்வதற்காம்.

09. தேவாரம் பாடுதலும் திருவாசகம் ஓதுதலும்
நாம் விரும்பும் செயலேதான் செய்யவேண்டும் ஆனாலும்
தாவாரத் திருப்போரும் தெருவோரம் வாழ்வோரும்
விரும்பும்படி நடப்பதுவே இறைவிரும்பும் செயலாகும்.

10. கட்டிவிட்டார் கடவுளை என்றஒரு கதைகட்டி
தாமவிட்டு விடுவதாயும் பின்னரோர் கிரிகைசெய்வர்
கடவுளாரைக் கட்டுவதும் அவுப்பதுவும் நாமென்றால்
கடவுள்யார் மனிதர்யார் யார் யாரைப் படைத்தார்கள்.

## வழித்துணை - 107

01. கிடைக்கின்ற உணவதனை உண்பதற்கு மறுப்போரும்
உண்கின்ற உணவதனை உதாசீனம் செய்வோரும்
பின்னொருநாள் அதற்காக தவம்கிடக்க நேரும்
அது மறுபக்கத் தத்துவத்தின் ஒருபக்கம் ஆகும்.

02.படிக்கின்ற புத்தகத்தைக் கிழித்தெறிந்து மிதிப்போரும்
படித்தோரைப் படிப்போரை பரிகாசம் செய்வோரும்
பின்னொருநாள் அதற்காகத் தவம் கிடக்க நேரும்
அது மறுபக்கத் தத்துவத்தின் ஒருபக்கம் ஆகும்.

03. இருக்கின்ற வீடதனை இடித்தெறிந்து அழிப்போரும்
வீடிலாதார் என்றொருவர் நிலையினை ஆக்குவோரும்
பின்னொருநாள் அதற்காகத் தவங்கிடக்க நேரும்
அது மறுபக்கத் தத்துவத்தின் ஒருபக்கமாகும்.

04.உடையொன்றைத் தருவோரை உதறியே தள்ளுவோரும்
உடுக்கின்ற உடையதனை உருக்குலைத்து அழிப்போரும்
பின்னொருநாள் அதற்காகத் தவங்கிடக்க நேரும்
அது மறுபக்க தத்துவத்தின் ஒருபக்கமாகும்.

05. அறிவுரைகள் சொல்வோரை அலட்சியம் செய்வோரும்
எமக்கறிவு புகட்டுதற்கு இவர்யார் என்போரும்
பின்னொருநாள் அதற்காக தவங்கிடக்க நேரும்
அது மறுபக்கத் தத்துவத்தின் ஒரு பக்கமாகும்.

06. வெப்பத்தால் வெடித்தமரக் கொப்பினால் பூப்பூத்து
ஒப்பரிய ஓர்பழத்தை உவந்தளிக்கும் மரம்போல
ஏழ்மையின் கொடுமையால் எடுக்கின்ற இலட்சியமும்
இப்புவியில் ஒப்பற்ற பலகொடுக்கும் முயன்றிடுவீர்.

07.பிறப்பு எமக்குக் கிடைத்ததோர் பேறென்றும்
இறப்பு எமக்குக் கிடைத்ததோர் இழப்பென்றும்
பிறப்புக்காய் மகிழ்ந்துநீர் இறப்புக்காய் துயராதீர்
கடன்பட மகிழ்ந்துயாரும் கடனடைக்க துயருவரோ.

08. சமைத்துணவை வைப்பதிலே பெருமையொன்றும் அதிகமில்லை
அதைப் பரிமாறும் பக்குவமே பெருமைதரும் அதுபோல
பிள்ளைகளைப் பெறுதலிலே பெருமையொன்றும் அதிகமில்லை
அவரைப் பெருமைக்குரியவர்கள் ஆக்குவதே பெருமையாகும்.

09.கைப்பிடியில் நூலிருக்கக் காற்றாடும் பட்டமது
பறந்துகலை காட்டிவிட்டுக் கையினிற்குள் அடங்குதல் போல்
இறைபிடிக்குள் விதியிருக்க விந்தைகாட்டும் ஆத்மாவும்
வாழ்ந்துகலை காட்டிவிட்டு இறையடையும் என்றறிவீர்.

10. நாவிருந்து எழுகின்ற சத்தியம் வேறாகும்
உள்ளத்தின் உள்ளிருந்து ஊறுமுண்மை வேறாகும்
உடலுக்குள் உணர்வாகி உருப்பெறும்மெய் வேறாகும்
வெவ்வேறாம் மூன்றுமொன்றாய்ச் சேர்ந்தோரே இறையோராம்.

## வழித்துணை - 108

01. தகுதிக்காய் கிடைத்தாலும் தவறாகக் கிடைத்தாலும்
விருதுகள் பெறுவதால் மானிடற்கு மதிப்புண்டு
விருதுக்கும் ஓர்நாள் மதிப்புண்டு என்றென்றால்
அது எருதிற்கும் விருதாகிப் போய்ச்சேரும் போதினிலாம்.

02.தேன் இனிக்கும் என்பது எல்லோருக்கும் தெரியும்
ஏனென்றால் அது எமக்கு தேனாகத் தெரிவதனால்
ஆனாலும் அது ஓர் நாள் கசக்கும் என்றென்றால்
அது இன்னொன்றின் உழைப்பென்று நாமுணரும் போதினிலாம்.

03. பால் சுவைக்கும் என்பது எல்லோருக்கும் தெரியும்
ஏனென்றால் அது நமக்கு உணவாக தெரிவதனால்
அனாலும் அதுஓர் நாள் வெறுக்கும் என்றென்றால்
அது இன்னொன்றின் உணவென்று நாமுணரும் போதினிலாம்.

04.நிலாக்குளிரும் என்பது எல்லோருக்கும் தெரியும்
ஏனென்றால் அது எமக்கு நிலாவாகத் தெரிவதனால்
ஆனாலும் அது ஓர் நாள் சுட்டெரிக்கும் என்றென்றால்
அது கடன்வாங்கி எமக்குஅதைத் தருவதினை உணர்கையிலாம்.

05. அதிஷ்டமோர் மகிழ்ச்சியென்று எல்லோருக்கும் தெரியும்
ஏனென்றால் அது எமக்கு லாபத்தைத் தருவதனால்
ஆனாலும் அதுஓர் நாள் துயர் கொடுக்கும் என்றென்றால்
அது பலபேரின் நம்பிக்கை மோசடியென் றுணர்கையிலாம்.

06. மானிடமோர் உயர்வென்று எல்லோருக்கும் தெரியும்
ஏனென்றால் ஆறறிவும் ஆற்றலும் அதனோடு இருப்பதனால்
ஆனாலும் அது ஓர்நாள் தாழ்வாகும் என்றென்றால்
அது மானிடத்தை மதிக்காமல் நடப்பதினை உணர்கையிலாம்.

07.பெற்றெடுக்கும் பெருவலி அன்னையற்கு மட்டுமன்று
பிறப்பதனால் பிள்ளைகட்கும் வலியுண்டு சொல்வதில்லை
சொல்வோற்கு மட்டும்தான் வலியுண்டு என்றிராமல்
சொல்லாரின் வலியினையும் உணர்வோரே மானிடராம்.

08. பாத்திரத்தில் விட்டநீர் அப்பாத்திரம் போல் மாறுவதால்
ஆத்திரம் ஏதுமற்ற அம்சமங்கு நிகழ்வதுபோல்
வாழ்க்கையிலும் பாத்திரத்திற் கேற்றபடி நாம் நடந்தால்
வாழ்க்கையின் முழுமையையும் கௌரவமாய் கடத்திடலாம்.

09.என்றோ ஒருநாள் பலன்கொடுக்கும் என்றறிந்து
நீரூற்றி வளர்ந்த மரம் நீரெமக்குப் பின்தரல்போல்
என்றோ ஒருநாள் அருள்சுரப்பான் என்றறிந்து
இறையன்பை வளர்த்திடுவீர் அவனோர்நாள் அருள்சுரப்பான்.

10. நீண்டதோர் உறக்கம் உடலினை வளர்க்கும்
நீண்டதோர் விழிப்பு அறிவினை வளர்க்கும்
அறிவில்லா உடலது அர்த்தமிலா ஒன்றதனால்
அளவோடு உறங்கிநீர் அதிகம் விழித்திருப்பீர்.

## வழித்துணை - 109

01. உளப்பக்குவம் ஏற்படாமல் சிலர் உடற்பக்குவம் அடைவதுண்டு
உடற் பக்குவத்தை பக்குவமாய் பாரிலேற்று நடந்திட்டால்
உளப்பக்குவம் ஏற்படாமலே உடற்பக்குவம் கெட்டுப்பின்
உளவருத்தத்திற் காளாகி உருக்குலைய நேர்ந்துவிடும்.

02.போட்டியிலே ஓடுவது மாட்டிற்கு மகிழ்ச்சியன்று
ஓட்டுவோரின் மகிழ்ச்சிக்காய்மாடோடி வருந்துவது
தெய்வ நீதிக் கொளவாத செயலென்ற காரணத்தால்
மாடோடி மகிழஓர்நாள் நாமோடி முடிக்க வேண்டும்.

03. வயிற்றுணவு ஓர்பொழுது ஜீரணிக்க மறுத்துவிட்டால்
மறுகணமே நோய்க்காளாய் அவஸ்தைபட நேருதல்போல்
நெஞ்சினுள்ளும் சிலதைநாம் ஜீரணிக்கத் தவறிவிட்டால்
பெருந்துயருக் காளாகி எமையழிக்க நேர்ந்துவிடும்.

04.நீண்டநாள் வாழ்வதற்கு ஆசைப்படுவதிலும்
வாழும்நாள் சுகமாக வாழநாம் எண்ணவேண்டும்
சுகமாக நாம் வாழ எடுக்கின்ற வழிவகையே
நீண்டநாள் வாழ்வதற்கு வழித்துணையாய் அமைந்துவிடும்.

05. கயிற்றிலே தொங்குகின்ற பந்தினைநாம் அடித்துவிட்டால்
அடித்த இடம் நோக்கியது திரும்பிவந்து தாக்குதல்போல்
இறைபிடியில் இருக்கின்ற ஆத்மாவை நோகடித்தால்
அடித்த இடத்தினையே அது திரும்பிவந்து தாக்கிவிடும்.

06. மாவுருண்டை என்று நாங்கள் மோதகத்தைக் கருதிவிட்டால்
உள்ளிருக்கும் பாகோடு பருப்பெமக்குக் கிட்டாபோல்
அசிங்கம் என்று ஒன்றை அடியோடு வெறுத்துவிட்டால்
புதைந்திருக்கும் புனிதத்தை அனுபவிக்க முடியாது.

07.நாம்படித்த பள்ளியென்று நானிலத்தில் நாமவற்றை
காலத்தால் மறந்திடாமல் பெருமையோடு மதித்தல்போல்
நாமிருந்த பிறப்பென்று பிறப்புக்கள் பிறிதினையும்
கருணையோடு கையாள்தல் ஏழறிவை எமக்கிடுமாம்.

08. சூரியனார் அற்றவானில் சுதந்திரம் பெற்றபனி
காலைவரை நிலைத்துநின்று நெடுந்துயர் தருதல்போல்
நீதியே அற்ற நெஞ்சுள் நிலைத்திடும் கயமையதும்
அழிவொன்றை எட்டுமட்டும் அகத்தினிலே நிலைத்திருக்கும்.

09.பலபடிகள் ஏறியொரு பலனெடுக்க வேண்டியவர்
சிலபடிகள் ஏறியே காட்டிவிட்டு இறங்கிடல்போல்
ஆறறிவை எட்டிவிட்டோம் என்பதனால் பலனில்லை
ஏழறிவை எட்டினால்தான் இறங்கிடாத பேறுகிட்டும்.

10. ஆத்மாவைச் சுமக்கின்ற உடல்களின் வாழ்விற்கு
காத்திரமானதோர் வழித்துணையாய் நாமிருந்தால்
பாத்திரம் அறிந்ததில் பிச்சையினைப் போடுதல்போல்
நீத்துலகை உயர்வடைய இறையெமக்கு துணைவருமாம்.

## வழித்துணை - 110

01. மானிடப் பிறப்பை நாங்கள் மகிழ்வோடு கடந்திட
ஆழ்கின்ற சொத்தும் சுகமும் அர்த்தமுள்ள துணையன்று
தெளிவோடு வாழ்ந்துநாம் சூடியே சுமக்கின்ற
எளிமையே ஏற்றதோர் வழித்துணை யாகுமாம்.

02.பிறர்மனம் நோகாமல் புவிவாழ்வைக் கடந்திட
துறவறம் மட்டும்தான் தொடர்ந்துவரும் துணையன்று
இடருற்றார் தாழ்வுற்றார் இதயத்தால் நோகாத
எளிமையே ஏற்றதோர் வழித்துணை யாகுமாம்.

03. வாழ்வினில் சூழ்ந்துள்ள மாயையிருள் அகன்றிட
மின்னொளி வகையே தான் மிகையான துணையன்று
அணையாத ஒளியாக அகத்துள்ளே மிளிர்கின்ற
அறிவொளி ஒன்றே ஏற்ற வழித்துணையாகுமாம்.

04.வரம்பினை மீறிடும் வகைபல அகன்றிட
கரத்தினில் எடுத்திடும் கருவிகள் துணையன்று
தரத்தினை அறிந்தே தவறினைக் களைந்திடும்
அறிவொளி ஒன்றே உயர் வழித்துணையாகுமாம்.

05. நல்லதை எண்ணியே நல்லதைச் செய்திட
வல்லமை மட்டுமே மிகையான துணையன்று
வாழ்க்கையின் எல்லைக்கு அப்பாலும் வழிகாட்டும்
வழிகாட்டல் ஒன்றே ஏற்ற வழித்துணையாகுமாம்.

06. மானிடம் முடிவினில் உரியஇடம் அடைந்திட
மேனியின் சுகம்மட்டும் மேலான துணையன்று
நானிலம் போற்றிடும் நல்லறிவாளரின்
வழிகாட்டல் ஒன்றோநல் வழித்துணையாகுமாம்.

07. இடர்மிகு வாழ்க்கையில் படர்வினை போக்கிட
உடனுள்ள எதுவுமே உற்றதுணையன்று
வாழ்வியலைக் கடந்துநாம் வானியலிலும் உயர்வுற
இறைநம்பிக்கை ஒன்றே உயர்வழித்துணையாகுமாம்.

08. பிறந்துநாம் உழல்கின்ற பேற்றினைப் போக்கிட
கறந்தபால் கடவுளுக்கு கொடுத்திடல் துணையன்று
மறந்தேனும் என்செயல் என்றென்றும் நினைக்காத
இறைநம்பிக்கை ஒன்றே ஏற்ற வழித்துணையாகுமாம்.

09. நாளுக்கு நாளீட்டும் லாபங்கள் மட்டும்தான்
வாழ்க்கையின் இறுதிக்கு வாய்த்த துணையன்று
ஆளுக்கு ஆளிக்கு அனுபவத்தால் அறிகின்ற
ஆத்மீகம் ஒன்றே உற்ற வழித்துணையாகுமாம்.

10. சொத்தும் சுகங்களும் சொந்தமும் பந்தமும்
சொர்க்கத்தை அடைந்திட சூழவரும் துணையன்று
ஆண்டவனின் அம்சமாய் எம்முன்னே வளர்கின்ற
ஆத்மீகம் ஒன்றே எமக்கென்றும் வழித்துணையாம்.

## வழித்துணை - 111

01. கடமையைச் செய்யாரும் கருணையினைக் காட்டாரும்
மனிதாபி மானத்தோடு மானிலத்தில் வாழாரும்
கடவுள் விரும்பியதைச் செய்யாதார் ஆதலினால்
பக்தியென்று அவர்போடும் வேசம் வெறும் பாசாங்காம்.

02. தன்கடமை தன்னவர்கடமை பிறர்கடமை என்கின்ற
படிமுறையில் ஏறியே இறைகடமை செய்திடலாம்
படிமுறையில் ஏறாமல் இறைகடமை செய்ய எண்ணல்
இருப்பவரைத் தேடாமல் இருக்கையினைத் தேடலாகும்.

03. தங்கிவாழ்வோர் வாழ்வதற்கு தக்கவழி செய்வோரே
இறைவழியில் முன்னேறத் தகுதிகள் உடையவராம்
தங்கி வாழ்வோர் தவிதவிக்க இறைதேடி நாம் சென்றால்
மறுவழியால் எமைவிடுத்துத் தவிப்போற்காய் இறைவருவான்.

04. இல்லறத்தை இனிதுறவே ஆற்றுவோரைக் கண்டிறைவன்
நல்லறம் ஆற்றுவோராய் மதித்தவரை நடந்திடுவான்
இல்லறத்தை உதாசீனம் செய்தெந்த அறம்செயினும்
மறத்தின் வழி அதுவென்று மதிக்காமல் இறைமறைவான்.

05. மானிடமே இறையோனின் ஒடுக்கவடிவம் என்றெண்ணி
மதித்திங்கு நடப்போற்கே விஸ்வரூபம் தெரியவரும்
விஸ்வரூபம் மட்டும் தான் இறைவனெனத் தேடிநின்றால்
குளம்வற்றிப் போன பின்னால் கொக்கின்நிலை போலாகும்.

06. நினைத்ததை நினைத்தாரே அன்றிப்பிறர் அறிதலும்
உயிரினை உரியாரே அன்றிப்பிறர் பெறுதலும்
முடியாது என்கின்ற முடிவிங்கு இருக்குமட்டும்
முடியுமென்ற முடிவையெட்டும் இறையோனே பெரியோனாம்.

07. நம்மனத்துள் இறைவனார் மறைபொருளாய் இருப்பதனால்
நாம் நினைக்கும் நினைப்பொன்றே அவர்விளங்கும் மொழியாகும்
பாடுதலும் பேசுதலும் இறைவனுக்குக் கேட்கவன்று
அவர் மொழியாம் நினைப்பதனை நாம் கேட்டு நினைப்பதற்கே.

08. ஆலயத்தின் அருகினிலே அமர்ந்திடக் கிடைத்திட்டால்
இறைவனுக்குப் பக்கத்தே இருப்பதாகப் பொருளன்று
சுடலையோரம் வாழ்கின்ற சூழ்நிலைதான் இருந்தாலும்
இறைவிரும்பும் வழிநடப்பின் பக்கத்தே அவனிருப்பான்.

09. சூரியற்கு முகம் கொடுத்து விண்மீன்கள் ஒளிர்ந்திடவும்
குடைபிடித்து நாமொளிரா திருந்திடுதல் போலும்
முகம்கொடுத்து உயிரினங்கள் இறையருளில் திளைத்திடவும்
மாயைக் குடைபிடித்து நாமதனை இழந்திடுதல் நன்றோ.


10. நெருப்பிலே நடத்தலும் கயிற்றிலே தொங்குதலும்
முடியுமென்று காட்டும் முடிச்சுக்கள் ஆகும்
அடியாராய் மாறிநாம் இறையடைய வழியெதென்றால்
இறைநோக்க வந்தோரை இறை நோக்க விடுதலாகும்.

11. எதிலும் நாம் நிரம்பியே வழிகின்றோம் என்கின்ற
எண்ணத்தில் இருப்பவர்கள் வெறுமையாய்ப் போய் விடுவர்
வெறுமையாய் நாம் இருக்கின்றோம் என்று என்றும் எண்ணுவோரே
நாளாந்தம் பலதாலும் தமை நிரப்பி நிறைவுறுவர்.

# முடிவுரை

மிக வேகமாக மாறிவருகின்ற மனித சமுதாயம் போவது எங்கே விடுவது எங்கே என்று தெரியாமல் போகின்ற போக்கிலேயே போய்ப் படுமோசமான விளைவுகளைச் சந்தித்துக் கொண்டிருக்கின்றது. அவ்வாறான மனித சமுதாயத்திற்கு மிகப் பெரிதாக எம்மால் எதையும் செய்துகொள்ள முடியாவிட்டாலும் நல்லதோர் சமுதாயத்தைக் கட்டியெழுப்புவதற்காவது எதையாவது செய்ய வேண்டுமென்பதால் மனித சமுதாயம் போகின்ற பாதையைப்புரிந்து போகவேண்டிய பாதையைப் புரிந்து இறுதியிலே மனிதத்தை மதித்து நடக்கின்ற மிகப்பெரிய ஸ்தானத்தை அடைவதற்கு வழித்துணையாக இறைவனால் உணர்த்தப்பட்ட சிலவிடயங்களை பல காலமாக மூளாய் வதிரன்புலோ சித்தி விநாயகர் தேவஸ்தான கரும்பலகையிலே எழுதி அவ்வாறு எழுதப்பட்ட சுமார் 2800 ற்கு மேற்பட்ட பாடல்களில் 1111 பாடல்களை முதற்பகுதியாகப் புத்தகவடிவில் வெளியிடுவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். இப்புத்தகம் வெளி வருவதற்கு ஊக்கமும், ஆக்கமும், நிதியும் தந்துதவிய உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் வாழ்கின்ற அன்பு உள்ளங்கள் அனைவரிற்கும், வலிகாமம் மேற்கு பிரதேச செயலக கலாச்சரப் பிரிவினர்க்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு சிறந்த முறையிலே இப்புத்தகத்தை அச்சேற்றிப் பிரசுரித்துத் தந்த சங்கானை சாய்ராம் பிறிண்டேஸ் உரிமையாளர் அவர்கட்டும் ஊழியர்களுக்கும், இப்பாடல்களில் ஏற்பட்ட எழுத்துப் பிழைகளை

திருத்திச் சரி செய்து தந்த எனது பெருமதிப்பிற்குரிய ஆசான் ஆறுமுகம் ஆசிரியர் அவர்களின் குடும்பத்தார்க்கும் எனது காலத்தால் அழியாத நன்றிகளையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.





நான் எனது அறிவிற்கும் சக்திக்கும் அப்பாற்பட்ட சில விடயங்களை உணர்த்துகை என்கின்ற பேரருளின் கிருபையினால் இறைவனிடம் இருந்து பெற்று. அதனை வெளிப்படுத்துவதற்கு ஒரு களமாக மூளாய் வதிரன்புலோ சித்தி விநாயகப் பெருமான் தேவஸ்தான வெளிக்கள கரும் பலகையைப் பயன்படுத்தி அன்றாடம் எழுதிய ஒரு மனிதன் பிறந்து, வளர்ந்து, மறைகின்ற வரையிலேயும் அதற்கு அப்பால் அவன் இறைவனை அடைகின்ற வரையிலேயுமான விடயங்களை இறைநம்பிக்கை, வழிகாட்டி, எளிமை, அறிவொளி, ஆத்மீகம் என்ற வகையிலே திரட்டி வழித்துணை என்ற நூலாக்கித்தர முயற்சித்துள்ளேன். இதனை அக்கறையோடு படித்து முடிப்பவர்கள் இனம் புரியாத ஏதோவொரு வழித்துணையை இதில் எழுதப்பட்ட வரிகளினூடாக வாழ்க்கையில் பெற்றுக் கொள்வார்கள் என்றே நம்புகின்றேன். அது மகத்தான இந்த மானிடப் பிறவியை வெற்றிகரமாக வாழ்ந்து முடித்து நிறைவு செய்வதற்கு உதவும் என்ற நம்பிக்கையோடு தங்கள் கரங்களில் இதனை பணிவோடு ஒப்படைக்கின்றேன். என்னால் ஆவது ஒன்றுமில்லை எல்லாம் அவன் செயலே.

நன்றியுடன்
" ஆசுகவி "
செ.சிவசுப்பிரமணியம்
மூளாய்.

சாய்ராம் பிறிண்டேர்ஸ், சங்கானை
தொ.பேசி: 0776915339